அவரை நேசிக்கிறீர்களா? நாம் நமது கரங்களை அவருக்கு நேராக உயர்த்துவோமாக.

*நான் அவரை நேசிக்கிறேன்*

*அவர் என்னில் முந்தி நேசம் வைத்ததால்*

*கல்வாரி மரத்திலே அவர் என்*

*இரட்சிப்பை கிரயத்திற்குக் கொண்டாரே*

*நான் அவரை நேசிக்கிறேன்*

*அவர் என்னில் முந்தி நேசம் கொண்டதால்*

கல்வாரி மரத்திலே அவர் என் இரட்சிப்பை கிரயத்திற்குக் கொண்டாரே.

# தானியேலின் எழுபது வாரங்கள்

## THE SEVENTY WEAKS OF DANIEL

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## பொருளடக்கம்

கீழ்கண்ட செய்திகள் சகோ. பிரான்ஹாம் அவர்களால் இந்தியானாவிலுள்ள ஜெபர்ஸன்வில் என்னுமிடத்தில் அமைந்துள்ள பிரான்ஹாம் கூடாரத்தில் அளிக்கப்பட்டவை.


பக்கம்

1. தனியேலுக்கு காபிரியேல் அறிவுறுத்தியவைகள்........................................................ 3

   ஜூலை 30, 1961 காலை

2. தானியேலை காபிரியேல் சந்தித்ததன் ஆறுவிதமான நோக்கங்கள்.........................................70

   ஜூலை 30, 1961 மாலை

3. தானியேலின் எழுபது வாரங்கள்.......................................139

   ஆகஸ்ட் 6, 1961




கட்டப்படுவான் இயேசு பூமிக்குத் திரும்பி வந்த பிறகு, நமக்கு சோதனைக்காரன் இருக்கமாட்டான்

எத்தனை பேர்கள் ஆயத்தமாயிருக்கிறீர்கள்? உங்கள் கரங்களை உயர்த்துங்கள் ஓ, என்னே !

ஓ, நமது கர்த்தர் பூமிக்குத் திரும்பி வருகிறாரே

(நாம் எழுந்து நின்று ஒருவரோடொருவர் கைகுலுக்கிக் கொள்வோம்)

ஆம், நமது கர்த்தர் பூமிக்குத் திரும்பி வருகிறாரே ஓ, சாத்தான் ஆயிர வருடம் கட்டப்படுவான் இயேசு பூமிக்குத் திரும்பி வந்த பின், நமக்கு சோதனைக்காரன் இருக்கமாட்டான் ஓ, நமது கர்த்தர் பூமிக்குத் திரும்பி வருகிறாரே ஆம், நமது கர்த்தர் பூமிக்குத் திரும்பி வருகிறாரே ஓ, சாத்தான் ஆயிர வருடம் கட்டப்படுவான் இயேசு பூமிக்குத் திரும்பி வந்த பின், நமக்கு சோதனைக்காரன் இருக்கமாட்டான். நமது வருத்தம், கதறுதலுக்கெல்லாம் இயேசு திரும்பி வருதலே தீர்வாயிருக்கும் கர்த்தரை அறியும் அறிவு பூமியையும் சமுத்திரம், வானம் யாவையும் நிரப்பிடுமே வியாதி அனைத்தையும் தேவன் நீக்குவார் வருத்தம், கண்ணீர் யாவும் தீருமே இயேசு பூமிக்குத் திரும்பி வந்தபின். ஓ, நமது கர்த்தர் பூமிக்குத் திரும்பி வருகிறாரே ஆம், நமது கர்த்தர் பூமிக்குத் திரும்பி வருகிறாரே ஓ, சாத்தான் ஆயிர வருடம் கட்டப்படுவான் இயேசு பூமிக்குத் திரும்பி வந்த பின், நமக்கு சோதனைக்காரன் இருக்கமாட்டான்.

230. ஓ, என்னே! நன்றாக இருப்பதாக நீங்கள் உணரவில்லையா? சிந்தியுங்கள், சிநேகிதரே! இது பெந்தெகொஸ்தே! இது ஆராதனை. இது பெந்தெகொஸ்தே. நாம் நமது கைதட்டி பாடு வோமாக. பெந்தெகொஸ்தே மக்களே, யாவரும், உங்கள் பழைய மெதோடிஸ்ட் சம்பிரதாயங்களை உங்களை விட்டு அகற்றி விடுங்கள் இப்போது வாருங்கள். நாம் இப்பாடலை பாடு வோமாக.

ஓ, நமது கர்த்தர் பூமிக்குத் திரும்பி வருவாரே ஆம், நமது கர்த்தர் பூமிக்குத் திரும்பி வருவாரே சாத்தான் ஆயிரமாண்டு கட்டப்படுவான் இயேசு பூமிக்குத் திரும்பிய பின், நமக்கு சோதனைக்காரன் இருக்கமாட்டான் ஓ, நமது கர்த்தர் பூமிக்குத் திரும்பி வருகிறாரே (வேதம் அவ்வாறு கூறுகிறது ) ஆம், நமது கர்த்தர் பூமிக்குத் திரும்பி வருகிறாரே சாத்தான் ஆயிரமாண்டு கட்டப்படுவான் இயேசு பூமிக்குத் திரும்பி வந்த பின், நமக்கு சோதனைக்காரன் இருக்கமாட்டான் நீங்கள்

ஒலித்துக்கொண்டுதான் இருக்கின்றன. எவரும் அதைத் தவறாகப் புரிந்துகொள்ளக் கூடாதென்று நான் விரும்புகிறேன். இப்போது தவறாகப் புரிந்து கொண்டுவிட்டு, "சகோதரன் பிரான்ஹாம் 1977-இல் இயேசு வருவார் என்று கூறினார்'' என்று பின்னால் சொல்லப்பட நான் விரும்பவில்லை. நான் ஒருபோதும் அவ்விதமான காரியத்தைக் கூறவேயில்லை. இன்றைக்குக்கூட இயேசு வரலாம். நான் தரிசனத்தில் நடைபெறப் போவதாகக் கண்ட காரியங்கள் 1933க்கும் 1977க்கும் இடையில் நடைபெறும் என்றும், ஏதோ ஒன்று சம்பவிக்கும் என்றுதான் நான் முன்னு ரைத்தேன். நான் கண்டவைகளில் ஏழில் ஐந்து ஏற்கனவே நிறை வேறிவிட்டன.

228. நம்மிடம் இப்போது இருக்கிற அணுசக்தி சம்மந்தமான காரியங்களைக்கொண்டு, நாம் நம்புவது என்னவெனில் ..... தற்போது நமது ஜனாதிபதி என்ன சொன்னார் என்பதை கவனித் தீர்களா? இன்னொரு யுத்தம் வரவேண்டுமாம். பெர்லினைக் கொண்டு ஒரு உதாரணம் ஏற்படுத்த வேண்டுமென தான் விரும்புவதாக அவர் கூறினார். ஒரு எடுத்துக்காட்டை ஏற்படுத்த அவர் விரும்புகிறார். நமது கொல்லைப்புறத்தில் இருக்கிற இங்கேயுள்ள இந்த க்யூபாவைக் குறித்து என்ன? அதைக் கொண்டு ஒரு உதாரணத்தை ஏற்படுத்த வேண்டுவது ஏன்? அதைக் குறித்து என்ன? ஒ, அவ்வாறு பேசுவது அபத்தமானது! பார்த்தீர்களா?

229. ஓ, சகோதரரே, நாம் சரியாக முடிவின் சமயத்தில் இருக்கி றோம். எவ்வாறு இருக்கும் என்று தேவன் சொன்னாரோ அதே விதமாகத்தான் அது சம்பவிக்கப்போகிறது. ஆகவே, அவர் கூறியவைகளைப் படித்து, சீர்படுத்திக்கொண்டு, அதற்காக ஆயத்தப்படுத்திக்கொண்டு, அது வரட்டும் என்று கூறி இவ்விதமாக இருப்பதை தவிர்த்து வேறு எதையும் செய்வதில் என்ன உபயோகம் இருக்கிறது? நாம் அதற்காக காத்துக் கொண்டிருக் கிறோம்.

ஆனந்தமிகு ஆயிரமாண்டு அரசாட்சியின் நாள் வருவதை எதிர்பார்த்திருக்கிறோம் அப்போது நமது துதிக்கப்பட்ட கர்த்தரும் வந்து, காத்து நிற்கும் தமது மணவாட்டியை அழைத்துச்செல்வாரே இனிமையான விடுதலையின் நாளுக்காய் பூமி ஏங்கி தவித்து கதறுகிறதே அந்நாளிலே நம் இரட்சகரும் பூமிக்கு திரும்ப வந்திடுவாரே

ஓ, நமது கர்த்தர் பூமிக்குத் திரும்பி வருகிறாரே ஆம், நமது கர்த்தர் பூமிக்குத் திரும்பி வருகிறாரே ஓ, சாத்தான் ஆயிரமாண்டு

முதலாம் அத்தியாயம்

# தானியேலுக்கு காபிரியேல் அறிவுறுத்தியவைகள்

## GABRIEL'S INSTRUCTIONS TO DANIEL

1. காலை வணக்கம், நண்பர்களே, இன்று காலையில் இக்கூடாரத்தில் நாம் இருக்கிற இவ்வேளையில் மிகவும் உஷ்ணமாக இருந்தபோதிலும், இங்கே இருப்பது மகிமையானதாக இருக்கிறது. எனவே நாம் இன்று இவ்வாராதனைக்கு வர முடிந்ததற்காக மிகவும் மகிழ்ச்சியுள்ளவர்களாயிருக்கிறோம். "தானியேலின் எழுபது வாரங்கள்'' என்ற தலைப்பில் ஒரு வேத பாடத்தை நான் போதிக்கப் போவதைப் பற்றி ஏற்கெனவே அறிவிப்பு கொடுத் துள்ளேன். ஏழு முத்திரைகள் கொண்ட ஏழு முத்திரைகளின் செய்தி , ஏழு வாதைகள், ஏழு எக்காளங்கள், மூன்று ஆபத்துக்கள் சூரியனில் நின்ற அந்த ஸ்திரீயானவள், சிவப்பான மிருகமாகிய பிசாசானவன், 1,44,000 பேர்கள் முத்திரையிடப்படல் ஆகிய மீதமுள்ள செய்திகளை நான் பிரசங்கிக்கப் போகுமுன்னர், இச்செய்தியானது மீதமுள்ள செய்திகளை ஒன்றாக்கி பிணைக்கிறதாக இருக்கிறது. இந்த குறிப்பிட்ட காலத்தில் தான் இவைகள் யாவும் சம்பவிக்கின்றன. ஆகவே இவைகளின் வரிசையில் இச்செய்தியையே முதலாவதாக எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நான் எண்ணினேன்.

2. இப்பொழுது உஷ்ணமாயிருக்கிறது. நமக்கு இயன்ற அளவுக்கு மேல் நாம் இங்கே இருக்க உத்தேசிக்கவில்லை இப்பருவ காலமானது வழக்கமாக செயல் - நிகழ்ச்சி முதலியவற்றுக்கு ஏற்றதல்லாத மோசமான பருவகாலமாக இருப்பதால், மக்கள் அடிக்கடி சபை ஆராதனைகள் ஏற்படுத்திக் கொள்ளுகிறதில்லை. மேலும், விசேஷமாக... அவர்கள் யாவரும் குளிர் சாதன வசதி செய்யப்பட்ட அறைகளைப் பெற்றிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் அங்கே சௌகரியமாகவே இருக்கும். அவ்வசதியை நாமும் பெற்றிருக்க விரும்புகிறோம்; ஆனால் இந்த வேளையில் நமக்கு அவ்வசதி இல்லை.

3. நமது முற்பிதாக்களில் அநேகர் தகிக்கிற சூரியனின் கீழ் வாழ்ந்திருக்கின்றனர். நமக்கு குளிர்சாதன வசதி செய்யப்பட்ட அறை இல்லாததைப்பற்றி நான் எண்ணும் போது, எனது நினைவுகள் எப்பொழுதும் ஆப்பிரிக்க தேசத்திற்கு பின்னிட்டு செல்கிறது. அங்கே மக்கள் சூறாவளிகளிலும் திறந்த வெளிகளில் படுத்துக் கொண்டிருக்கவும், அவர்களுடைய பெண்கள் தங்கள் தலைமுடியை தங்கள் முகங்களில் தொங்கவிட்டவாறு, இரவும் பகலும் அங்கேயே கிடந்து அவர்கள் கிடக்கிற இடங் களைவிட்டு ஒருபோதும் அகலாமல், புசியாமலும், குடியாமலும், ஒன்றும் செய்யாமல் அவ்வப்பொழுது கிடைக்கிற கர்த்தருடைய ஒன்றிரண்டு வார்த்தைகளை பிடித்துக்கொள்ளும் படி காத்து கிடப்பார்கள்.

4. மிகவும் வெப்பமாயிருந்த ஒரு சமயத்தில் நான் மெக்ஸி கோவுக்கு சென்றிருந்ததை நான் எண்ணிப்பார்க்க முடிகிறது. குளிர்சாதன வசதி செய்யப்பட்ட ஒரு அறையில் நான் உட்கார்ந் திருக்கையில், மிக மிக உஷ்ணமாயிருந்தபடியால் எனக்கு நானே விசிறிக் கொள்ளவேண்டிய அளவுக்கு இருந்தது என்று நான் நேர்மையாக கூறுகிறேன். அங்கேயிருந்த ஒரு பெரிய அரங்கத்தின் மணற்பரப்பில் மக்கள் காலையில் ஒன்பது மணி துவங்கியே வந்து விட்டதை நான் கண்டேன். அங்கே அமருவதற்கு இருக்கைகள் கூட இல்லை.வியாதியஸ்தர்கள், கடுமையாக சுகவீனமுற்றவர்கள், மரித்துக் கொண்டிருக்கிற பிணியாளிகள், மரித்துகொண்டிருந்த சிறு குழந்தைகள் ஆகிய யாவரும் அந்த கொதிக்கிற சூரியனின் கீழ் நின்று கொண்டிருந் தனர். அவர்களுக்கு வெயிலுக்கு ஒதுங்க எந்த நிழலும் அங்கே இல்லை. ஒருவர் மேல் ஒருவர் சாய்ந்து கொண்டு, காலை ஒன்பது மணி முதல் இரவு ஒன்பது மணி வரையிலும் நின்றிருந்து, முப்பது நிமிட பிரசங்கத்தை மொழி பெயர்ப்பாளர் மூலம் கேட்பதற்காகவும், கர்த்தருடைய கிரியைகளைக் காணவுமாக அங்கே காத்து கிடந்தனர். அவர்கள் தங்கள் மேல் பெரிதும், பழசானதுமான கனமான ஆடைகளை அணிந்தவர்களாய் அமர்ந்து காத்துக்கிடந்தனர். அவர்கள் அவ்விதமான ஆடைகளை குளிர்காலத்திலும், கோடையிலும் அணிகிறார்கள். அவர்க ளுக்கிருந்த ஆடைகள் அவ்வளவுதான்.

5. காடுகளிலிருந்தும் பிணியாளிகளை அவர்கள் ஏராளமாகக் கொண்டு வருகிற விதத்தை நான் நினைத்துப் பார்க்கிறேன். அங்கே நாம் நகர்ந்து செல்லக் கூட இயலாதபடி அவர்கள் கூடியிருப்பார்கள். இந்தியாவில் குஷ்டம் மற்றும் இதர வியாதிகளோடும் கூடிய மக்களை ஒருவர் மேல் ஒருவர் கிடத்தப்பட்ட நிலையில் கொண்டு வந்து



இச்சாயங்கால வெளிச்சங்கள் வந்துவிட்டன, தேவனும் கிறிஸ்துவும் ஒருவர்தான் என்பது சத்தியம் சாயங்கால நேரத்திலே (யாவரும் சேர்ந்து பாடுவோம்) வெளிச்சம் உண்டாகும்; மகிமைக்குப் போகும் பாதையை நிச்சயம் நீர் கண்டடைவீர் தண்ணீர் வழியிலே இன்று ஒளியுண்டு இயேசுவின் நாமத்திலே அடக்கம் செய்யப்படுவீர் வாலிப வயோதிபரே, பாவத்தை விட்டு மனந்திரும்புவீர் பரிசுத்த ஆவியானவர் நிச்சயம் பிரவேசிப்பார் சாயங்கால வெளிச்சங்கள் வந்துவிட்டன தேவனும் கிறிஸ்துவும் ஒருவர்தான் என்பது சத்தியமே

(மூவரல்ல, ஒருவர்தான்)

224. செய்திக்கு திரும்புவீர்! ஆதிக்குத் திரும்புவீர்! பவுல் என்ன போதித்தானோ அவற்றுக்கு திரும்புவீர். அவன் கொடுத்த ஞானஸ்நானத்தினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்ட, ஞானஸ் நானத்திற்குத் திரும்புவீர். தவறான விதமாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டவர்களை அவன் கண்டபோது, மீண்டும் சரியாக ஞானஸ்நானம் பண்ணப்படுங்கள் என்று அவர்களுக்குக் கூறினான். பரலோகத்திலிருந்து ஒரு தூதன் வந்து வேறு எதை யாவது பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவன் என்று கூறினான். ஆகவே அது மீண்டும் செய்திக்கு திரும்புதலாகும். நண்பர்களே. இது சாயங்கால வேளையாகும்.

225. ஓ, நான் அவரை மிகவும் நேசிக்கிறேன். நீங்கள் நேசிக்கிறீர்களா? இப்போது எத்தனை பேர்கள், தானியேலின் எழுபது வாரங்களையும், இந்த எழுபதாவது வாரம் என்ன என்பதையும் கண்டு கொண்டீர்கள்? எத்தனை பேர் அதை விசுவாசிக்கிறீர்களோ, ஆமென் என்று சொல்லுங்கள். (சபையார் 'ஆமென்'' என்று பிரதியுத்தரம் சொல்லுகிறார்கள் - ஆசி). தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.

226. இப்போது, அடுத்த காரியம் என்ன? ஏழு முத்திரைகள், கர்த்தர் அனுமதிக்கும்போது அதைப்பற்றி நாம் உடனே பார்க்கலாம். அது எப்போது; என்பது எனக்குத் தெரியாது. எப்போதெல்லாம் அவர் அதை நமக்கு அளிக்கிறாரோ, அப்போதெல்லாம் அவைகளைக் குறித்து காண்போமாக. அப்போது நமக்கு நீண்டதொரு கூட்டமானது உண்டாயிருக்கும், ஏனெனில், நாம் 6ம் அதிகாரத்திலிருந்து 19ம் அதிகாரம் வரையிலும் எடுத்துக் கொள்ளப்போகிறோம். எவ்வளவு மெதுவாக அதைப் பற்றி நாம் பார்க்கலாமோ, அந்த அளவுக்கு நாம்...

227. இப்போது, இதை யாரும் தவறாகப் புரிந்து கொண்டு போகும்படி நான் விரும்பவில்லை. ஒலிநாடாக்கள் இன்னும்

நான் ஒரு சரணத்தை உங்களுக்கு பாடுவேனாக.

கள்ளத் தீர்க்கதரிசிகள் பொய்யுரைக்கின்றனர்; இயேசு கிறிஸ்து நமது தேவனென்ற தேவ சத்தியத்தை அவர்கள்

மறுதலிக்கின்றனர். (அவர்கள் மூன்று ஆட்கள் என்ற தத்துவத்தை ஏற்படுத்துகின்றனர். ஆனால் அவர் அப்படியல்ல, அவரே நமது தேவன்).... அப்போஸ்தலர் நடந்த பாதையிலே நாம் நடப்போமாக மீட்பின் நாள் நெருங்குவதால், மனிதரின் இதயங்கள் பயத்தால் சோருதே, ஆவியால் நிரம்பியிருப்பீர். உமது விளக்குகளை தூண்டிவிட்டு எரியச் செய்வீர்

உம் மீட்பு சமீபமானதால் தலைகளை உயர்த்துங்கள்

222. நீங்கள் சந்தோஷமாயிருக்கவில்லையா? செய்திக்கு திரும்பி வாரீர், சகோதரனே! மூல உபதேசத்திற்கு திரும்புவீர், சகோதரனே! பெந்தெகொஸ்தேக்கு திரும்புங்கள்! உண்மையான ஆசீர் வாதத்திற்கு திரும்புவீர்! இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்குத் திரும்புவீர்! பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்குத் திரும்புவீர்! அற்புத அடையாளங்களுக்குத் திரும்புவீர்! பெந்தெகொஸ் தேக்கு திரும்புவீர். உங்கள் ஸ்தாபனங்களை விட்டு விலக்குங் கள். பரிசுத்த ஆவிக்கு திரும்புவீர். அவரே நமது போதகர்.

மீட்பின் நாள் நெருங்குவதால் மானுடரின் இதயம் பயத்தால் சோருதே, ஆவியால் நிரம்பியிருப்பீர், உம் விளக்குள் தூண்டிவிட்டு எரியச் செய்வீர்

உம் மீட்பு நெருங்குவதால் தலையை நிமிர்த்துங்கள்

223. அது அற்புதமாயிருக்கிவில்லையா? தீர்க்கதரிசி என்ன கூறினான்? ஒரு சமயம் உண்டாகும். அது இரவுமல்ல, பகலு மல்ல. அது எவ்வாறிருக்கும் என்பதை பாருங்கள். கவனித்தீர்களா? சபைக் காலங்கள் நெடுக மிகவும் மோசமாக இருந்திருக்கிறது. ஆனால் அது....

மாலை நேரத்திலே வெளிச்சம் உண்டாகும் மகிமைக்குப் போகும் பாதை நிச்சயம் கண்டடைவீர் தண்ணீர் வழியிலே இன்று ஒளியுண்டு இயேசுவின் விலையேறப் பெற்ற நாமத்திலே அடக்கம் பண்ணப்படுவீர் வாலிபரே, வயோதிபரே பாவங்களை விட்டு மனந்திரும்புவீர் அப்போது பரிசுத்த ஆவியானவர் நிச்சயம் பிரவேசிப்பார்.



வைத்திருப்பார்கள். தெருக்களில் அவர்களை இழுத்துக்கொண்டு வருவார்கள். வெப்பமண்டலத்தில் தகிக்கிற, கொதிக்கிற, எரிகிற சூரியனின் கீழோ அல்லது புயல்காற்று, மின்னல் மின்னிக் கொண்டிருக்கும்போதோ கூட அவர்கள் அசையாமல் முறையிடாமல் அவ்வப்பொழுது வருகிற தேவனுடைய வார்த்தையை தங்களுடைய ஆத்துமாவுக்காக பிடித்துக் கொள்ளும்படி அவர்கள் காத்துக் கிடந்தனர். அப்படியெல்லாம் இருக்கையில் நமக்கோ நம் தலைகளுக்கு மேலாக மின் விசிறிகள் சுழன்று கொண்டிருக்க, நமக்கு மேலே நல்ல கூரை இருக்க, நாம் ஏன் எதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்ளவேண்டும்? நாம் இதைப் பற்றி முறையிடுவோ மென்றால், நாம் நம்மைக் குறித்து வெட்கமடைய வேண்டி யவர்களாக இருக்கிறோம்.

6. தெற்கு பசிபிக் மாகடல் பிரதேசத்தில் உள்ள ஒரு தீவில் சமீபத்தில் நடந்ததை நான் நினைத்துப் பார்க்கிறேன். அன்றொரு நாள் இரவில் நான் ஒரு ஆராதனையை நடத்தினேன். அன்று ஒரு புயல் வந்தது. அவ்விதமானதொரு புயலை நான் கண்டதேயில்லை. எங்கும் மின்னலானது பளிர் பளீரென மாறி மாறி அடித்துக்கொண்டே இருந்தது. காற்று அடித்து மரங்களை கீழே சாய்த்தது. அப்பொழுது, நான், “நல்லது, மக்கள் எவரும் அங்கே வந்திருக்கமாட்டார்கள், எனது உடுப்பை நான் கழற்றி விடுகிறேன்...'' என்று எண்ணினேன்.

7. சிறிது நேரம் கழித்து, கதவுக்குப் பின்னால் ஒரு சிறிய கார் வந்து நின்றது; யாரோ கதவைத் தட்டி, ''போக ஆயத்தமாயிருக்கிறீர்களா?' என்று கேட்டார்.

அங்கே வந்த ஆங்கிலம் தெரிந்த அந்தப் பையனிடம் நான், ''அங்கே மக்கள் வந்திருக்கிறார்களா?" என்றேன்.

''அந்த பெரிய விளையாட்டரங்கத்தில் கூட்டம் நடக்கிற இடத்துக்குப் போகிற வழியில் உள்ள நகர் சதுக்கத்தண்டையில் கூட நெருங்க முடியாதபடி நிலைமை உள்ளது'' என்று அவன் பதிலளித்தான்.

''அந்த அளவுக்கு மக்கள் வெள்ளம் அங்கே இருக்கிறது என்று நீ கூறுகிறாயா, இத்தனை புயலிலும் கூட'' என்று நான் வினவினேன்.

''அவர்கள் தேவனை குறித்து கேட்க விரும்புகின்றனர்'' என்று பதிலளித்தான்.

8. எனவே நான் அங்கே சென்றேன். அங்கே ஸ்திரீகள், வாலிபப் பெண்கள், வாலிபர்கள் கூடியிருந்தனர். அவர்கள் கேலி பரிகாசமாக

நகைத்துக்கொண்டிருக்காமலும், மெல்லும் பசையை (Chewing gum) மென்று கொண்டிருக்காமலும், தங்களுடைய சிநேக பையன்களைப் பற்றி கதையடித்துக் கொண்டிருக்காமலும், ஒவ்வொரு வார்த்தையையும் அப்ப டியே அமைதியாக நின்று கவனித்துக் கொண்டேயிருந்தனர். பீட அழைப்பைக் கொடுத்தபொழுது, ஆயிரக்கணக்கானவர் கள் கண்ணீர் மல்க எழுந்து நின்று தேவனுக்கு நேராக தங்கள் கரங்களை உயர்த்தியவாறு தங்களுடைய ஆத்துமாக்களுக்கு இரக்கம் வேண்டிக் கேட்டவாறு இருந்தனர். அவர்களில், பதினேழு, பதினெட்டு வயது மதிக்கத்தக்க இளம் பெண்களும், வாலிபர்களும் இருந்தனர். இங்கே வயதான வர்களைக் கூட வார்த்தையை கேட்க வைப்பதென்றால் மிகவும் கடினமாயுள்ளது. நீங்கள் இவ்வித நிலையை கண்டீர்களா? நமக்கு முறையிட ஒன்றுமேயில்லை என்பதைத்தான் இது காட்டுகிறது. தேவனுக்கு நன்றியுண்டாவதாக. ஆம், ஐயா!

9. அமெரிக்காவில் ஏனைய இடங்களில் உள்ளதைப் போல நாமும் நவீனமயமாக யாவும் நமக்கு இருக்க வேண்டுமென்று விரும்புகிறோம். ஆனால் நமக்கு அந்த விதமாக இருக்கவில்லை. எனவே நமக்கு இருப்பதைக் கொண்டு நடத்திச் செல்லுவோம்.

10. இப்பொழுது கூடாரத்தில் மீண்டுமாக செய்ய நான் விரும்பி கவனித்துணர்ந்த சிறு காரியம் ஒன்றுண்டு. எத்தனை பேர்களிடத்தில் வேதாகமங்கள் உண்டு? கரங்களை உயர்த்திக் காண்பியுங்கள். நல்லது! ஜெபத்திற்கு முன்னால் நாம் 99ம் சங்கீதத்தை எடுத்துக்கொள்வோமாக. நாம் இதை அநேக ஆண்டுகளுக்கு முன் செய்வது வழக்கம். அப்படித்தானே சகோதரன் நெவில் அவர்களே! நீங்கள் ஏற்கெனவே ஒரு சங்கீதத்தை வாசித்து விட்டீர்களோ இல்லையோ எனக்குத் தெரியாது. இல்லை... சங்கீதங்களை சபையார் வாசிக்க வேண்டுமென நான் விரும்புகிறேன்.

11. இன்று காலையில் நான் எனது படிக்கும் அறையில் அமர்ந்து இச்செய்தியின் பேரிலும், வார்த்தையின் பேரிலும் தியானித்துக் கொண்டிக்கையில், “மக்கள் யாவரையும் மறுபடியுமாக ஒரு சங்கீதத்தை வாசிக்கச் செய்யவேண்டும், அது நன்றாக இருக்கும்'' என்று எண்ணினேன். நான் இங்கே வர சற்று தாமதமானதற்கு காரணம் என்னவெனில், நான் இங்கு வருவதற்குப் புறப்படும் முன்னர் தொலை தூரத்திலிருந்து, அதாவது ஷையானா என்ற இடத்திலிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. அதுதான் தாமதத்திற்குக் காரணம் ஆகும்.



அதன்பிறகு, அதுவெல்லாம் கத்தோலிக்க மார்க்கத்தில் போய் சங்கமமாகும். கடைசி காலத்தில் அதுவெல் லாம் கத்தோலிக்க கொள்கையில் போய் சங்கமமாகிவிடும் என்பதை ஞாபகத்தில் வையுங்கள். அது சரியாக அப்படித்தான் நடக்கும். கிறிஸ்துதாமே வருகையில், அது அர்மகெதோன் யுத்தக் களத்தில் இருக்கும்.

221. ஆனால் இந்த மூன்று தீர்க்கதரிசிகள் அல்லது இந்த மூன்ற ரை வருடங்கள், அது வெளிப்படுத்தின விசேஷம் 11:3-இல் உள்ளது, அதை நீங்கள் அநேக தடவைகள் வாசித்திருக்கிறீர்கள். "என்னுடைய இரண்டு சாட்சிகளும், ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் தீர்க்கதரிசனம் சொல்லும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுப்பேன்." ஆயிரத்து இருநூற்றறுபது நாட்கள் என்பது எத்தனை ஆண்டுகள். மூன்றரை ஆண்டுகள். எழுபதாவது வாரத்தில் மத்தியிலே அவர்கள் தெருக்களிலே கொல்லப்படுவார்கள். ஆகவே, தானியேலின் எழுபது வாரங்கள் எங்கே உள்ளன என்பதை கவனித்தீர்களா? நாம் எந்த சமயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை நீங்கள் கண்டீர்களா? நாம் முடிவான நேரத்தில் இருக்கிறோம், எனது இனிய நண் பர்களே, நாம் முடிவான நேரத்தில் இருக்கிறோம். இந்த நாட்கள்.....

தேசங்கள் உடைகின்றன; இஸ்ரவேல் விழித்தெழும்புகிறது; தீர்க்கதரிசிகள் முன்னுரைத்த அடையாளங்கள் நிறைவேறின (அந்தக் கட்டத்தில் நாம் இருக்கிறோம்) புறஜாதி நாட்கள் எண்ணப்படுகின்றன (இதோ இங்கே) பயங்கரங்கள் நேரிடுகின்றன, சிதறிப் போனவரே, உம் மந்தைக்கு திரும்புவீர். நாம் பாடுவோமாக:

மீட்பின் நாள் நெருங்குதே மானுடரின் இதயம் பயத்தால் சோருதே, ஆவியால் நிரம்பியிருப்பீர், உம் விளக்குகள் தூண்டிவிட்டு எரியச் செய்வீர் தலையை நிமிர்த்திப் பார்ப்பீர்,

உம் மீட்பு சமீபமே ஓ! அது அற்புதமாயிருக்கவில்லையா?

தேசங்கள் உடைகின்றன; இஸ்ரவேல் விழித்தெழும்புகிறது தீர்க்கதரிசிகள் முன்னுரைத்த அடையாளங்களின்படி, புறஜாதிகளின் நாட்கள் எண்ணப்படுகின்றன பயங்கரங்கள் நேரிடுகின்றன, மந்தையைவிட்டு சிதறியோரே,

திரும்புவீரே உம் சொந்த மந்தைக்கு இப்பொழுது, யாவரும் சேர்ந்து;

மீட்பின் நாள் நெருங்குதே மானுடரின் இதயம் பயத்தால் சோருதே, ஆவியால் நிரம்பியிருப்பீர், உம் விளக்குகளை தூண்டி எரியச் செய்வீர் உம் மீட்பு சமீபமானதால் உம் தலைகளை உயர்த்துங்கள்

முடிவானது மிக அருகாமையில் உள்ளது. இங்கேயொரு வேதவாக்கியம் உள்ளது. அங்கே அது முழுவதுமாக பூரணமாக, வேதப்பூர்வமான அத்தாட்சியாக உள்ளது.

218. உங்களுக்கு புரிந்துகொள்ள இயலாத காரியம் ஏதேனும் இருப்பின், ஒரு குறிப்பின் மூலம் அதைப்பற்றி எனக்கு எழுதித் தெரியப்படுத்துங்கள். ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். ஒலிநாடாக்கள் மூலம் இச்செய்தியை உலகின் பல்வேறு பாகங்களிலிருந்து கேட்டுக்கொண்டிருக்கிற சகோதரரே, உங்களுக்குப் புரியாதவைகள் ஏதும் இருப்பின், எனக்கு அதை தெரியப்படுத்துங்கள். நான் உங்களுக்கு உதவ முடியும். நான் கூறுபவைகளை நீங்கள் ஒத்துக்கொள்ளாமல் இருக்கக்கூடும். உங்களுடைய ஸ்தாபனத்தோடு நான் ஒத்துக்கொள்ளாமலிருக்கக் கூடும். உங்களையல்ல, ஆனால் உங்களுடைய ஸ்தாபன அமைப்போடு நாள் கருத்தொருமித்திருக்க முடியாது. கத்தோலிக்க மக்களோடு நான் இசையாதிருக்கவில்லை. கத்தோலிக்க மக்களை நான் விரும்பவில்லை என்று நான் கூறவில்லை. ஸ்தாபனத்திலுள்ள மக்களை நான் விரும்பவில்லை என்று நான் கூறவில்லை. அவ்வாறல்ல. நான் எல்லா ஜனங்களையும் நேசிக்கிறேன். ஆனால் உங்களை கட்டி வைத்திருக்கிற ஸ்தாபன அமைப்போடுதாள் நான் இசைவு கொள்ளாதிருக்கிறேன். அதனுடைய அமைப் பைத் தான் ஏற்றுக்கொள்ளவில்லை.

219. நான் ஜெர்மனிக்கு எதிராக விரோதப் போக்கைக் கொண்ட வனல்ல. ஆனால் அந்த நாஜிக் கொள்கைக்கு எதிராகத்தான் கருத்து கொண்டுள்ளேன். இத்தாலியருக்கு எதிராக உள்ளவனல்ல நான். பாசிசக் கொள்கைகளுக்கெதிராகத்தான் நான் கருத்து வேறுபாடு கொண்டவனாயிருக்கிறேன். அந்தக் காலத்தில் நான் இன்னொரு காரியத்தைக் குறித்து முன்னுரைத்திருந்தேன். முன் காலத்தவருக்கு அது நினைவிருக்கும். மூன்று பெரிய "இஸம்''கள் உள்ளன. அது உலகை இன்றைக்கு தனது ஆதிக்கத்தில் வைத்துக்கொள்ள முயலுகிறது. அவையாவன: பாசிசக் கொள்கை, நாஜிக் கொள்கை, கம்யூனிசம்", நான் அவைகளைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறேன்? யாவும் கம்யூனிசக் கொள்கையில் போய் முடிவுறும் என்றேன்.

220. பிறகு, நான் உங்களையெல்லாம் அப்போது என்னோடு சேர்ந்து திரும்பக் கூறும்படி வைத்தேன். அதென்னவெனில், "உங்கள் கண்களை ருஷியாவின் மேல் வையுங்கள்'' என்பது தான். உங்களுக்கு அது நினைவிருக்கிறதா? "ருஷியாவின் மேல் உங்கள் கண்களை வையுங்கள்'' அவைகள் யாவும் கம்யூனிசத்தில் போய் முடிவுறும்.



12. நான் இந்த சங்கீதத்தை எடுத்துக்கொள்ளும் வேளையில், அறிவிக்கும்படியாக அறிவிப்புகள் உள்ளன. அவைகள் இப்பொழுதுதான் என்னிடம் கொடுக்கப்பட்டன; இப்பொழுது சங்கீதம் 99.

13. ' இது முதற்கொண்டு இக்கூடாரத்தில் நடக்கும் கூட்டங்களைப் பற்றியும், வெளியில் நடக்கும் கூட்டங்களைப் பற்றியும் உள்ள அறிவிப்புகள் ஜெபர்சன்வில்லில் உள்ள அலுவலகத்தில் இருந்தே வரும். கூட்டங்களைப் பற்றிய தகவல் அறிய விரும்புவோர் தங்கள் பெயரையும், முகவரியையும் எழுதி இன்றிரவில் ஆராதனைக்குப் பின்பு, பிரசங்க பீடத்தில் வைக்கவேண்டும். கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு வசதியாக, உரிய ஏற்பாடுகளை செய்து கொள்ளத்தக்கதாக, உங்களுக்கு உரிய நேரத்தில் அறிவிப்பு அனுப்பப்படும்'' எங்கே நாங்கள் கூட்டங்கள் நடத்த உள்ளோம் என்பதைப் பற்றி எதிர்காலத்தில் அறிய விரும்பும் எவருக்கும் அதற்கு வசதியாக இப்பொழுது அங்கே அலுவலகத்தில் ஒரு ஒழுங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, நீங்கள் உங்களது பெயர் முகவரியை எழுதி இங்கே வைத்துவிடுவீர்களானால், எங்கே கூட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைப் பற்றியும், ஒருவேளை எந்தப் பொருளின் பேரில் செய்தி கொடுக்கப்படும் என்பதைப்பற்றியும், இன்னும் என்னென்ன தகவல்கள் தரப்பட வேண்டுமோ அவைகளையும் பற்றி ஒரு கார்டில் எழுதி உங்களுக்கு தகவலளிக்கப்படும். உங்களுக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தால் வரலாம். தகவல் வருவதற்கு அதிகாரபூர்வமுள்ள ஒரு இடம் உங்களுக்கு இல்லாமல் போனால், அப்பொழுது ஒருவர் ஒன்றைச் சொல்லவும், இன்னொருவர் இன்னொன்றைச் சொல்லவுமாக அதினால் நீங்கள் சரியான தகவலைப் பெற்றுக் கொள்ள இயலாமல் போய்விடும். எனவே, உங்களது பெயர் முகவரி ஆகியவைகளை ஒரு தாளில் எழுதி இங்கே வைத்து விடுவீர்களானால், பில்லி பால் அதை எடுத்துக்கொண்டு, அறிவிப்பை அனுப்புவார்.

14. இப்பொழுது இன்னொரு விஷயமும் கேட்கப்படுகிறது. மேற்கொண்டும்... இருக்குமா, "சகோ. பிரான்ஹாமே, கூடாரத் தில் மேற்கொண்டும் பகுத்தறியும் வரம் கிரியை செய்தலோடு கூடிய சுகமளிக்கும் ஆராதனைகள் நடத்துவீர்களா?'' என்று கேட்கப்படுகிறது. இல்லை, இல்லை பகுத்தறிதல்கள் நமது இன்னொரு குழவினரால் அளிக்கப்படும். நமக்கு சகோ. நெவில் அவர்கள் இருக்கிறார். அவருக்கு தீர்க்கதரிசன வரம் இருக்கிறது. அதினால் அவர் வியாதியஸ்தருக்காக

ஜெபிக்கையில் தீர்க்க தரிசனம் உரைத்து, அவர்கள் அறிந்து கொள்ள வேண்டியவைகளைப் பற்றி அறியச் செய்வார். நம்மிடையே ஹிக்கின் பாதம் என்ற பெயருள்ள ஒரு சகோதரன் உண்டு. அவர் தர்ம கர்த்தாக்களில் ஒருவராவார். அவர் உண்மையுடன் நமது மன்றக் குழுவில் பணி புரிந்தவர். அவரை நான் இன்று காலையில் இங்கு காணவில்லை. ஆனால் அவர் வழக்கமாக அன்னிய பாஷையில் பேசும் வரத்தையுடையவர். இங்கே ஒரு சிறிய பெண்மணியும் உண்டு, அவள் பெயர் ஆர்கன் ப்ரைட் என்பதாகும். அவள் மிகவும் இனிமையான சிறிய சகோதரியாவார். அவளுக்கு பாஷைகளுக்கு அர்த்தம் உரைக்கும் வரம் உண்டு.

15. இவர்கள் மூலம் அளிக்கப்படும் செய்திகள் தேவனால் உண்டானவைகளென நிரூபிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஏனெனில் அவைகள் ஒழுங்கோடும் கிரமத்தோடும் வருகின்ற னவையாக இருக்கின்றன. அவைகள் கிரமத்தோடு உள்ளவையாகும். இவ்வரங்கள் சபையில் குவிய ஆரம்பித்த உடனேயே, சபைக்குரிய ஒழுங்கில் அவைகளை ஒழுங்குபடுத்த நாம் முயலப்போகிறோம். வெகு விரைவில் நான் அதைக் குறித்து கவனிக்கப்போகிறேன், அதினால் ஆராதனைகளை கர்த்தருடைய ஒழுங்கின்படி பரிபூரணமாக கொண்டு செல்ல இயலும்.

16. ஆனால் இந்த அருமையான மக்களை, அவர்கள் மூலம் வரும் செய்திகளை எனது அண்டை வீட்டுக் காரியான திருமதி வுட் அவர்கள் ஒரு மைக்கை இங்கே பொருத்தி, ஒலிநாடாவில் கூட்டத்தின் நிகழ்ச்சி பூராவையும் பதிவு செய்து, அதின் மூலம் இவர்கள் உரைக்கும் இச்செய்திகளை பெற்றுக்கொண்டு அவைகளை எழுதியெடுத்து, அவைகள் சரிதானா இல்லையா என்று பரிசோதிப்பதாகக் கூறுகிறார். அவ்விதமாகத்தான் அவைகளை அச்சகோதரி சோதிக்கிறார். திருமதி வுட் அவர்கள் ஒரு நேர்மையான பெண்மணியாவார். அவர்கள் கூறிய அநேக காரியங்கள் நிறைவேறியிருக்கிறதாக அச்சகோதரி என்னிடம் கூறுகிறார்.

17. எனவே நாம் அதற்காக நன்றியுள்ளவர்களாயி ருக்கிறோம். நான் வீட்டுக்கு திரும்பி வருகையில் இதனால் எப்பேர்ப்பட்ட பாரம் நீங்கின உணர்வு எனக்கு வீட்டில் ஏற்படும்! தீர்க்கதரிசனம் ஊழியத்தின் பாகத்தில் அந்த பகுத்தறிதலினால் இரகசியத்தை வெளிப்படுத்தும் ஊழியமானது என்னை அப்படியே குலைத்து விடுகிறது. எனவே, தேவன் சபையில் தீர்க்கதரிசனம் உரைத்தல், அன்னிய பாஷையில் பேசி அர்த்தம் உரைத்தல்



ஒரு அழிவு வருவதையும் கவனியுங்கள், இந்தக் கடைசி காலத்தில் என்ன சம்பவிக்கிறது என்பதையும் கவனியுங்கள்.

215. ஓ, இந்த மூன்று தீர்க்கதரிசிகளையும் கவனியுங்கள் - இல்லை, இந்த இரண்டு தீர்க்கதரிசிகளையும் அவர்கள் இங்கே எழும்புகையில் கவனியுங்கள். வாரத்தின் மத்தியிலே அவ்விருவரும் கொல்லப்படுவார்கள், அதன்பிறகு, அர்மகெதோன் யுத்தமானது துவங்கும், அப்போது, தேவன் தாமே பேசத் துவங்குவார். அப்போது அவரே நின்று யுத்தம் செய்ய ஆரம்பிப்பார். அத்தீர்க்கதரிசிகள் வாதைகளினால் பூமியை அடிப்பார்கள். அவர்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் பிரசங்கிப்பார்கள். அவர்கள் அதேவிதமாகத்தான் ஞானஸ்நானமும் கொடுப்பார்கள். ஆதி அப்போஸ்தலப் பிதாக்கள் செய்த அதே காரியங்களை இவர்களும் செய்வார்கள்; அவர்களை அநேகர் பின்பற்றுவார்கள். ஆனால் ஒரு பெரிய சமஷ்டியாக கூடிக்கொண்டுள்ள ஸ்தாபனங்கள் தொடர்ந்து அதற்கெதிராக இருக்கும், ஆயினும் அத்தீர்க்கதரிசிகளின் வல்லமையை அவைகளால் முறியடிக்க இயலாது போகும். இறுதியாக அவர்கள் கூறுவார்கள்: "நாம் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து, ஒரே ஸ்தாபனமாக ஆக்குவோம்'' என்பார்கள். அப்போது அவன் என்னத்தை உள்ளே கொண்டு வருவான்? அவன் உள்ளே அருவருப்பை, ரோமனியக் கொள்கைகளை கொண்டு வருவான். பாழாக்குதலை உண்டாக்கும் காரியத்தை எங்கும் பரந்து விரிந்து இருக்கும்படி அவன் செய்வான். அருவருப்பு பாழாக்குதலை உண்டாக்கும். அது அசுத்தம் ஆகும்.

216. ஒரு மிருகத்தின் மேல் அமர்ந்திருக்கிறவளாய், இரத்தாம்பரம் உடுத்தினவளாய் இருக்கும் அந்த வேசித்தாயை உங்களுக்கு நினைவிருக்கிறதா? அம்மிருகத்திற்கு ஏழு தலைகளும் பத்து கொம்புகளும் உண்டாயிருந்தன என்பதும் நினைவிருக்கிறதா உங்களுக்கு? அவளுடைய வேசித்தனமான அருவருப்புகளினால் நிறைந்த ஒரு பாத்திரத்தை அவள் தன் கையில் பிடித்திருந்தாள். அதுதான் அவள் தன் ஜனங்களிடத்தில் உட்செலுத்திய அவளுடைய போதகமாகும். என் சகோதரரே, அங்கேதான் விஷயம் உள்ளது. நாம் முடிவு காலத்தில் இருக்கிறோம்.

217. சிறுபிள்ளைகளே, நமக்குத் தெரியாது. இன்றிரவில், நாம் மீண்டும் திரும்பி வருவதற்கு இயலாதபடி நாம் ஒரு வேளை ஜீவித்திருக்காமல் போகக்கூடும்; ஒருவரையொருவர் மீண்டும் சந்திக்க இயலாதபடி நாம் ஜீவித்திருக்காமல் இருக்கக்கூடும். நான் அறியேன். ஆனால் முடிவானது மிகவும் அருகாமையில் உள்ளது.

213. இங்கே அது சுற்றி வந்து காண்பிக்கிறதென்னவெனில், பிறகு நான் முன்னுரைத்தேன். கர்த்தர் அதை என்னிடம் கூறினார் என்று நான் கூறவேயில்லை. ஆனால் அன்று காலையிலே சபையிலே நின்று நான் கூறியதாவது: சுவற்றின் ஒரு முனையிலிருந்து மறுமுனைரைக்கும் நான் சென்றுவிட்டு நான் கூறினேன். ''இவ்வாறு சம்பவங்கள் ஒவ்வொன்றாக நடைபெற்று முன்னேறிக் கொண்டே வந்து எல்லாம் 1933க்கும் 1977க்கும் இடையிலே சம்பவித்து முடிந்துவிடும் என்று முன்னுரைக்கிறேன். ஆனால் நான் ஏன் இதை கூறுகிறேன் என்பது எனக்குத் தெரியாது'' என்று கூறினேன். தேவன் என் இருயத்தை அறிவார், அதை நான் எப்படிக் கூறினேன் என்பதை, நேற்று வரையிலும் நான் அறியவில்லை. நேற்றுத்தான் 1977ம் ஆண்டு தான் எழுபதாவது யூபிலி ஆண்டாகும் என்பதை அறிந்து கொண்டேன். இஸ்ரவேலுக்கும் ஆண்டவர் அந்த அளவு காலம் கொடுத்திருந்தார். இப்போது முடிவு காலத்திலும் அவ்வாறே காரியமானது இருக்கும். எனவே நாம்... இங்கே நாம் இக்காலத்தின் முடிவில் வந்துவிட்டோம். எழுபதாவது வாரம் வரப்போகிற கட்டத்தில் நாம் இருக்கிறோம். சபையானது எந்த வேளையில் போய்விடும் என்பதை நாமறியோம். ஓ, என்னே! நாம் என்ன செய்யமுடியும், நண்பர்களே! நாம் எங்கேயிருக்கிறோம்?

214. நாம் இப்போது எங்கேயிருக்கிறோம் என்பதை நீங்கள் காண்கிறீர்களா? தானியேலின் எழுபதாவது வாரத்தை நீங்கள் புரிந்து கொண்டீர்களா? இப்போது பாருங்கள், நாம் இந்த முத்திரைகளின் செய்திக்குள் கடந்து செல்லுகையில், முத்திரை களை உடைக்கப்போகையில், முதலாவதாக வருவது அந்த வெள்ளைக் குதிரையின் மேல் சவாரி செய்து வருபவன்தான். அவனது கையில் ஒரு வில் உள்ளது. அந்த ஆள் யார் என்பதைக் கவனியுங்கள். அவனுக்குப் பிறகு வரும் மங்கின நிறமுள்ள குதிரையின் மேல் வருகிறவனைக் கவனியுங்கள். அவன் யார் என்பதை கவனித்து, அவன் எவ்வாறு வருகிறான் என்பதையும் பாருங்கள். அந்த 1,44,000 பேர்களைக் கவனியுங்கள். நித்திரை செய்யும் அக்கன்னியரை அவர் வருகையில் கவனியுங்கள். பிறகு நடக்கப்போகும் யாவற்றையும் கவனியுங்கள்; கோபக்கலசங்கள் ஊற்றப்படுதல், அந்த 'ஐயோக்கள், தவளைகளைப் போன்ற அம்மூன்று ஆவிகள் ஆகியவைகள் எவ்வாறு சரியாக பொருந்துகின்றன என்பதைக் கவனியுங்கள். சரியாக அந்த வாதைகள் ஊற்றப்படுதலைக் குறித்தும் கவனியுங்கள். ஒவ்வொரு முத்திரையும் திறக்கப்படும் போதெல்லாம், ஒரு வாதையானது ஊற்றப்படுவதையும்,



இவைகளை அளித்ததின் மூலம் எனக்கு கொஞ்சம் சுமையை நீக்கி விடுதலை அளித்துள்ளார். அந்நிய பாஷையில் பேசி அர்த்தம் உரைத்தல் தீர்க்கதரிசன வரமாய் இருக்கிறது. அன்னிய பாஷையில் பேசுவதாவது.......அங்கே இரண்டு பேர்கள் தீர்க்கதரிசனம் உரைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒருவர் அன்னிய பாஷைகளில் பேசுகிறார். இன்னொருவர் முதலாமவர், அன்னிய பாஷைகளில் பேசுவது என்ன என்பதை வியாக்கியானிக்கும் வரத்தினால் புரிந்துகொள்கிறார், எனவே அது நிச்சயமாகவே தீர்க்கதரிசனம் உரைத்தலாகத்தான் இருக்கிறது.

18. இங்கு நடக்கும் ஒவ்வொரு கூட்டத்திலும், நமக்கு ஜெப வரிசையானது இருக்கும் பொழுதெல்லாம், அது நமக்கு உண்டாயிருக்கிறது. யாரோ ஒருவர் அந்த வரத்தைப் பற்றி கேட்டார். ஆம் நான் இன்னமும் அதை உடையவனாகத்தான் இருக்கிறேன். ஆனால் நான் அதை தனிப்பட்ட நேர்முகப் பேட்டிகளில் (Private Interviews) மட்டுமே உபயோகிக்கிறேன். நேர்முகப் பேட்டியை எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பதைப்பற்றி அறிவிப்புப் பலகையில் தெரிவிக்கப்பட் டுள்ளது என்று நான் நம்புகிறேன். அதற்காக அனுமதியைப் பெறவும், உங்களுக்குரிய நேரத்தை ஒழுங்குப்படுத்தித் தரவும் என் மகன் பில்லி பவுல் உள்ளார். இங்கே இக்கூட்டங்களுக்குப் பிறகோ, வெளியில் எங்கேயாவதோ, நேர்முகப் பேட்டி காண வேண்டுமெனில், பில்லி பவுல் வழங்கும் ஒரு கார்ட் உங்களிடம் இருக்க வேண்டும் - உங்கள் வாழ்க்கையில் நீங்கள் புரிந்துகொள்ள இயலாத காரியம் உண்டென்றால், அதினின்று நீங்கள் விடுவிக்கப்பட வழி காணாமல், அதற்காக நீங்கள் கர்த்தருடைய ஞானத்தைத் தேடுவீர்களானால், அப்பொழுது செயலாளராக உள்ள என் மகன் பில்லி பவுலைப் போய் பாருங்கள். அவர் உங்களுக்கு ஒரு சிறிய அட்டையைக் கொடுத்து, அதில் ஒரு தேதியையும், நேரத்தையும் குறிப்பிட்டுத் தருவார். அவ்விதமான நேர்முகப் பேட்டிகளை நாம் நடத்தும் பொழுது, பேட்டிக்காக வரும் நீங்கள் நானும் மட்டும் அங்கே இருப்போம். வருவது ஸ்திரீயாக இருப்பின் அப்பொழுது என் மனைவியும் கூட இருப்பாள். அப்பொழுது நாம் கர்த்தரை தேடி நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி அவரிடம் கேட்போம்.

19. ஏனைய சிறிய விஷயங்களை சகோதரன் நெவில் அவரிகளிடத்திலும், சகோதரன் ஹிக்கின்பாதம் அவர்களிடத்திலும் சகோதரி ஆர்கன் ப்ரைட்டினிடத்திலும் இங்கே சபையில் இருக்கிற,

அன்னிய பாஷைகளில் பேசி வியாக்கியானிக்கிற ஏனையோரிடத்திலும் ஒப்படைப்போம்.

20. ஆகவே நாம் யாத்திரை செய்கிறவர்களைப் போல் இருக்கி றோம். ஒரு சமயம் யெத்ரோ இவ்வாறு மோசேயிடம் கூறினான் என்று நம்புகிறேன்; சில மூப்பர்களை தெரிவு செய்வோம்...'' என்று மோசேயினிடத்திலிருந்த தேவ ஆவியானவர் எழுபது மூப்பர்களில் பகிரப்பட்டு அவர்கள் தீர்க்கதரினம் உரைத்தார்கள். பெரியதும், கடினமானதுமான விஷயங்கள் மட்டுமே மோசேயிடம் கொண்டு வரப்பட்டன. இப்பொழுது நாம் மோசேயல்ல, இவர்கள் எழுபது மூப்பர்களுமல்ல. ஆனால் நாம் இன்னமும் அதே யேகோவா தேவனை, வாக்குத்தத்தம் பண்ணப் பட்ட தேசத்திற்கு நம்மை நடத்திச் செல்கிற அதே அக்கினி ஸ்தம்பத்தை உடையவர்களாய், சேவித்துக் கொண்டிருக்கிறோம். வியாக்கியானங்களும், பகுத்தறிதலினால் இரகசியங்களை வெளிப்படுத்துதலும் உண்டாயிருக்கிற பிற கூட்டங்கள் நாம் நடத்தப் போகிறோம். அதுதானே ஜெபத்திலும் வேத வாசிப்பிலும் இருப்பதற்குரிய வாய்ப்பை எனக்குக் கொடுத்து, இந்த நேர்முகப் பேட்டிகள் வரப்போகும் நாட்களை அறிந்தவனாய், அதற்கென்று நான் ஆயத்தமாவேன்.

21. நமது ஊழிய செயலாளராகிய பில்லி பவுல் பிரான்ஹாம் அவர்கள் இதற்குரியவைகளை செய்வார். அதைப்பற்றி தர்மகர்த்தாக்களினால், பின்னால் இருக்கிற அறிவிப்புப் பலகையில் குறிப்பிடபட்டுள்ளது. மக்கள் வெளியே செல்லுகையில், அறிவிப்பு பலகையில் அதைப்பற்றி வாசித்து அறிந்து கொள்ள வேண்டியது என்று மக்களுக்கு அறிவிக்கும்படியாக என்னிடம் ஒரு சிறு குறிப்பு கொடுக்கப்பட்டது.

22. இப்பொழுது, இக்காலையில், நாம் ஒரு மகத்தான பாடத்தை உடையவர்களாயிருக்கிறோம். இன்றிரவிலும் அதை தொடர்ந்து நாம் பார்க்கலாம். கர்த்தருக்கு சித்தமானால் அடுத்த ஞாயிற்றுக் கிழமையில் அதற்குள்ளான இன்னொரு பாகத்தையும் பார்ப்போம். நான் அதைப் பற்றி படித்து ஆராய்கிற வரையிலும், அது எவ்வளவு ஆழமானது என்பதைப் பற்றி அறியாதிருந்தேன். இன்னமும் அது எனக்கு இரகசியமானதாகத்தான் இருக்கிறது. எனவே நான் கர்த்தரையே சார்ந்து கொண்டிருக் கிறேன்.

23. இப்பொழுது வேதாகமம் உள்ளவர்கள், 99ம் சங்கீதத்திற்கு நாம் திருப்புவோம். முதலில் நான் ஒரு வசனத்தை வாசிக்கவும், அடுத்த



மலிந்து காணப்படுகிறது. ஆனால் அவர்கள் விபச்சாரிகள்தான். ஆனால் நமது தேசத்திலோ நமது பெண்கள், விவாகமான பெண்களாயிருந்து கொண்டு, கணவனையல்லாமல், வேறு பல மனிதரோடும் வாழ்கிறவர்களாய் காணப்படுகிறார்கள்; அதே போல் விவாகமான ஆண்கள் தங்களுடைய மனைவியில்லாத வேறு ஸ்திரீகளோடு வாழத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

210. பலதார மணம் அனுமதிக்கப்பட்டுள்ள தேசங்களில் இதைவிட ஆயிரம் மடங்கு சிறந்து காணப்படுகிறது. ஆயினும் பல தார மணமானது தவறானது என்பதை நாம் அறிவோம்.

211. ஆனால், நாம் எத்தனையாய் தரம் தாழ்ந்து காணப் படுகிறோம் என்பதைக் காண்பிப்பதற்காக இங்கே என்னிடம் ஒரு செய்தித்தாளிலிருந்து கத்தரித்து எடுக்கப்பட்ட ஒரு செய்திக் குறிப்பு உள்ளது. அதில், நமது அமெரிக்க வாலிபர்கள் வெளிநாட்டிற்கு, போன யுத்தத்திற்கு சென்று விட்டு திரும்பி வந்தபோது, எழுபத்தைந்து சதவீதமான பேர்கள்... ஒரு நிமிடம் பொறுங்கள், வெளி நாட்டில் யுத்தத்திற்கு சென்று விட்டு நமது வீரர்கள் திரும்பி, வந்த போது அவர்களில் நான்கில் மூன்று பேர்களுடைய மனைவிகள் அவர்களை விவாகரத்து செய்து விட்டனர் என்று கூறப்பட்டுள்ளது. பெரிய செய்தித் தலைப்பு களில், “நமது அமெரிக்கா ஜனங்களின் ஒழுக்கப்பண்புகளுக்கு என்ன நேர்ந்து விட்டது?'' என்று கொட்டை எழுத்துக்களில் செய்தி வெளியிட்டிருந்தார்கள். அதைபடித்தது உங்களுக்கு நினைவிருக்கிறதா? நீங்கள் யாவருமே அதைப் படித்திருக்கிறீர் கள் என்று நான் கருதுகிறேன். நமது அமெரிக்க ஸ்திரீகளின் ஒழுக்கப் பண்புகளுக்கு என்ன நேர்ந்துவிட்டது. வேற்று ஆண்களோடு அவர்கள் சமமாக தொழிற்சாலைகளில் பணிபுரிகிறார்களே. இது ஒரு ஸ்திரீகளின் தேசமாயிருக்கிறது. அவள் என்னத்தைப் பெற போகிறாள்? ஒரு பெண் தேவதையைத்தான்.

212. இதன்பிறகு, நான் திரும்பிப் பார்த்தேன்; அப்போது இந்த அமெரிக்க ஐக்கிய நாடுகள் எரிந்து புகைக்காடாய் போனதாகவும், பாறைகள் வெடித்து சிதறியதாகவும் கண்டேன். குவித்து வைக்கப்பட்டுள்ள பெரிய மரக்கட்டைகளிலே தீப்பிடித்துக் கொண்டு எரிந்தால் எப்படியிருக்கிறதோ, அவ்விதமாக அமெரிக்கா எரிந்துகொண்டிருந்தது. நான் கண்ணுக்கெட்டிய தூரம் வரையிலும் பார்த்தபோது, அது முழுவதும் வெடித்து தகர்ந்து போயிருந்தது. அப்போது அத்தரிசனம் என்னை விட்டு அகன்று போனது. ஏழு காரியங்களில் ஐந்து ஏற்கெனவே நிறைவேறிவிட்டன.

அந்த கார் உங்களை விபத்து ஏதுமின்றி, எங்கும் மோதாமல் பத்திரமாக எடுத்துச்செல்லும். காந்த சக்தியினாலே, வேறு எந்த வாகனமும் உங்கள் வாகனத்தில் மோதாமல் இருக்கும்படி செய்து, பத்திரமாகச் செல்லும். அவ்விதமான வாகனத்தை அவர்கள் உருவாக்கியுள்ளார்கள் இப்போது ஓ, என்னே! அதைக் குறித்து எண்ணிப் பாருங்கள். இது சம்பவிப்பதற்கு முப்பதாண்டுகளுக்கு முன்பாக முன்னுரைக்கப்பட்டது.

206. ஜனாதிபதி கென்னடி அவர்கள் தெர்தெடுக்கப்பட்ட தேர்த லுக்கு இது நம்மை கொண்டு வருகிறது. இப்போதுதான் இந்த காரானது காட்சியில் தோன்றியுள்ளது. ஆகவே ஏழு சம்பவங்களில் ஐந்தாவது சரியாக நிறைவேறிவிட்டது.

207. பிறகு நான் முன்னுரைத்துக் கூறியதாவது: "நான் ஒரு பெரிய அழகான ஸ்திரீயை மிகவும் ராஜரீக பாணியில் இரத்தாம்பரம் போல் உடையுடுத்தினவளாய் கண்டேன்.'' அதை இங்கே வளை அடைப்புக் குறிக்குள் எழுதி வைத்துள்ளேன். 'அவள் அமெரிக்காவில் ஒரு பெரிய ஆளுகை செய்கிறவளாய் இருந்தாள். அவள் ஒரு வேளை கத்தோலிக்க சபையைக் குறிக்கக்கூடும்" என்று கூறினேன். ஒரு ஸ்திரீ, ஏதோ ஒரு ஸ்திரீ... அது கத்தோலிக்க சபையாகத்தான் இருக்கும் என்ப தாக எனக்குத் தெரியாது. எனக்குத் தெரியாது. என்னால் கூற இயலாது. நான் கண்டதெல்லாம், ஒரு ஸ்திரீயை, அவ்வளவு தான்.

208. ஆனால் இது ஒரு ஸ்திரீயின் தேசமாகும். தீர்க்கதரிசனத்திலே இத்தேசம் பதின்மூன்று என்ற எண்ணைப் பெறுகிறது. அவளுக்கு பதிமூன்று கோடுகள் அவளது கொடியில் உள்ளன. பதின்மூன்று நட்சத்திரங்கள், அவள் பதிமூன்று காலனிகளை ஆரம்பித்தாள். எல்லாம் பதிமூன்று பதிமூன்று என்பதாகத்தான் இருக்கிறது. வெளிப்படுத்தின விசேஷம் பதின்மூன்றாம் அதிகாரத்திலும் அவள் தோன்றுகிறாள். அவள் பதின்மூன்று என்ற எண்ணையுடையவளாயிருக்கிறாள். எனவே அவள் ஒரு ஸ்திரீயின் தேசமாயிருக்கிறாள்.

209. ஏனைய தேசங்களை விட அமெரிக்கா தான் தன்னுடைய விவாகரத்து நீதிமன்றங்களின் வாயிலாக அதிகமதிகமான விவாகரத்துக்களை உண்டாக்குகிறது. நமது தேசத்தின் ஒழுக்கப் பண்புகள் மிகவும் தாழ்ந்து காணப்படுகிறது. ஃபிரான்ஸ், இத்தாலி ஆகிய தேசங்களைக் காட்டிலும் அதிகமான விவாகரத் துக்கள் நமது தேசத்தில் காணப்படுகிறது. அத்தேசங்களில் வீதிகளிலே விபச்சாரம்



வசனத்தை நீங்கள் வாசிக்கவும், இவ்வாறு மாறி மாறி வாசித்து, முடிவில் கடைசி வசனத்தை நாம் யாவரும் சேர்ந்து வாசிப்போம். இவ்வாறு நான் முதலாம் வசனத்தை வாசிக்கவும் சபையார் இரண்டாம் வசனத்தை வாசிக்கவும் மறுபடி நான் மூன்றாவது வசனத்தையும் சபையோர் நான்காவது வசனத்தை வாசிக்கவும் செய்து, இப்படியாக கடைசி வரைக்கிலும் செய்து கடைசி வசனத்தை நாம் யாவரும் சேர்ந்து வாசிப்போமாக. தேவ வசனத்தை வாசிக்கையில் நாம் யாவரும் எழுந்து நிற்போமாக.

கர்த்தர் ராஜரிகம் பண்ணுகிறார் , ஜனங்கள் தத்தளிப்பார் களாக; அவர் கேருபீன்களின் மத்தியில் வீற்றிருக்கிறார், பூமி அசைவதாக.

கர்த்தர் சீயோனில் பெரியவர், அவர் எல்லா ஜனங்கள் மேலும் உயர்ந்தவர்.

மகத்துவமும் பயங்கரமுமான உமது நாமத்தை அவர்கள் துதிப்பார்களாக; அது பரிசுத்தமுள்ளது.

ராஜாவின் வல்லமை நீதியில் பிரியப்படுகிறது. தேவரீர் நியாயத்தை நிலை நிறுத்துகிறீர்; நீர் யாக்கோபில் நியாயமும் நீதியும் செய்கிறீர்.

நம்முடைய தேவனாகிய கர்த்தரை உயர்த்தி, அவர் பாத படியிலே பணியுங்கள்; அவர் பரிசுத்தமுள்ளவர்.

அவருடைய ஆசாரியரில் மோசேயும் ஆரோனும், அவர் நாமத் தைப் பற்றிக் கூப்பிடுகிறவர்களில் சாமுவேலும், கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்; அவர் அவர்களுக்கு மறு உத்தரவு அருளினார்.

மேகஸ்தம்பத்திலிருந்து அவர்களோடே பேசினார்; அவர்கள் அவருடைய சாட்சிப்பிரமாணங்களையும் அவர் தங்களுக்குக் கொடுத்த கட்டளைகளையும் கைக்கொண்டார்கள்.

எங்கள் தேவனாகிய கர்த்தாவே, நீர் அவர்களுக்கு உத்தரவு அருளினீர்; நீர் அவர்கள் கிரியைகளினிமித்தம் நீதி சரிக்கட்டின போதிலும், அவர்களுக்கு மன்னிக்கிற தேவனாயிருந்தீர்.

நம்முடைய தேவனாகிய கர்த்தரை உயர்த்தி அவருடைய பரிசுத்த பர்வதத்திற்கு நேராகப் பணியுங்கள்; நம்முடைய தேவனாகிய கர்த்தர் பரிசுத்தமுள்ளவர்.

24. நாம் இப்பொழுது தலைகளை வணங்குவோம். உண்மையாகவே கர்த்தாவே, இவ்வசனங்களை உமது தாசனாகிய தாவீது ஒரு

சங்கீதமாக உமக்கென எழுதி வைத்துள்ளான். நீர் கேருபீன் களின் மத்தியில் வாசம் பண்ணுகிறீர். நீர் பரிசுத்தர், உமது பர்வதமும் பரிசுத்தமுள்ளது. எங்கள் இருதயங்கள் கர்த்தராகிய இயேசுவின் இரத்தம் தெளிக்கப்பட்ட நிலையிலும், சுத்தமனச் சாட்சியோடும், விசுவாசத்தோடும் எங்கள் தேவனின் சமூகத்தில் பிரவேசிக்கிறோம் என்ற நிச்சயத்தோடும் நாங்கள் கிட்டி சேரக்கடவோம். இன்று காலையில் இங்கு கூடி வந்திருப்போர் யாவரும் பயபக்தியாயிருக்கட்டும். அறிவையடையும்படி எங்கள் காதுகளை திறந்தருளும். இந்நாட்களில் உமது பிரசன்னத்தில் நாங்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று நாங்கள் அறிந்துகொள்ளத்தக்கதாக ஞானத்தோடும் எங்களிடம் பேசியருளும்.

25. எங்கள் தேவனே, மிகவும் உத்தமமானதும், பய பக்திக்குரியதுமான வசனங்களிலொன்றை நாம் அணுகிக் கொண்டிருக்கிற வேளையில், இத்தனை ஆண்டுகளாக இரகசியமாக வைக்கப்பட்டிருந்த இக்காரியங்களை எங்களுக்கு வெளிப் படுத்தி அருளும் என்று நாங்கள் உம்மிடம் கேட்கிறோம். நீர் இவ்வுலகில் இருக்கும்போது அதைக் குறித்து பேசி, ''வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன்'' (மத். 24:15) என்று கூறினீர். எனவே, கர்த்தாவே நாங்கள் உம்மிடம் கனிவுடன் வருகிறோம். என்ன கூறுவது என்பதை நாங்கள் அறியாதிருக்கிற நிலையில் உமது ஞானத்தைத் தேடுகிறோம். இங்கே சில வேதவாக்கியங்களை வரிசையாக எழுதி வைத்திருக்கிறோம். பயபக்தியோடும் பதில் வேண்டி உம்மை முழுமையாக சார்ந்து கொண்டும், வேறு எந்த நோக்கத்திற்கும் அல்ல, நாங்கள் ஜீவிக்கிற வேளையைக் குறித்து அறிந்து கொள்ளும்படியும், எங்களுக்கு முன்னால் இருக்கும் மகத்தான காரியங்களுக்காக நாங்கள் ஆயத்தப்பட்டிருக்கவுமாக வருகிறோம். அதை நீர் எங்களுக்கு அளிக்க மாட்டீரா, கர்த்தாவே? இவ்விதமாக ஜெபிக்க வேண்டுமென எங்களுக்கு கற்பித்தவருடைய நாமத்தினால் கேட்கிறோம். (சபையார் கர்த்தருடைய ஜெபத்தை ஒன்று சேர்ந்து கூறுகிறார்கள் - ஆசி).

''பரமண்டலங்களிலிருகிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.

உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக.

எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்கு தாரும்.



தேர்ந்தெடுப்பார்கள்'' என்று நான் கூறினேன். கடந்த தேர்தலிலே அப்படிப்பட்ட காரியத்தை அவர்கள் செய்து விட்ட னர்.

நான்காவதாக: “விஞ்ஞானமானது மிக வேகமாக முன்னேற்றமடையும்'' என்று நான் கூறினேன். இல்லை, இங்கே மூன்றாவது ஒன்று உள்ளது. என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். இங்கே அடுத்ததான இது இப்போது கூறுகிறேன்.

204. நான்காவதாக: “நமது யுத்தம் ஜெர்மனியோடு இருக்கும் என்றும், அவர்கள் பெரிய காங்க்ரீட்டினாலான ஒரு மதில் சுவரைக்கட்டி மதிலிடுவார்கள் என்றும், அமெரிக்கர்களுக்கு பெரிய மடங்கடிப்பு ஏற்படும்'' என்றும் நான் கூறினேன். இப்போது சர்வவல்லமையுள்ள தேவனுக்கு முன்பாக நான் நிற்கிறேன், அவர் அதை அறிவார், அமெரிக்கர்களை அந்த மதிலண்டையிலே அந்த சுயாதீன நாஜிகள் அவ்வாறு உதைத்துத் தள்ளுவார்கள் என்பதை நான் கண்டேன். அது என்ன என்பதை அறிந்திருக்கிற அந்த சீக்ஃப்ரெட்லைன் என்ற மதில் கட்டப்படுவதற்கு பதினொரு ஆண்டுகளுக்கு முன்பாக நான் அதைப் பற்றி முன்னுரைத்திருந்தேன். தேவன் உண்மையுள்ள வராயிருக்கிறாரா? இப்போதும் அவர் நடக்கப்போகிறவை களைப் பற்றி முன்னுரைக்கிறாரா? கவனியுங்கள். அது நான் காவதாக உள்ளது.

205. ஐந்தாவதான காரியம் என்னவெனில்: ''மோட்டார் வாகனங்கள், ஸ்டிரியங்கைப் பிடித்து மனிதன் ஓட்டாமல் தானாகவே ஓடுமளவுக்கு விஞ்ஞானமானது மிகவும் முன்னேற்றமடையும். கார்கள் முடிவு பரியந்தம் முட்டை வடிவத்தில் வடிவமைக்கப்படுவது தொடர்ந்து நடைபெறும்'' என்று கூறினேன். அமெரிக்க குடும்பம் அகன்ற நெடுஞ்சாலையில் தங்களது காரில், ஸ்டியரிங் வீல் எங்கே இருக்குமோ அதற்கு நேராக தங்கள் முதுகுகளை காண்பித்துக் கொண்டு உட்கார்ந்து கொண்டு செக்கர்ஸ் அல்லது சீட்டாட்டம் ஏதோ விளையாடிக் கொண்டே அந்த காரில் சவாரி செய்து கொண்டு செல்லுவதை நான் கண்டேன். இப்போது அந்தவிதமான காரானது வந்து விட்டது. அதைப் பற்றி தொலைகாட்சியில் காட்டப்பட்டது. ‘பாபுலர் சயன்ஸ்'' “மெக்கானிக்ஸ்'' ஆகிய பத்திரிக்கை களிலே அதைப்பற்றி செய்தி வெளியாகியுள்ளது. அது தொலை விலிருந்து கட்டுப்படுத்தப்படும் ஒருவகை ராடாரினாலே இயக்கப்படுவதாக இருக்கிறது. அவர்களுக்கு இனிமேல் தங்கள் காரிலே ஸ்டியரிங் வீலே தேவைப்படாது. நீங்கள் தொலைபேசியில் டயல் செய்வதைப் போன்று, வாகனத்தில் டயலை ஒழுங்குப்படுத்திக்கொண்டால் போதுமானது,

வேண்டிய ஏழு காரியங்களைப் பற்றி நான் முன்னு ரைத்திருந்தேன். இப்போது கவனியுங்கள். நான் கூறினேன். இப்போது ஞாபகத்தில் கொள்ளுங்கள். அது துவங்குவதற்கு முன்பே, நாம் இரண்டாம் உலகப் போரில் ஈடுபடுவோம் என்றேன். அதைப் பற்றி நான் கூறியதை நினைவில் வைத்திருந்தவர்கள் "ஆமென்'' என்று கூறுங்கள் (சபையார் 'ஆமென்'' என்று பதிலளிக்கிறார்கள் - ஆசி). ஒரு இரண்டாம் உலக யுத்தம். நான் அப்போது கூறினேன். “இப்போது இருக்கிற இந்த நமது ஜனாதிபதி - அவர் ப்ராங்களின் டி. ரூஸ்வெல்ட் ஆவார் (அது யார்; என்பதை எத்தனை பேர்கள் நினைவில் வைத்திருக்கிறீர் கள்?) அப்போது அவர் முதல் தடவையாகக் கூட ஜனாதிபதி யாக இருந்தார், ''அவர் நான்காவது தடவையாகக் கூட ஜனாதிபதி தேர்தலுக்கு நிற்பார்'' என்று கூறினேன். அவர் நான்காவது தடவையாக கூட பதவி வகிப்பார். நமது நாடு இரண்டாம் உலகப் போரில் ஈடுபடும்படி இழுக்கப்படுவோம்'' என்று கூறினேன்.

202. இப்போது, இத்தாலி தேசத்தில் எழும்பிக்கொண்டிருக்கும் சர்வாதிகாரி (அது முஸோலினி) எத்தியோப்பியாவின் மேல் படையெடுப்பான் என்றும், எத்தியோப்பியா அவன் காலடியில் வீழும்'' என்றும் கூறினேன். நான் அன்று ''ரெட்மேன்ஸ் ஹால்'' என்ற இடத்தில் கூட்டங்களை நடத்திக் கொண்டிருந்தபோது, அன்றிரவிலே நான் அதைப் பிரசங்கித்ததற்காக என்னை அங்கிருந்து வெளியேற்ற வேண்டுமென்று எண்ணி ஒரு கூட்டம் மக்கள் அங்கே குழுமியிருந்தனர் என்பதை அறிந் திருக்கிற மக்கள் இங்கே அமர்ந்திருக்கின்றனர். அதை பிரசங்கிப்பதற்காக நான் அந்த 'ரெட்மேன்ஸ் ஹால்'' என்ற இடத்திற்கு செல்ல வேண்டியிருந்தது. ஆம், திருமதி வில்சன் அவர்களும் கூட நான் அதை கூறிய போது அங்கே இருந்தார்கள். என்பதை நான் அறிவேன். அது சரிதான். அவன் அதைச் செய்தானா? ''அவன் அவமானகரமான முடிவை அடைவான்'' என்று நான் கூறினேன். அவ்வாறே அவனும் செய்தான். அவனும் அவனுடைய காதலியும் தலைகீழாக வீதியிலே தூக்குப் போடப்பட்டு அவர்களுடைய ஆடைகளெல்லாம் கீழே கலைந்து விழுந்து தொங்கி கொண்டிருக்கிற நிலையில், இறந்து கிடந்தனர். நல்லது, அது அப்படியே நிறைவேறிற்று.

203. பிறகு நான், “ஸ்திரீகள் வோட்டுப்போட அனுமதிக்கப் பட்டுள்ளனர். அப்படிப்பட்ட செயலானது இத்தேசத்திற்கு ஏற்பட்ட மிகவும் அவமானகரமான செயலாகும். அவ்வாறு வோட்டுப் போட்டு தேர்ந்தெடுப்பதில், அவர்கள் ஒரு நாளில் தவறான நபரைத்



எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல் எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.

எங்களை சோதனைக்குட்படப் பண்ணாமல் தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும். ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்.

மத். 6:9-13

நீங்கள் அமர்ந்து கொள்ளலாம்.

26. சகோதரர்களில் யாராவது தங்களது கோட்டுகளை கழற்றிக் கொள்ள விரும்பினால், செய்து கொள்ளுங்கள். சுவற்றின் பக்கங்களில் சுற்றிலும் நின்று கொண்டிருக்கிறவர்களே, உங்களு டைய கால்கள் வலியெடுத்தால், நீங்கள் நகர்ந்து சற்று வெளியே செல்ல விரும்பினால், நீங்கள் அப்படி செய்து கொள்ளலாம்.

27. இப்பொழுது, சிறு பிள்ளைகள் தங்களுடைய அறைகளுக்கு போக விரும்புவார்களோ என்று நினைக்கிறேன். அல்லது அவர்களை ஏற்கெனவே போகவிட்டாயிற்றா? மேய்ப்பர் கூறுவதென்னவெனில், அறைகளிலெல்லாம் கூட்டமானது நிரம்பி வழிகிறபடியால் இன்றைக்கு பிள்ளைகளுக்கு ஞாயிறு நடத்த இயலாது என்று தெரிவிக்கிறார். சிறு பிள்ளைகளே! இன்று காலையில் நாம் ஒரு மகத்தானதும் மிகப் பெரியதுமான ஒரு செய்தியை பிரசங்கிக்க ஆரம்பிக்கப்போகிறோம். அது இங்கேயிருக்கிற உங்களது தகப்பனுக்கும், தாய்க்கும், உங்களுடைய அன்பானவர்களுக்கும், ஏன் சிறு பிள்ளைகளாகிய உங்களுக்கும் கூட மிகவும் மகத்தானதாக இருக்கப்போகிறது; எனவே நீங்கள் எங்களோடு இப்பொழுது ஒத்துழைப்பீர்களானால் நாங்கள் மகிழ்ச்சியடைவோம். எனவே நாம் அதை மிகவும் பயபக்தியோடு அணுகுவோமாக.

28. இன்று காலையில் கர்த்தருக்கு சித்தமானால், நாம் தானே "தானியேலின் எழுபது வாரங்கள்'' என்ற பொருளை எடுத்துக்கொள்ளப்போகிறோம். இன்று காலையில், சிறையிருப்பில் இருந்த தானியேலைப் பற்றியும், காபிரியேல் எதிர்காலத்தைப் பற்றி அவனுக்கு அறிவுறுத்துவற்காக அவனிடத்தில் பறந்து வந்ததைப் பற்றியும் பேசப்போகிறோம். தானியேல் ஜெபத்தில் இருக்கையில் தூதனாகிய காபிரியேல் அவனை அறிவுறுத்து வதற்காக அவனிடம் வருகிறான். இன்றிரவில் 'காபிரியேலின் விஜயத்தின் ஆறுவிதமான நோக்கம்' என்ற பொருளின் பேரில் பேச விரும்புகிறேன். ஆறு

வெவ்வேறு விதமான விஷயங்களை நோக்கமாகக்கொண்டு காபிரியேல் விஜயம் செய்ததைப் பற்றி இன்றிரவில் செய்தி கொண்டு வரப்பட இருக்கிறது.

29. கர்த்தருக்கு சித்தமானால், அடுத்து ஞாயிற்றுக் கிழமை யன்று, ஏழு சபைக் காலங்களில் நோக்கத்தைக் குறித்தும், அவற் றின் காலத்தைக் குறித்தும், எந்த வேளையில் அவைகள் இருக்கின்றன என்பதைப் பற்றியும், நாம் இன்று எங்கே நின்று கொண்டிருக்கிறோம் என்பதைப் பற்றியும் பேச வேண்டுமென விரும்புகிறேன். கர்த்தருக்கு சித்தமானால் அது அடுத்த ஞாயிற்றுக்கிழமை காலையில் இருக்கும்.

30. இதன் காரணம் என்னவெனில்... நான் கடைசியாகக் கொடுத்த சில செய்திகளின் பேரில் உள்ள சில சிறு குறிப்புகளை என்னோடு கொண்டு வந்துள்ளேன். இன்று காலையில் நான் இச்செய்தியோடு இசைந்ததாய் இருக்கிற சிலவற்றை பார்க்கப் போகிறேன். ஏனெனில் இச்செய்தியானது ஒலிநாடாவில் பதிவு செய்யப்பட்டு உலக முழுவதிலும் உள்ள அநேக நாடுகளுக்கு போகப் போகிறது. அப்பொழுது யாராவது முதன் முதலாக இச்செய்தியை கேட்கும் பொழுது, நான் முந்தைய சில காரியங்களைப் பற்றி குறிப்பிட்டுப் பேசினவற்றை, அது என்னவென்று புரிந்துகொள்ள இயலாமல் இருப்பார்; எனவே இக்காரணத் தினால் தான் நான் இச்செய்தியோடு ஒன்றோடொன்று இசைந்த காரியங்களை முதலில் குறிப்பிட விரும்புகிறேன்.

31. கடந்த சில மாதங்களாக நாம் வெளிப்படுத்தின விசேஷப் புஸ்தகத்தின் பேரில் - “இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப் படுத்துதல்'' புஸ்தகத்தின் பேரில் - வேத ஆராய்ச்சிக் கூட்டங் களை பெற்றிருந்தோம். நாம் சபைக் காலங்களைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருந்தோம். வெளிப்படுத்தின விசேஷப் புஸ்தகத்தில் முதல் மூன்று அதிகாரங்கள் சபைக் காலங்களைப் பற்றியதாகும். அதன் பிறகு, யோவான் 4ம் 5ம் அதிகாரங்களில் உன்னதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, இதற்குப் பிறகு சம்பவிக்க வேண்டிய வைகளைப் பற்றி காண்பிக்கப்பட்டான். 6ம் அதிகாரத்தில் அவன் மீண்டும் பூமியில் கீழே இறக்கிவிடப்படுகிறான். எதற்கென் றால், 6ம் அதிகாரம் 1ம் வசனம் துவக்கி 19ம் அதிகாரம் 21ம் வசனம் முடிய உள்ளவற்றில் சம்பவிக்கப் போகிறவைகளை காணும்படியாகத்தான். இப்பகுதிகளில் முத்திரைகள், வாதைகள், ஆபத்துக்கள் வெட்டுக்கிளிகள், சூரியனில் நிற்கிற ஸ்திரீயானவள், சிவப்பான



காணவில்லையா? அந்நாளுக்காகத்தான் அவர்கள் உலகின் எல்லாப் பாகங்களிலிருந்தும் அங்கே கூடியிருக்கிறார்கள். ஓ, என்னே! நாம் எங்கேயிருக்கிறோம் என்பதை கண்டு கொண்டீர்களா? எந்த நேரத்தில் அது சம்பவிக்கும் என்பதை நாம் அறியோம். நாம் முடிவு காலத்தில் இருக்கிறோம்.

199. இப்போது கவனியுங்கள். இந்த சபையில் நீண்ட காலமாக இருந்து வரும் பழம் பெரும் விசுவாசிகளே, உங்களுக்கு இதை நான் கூறுகிறேன். ஒரு காரியத்தை நீங்கள் கவனிக்கும் படி நான் விரும்புகிறேன். இதை நேற்று வரையிலும் நான் கற்றிருக்கவில்லை. பவுல் பாய்ட் என்ற வரலாற்றாசிரியர் எழுதினவைகளின் வாயிலாகவும், வேத வாக்கியங்களின் வாயிலாகவும் இதை நான் பெற்றுக் கொண்டேன். இங்கே வேறு சில தேதிகளைப் பற்றி குறிப்பை எடுத்து அவைகளை கருத்தாய் ஆராய்ந்து பார்த்தேன்.

200. 1933ஆம் ஆண்டிலே, நாங்கள் அந்த மேசன்களின் ஆலயத்தில் ஆராதனை நடத்திக்கொண்டிருந்தோம். அக்கட்டிடத்தில் இப்போது சர்ச் ஆஃப் கிரைஸ்ட் என்ற ஸ்தாபனம் உள்ளது. அது ஒரு ஏப்ரல் காலையாகும். நான் வீட்டை விடுவதற்கு முன்பு, எனது மோட்டார் வாகனம் ஒன்றை கர்த்தருடைய ஊழியத்திற்கென்று பிரதிஷ்டை செய்து கொண்டிருந்தேன். என்னிடம் இருந்தது 33ம் ஆண்டு மாடல் காராகும். அப்போது எனக்குக் கிடைத்த ஒரு தரிசனத்திலே முடிவு காலத்தைக் குறித்து கண்டேன். அது எவ்வளவாய் கவனத்தை கவருகிறதாக இருக்கிறது என்பதைப் பாருங்கள். அப்போதுள்ள அக்காலத்தில் நான் ஒரு இளைஞனாயிருந்தேன். 1933ம் வருட மாடல் கார் எப்படியிருந்திருக்கும் என்பதை நீங்கள் சற்று கற்பனை செய்து பாருங்கள். நான் அந்த மேசன்களின் ஆலயத்திற்கு சென்றேன். அங்கே... இங்கேயிருக்கும் பழங்காலத்தவருக்கு அது ஞாபகத்திலிருக்கும். வீட்டிலே ஒரு பழைய தாளிலே அது எழுதப்பட்டுள்ளது. அது ஏற்கெனவே அச்சாகி, உலகமெங்கும் விநியோகிக்கப்பட்டுள்ளது. பார்த்தீர்களா? அது 1933ம் ஆண்டில் நடந்ததாகும். 1977 ஆம் ஆண்டுக்கு முன்பாகவோ அல்லது 1977ம் ஆண்டிலோ அமெரிக்காவுக்கு மிகவும் சோகமயமான காரியம் ஒன்று சம்பவிக்கும் என்று நான் அப்போது முன்னுரைத்தேன். அதை நான் கூறியதை எத்தனை பேர் நினைவில் வைத்திருக்கிறீர்கள்? உயர்த்தப்பட்ட கரங்களை பாருங்கள். நிச்சயமாக.

201. இந்த மகத்தான முடிவுக்காலம் ஏற்படும் முன்னர் அமெரிக் காவில் அந்த பயங்கரமான சம்பவம் நடைபெறு முன்னர், சம்பவிக்க

196. காலத்தைக் கணக்கிடுவதினாலே, நமக்கு பதினேழு ஆண்டுகள் இன்னும் மீதியாக உள்ளன என்று நாம் காண்கிறோம். தேவன் அவர்களோடு இடைப்பட்ட கால வரையறைளவு 1954 ஆண்டுகள் ஆகும். கி.பி 33-முதல் கி.பி. 1977 முடிய உள்ள காலத்தில் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் தேவன் நம்மோடு இடைப்பட்ட கால அளவும் அதே அளவுதான். அதே காலவரையறைளவு 1954 ஆண்டுகள். தேவன் யூதரோடு இடைப்பட்டது போலவே நம்மோடு இடைபடுகிறார். அதைப் பற்றி என்ன?

197. நான் உங்களுக்குக் கொடுக்க விரும்புகிற ஒரு சிறு வேதவாக்கியத்தை நீங்கள் குறித்து வைத்துக்கொள்ளுங்கள். லேவியராகமம் 25ம் அதிகாரம் 8ம் வசனம் தொடங்கி, தேவன் ஒவ்வொரு நாற்பத்தியொன்பது ஆண்டுகளின் முடிவிலும் ஒரு யூபிலியைக் கட்டளையிட்டார். ஐம்பதாவது ஆண்டிலே யூபிலியாக அது இருந்தது. அதை நாம் அறிவோம். லேவியராகமம் 25:8-இல் ஆரம்பித்த முதலாம் யூபிலி, 1977ம் ஆண்டில் எழுப தாம் யூபிலியாக இருக்கின்றது. அது சரியாக 3,430. ஆண்டுகள் கணக்காகிறது. யூபிலி என்றால், விடுவிக்கப்பட்டு போகுதல் என்று அர்த்தமாம்.

ஆனந்தமிகு ஆயிரமாண்டு அரசாட்சி நாளுக்காக நாம் காத்திருக்கிறோம் அப்போது துதிக்கப்பட்ட நமது கர்த்தரும் வந்து காத்து நிற்கும் மணவாட்டியை எடுத்துச்செல்வாரே ஓ, இனிமையான அவ்விடுதலையின் நாளுக்காய் உலகமானது ஏங்கித் தவிக்கிறது அந்நாளிலே நமது இரட்சகரும் பூமிக்கு மீண்டும் வருவாரே,

198. அதை நீங்கள் புரிந்து கொண்டீர்களா? தேவன் ஆபிரகாமுக்கு வாக்குக் கொடுத்த நாள் முதல், கி.பி. 33-இல் மேசியா புறக்கணிக்கப்பட்ட வரையிலும் உள்ள கால அளவு 1954 ஆண்டுக் காலமாகும். அதே அளவுக் காலம் தான் நம்மோடு தேவன் இடைபடுவதாக இருக்கும். நமக்கு இன்னும் பதினேழு ஆண்டுகளே உள்ளன. நமக்கு சுமார் 1930 ஆண்டுகள் ஆகிவிட்டன. 1977 வரையிலும் உள்ள காலத்திற்கு இன்னும் பதினேழு ஆண்டுகளே மீதம் உள்ளன. யூபிலி ஆண்டு தொடங்கியது முதற்கு, 77ம் ஆண்டில் எழுபதாவது யூபிலியாக இருக்கும். அப்போது அது என்னவாக இருக்கும்? ஓ, சகோதரனே! இப்போது கவனமாக விழித்திருங்கள். இதைத் காணத்தவற வேண்டாம். புறஜாதி மணவாட்டியோடு உன்னதத்திற்கு ஏறிச் செல்லும் யூபிலியாக அது இருக்கும்; கிறிஸ்து யூதரிடமாகத் திரும்பி வருதலாகவும் அது இருக்கும். அந்நாள் அவர்கள் தங்கள் கட்டிலிருந்து விடுபடும் நாள். ஆமென்! நீங்கள் அதைக்



வலுசர்ப்பம் 1,44,000 பேர்கள் முத்திரையிடப்பட்டு தீருதல் ஆகிய அனைத்துக் காரியங்களும் வருகின்றன.

32. இவ்வாரமுழுவதும், கடுமையான, வேதத்தைப் படித்து ஆராயுதல் உண்டாயிருந்தது. நேற்றைய தினத்தில், நான் படித்து கொண்டேயிருந்தபடியினால் எனது அறையைவிட்டு கொஞ்சம் கூட வெளியே வரவில்லை. இச்சபையின் ஆதிகாலத்தி லிருந்து இருக்கிறவர்கள் இங்கேயுண்டு, அவர்களுக்கு இதைப் பற்றி நான் முன்பு போதித்துள்ளேன். இது எப்படியிருந்ததெனில், இங்கே தானியேலின் எழுபது வாரங்களைப் பற்றிய தாகும் என்று கூறி சிலவற்றை போதித்துள்ளேன், ஆனால் அதை விவரிக்க விளக்குவதற்காக நான் தீவிரமாக முயலவில்லை. ஆனால் இத்தடவையோ, மக்களுக்கு தேவனுடைய கிருபையினால் அதைச் சரியான முறையில் போதிப்பதற்கென தேவனிடத்தில் அதற்குரிய கிருபையை கேட்கும்படி என்மேல் பொறுப்பை சுமத்திக் கொண்டுள்ளேன். இங்கே நான் ஒன்று கூட அறியாதிருக்கிற விஷயங்களைக் காண்கிறேன். பின்பு, நான் ....

33. டாக்டர் லார்கின் எழுதிய புஸ்தகம், டாக்டர் ஸ்மித்தின் புஸ்தகம், ஸ்கோஃபீல்ட்-இன் குறிப்புகள், பல்வேறு மனிதர் கள் எழுதிய வியாக்கியானங்கள் ஆகியவற்றை நான் படித்துக் கொண்டிருந்தேன். ஆயினும் அவர்களுடைய கருத்துக்களை எல்லாம் ஒன்று திரட்டி சரியாக உருவகப்படுத்த என்னால் இயலவில்லை. எனவே நான் இவ்வாரத்தில்... கென்டக்கியிலுள்ள சில நூலகங்களுக்கு விஜயம் செய்து, சில காலண்டர்கள், காலங் கள் ஆகியவைகளைப் பற்றிய விளக்கம் பழங்காலத்திய வான் கோளங்களின் ஆய்வியல் புஸ்தகங்களையும், மற்றும் நூலகங்களிலுள்ள சம்பந்தப்பட்ட தொன்மை வாய்ந்த புஸ்தகங்களையும் எடுத்து படித்து ஆராய்ந்தேன். இவ்வாறு என்னால் இயன்ற அளவு சிறிதளவாவது செய்து, என் முழு நம்பிக்கையும் இயேசு கிறிஸ்துவின் பேரில் பயபக்தியுடன் வைத்துள்ளேன். எதற்கென்றால், அவர் எனக்கு அதைக் குறித்து வெளிப்படுத்தித் தரும்படியாகத்தான். ஏனெனில், எனக்கு இது தெரியும், எனக்கு அது தெரியும் என்று நான் கூறிட விரும்பவில்லை. அவர் என் இருதயத்தை அறிவார். நான் கூறுவதை அவர் கேட்கிறார். அவரு டைய ஜனங்களை நான் பிரகாசிப்பிக்கச் செய்ய வேண்டுமென்றே நான் விரும்புகிறேன். ஆகையால், அவர் எனக்கு அதைத் தருவார் என்றே நான் விசுவாசிக்கிறேன். இன்னமும் அது என்னவென்று எனக்குத் தெரியாது; ஆனால் அடுத்த

ஞாயிற்றுக்கிழமைக்காக நான் அவரையே நம்பிக்கொண்டிருக்கிறேன். ஏனெனில் அடுத்த ஞாயிற்றுக்கிழமையில் எழுபது வாரங்களை அறிந்து கொண்டு அவற்றை சரியாக பொருத்துவதான மிகப் பெரிய காரியமாக அது இருக்கப் போகிறது.

34. ஒவ்வொன்றும் வெவ்வேறு ஸ்தானம் உடையதாய் இருக்கிறது. நீங்கள் அதை ஒன்றாக வைத்துப் பார்ப்பீர்களானால் அது பிழையாகத் தான் வெளிவரும்; அவைகள் சரியான கருத்தை, முடிவை தெரிவிக்காது. எனவே அதை பிழையின்றி கொடுக்க என்னால் இயலாது போகலாம். ஆனால் நான் அதற்காக கர்த்தரையே நம்பியிருக்கப்போகிறேன்.

35. ஒரு சமயம் சாலொமோன் தேவனாகிய கர்த்தரிடத்தில் தனக்கு ஞானத்தைத் தரும்படி ஜெபித்தது என் நினைவுக்கு வருகிறது. அவன் தனக்காக அதை கேட்கவில்லை. அவன் தனக்கு நீடித்த ஆயுளையோ, ஐசுவரியத்தையோ கேட்காமல், தேவனுடைய ஜனங்களை எவ்வாறு நியாயந்தீர்ப்பது என்று அறியத்தக்க ஞானத்தைத் தரும்படி ஞானத்தைக் கேட்டான். தேவன் அந்த ஜெபத்தை கனம் பண்ணி, சாலொமோன் கேட்ட ஞானத்தை அவனுக்குத் தந்தார். ஏனெனில் அது அவருடைய ஜனங்களுக்காக உள்ளதாகும். ஆகவே தான் இந்த எழுபது வாரங்கள் என்ன என்பதை எனக்குத் தெரியப்படுத்துமாறு தேவனிடம் கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஏனெனில், அது நாம் வாழ்கிற இக்காலத் திற்குரிய சரியான காலண்டராக இருக்கிறது எனவே நான் அதை அறிந்து கொள்ள விரும்புகிறேன். நான் அதைப் பற்றி அறிய வேண்டுமென எனக்காக விரும்பவில்லை. அப்படியென்றால், ''நான் அறிய விரும்பவில்லை'' என்ற அர்த்தத்தில் நான் அப்படி சொல்லவில்லை. நான் அறிய விரும்புகிறேன். ஏனெனில், நாம் எந்தக் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை நான் அறிய விரும்புகிறேன். என்ன வேளையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை அறிய விரும்புகிறேன். அது கொடுக்கப்பட்டுள்ளது என்று நான் அறிவேன்.

36 . வெகுகாலத்திற்கு முன்பு வெவ்வேறு நபர்கள் அதைப் பற்றி அது இன்னின்னவாறு இருக்கும் என்று கணித்துள்ளனர். ஒருவர் எழுதியதை நான் படித்துக்கொண்டிருந்தேன். அவர் எழுபது வாரங்களும் 1919 ஆண்டிலேயே முற்றுப் பெறுவதாகக் கூறியுள்ளார். நல்லது, அது அவ்வாறு அல்ல. எழுபது வாரங்களின் முடிவில் எல்லாம் முடிவு பெறுகிறது. எனவே நாம் சத்தியத்தை அறியவே விரும்புகிறோம்.



உங்களுக்குக் கொடுக்கப் போகிறேன். இக்காலத்தின் முடிவுக்கும், கிறிஸ்துவின் வருகைக்கும் இடையில், ஒரு கத்தியின் முனையில் அகலம் கூட இல்லை யாவும்... இனிமேல் வேறொன்றும் இல்லை. இஸ்ரவேல் தனது சுயதேசத்தில் வந்து சேர்ந்துவிட்டதா? அதை நாம் அறிவோம். நாம் லவோதிக்கேயாவின் காலத்தில் இருக்கிறோமா? இந்த பெந்தெகொஸ்தே யுகத்தின் செய்தியானது மக்களை மீண்டும் மூல பெந்தெகொஸ்தே ஆசீர்வாதத்திற்கு திரும்ப கொண்டு வரத்தக்கதாக அசைத்துள்ளதா? ஒவ்வொரு காலத்தின் செய்தியாளனும் சரியாக அவரவர் காலத்திலே வந்துவிட்டனரா? தேசங்களுக்கு விரோதமாக தேசங்கள் உள்ளனவா? வாதைகளா? தேசத்தில் இன்றைக்கு பஞ்சம் இருப்பதால், உண்மை யான சபையானது தேவனுடைய வார்த்தையைக் கேட்பதற் கென நூற்றுக்கணக்கான மைல்கள் தூரம் பிரயாணம் செய்து வந்து கொண்டிருக்கிறதா? அப்பத்திற்காக மாத்திரமல்ல, தேவனுடைய வார்த்தையை கேட்பதற்கான பஞ்சமானது ஏற்படும். அப்படித்தானே நடக்கும்? ஏன் அப்படிபட்டதான காலத்தினுள்ளே சரியாக நாம் ஜீவித்துக் கொண்டிருக்கிறோம். நாம் எங்கே இருக்கிறோம் என்பதைக் காணுங்கள். அந்தக் கல் வருவதற்காக நாம் காத்துக்கொண்டிருக்கிறோம்.

195. கவனத்தை ஈர்க்கிற ஒரு அறிக்கை: ஆபிரகாமுக்கு தேவன் வாக்குரைத்த காலத்திலிருந்து, (இதைகாணத் தவற வேண்டாம்) ஆபிரகாமுக்கு தேவன் வாக்குரைத்த சமயம் முதற்குஅது ஆதியாகமம் 12:3 - யூதர்களால் கிறிஸ்து கி.பி.33-ல் புறக்கணிக்கப்பட்டது வரையிலும், கலாத்தியர் 3:16,17 வசனங்களின்படியும், அஷர் (Usher) என்பவரின் காலக்கிரமப்படி வரிசைப்படுத்தப்பட்டு எழுதப்பட்ட எபிரேயர்களைப் பற்றி சம்பவங்களின் குறிப்பேட்டின் (கால வர்த்தமானக் குறிப்பு - தமிழாக்கியோன்) படியும் யூதர்களோடு தேவனுடைய வல்ல மையானது சரியாக 1954 ஆண்டுக் காலம் இருக்கிறது. யூதர்களைப் பற்றி உள்ள கால வர்த்தமானக் குறிப்பின்படியும் கலாத்தியர், 3:16,17 இன்படியும், தேவன் யூதரோடு 1954 ஆண்டுக் காலம் இடைப்பட்டிருக்கிறார். மேற்படி வசனமல்லாமல் இன்னும் அநேகம் வேத வாக்கியங்களை நான் குறித்து வைத்துள்ளேன். ஆனால் இவ்வசனத்தை மாத்திரம் தருகிறேன். அவர்கள் கிறிஸ்துவைப் புறக்கணித்த பிறகு, அவர் தமது நாமத்திற்கென ஒரு கூட்டம் ஜனத்தை தெரிந்தெடுப்பதற்காக புறஜாதிகளிடமாகத் திரும்பினார். அதைப் பற்றி கூறுகிற வேத வாக்கியம் உங்களுக்கு வேண்டுமா? அப்போஸ்தலர் நடபடிகளின் புத்தகம் 15:14.

மறக்காமலிருக்கும்படியாக. நான் எழுதிக் கொண்டிருக்கையில், இதைத்தான் பரிசுத்த ஆவியானவர் என்னுடைய பேனாவைப் பிடித்து எழுத வைத்தார். நாம் லவோதிக்கேயாவின் காலத்தில் இருக்கிறோம். கிறிஸ்துவானவர் தமது சொந்த சபையாலேயே புறக்கணிக்கப்பட்டு விட்டார். இக்காலத்தின் நட்சத்திரத்தின் செய்தியானது புறப்பட்டு போய்விட்டது. இஸ்ரவேல் தனது சொந்த தேசத்திற்குள் வந்து விட்டாள். நாம் எங்கே இருக்கிறோம் என்பதை கண்டீர்களா? நாம் முடிவில் இருக்கிறோம். இன்னும் ஒன்றிரண்டு விளக்கங்கள்.

193. இப்போது நாம் காண்கிறயாவும், அவருடைய கிருபை னாலே, கடைசியான இந்த ஏழு முத்திரைகளை நாம் அணுக நாம் நன்முயற்சி செய்கையில், நமக்கு உதவி செய்திடும். அதை நாம் எங்கே காணத் தவறிவிட்டோம்? வெளிப்படுத்தின விசேஷம் 6:1 முதல், வெளிப்படுத்தின விசேஷம் 19:21 வரையிலும் உள்ளவைகளில் நாம் அதை இழந்து விட்டிருப்போம். ஏனெனில், நாம் அதை இங்கே புறஜாதிகளின் காலத்தோடு சம்மந்தப் படுத்த முயற்சி செய்து கொண்டிருந்ததால் தான். புறஜாதிகளின் காலம் இந்தக் காலத்துடன் முடிந்து விடுகிறது. கவனித்தீர்களா? நாம் அதை, தேவனுடைய வார்த்தையைக் கொண்டும், வரலாற்றைக் கொண்டும், யாவற்றைக்கொண்டும், காலங்களின் அடையாளங்களைக் கொண்டும், நாட்களைக்கொண்டும், நிரூபித்திருக்கிறோம். இனிமேலும் சம்பவிப்பதற்கு வேறொன்றும் இல்லை. நாம் புறஜாதிகளின் காலத்தின் முடிவுக் கட்டத்தில் இருக்கிறோம். அதைக் குறித்து நாம் என்ன செய்யப்போகிறோம்? அது என்னுடைய ஆத்துமாவையும், உங்களுடைய ஆத்துமாவையும் பொறுத்தது; அது என்னுடைய ஜீவியத்தையும் உங்களுடைய ஜீவியத்தையும் பொறுத்ததாகும். நமது பிரியமுள்ளவர்களின் ஜீவியங்களுக்கு சம்மந்தமுள்ள தாகும் அது. நாம் மிகவும் அதிகமாக சீராட்டப்பட்டிருக் கிறோம். நமக்கு அநேகமாக காரியங்கள் சொகுசாக அமைந்து விட்டது. நாம் முன்னே செல்வோமாக. நீங்கள் நினைப்பதைவிட நேரம் பிந்திவிட்டது. இதை ஞாபகத்தில் கொள்ளுங்கள்.

194. நீங்கள் குறித்துக்கொள்ள விரும்பினால், இப்பொழுது கவனத்தை ஈர்க்கிற ஒரு அறிக்கை இதோ. தயவு செய்து மிகவும் கவனமாக கேளுங்கள். இது என்னுடைய இறுதியான கருத்து, அதற்கு அடுத்ததாக, ஒரு சிறு குறிப்பின் பேரில் நான் பேச விரும்புகிறேன். சற்று ஒரு கணம் இளைப்பாறிக்கொண்டு, கவனமாக செவிகொடுங்கள். இதற்கு சம்மந்தமுள்ள கவனத்தை ஈர்க்கிற ஒரு விஷயத்தை நான்



சத்தியத்தை கொடுக்குபடியாக நான் தேவனிடம் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

37. இப்பொழுது இதன் பின்னணியைப் பார்ப்பதற்காக இதற்கு முன்புள்ளவற்றை நான் திரும்பவும் கூறப் போகிறேன். எனவே, மக்கள் புரிந்துகொள்ளும்படியாக, 4ம், 5ம் அதிகாரங்களின் பேரில் நான் எழுதி வைத்துள்ள சில குறிப்புகளை நான் கொண்டு வந்துள்ளேன்.

முதலாவதாக நாம் இதை எடுத்துக்கொள்ளும் முன்னர், இதனோடு இணைந்து செல்லுகிற காரியத்தை எடுத்துப்பார்ப்போம். அதினால் நீங்கள் 4ம் அதிகாத்திலிருந்து புரிந்து கொள்ளுவீர்கள். 3ம் அதிகாரம் லவோதிக்கேயா சபையின் காலம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். லவோதிக்கேயா முடிவில் சபையானதுமேலே எடுத்துக் கொள்ளப்படுகிறது.

38. அதைப் பற்றி நான் என் மனைவியிடம் விளக்கிட முயன்று கொண்டிருந்தேன். என் மகள் பெக்கியும் உடனிருந்தாள். எங்களுக்கு கிடைக்க முடிந்த அளவு வெவ்வேறு வகையான அகராதிகளும் விஷயங்களும் எங்களோடிருந்தன. அவைகள் உரிய பதிலை அளிக்கவில்லை. வேதாகம அகராதியும் என்னிடத்திலுண்டு. பழைய கிரேக்க மொழி அகாரதியும் என்னிடத்தில் இருந்தது. வெப்ஸ்டர்ஸ் அகராதியும் இன்னும் அநேக புஸ்தகங்களும் இருந்தன. நவீன அகராதிகளும் இருந்தன. அவைகள் ஒன்றும் எவ்விதத்திலும் உரிய வார்த்தைகளையோ அல்லது உரிய பதிலையோ அளிக்க இயலவில்லை.

39. என் மனைவி என்னிடம் "நமது ஜனங்கள் ஏழைகளும் அவர்களில் அநேகர் நம்மைப்போல் கல்வியறிவு இல்லாதவர்களுமாய் இருக்கிற சூழ்நிலையில் அவ்விதமானதொரு விஷயத்தை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று எங்ஙனம் எதிர்பார்க்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

40. “தேவனே தக்க பதிலை அளிப்பார்'' என்று நான் பதிலளித்தேன். அது எவ்வளவு சிக்கலானதாக இருந்தபோதிலும் தேவன் அதை உடைத்து எளிதாக்கிக் கொடுக்க முடியும். ஏனெனில் நாம் அந்த ஜனங்களின் ஒரு பாகமாக இருக்கிறோம். அவர்கள் அந்த நாளுக்காகவும் வேளைக்காகவும் ஏங்கித்தவித்து, ஜெபித்துக்கொண்டிருக்கிறார்களே, மேலும் நமது கண்கள் பரலோகத்தை நோக்கி பார்த்த வண்ணம் இருந்து கொண்டிருக்க, நாம் அவரது வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர் நமக்கு அதை காண்பிப்பார் என்று

நிச்சயமுள்ள வனாக இருக்கிறேன். அந்த நாளையாவது, அந்த நாழிகையையாவது பற்றி நமக்குத் தெரிவிக்கப்படமாட்டாது, ஏனெனில் ஒரு மனிதனும் அதை அறியமாட்டான். ஆனால் அது நமக்கு கிடைக்குமென்றால், அந்த வாரத்தில் உள்ள எந்த நாளில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை அது நிச்சயமாக நமக்குத் தெரியபடுத்தும்.

41. இப்பொழுது, சபைக்காலங்கள் முடிவுற்ற பிறகு, உடனேயே 4ம் அதிகாரதில் யோவான் மேலே எடுத்துக் கொள்ளப்படுகிறான். மேலே எடுத்துக்கொள்ளப்பட்ட யோவான், அதற்கு முன்பாக சபைக்காலங்கள் முழுவதையும் கண்டான். அந்த இடத்தில் தான் நான் ஒரு வினாடி நிறுத்திவிட்டு புறஜாதிகளின் காலத்தில் ஏதோ ஒரு மகத்தான, பெரிய, வல்லமையான காரியம் நடைபெற வேண்டும் என்று அநேகர் எதிர்பார்த்திருக்கிறார்களே, அவர்கள் தவறாயிருக்கிறார்கள் என்று கூறிட நான் விரும்புகிறேன். சபைக் காலங்களைப் பற்றியும், புறஜாதிகளின் ஆளுகையில் நடைபெறப்போகிற அனைத்துக் காரியங்களைப் பற்றி உள்ள விஷயங்களும், வெயிப்படுத்தின விசேஷம் 1முதல் 3முடிய உள்ள அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிறகு சபையானது மகிமையில் எடுக்கப்படுகிறது. அதன்பிறகு 19ம் அதிகாரம் முடிய உள்ள காரியங்களெல்லாம் யூத இனத்திற்கு நேரிடுகிற காரியங்களாகும். சபையானது உன்னதத்திற்கு எடுக்கப்பட்ட பிறகு உள்ளதாகும். இவையெல்லாம் அப்பொழுது மகா உபத்திரவ காலமாகும், அப்பொழுது, புறஜாதிகள் அவர்கள் வெட்டப்படுவதைக் தவிர வேறு ஒன்றும் நடைபெறப் போவதில்லை. எனவே நாம் அவைகளை எடுத்துக் கொண்டு பார்ப்போமாக.

42. ஆனால் சபையானது வெளிப்படுத்தின விசேஷம் 3ம் அதிகாரத்தின் கடைசி வசனத்திலேயே, கடைசி சபைக்காலமாகிய லவோதிக்கேயா சபைக்காலம் முடிவுற்றவுடனேயே, எடுத்துக்கொள்ளப்பட்டு விடுகிறது.

43. நாம் ஒவ்வொரு சபைக் காலத்தையும் எடுத்துக்கொண்டு, ஒவ்வொரு வேளையையும், நடைபெற்ற ஒவ்வொரு விஷயத்தையும் பற்றி பார்த்து, ஒவ்வொரு சபைக் காலத்து தூதனையும் பற்றிப் பார்த்து, அவர்களின் சுபாவத்தையும் கண்டறிந்து, அவர்கள் என்ன செய்தார்கள் என்பதையும் குறித்து அறிந்து கொண்டு, யாவற்றையும் வரலாற்றின் வாயிலாகவும் சரி பார்த்து கடைசி சபைக் காலம் வரைக்கும் இவ்வாறு பார்த்துக் கொண்டே வந்தோம். நாம் இவ்வாறு



மதஸ்தருடைய காலத்தை அல்லது லவோதிக்கேயாவின் காலத்தை வந்தெட்டியிருக்கிறது என்றால், கர்த்தருடைய வருகைக்கும் யாவற்றின் முடிவுக்கும், இந்த யுகத்தின் முடிவுக்கும், எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு எவ்வளவு சமீபமாய் நாம் வந்துள்ளோம்? எழுபதாவது வாரத்தை, அல்லது அந்த ஏழு ஆண்டுகளை அவர் எப்போதும் துவக்கப் போகிறாரோ, அந்த க்ஷணமே சபையானது மகிமைக்குள் போய்விடும். சிநேகிதரே, உங்களால் அதைக் காணமுடிகிறதா? அதை உங்களால் காண முடிந்திருக்கிறதென்றால் உங்கள் கரங்களை உயர்த்துங்கள் பார்க்கலாம்.

190. நாம் இனிமேலும் குழந்தைகளாயிருக்க வேண்டாம். இனி மேலும் நாம் விளையாடிக் கொண்டிருக்க வேண்டாம். நாம் முடிவு காலத்தில் இருக்கிறோம். ஏதோ ஒன்று நடக்கப்போகிறது. நாம் முடிவு காலத்தில் இருக்கிறோம். அந்த வேளைக்குள் இங்கே நாம் வந்து விட்டோம்.

191. இந்த அறுபத்தொன்பது வாரங்கள் சரியாக நிறைவேறி விட்டன. யூதர்கள் திரும்பிப் போவது சரியாக நிறைவேறி விட்டது. சபைக் காலங்கள் சரியாக நிறைவேறிவிட்டன. நாம் முடிவுக் காலத்தில் இருக்கிறோம். லவோதிக்கேயா சபையின் காலத்தின் முடிவில் வந்துவிட்டோம். நட்சத்திர செய்தியாளர்கள் - தூதர்கள் யாவரும் தங்களுடைய செய்தியைப் பிரசங்கித்து விட்டனர். அது புறப்பட்டுச் சென்றுவிட்டது. நாம் கரையை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். கடந்த நாற்பதாண்டுக் காலமாக யூதர்கள் திரும்பி வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய சுயதேசத்தில் இருக்கிறார்கள். அடுத்து என்ன சம்பவிக்க வேண்டும்? கல்லானது வரவேண்டியதாயிருக்கிறது. அந்தக் கட்டத்தில் நாம் இருக்கிறோம். அது எந்த சமயத்தில் சம்பவிக்கும்? எனக்குத் தெரியாது. ஆனால், சகோதரனே, என்னைப் பொருத்தமட்டில், நான் ஆயத்தமாயிருக்க வேண்டுமென விரும்புகிறேன். என்னுடைய வஸ்திரங்கள் யாவும் ஆயத்தமாக இருக்க நான் விரும்புகிறேன்.

192. இப்போது நமக்கு இன்னும் சில நிமிடங்கள் மாத்திரமே உள்ளன. சற்று ஒரு நிமிட நேர நீங்கள் அமைதியாக செவி கொடுக்க வேண்டுமென நான் விரும்புகிறேன். எழுபதாவது வாரத்தை, அல்லது கடைசி ஏழு ஆண்டுகளை, அவர் துவங்கும் அந்த க்ஷணமே சபையானது போய்விடும். இப்பொழுது செவி கொடுங்கள். நான் இப்போது, மீண்டும் மேற்கோள் காட்டு கிறேன். நீங்கள்

ஊடுருவி, ஆராதனை முறைமைகளை மாற்றிக்கொண்டிருந்தனர். பரிசுத்த ஆவியைப் பெற்ற பவுல் அதைப் பற்றி ஆவியில் கண்டு கொண்டான். புலமை வாய்ந்த கலைஞர்களையும், மதிப்பு மிக்க பிரமுகர்களையும் சபையானது தன்னிடம் கொண்டதாய் இருந்தது. ஒருவிதமான காரியம் வருவதை அவர்கள் கண்டார்கள். பரிசுத்த ஆவியானவர் கடைசி நாட்களைக் குறித்து அவர்களை எச்சரித்தார். நிக்கொலாய் மதஸ்தருடைய கிரியைகள் எவ்வாறு இறுதியில் ஒருபோதகமாக மாறும் என்றும், பிறகு ஒரு ஸ்தாபனமாக மாறும் என்றும் இயேசு கூறியது உங்களுக்கு நினைவில்லையா? சகோதரரே, நாம் இப்போது இருளில் இருக்கவில்லை என்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள். புரிந்து கொண்டீர்களா? இதோ நாம் அந்தக் கட்டத்தில் இங்கே இருக்கிறோம்.

188. நிக்கொலாய் மதஸ்தருடைய கிரியைகள், பிறகு ஸ்தாப னமாக ஆயிற்று. பெரிய முக்கிய பிரமுகர்கள் சபையை மேற்கொண்டார்கள், பிறகு கத்தோலிக்க சபையை உருவாக்கினார்கள். உண்மையான பெந்தெகொஸ்தே விசுவாசத்தை விட்டு வழுவிப்போகுதல் முந்தி உண்டாயிராமல் முடிவு காலம் வந்திடாது என்று பவுல் கூறினான். பெந்தெகொஸ்தே விசுவாசம் ஒழிக்கப்பட்டு, உலகப்பிரகாரமான முக்கிய பிரமுகர்கள் சபையைக் கைப்பற்றிக்கொள்ளுவார்கள். தேவனுடைய ஸ்தானத்தை எடுத்துக்கொள்ளுகிறவனாயும், தேவாலயத்தில் உட்கார்ந்து இருக்கிறவனாயும், எல்லா ஜனங்களையும் எதிர்த்து நிற்கிறவனாயும், இருக்கக்கூடிய ஒரு மனிதனை அவர்கள் உடையவர்களாயிருப்பார்கள். அது என்ன என்பதை பாருங்கள். நிக்கோ, ''சபையை மேற்கொள்ளுதல்' தேவனென்னப்படுதெதுவோ அதற்கு மேலாக தன்னை உயர்த்திக்கொள்ளுகிற வனாயும், தேவாலயத்தில் தேவன் போல் உட்கார்ந்திருக்கிறவனாயும் அவன் இருப்பான். கடைசி நாட்களிலே விசுவாசத் துரோகம் முந்தி நேரிடும் என்று பவுல் கூறினான். அந்தக் குறிப்பிட்ட காலத்தில் இங்கே நாம் இப்போது இருக்கிறோம். விசுவாசத் துரோகம் நேரிடுவதையும் காண்கிறோம், சபை யானது இன்னும் அதிகமதிகமாக வழுவி விலகிப் போய்க் கொண்டேயிருப்பதையும் காண்கிறோம். நாம் கடைசி காலத்தில் இருக்கிறோம்.

189. இப்போது, இந்த அறுபத்தொன்பது வாரங்கள் சரியாக கணக்குப்படி நிறைவேறிவிட்டது என்றால், யூதர்கள் இப்போது தங்களுடைய சுயதேசத்தில் இருக்கிறார்களென்றால், புறஜாதி சபையானது சரியாக கடைசி காலத்தில், இந்த நிக்கொலாய்



இவை யாவற்றையும் குறித்து படித்து முடிந்த போது, பரிசுத்த ஆவியானவர் உள்ளே வந்து பக்கச் சுவற்றில் அதே காரியத்தைப் பற்றிய ஒரு வட்டத்தை வரைந்து நாம் வரைந்ததைப் போல அதே விதமாக வரைப்படத்தையும் அவர் வரைந்து காட்டி, நம் யாவருக்கும் தம்மை வெளிப்படுத்திக்காட்டினார்.

44. இப்பொழுது இதை நாம் எடுத்துக் கொண்டிருக்கையில், இதன் முடிவிலும் கூட, அவர் மகத்தானதொரு காரியத்தோடு வந்து, மீண்டும் நமக்கு நாம் கடைசி காலத்தில் இருக்கிறோம் என்பதை காண்பிப்பார் என்று நான் நம்புகிறேன்.

45. ஜனாதிபதி கென்னடி அவர்களின் பேச்சை, அவரது மதிப் புரைகளை உங்களில் எத்தனை பேர்கள் கேட்டீர்கள்? ஜனவரி 1ம் தேதி வாக்கில் அமெரிக்கா ஐக்கிய நாடுகளும், ருஷியா ஆகிய இரு நாடுகளுமே எரிமலை சாம்பலாக ஆகிவிடும் என்ற அவருடைய அனுமானமான முன்னறிவிப்பை கேட்டிருக்கிறீர்கள்? அது தான் நமக்குத் தேவையாயிருக்கிறது. நாம் நினைப்பதைவிட நேரம் அதிகம் ஆகிவிட்டது, பார்த்தீர்களா? இந்த பயங்கரமான காரியம் நடக்கப்போகிறது என்று மனிதனும் கூட

முன்னுரைக்கும் காரியத்திற்கு நாம் சமீபமாக இருப்போமென்றால், நாம் சற்று முன்னெச்சரிக்கையாக இருப்பது மிகவும் நல்லது, நம்மில் நாம் யாவையும் சரி செய்து கொண்டு எல்லாவிதமான அறிக்கைகளும் செய்து எல்லாம் ஆயத்தமாக இருக்கும்படி செய்வோம்; ஏனெனில் எந்த வேளையில் நமது கர்த்தர் நம்மை அழைக்கப் போகிறார் என்பதை நாம் அறியோம். மேலே ஏறி வா'' என்று அவர் நமக்கு அந்த அழைப்பைக் கொடுக்கையில் போவதற்கு நாம் ஆயத்தமாக இருக்கக்கடவோம். நீங்கள் நினையாத நாழிகையில் அது வரப்போகிறது.

46. மகத்தான பெந்தெகொஸ்தே எழுப்புதலானது இப் பொழுது முடிவடைந்து கொண்டேயிருக்கிறது. அதை நாம் எங்கணும் காண்கிறோம். அந்த கடைசியான மகத்தான அசைவைக் காண்கிறோம். செய்தியானது சென்று விட்டது. எல்லாமே இப்பொழுது ஆயத்தமாயிருந்து, காத்துக் கொண்டிருக்கிறது. சபையானது ஏற்கெனவே முத்திரையிடப்பட்டாகி விட்டது. துன்மார்க்கர் இன்னும் துன்மார்க்கராகிக் கொண்டேயிருக்கிறார்கள். சபைகள் வர வர மிகவும் சடங்காச்சாரமாக ஆகிக் கொண்டேயிருக்கின்றன. பரிசுத்தவான்கள் இன்னும் தேவனிடம் நெருங்கி வந்து

கொண்டேயிருக்கிறார்கள். சிறிய குழுக்களில் ஆவியின் வரங்கள் பலுகிப் பெருகத் துவங்கி விட்டன. நாம் கடைசி வேளையில் இருக்கிறோம். ஓ, சபையில் நாம் வழக்கமாகப் பாடும் அந்தப் பாடலை நான் நேசிக்கிறேன். துதிக்கப்படும் நமது கர்த்தர் வந்து காத்து நிற்கும்

மணவாட்டியை எடுத்துச் செல்லும் ஆயிரமாண்டு அரசாட்சியின் சந்தோஷநாளுக்காக நான் எதிர்பார்க்கிறேன். ஓ, எனது இதயம் அந்த இனிமையான விடுதலை அளிக்கும் அந்நாளுக்காக கதறுகிறது, தாகமாயிருக்கிறது அப்போது நமது இரட்சகர் பூமிக்குத் திரும்பி வந்திடுவாரே.

அந்த நாழிக்கைக்காக காத்துக்கொண்டிருக்கிறோம்.

47. இப்பொழுது நாம் நமது முந்தைய பாடத்தில் 5ம் அதிகாரம் 5ம் வசனத்தில் இனத்தான் மீட்பரைப் பற்றி பார்த்தோம். அவர் தானே கிறிஸ்துவாயிருக்கிறார். முன்னடையாளமாயிருக்கிற ரூத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தோம். ரூத் தீர்மானித்தல், ரூத் பணிவிடை செய்தல், ரூத் இளைப்பாறிக் கொண்டிருத்தல். தீர்மானித்தல் தான் நீதிமானாகுதல் ஆகும். பணிவிடை செய்தல் தான் அவள் தன்னை ஆயத்தமாகிக் கொண்டதாகும்; அது பரிசுத்தமாகுதலை காண்பிக்கிறது; இளைப்பாறுதல், கலியாண விருந்து வரையிலும் பரிசுத்த ஆவியில் இளைப்பாறிக் கொண்டிருத்தலைக் காண்பிக்கிறது எவ்வளவு அழகாக இருக்கிறது!

48. சபையானது மார்டின் லூத்தர் மூலமாக நீதிமானாகுதலுக்குள் வந்தது; ஜான் வெஸ்லியின் மூலமாக பரிசுத்தமாகுதலுக்குள் வந்தது; பெந்தெகோஸ்தேயின் மூலமாக பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்குள் வந்தது, இப்பொழுது அவள் தன்னுடைய கர்த்தருடைய வருகைக்காக காத்துக்கொண்டு ஆவியில் இளைப்பாறிக் கொண்டிருக்கிறாள். பூரணமானதாக இருக்கிறது.

49. நமது இனத்தான் மீட்பர், நியாயாதிபதியாக ஆவதற்காக சிங்கமாக ஆகப்போகையில், மூப்பர்கள் அவரை ஒரு ஆட்டுக் குட்டி என அழைத்தது சரியே, ஏழு முத்திரைகளால் முத்திரையிடப்பட்ட புஸ்தகத்தை உடையவராக அவர் ஒரு ஆட்டுக்குட்டியாக இருக்கிறார். அப்புஸ்தகம் கையிலெடுக்கப்பட்ட பொழுது மத்தியஸ்த ஊழியமானது முடிவுற்றது.

50. மூன்றாம் அதிகாரத்தில் சபையானது எடுத்துக்கொள்ளப்பட்டு விடுகிறது. ஆனால் இப்பொழுது மீட்பானது வெளிப்படுத்தப்பட



அர்த்தமாம். இவ்வாறு போப்பின் சிம்மாசனத்தில், முக்கூறான கீரிடத்தில் எழுதப்பட்டுள்ளது. போப்புக்கு ஒரு முக்கூறான கிரீடம் உள்ளது. இதோ என்னுடைய கரமானது எவ்வாறு என் முகத்திற்கு மிக அருகாமையில் உள்ளதோ அந்த அளவு நெருக்கமாக நின்று நானே அந்த கிரீடத்தை பார்த்திருக்கிறேன். வாடிகனில் நானே போப்பின் அந்த அலங்கரிக்கப்பட்ட கிரீடத்தை, நான் அதைப் பற்றி என்ன சொல்லிக்கொண்டிருந்தேனோ அதை உறுதி செய்து கொள்ளத்தக்கதாக கவனித்துப் பார்த்தேன். அவன் எதிர்த்து நிற்கிறவனாகவும், தேவனென்னப்படுவதெதுவோ அதற்கெல்லாம் மேலாக அவன் தன்னை உயர்த்திக் கொள்கிறவனாயும், தேவ மனிதருக்கெல்லாம் மேலாக தன்னை உயர்த் திக் கொள்கிறவனாயும் இருப்பான். அவன் தன்னை யாவருக்கும் மேலாக பரிசுத்தவானாகக் காண்பித்துக் கொள் கிறான். அவன் தன்னைத் தேவன் என்று காண்பித்துக் கொண்டு தேவாலயத்தில் உட்கார்ந்திருக்கிறவனாயும், பூமியில் பாவங்களை மன்னிக்கிறவன் போல் காண்பித்துக்கொண்டு இருக்கிறான். நிச்சயமாக அப்படித்தான் செய்கிறான்.

185. விசுவாசத் துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவ மனுஷன் வெளிப்பட வேண்டும் என்று பவுல் கூறினான். நான் உங்களிடத்திலிருந்தபோது இவைகளைச் சொன்னது உங்களுக்கு ஞாபகமில்லையா?

2 தெச. 2:5.

186. அதைக்குறித்து பவுல் அந்நாளிலே பிரசங்கித்தபோது நானும் அங்கே அமர்ந்திருந்து அதைக் கேட்க விரும்புவேனே. நீங்கள் அவ்வாறு விரும்பமாட்டீர்களா? ஓ, நானும் அவன் பிரசங்கத்தை கேட்க எவ்வளவாய் விரும்புவேன்!

187. இப்போது அவன் என்ன செய்யப் போகிறான்? மிருகத்திற்கு ஒரு சொரூபம் செய்ய வேண்டும் என்பான். 2 தெசலோனிக்கேயர். இப்பொழுது கேளுங்கள். இப்போது மிகவும் கவனமாக செவிகொடுங்கள். ஒரு போப் வருவதைக் குறித்து சபையானது ஏற்கெனவே உணர்ந்து கொண்டிருந்தது. அது என்ன? அதுதான் அந்த சபைக் காலத்தின் முடிவாகும்பவுலுடைய இந்த நிக்கொலாய் மதஸ்தருடைய போதகமானது எழும்பி வருவதை அவர்கள் அந்நாளிலேயே கண்டார்கள். அவர்கள் ஒரு பரிசுத்த மனிதனை தங்களுக்கென உண்டாக்கிப் கொள்வதையும் கண்டார்கள். எதற்காக? போப்பைத்தான். லௌகீகமும் பேரறிவாளர்களும் சபைக்குள்

அங்கே பவுல் என்ன கூறுகிறான் என்பதை நாம் காண்போமாக. மகத்தான பரிசுத்த ஆவியானவர், இங்கே கர்த்தருடைய இந்த மகத்தான தீர்க்கதரிசியின் மேல் இருந்தவர், என்ன கூறுகிறார் இந்தக் கடைசி சாட்சிகளைப் பற்றி என்பதை நாம் பார்ப்போமாக. 2 தெசலோனிக்கேயர் 2ம் அதிகாரத்திலிருந்துதான் அது கூறப்பட்டுள்ளது. நல்லது ஐயா. நம் வசனத்திலிருந்து துவங்குவோமாக. அந்த வசனம் தான் என்று நான் நினைக்கிறேன். நல்லது, இப்பொழுது நாம் அதை வாசிப்போமாக. யாவரும் மிகவும் கவனமாகக் கேளுங்கள். பவுல் பரிசுத்த ஆவியால் நிரப்பட்டவனாக இருந்தான் என்பதை எத்தனை பேர் விசுவாசிக்கிறீர்கள்? இங்கே கவனியுங்கள்.

''எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காத படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுசவாச துரோகம் முந்தி நேரிட்டு... (அப்பொழுதே கர்த்தர் வரப் போகிறார் என்ற தவறான கருத்தை அவர்களுடைய சிந்தையை விட்டு அகற்ற பவுல் அங்கே முயன்று, இந்த கடைசி கால சபையாகிய லவோதிக்கேயாவின் காலத்தில் தான் விசுவாச துரோகம் நேரிடும் என்றும், முதலாவதாக விசுவாச துரோகம்தான் நேரிட வேண்டும் என்றும் அவன் கூறுகிறான்)... கேட்டின் மகனாகிய பாவ மனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது (பாவ மனுஷன் - பரிசுத்த ஆவியின் பேரில் அவிசுவாசங் கொண்டவன் - அவிசுவாசம் - யூதாஸைப் போல சபையின் பொக் கிஷதாரி).

அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவனென்னப்படுவதெ துவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிற வனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல் உட்கார்ந்து தன்னைத் தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்...... (சகோதரனே! அது வாடிகனில் உள்ளவனைத் தவிர இந்தப் பூமியில் வேறே யாராவது எங்காவது அவ்வாறு செய்கிறவன் இருக்கிறானா?)

(2 தெச 2:3-4).

184. இப்பொழுது வெளிப்படுத்தின விசேஷம் 13ம் அதி காரத்தை எடுத்துக்கொண்டு, அங்கே அந்த மனிதன் ஏழு மலை களின் மேல் உள்ள ஒரு நகரத்தில் வீற்றிருக்கிறான் என்பதைக் காண்பிப்பேன். அந்த மிருகத்தின் இலக்கமாகிய 666 இலத்தீன் பாஷையில் எழுதப்பட்டுள்ளது. அது ரோம பாஷையில் அகர வரிசையில் 666 என்ற இலக்கத்தைக் கொண்டதாக, ''வைகாரியஸ் ஃபிலியை டியை'' (Vicarius Felei Dei) என்பதாக உள்ளது. அதற்கு 'தேவ குமாரனுக்கு பதிலாள்'' என்று



வேண்டியுள்ளது. எங்ஙனம் சபையானது மீட்கப்பட்டது என்கிற விஷயம் வெளிப்படுத்தப்படுகிறது. சபையானது போய்விடுகிறது, பாருங்கள். எனவே இப்பொழுது 5ம் அதிகாரத்தில், அவர், தாம் அதை எவ்வாறு செய்தார் என்பதை காண்பிக்கிறார், என்ன நடைபெற்றது, எவ்வாறு தாம் தமது சபையை முத்திரையிட்டார் என்பதையும் அவரது நாமத்தைப் பற்றிய வெளிப்பாடு, அவரது நாமத்தை உபயோகித்து தண்ணீர் ஞானஸ்நானம், நித்திய ஜீவனுண்டு, நித்திய நரகம் இல்லை, சர்ப்பத்தின் வித்து, நித்திய பாதுகாப்பு ஆகிய இந்த அனைத்தும் மகத்தான உபதேசங்களையும், சபை முன்குறிக்கப்படுதல் ஆகியவைகளையும் சபைக்கு வெளிப்படுத்தப்பட்டதை, தாம் அவைகளை எவ்வாறு செய்தார் என்பதை காண்பித்துக் கொண்டிருக்கிறார்.

51. மூலமுதலான உரிமைக்காரனானவரிடத்திலிருந்து நமது இனத்தான் மீட்பருக்கு ஏழு முத்திரைகளால் முத்திரையிடப்பட்ட ஒரு மீட்பின் புஸ்தகமானது கையளிக்கப்பட்டது. ஆமென்! யார் அந்த மூலமுதலான உரிமைக்காரனானவர்? தேவன் தாமே 'ஆட்டுக்குட்டியானவர் வந்து, சிங்காசனத்தின் மேல் உட்கார்ந்தவருடைய வலது கரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்கினார்.'' (வெளி5:7). யார் அந்த ஆட்டுக்குட்டியானவர்? மீட்பர், நமது இனத்தான் மீட்பர் - சபைக்கு நெருங்கிய இனத்தானவர். அவர் வந்து இஸ்ரவேலை மீட்டுக்கொண்டார்.

52. அதைக் குறித்து இன்று காலையில் நாம் பார்க்கப் போகிறோம். இஸ்ரவேல் மீட்கப்பட்டது. ஆனால் அது அவர் களுக்கு சம்பந்தமுள்ளதாக ஆகவில்லை. ஏனெனில் அவர்கள் அவரை புறக்கணித்தனர். ஆனால் சபையோ தங்களது மீட்பை ஏற்றுக் கொண்டது. அவரே நமது நெருங்கின இனத்தானாகிய மீட்பராய் இருக்கிறார். போவாஸ் புறஜாதியாளாகிய , அந்நிய தேசத்தாளாகிய மோவாபிய ஸ்திரீயான ரூத்தை மீட்க வேண்டு மெனில் நகோமியையும் மீட்க வேண்டியதாயிருந்தது. அதைப் போலவே கிறிஸ்துவும் இஸ்ரவேலை மீட்டுக்கொண்டார். அவர் அதை அவர்களுக்கு அளித்த போதிலும் அவர் புறக்கணிக்கப் பட்டார்.

53. உள்நாட்டுப் போரின்போது, நல்லவனாக ஒரு மனிதன் இருந்தபோது, அவனுக்கு மன்னிப்பு அளிக்கப்பட்டும். அவன் சுட்டுக் கொல்லப்பட்டான் என்பதைப் பற்றி சிற்சில சமயங்களில் நான் குறிப்பிடுவதை நீங்கள் ஞாபகத்தில் வைத்திருக்கிறீர்களா? அவன் நிரபராதியான மனிதன் : அவர்கள் அவனை குற்றமுள்ளவனாகத்

தீர்த்தார்கள். யுத்தத்தின் போது சண்டையிடாமல் அவன் ஓடிப்போய்விட்டான் என்ற வகையில் அவன் குற்றமுள்ளவனாகக் காணப்பட்டான். அவர்கள் அவனை குற்றவாளியாகத் தீர்த்து அவனை சுட்டுக்கொல்ல இருந்தார்கள். ஒரு மனிதன் ஜனாதிபதி லிங்கன் அவர்களிடத்தில் ஓடிச்சென்று, "லிங்கன் அவர்களே, இந்த மனிதன் ஒரு கிறிஸ்தவன். அவ்வாலிபன் பயந்து போய் விட்டான். அவனது ஜனங்களை நான் அறிவேன், அவன் பயந்து போய்விட்டான்: அவனுக்கு எந்த கெட்ட எண்ணமும் இல்லை. அவன் யுத்தத்தில் கலந்து கொள்ளாமல் ஓடிப்போய்விட்டான். திரு. லிங்கன் அவர்களே, அது உம்முடைய கரங்களில் தான் உள்ளது. அவனை நீர்தான் மன்னிக்க முடியும்" என்று கூறினான். திரு லிங்கன் அவர்கள் ஒரு தாளையும் பேனாவையும் எடுத்து, "இன்னாரை மன்னிக்கிறேன் - ஆபிரகாம் லிங்கன்'' என்று எழுதி கையொப்பமிட்டுக் கொடுத்தார்.

அம்மனிதன் சிறைச்சாலைக்கு விரைவாகத் திரும்பி வந்து, "உம்முடைய மன்னிப்பை வாங்கி வந்திருக்கிறேன். இதோ அது இங்கே இருக்கிறது'' என்று கூறினான்.

54. அதற்கு அம்மனிதன், ''நான் அதை நோக்கிப் பார்க்கவே மறுக்கிறேன். அவ்விதமான உத்தரவில் ஒரு பெரிய முத்திரை உண்டாயிருக்குமே. அதுதான் எல்லாமாயிருக்கிறது. நீர் என்னை ஒரு கேலிக்குரியவனாக ஆக்கவே முயற்சிக்கிறீர். அதில் கையொப்பமிட்டிருப்பது ஆபிரகாம் லிங்கன் அல்ல. எவர் வேண்டுமானாலும் தன் பெயரை கையொப்பமிட்டுக் கொள்ளலாம். அது அவரிடத்திலிருந்து வருமென்றால் அவரது முத்திரையால் அது தஸ்தாவேஜாக ஆக்கப்பட வேண்டும்'' என்று கூறிவிட்டான். மன்னிப்பை வாங்கி வந்த மனிதன் அவனிடம் எவ்வளவோ எடுத்துக்கூறியும், சிறையில் இருந்த மனிதன் தன்னை அவன் விளையாட்டுத் தனமாக ஏமாற்றப் பார்க்கிறதாக நினைத்து, அங்கிருந்து கடந்து சென்றுவிட்டான். அடுத்த நாள் காலையில் அவன் சுட்டுக்கொல்லப்பட்டான். அவன் சுட்டுக் கொல்லப்பட்ட பிறகு, சமஷ்டி நீதிமன்றம் விசாரணை நடத்தியது. ஏனெனில் அம்மனிதன் சுடப்படுவதற்கு இருபத்து நான்கு மணி நேரத்திற்கு முன்பாக ஆபிரகாம் லிங்கன் இம்மனிதன் மன்னிக்கப்பட்டான் என்று எழுதி கையொப்பமிட்டுள்ளார். அதற்குப் பிறகும் எவ்வாறாயினும் அரசாங்கம் அவனை சுட்டுக் கொன்றுவிட்டது. பிறகு என்ன? அப்பொழுது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சமஷ்டி நீதிமன்றம், "ஒரு மன்னிப்பானது, ஒரு மன்னிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டாலொழிய



சபைக்கு அருவருப்பை மீண்டும் கொண்டு வருவது அதுதான். அது பாழாக்கப்படுகிறவரை யிலும் முடிவுவரையிலும் அது அங்கே இருந்து கொண்டுதான் இருக்கும். அவன் என்ன செய்வான்? அவன் தனது செயலை முடிவுபரியந்தம் செய்துகொண்டுதான் இருப்பான். அப்போது முடிவு வரும்.

180. யூத மார்க்கம், ரோம மார்க்கம், ப்ராடெஸ்டெண்ட் மார்க்கம் ஆகியவைதான் நித்திரை செய்யும் புத்தியில்லாத கன்னியர் ஆவர்; அவர்கள் தங்களை ஒருங்கிணைத்துக் கொண்டு சபைகளின் சமஷ்டி சங்கமாக ஆகிவிடுவார்கள். அது இயேசு மத்தேயு 24-இல் கூறியது போலவும், வெளிப்படுத்தின விசேஷம் 13:14-இல் கூறப்பட்டுள்ளது போலவும் இருக்கும். நாம் இப்பொழுது வெளிப்படுத்தின விசேஷம் 13:14ஐ எடுத்துக் கொள்வோம். எவ்வாறு அது இருக்கிறது என்பதைக் காண்போம். நான் அது என்ன என்பதைக் குறித்து கண்டறிவதற்காக இங்கே குறித்து வைத்துள்ளேன். வெளி 13:14 நல்லது, அது சரி, ஐயா.

மிருகத்தின் முன்பாக அந்த அற்புதங்களைச் செய்யும்படி தனக்குக் கொடுக்கப்பட்ட சத்துவத்தினாலே... (தனது சபைகளை அவன் ஒருங்கிணைத்துக்கொள்ளுவான்)... பூமியின் குடிகளை மோசம் போக்கி, பட்டயத்தினாலே காயப்பட்டுப் பிழைத்த மிருகத்திற்கு ஒரு சொரூபம் பண்ண வேண்டுமென்று பூமியின் குடிகளுக்குச் சொல்லிற்று.

வெளி.13:14

181. அந்த மிருகம் யார் என்பதையும், சாவுக்கேதுவாகக் காயப் பட்டு பிழைத்த அந்த மிருகத்தினுடைய வல்லமை இன்ன தென்பதையும் பற்றி சந்தேகத்தின் நிழல் ஏதுமின்றி நாம் நன்று அறிவோம். காயப்பட்ட அம்மிருகம் அஞ்ஞான ரோமாபுரி தான் என்பதையும், அதாவது அஞ்ஞான ரோமாபுரியில், சத்து வமானது அழிக்கப்பட்ட போது, போப்பு மார்க்க ரோமாபுரி யானது அதனுடைய ஸ்தானத்தை எடுத்துக்கொண்டு, அவ்வித மாக காயப்பட்ட அம்மிருகமானது மீண்டும் பிழைத்தது.

182. இப்பொழுது வெளிப்படுத்தின விசேஷம் 13:14.இயேசு மத்தேயு 24ம் அதிகாரத்தில் அவர்களை அதைக் குறித்து எச்சரித்தார். "மிருகத்திற்கு ஒரு சொரூபம் செய்யப்படுதல்"

183. 2 தெசலோனிக்கேயர் 2ம் அதிகாரத்தில் 3,4 ஆகிய வசனங் களிலே பவுலும் கூறுகிறான். நாம் அதை எடுத்துக் கொள்வோம்.

வரப்போவதைத்தான். அது எப்போது இருக்கும்? எனக்கு தெரியாது. அந்தக் கல்லானது அந்த சிலையை அடிக்கும் போது, அவள் போய்விடுவாள். அப்போது யாவும் முடிவு பெற்றுவிடும்.

176. வாரத்தின் மத்தியிலே - அது மூன்றரை நாட்களாகும்அல்லது மூன்றரை வருடங்களாகும், அவன் உடன்படிக்கையை முறித்து, அவர்கள் ஏற்கெனவே ஏற்படுத்திக் கொண்டிருக்கும் பலியையும் காணிக்கையையும் ஒழியப் பண்ணுவான். ஏனெனில் அவர்கள் திரும்பிச் சென்று, "இப்பொழுது பாருங்கள், நீங்கள் யாவரும் சபைகளாயிருக்கிறீர்கள்; மிருகத்தினிடமாக இந்த சொரூபத்தின் வாயிலாக நீங்கள் ஏற்றுக்கொள்ளப்பட முடியும். நாம் ஐக்கியம் கொள்ளுவோம்; நாம் கம்யூனிஸத் திலிருந்து விடுபடுவோமாக. கம்யூனிஸத்தையே ஒழித்துக் கட்டிவிடுவோம்'' என்று கூறுவார்கள். அவர்களால் அதைச் செய்ய முடியும். கண்டு கொண்டீர்களா? அவர்கள் அதைச் செய்துவிடுவார்கள்.

177. ஆனால் இப்பொழுது கவனியுங்கள். ஆலயமானது திரும்பக் கட்டப்படுகையில் அன்றாடக பலி நகரத்தில் ஏற்படுத்தப்படும். வரப்போகிற ஜனத்தின் அதிபதியானவன், வாரத்தின் நடுவிலே வருவான், அவன் உடன்படிக்கையை முறிப்பான், பலியையும் ஒழியப்பண்ணுவான். நான் கூறின பிரகாரமாக, அவன் அதைச் சிதறடிப்பான், அவன் செய்வதெதுவோ, அது முடிவு மட்டும் நீடித்திருக்கும்.

178. பரவப்போகும் பாழாக்கும் அருவருப்பைக் குறித்து கவனியுங்கள், அருவருப்பு பரவுதல். அருவருப்பு என்றால் என்ன? 'அசுத்தம்' என்பதாகும். பாழ்கடிப்பு உண்டாகுதல்- அதன் அர்த்தம் என்ன? 'அதற்கு முடிவுண்டாகுதல்' என்பதாகும். அது எங்கும் பறந்து அதற்கு முடிவு உண்டாக்குதல் என்பதாகும். நித்திரை செய்யும் புத்தியில்லாத கன்னியர், யூதர்கள் ஆகிய யாவரையும் மேற்கொண்டு ஜெயிக்கும். ரோமாபுரியின் வல்லமை எங்கும் பரந்து விரிதல் உண்டாகும். நாம் யாவரும் ரோமாபுரியைச் சார்ந்து கொள்ள வேண்டும், இல்லையெனில் நாம் ஒன்றும் இல்லாமற் போய் விடுவோம் என்பார்கள். அவன் வாரத்தின் மத்தியிலே உடன்படிக்கையை முறித்துப் போடுவான்.

179. அருவருப்பு எங்கும் பரந்து விரிவடைதல்... இயேசுவின் காலத்தில் அங்கே தனது பிரச்சார முழக்கதோடு ரோமாபுரி யானது இருந்திருக்கிறதென்றால், மீண்டும் வரப்போவது ரோமாபுரியேயாகும்.



அது மன்னிப்பாக ஆக மாட்டாது'' என்ற தீர்மானத்திற்கு வந்து அவ்வாறே தீர்ப்பு வழங்கியது.

55. கல்வாரியில் இயேசுவானவர் இஸ்ரவேலை மீட்டுக் கொண்டார். ஆனால், அவர்களுக்கு அது ஒரு மன்னிப்பாக இருக்கவில்லை, ஏனெனில் அவர்கள் அதை ஒரு மன்னிப்பாக ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் 70 வாரங்களைப் பற்றிய நமது இந்தப் பாடத்தில் அவர்கள் திரும்பி வந்து தங்களுக்கென உள்ள மன்னிப்பை ஏற்றுக் கொள்கிறார்கள் என்று நாம் காண்கிறோம். ஆனால் அவர் சபையை மீட்டுக்கொண்டார். பிறகு நாம் மன்னிக்கப்பட்டோம். ஏனெனில் நாம் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தை நமது மன்னிப்பாக ஏற்றுக்கொண்டுவிட்டோம்.

56. இப்பொழுது, அவரே நமது நெருங்கின இனத்தான் மீட்பராயிருந்தார் என்றும், அவர் மூலமுதலான உரிமைக்காரனானவரின் கரத்திலிருந்து அந்தப் புஸ்தகத்தை எடுத்துக் கொண்டார் என்றும் காண்கிறோம். அப்புஸ்தகமானது, மீட்புக்கான உடைமையுரிமைப் பத்திரமாக இருக்கிறது. அதைக் குறித்து நாம் பார்த்தோம். அப்பாடத்தை நீங்கள் ஞாபகத்தில் கொண்டுள்ளீர்களா? அது மீட்புக்கான உடைமையுரிமைப் பத்திரமாக இருக்கிறது. மொத்த விஷயங்களையும் சுருக்கி வரைந்து தந்திருக்கிற ஒரு பத்திரமாக இருக்கிறது. அதில் மரணத்தை நீக்குவதற் காக ஜீவன் கொடுக்கப்படவேண்டும் என தேவன் விதித்திருந்தார். அப்பொழுது ஏதேன் தோட்டத்தினில், நீதிமானாகிய இயேசுவானவர் மரித்து, ஒரு உடைமை உரிமைச் சாசனத்தை எடுத்துக்கொண்டார். அவரால் முத்திரைகளை உடைத்து, அவைகளில் என்ன உள்ளன என்பதைப் பற்றி வெளிப்படுத்தவும், அவருடைய சொந்தமான சுதந்தரத்தை தன் - ஜனங்களுக்கு கொடுக்கவும் இயன்றது. அதைச் செய்ததின் மூலமாக அவர் நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொண்டார். தமது சொந்த ஜீவனை கல்வாரியில் ஈந்து, அதை நம் மத்தியில் பரிசுத்த ஆவியினால் பகிர்ந்தளித்தார். ஆமென்! அவர் இவ்வாறு செய்ததன் மூலமாக உள்ள நேசத்தை, அது எத்தகையது என்பதைப் பற்றி ஒரு மனிதனும் ஒரு போதும் கிரகித்துக்கொள்ளவே இயலாது.

57. தோட்டத்தில் ஏற்பட்ட விழுகையினால் சுதந்தரத்தை தன் கைவசப்படுத்திக்கொண்ட சாத்தானானவன் கட்டி அக்கினி கடலில் தள்ளப்படுகிறான். அவனது நாட்கள் முடிவுற்றன.

58. சுவிசேஷத்தில் இயேசுவுக்குள்ள நான்கு பட்டங்களை நாம் பார்த்தோம். தாவீதின் குமாரனாக அவர் சிங்காசனத்திற்கு சுதந்திரவாளியாக ஆனார். ஆபிரகாமின் குமாரன் என்ற முறை யில் ராஜரீக உரிமைக்கு சுதந்திரவாளியாக அவர் ஆனார். மனுஷக்குமாரன் என்ற நிலையில், பூமிக்குரிய சுதந்திரவாளியாக ஆனார். தேவனுடைய குமாரன் என்ற நிலையில், சகலத்துக்கும் சுதந்திரவாளியானார். ராஜரீக உரிமைக்காரனானவர்.

59. பழைய ஏற்பாட்டில் சொத்தானது ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக வைத்துக்கொள்ளப்பட முடியாது. ஐம்பது ஆண்டு களுக்கு மேல் சொத்தின் உரிமைக்காரனானவன் வசம் சொத்து திரும்ப அளிக்கப்படாமல் இருக்க முடியாது. நாற்பதாவது நாளிலே அவர் கிரயத்தைச் செலுத்தினார். ஐம்பதாவது நாளிலே, சபைக்குச் சொந்தமானதும், ஏதேன் தோட்டத்தினில் இழந்து போகப்பட்டதுமான மீட்பும், வல்லமையும் திரும்ப மீட்கப்பட்டு, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் மூலமாக ஐம்பதாவது நாளிலே நமக்கு அனுப்பட்டது.

60 பிறகு நாம் புஸ்தகச் சுருளை பற்றி எடுத்துக் கொண்டோம். எவ்வாறு புஸ்தக சுருளானது அவர் கையில் அளிக்கப்பட்டது என்று பார்த்தோம். எரேமியா 32:6-இல் எரேமியாவிடம் அவனது பெரிய தகப்பன் மகனாகிய அனாமெயேலின் மூலமாக புஸ்தகச் சுருளானது ஒப்படைக்கப்பட்டது என்று பார்த்தோம். அனாமெயேல் - அவர்கள் யாவரும் சிறையிருப்பில் போகவிருந்தார்கள். அப்பொழுது சில சுதந்தரத்தை விட்டுச் சென்றான். அதைப் பற்றிய பத்திரமானது ஒரு மண்பாண்டத்திலே வைக்கப்பட்டது. அச்சுருள் வைக்கப்பட்டவிதம், நமது இருதயத்தினுள் தேவனுடைய வல்லமையும் தேவனுடைய இரகசியங்களும் வைக்கப்படுவதைப் பற்றி எடுத்தியம்புகிறது. நம்முடைய மீட்புக்கான திட்டமானது அதேவிதமாக இம்மண் பாத்திரங்களிலே வைக்கப்பட்டன. இயேசுவின் நாமமும் வெளிப்படுத்துதலும்...

61. இப்புஸ்தகமானது ஏழு முத்திரைகளால் முத்திரையிடப் பட்டிருந்தன என்பதைக் குறித்து நாம் கண்டோம். ஒவ்வொரு முத்திரையும் சுற்றிலும் சுற்றி வைக்கப்பட்டிருந்தது. வெளிப் படுத்துதலானது புறப்பட்டு வருகையில், அவர் முத்திரையை இழுத்து திறந்தபோது, அம்முத்திரை கூறியதை அவர் படித்தார். பிறகு புஸ்தகச்சுருளை விரித்து, அடுத்ததை திறந்தபொழுது, அடுத்த முத்திரை கூறியதை படித்தார். பிறகு அடுத்ததை இழுத்து வெளியே எடுத்து திறந்து போது, அடுத்து முத்திரை என்ன கூறியதோ



பின்பற்றுவோரும் வெள்ளைக் குதிரைகளின் மேல் ஏறி வருகிறார்கள். குதிரை என்பது வல்லமைகளைக் குறிக்கும். அவர் இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வெண்வஸ்திரம் தரிந்திருந்தார். தேவனுடைய வார்த்தை என்னும் நாமம் அவர் மேல் எழுதப்பட்டிருந்தது. அவர் மகத்துவமுள்ள ஜெய வீரராய் ஆயிர வருஷ அரசாட்சிக்காக ஆலயத்திற்கு வருகிறார். (ஆம் ஐயா!) மகிமை! அங்கே அந்த 1,44,000 பேர்களை சந்திக்கிறார்.

173. அந்த எழுபதாவது வாரத்திற்குப் பிறகு எழுபதாவது வாரம்.... இது எழுபதாவது வாரத்தில் நடைபெறுகிறது. அந்த வாரத்தின் மத்தியிலே அவன் உடன்படிக்கையை முறிக்கிறான். ஏனெனில் அவன் பூமியை வாதையால் அடித்த அந்த இரண்டு பெந்தெகொஸ்தே தீர்க்கதரிசிகளை கொலை செய்து விடுகிறான். (ஆம் ஐயா!) தம்பி, அவர் அந்த சபையை சபித்து, அவளை நெருப்பினால் சுட்டெரிக்கிறார். கப்பல் மாலுமிகளும் தூரத்தில் நின்று, “இந்த மகத்தான அழியாத நகரமாகிய ரோமாபுரி ஒரு நாழிகையிலே ஒழிந்து போனாளே'' என்று கதறுவார்கள் (வெளி. 18:18,19) அவள் வெடித்து சிதறிப் போவாள். காரியங் களை எவ்வாறு செய்வதென்பதை தேவன் அறிவார். தூதர்களில் ஒருவன் நோக்கிப் பார்த்து, ''கிறிஸ்துவுக்காக நின்றவர்களை அவள் கொலை செய்தாளே, அந்த இரத்த சாட்சிகளின் ஒவ்வொரு வருடைய இரத்தமும் அவளிடத்தில் காணப்பட்டது” என்று கூறினான். அவளுடைய வஞ்சனையானது எங்கும் பரவிச் சென்று, ஸ்தாபனத்தை உண்டாக்கி, சபையை எல்லாவித தீட்டினாலும் தீட்டுப்படுத்தி, தவறானவைகளை உள்ளே கொண்டு வந்து, சத்தியத்தை உறுதியாக கடைப்பிடித்த அவர்களை வெளியே கொண்டுவர முயன்றவர்களைக் கொலை செய்தது. மகிமை! ஓ, எனக்குக் தெரியாது. நான் பிரயாணம் செய்வதை போல் உணருகிறேன்.

174. சூரிய ஒளிக்காக நீங்கள் சந்தோஷமாக இருக்கவில்லையா? சூரிய ஒளியில் நடக்கிறோம். சகோதரரே, நாம் எங்கே இருக்கிறோம்? அது எந்த வேளையிலும் சம்பவிக்கும். நாம் இதோ இங்கே இருக்கிறோம்.

175. கடைசியாயுள்ள சபைக்கு செய்தியானது புறப்பட்டுப் போய்விட்டது. சபையானது தனது கிறிஸ்துவை புறக்கணித்து விட்டது நாற்பதாண்டுக் காலமாக யூதர்கள் தங்களுடைய சுய தேசத்திலே வந்து சேர்ந்திருக்கிறார்கள். புதிய நகரமானது கட்டப்பட்டுவிட்டது. அவர்கள் எதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்? மேசியா

அவ்வாறிருக்கும் என்று இயேசு கூறினார். நாம் இறுதியான ஒன்றில் இருக்கிறோம்.

171. இவ்விரு சாட்சிகளும் என்ன செய்வார்கள்? காட்சியில் தோன்றப் போவது மோசேயும் எலியாவுமாகும். அவர்கள் அந்த யூதர்களிடம் அவர்களுடைய தவறுகளை எடுத்துச் சொல்லு வார்கள். இவ்விரு தீர்க்கதரிசிகளின் மூலமாகவும் தேவன் அந்த யூதர்களில் 1,44,000 பேர்களை அழைப்பார். இந்த புறஜாதி சபையோடு முடிவடைகிற எலியாவின் ஆவியின் ஊழியம், தொடர்ந்து யூத சபையின் காலத்தினுள்ளும் சென்று, தன்னோடு சேர்ந்து கொள்ளும்படி மோசேயையும் அழைக்கும். அல்லேலூயா! அதை நீங்கள் புரிந்து கொண்டீர்களா? மேசியாவைப் புறக்கணித்தபோது அவர்களுக்கு அளிக்கப்பட்ட அதே பெந்தெகொஸ்தே செய்தியைதான் அந்த யூதர்களுக்கு அவ்விரு தீர்க்கதரிசிகளும் பிரசங்கிக்கப்போகிறார்கள். ஆமென்! அதை நீங்கள் கண்டு கொண்டீர்களா? அதே பெந்தெகொஸ்தே செய்தியை தான் அந்த யூதர்கள் அவர்களுக்கு பிரசங்கிக்கப் போகிறார்கள். அவ்விரு யூதர்களையும் அவர்கள் மிகவும் பகைத்து அவர்கள் கொன்று விடும் அளவுக்குப் போய் விடுவார்கள். அவர்கள் சகல தேசத்தினராலும் பகைக்கப்படுவார்கள். வாரத்தின் மத்தியிலே - ஏனெனில் அவர்கள் ஒரு மகத்தான, வல்லமையான 1,44,000 பேர்களடங்கிய கூட்டத்தை எழும்பச் செய்திருக்கின்றனர். அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தனர். சகோதரனே, அற்புதங்களை செய்தலைப் பற்றி பேசுவீர்கள். அவர்கள் அவைகளை செய்தனர். அவர்கள் வானங்களை அடைத்தனர். அதினால் அவர்கள் தீர்க்கதரிசனம் உரைத்த நாட்களெல்லாம் மழை பெய்யாதிருந்தது. அவர்கள் விரும்பிய போதெல்லாம் பூமியை வாதைகளால் அடித்தனர். அவர்கள் வாதைகள் முதலிய யாவற்றையும் கொடுத்தனர். அவர்கள் ரோமர்களுக்கு கடினமான வழியையே கொடுத்தனர். ஆனால் இறுதியாக அவர்கள் கொல்லப்படுவர். நம்முடைய தேவன் உக்கிரமாக இருக்கையில், அவர் பயங்கரமான தேவனாயிருக்கிறார். ஆனால், அது எழுபதாவது வாரத்தில் முடிவடைந்து விடுகிறது என்றும், சபையானது மகிமையில் இருக்கிறது என்பதையும் ஞாபகத்தில் கொள்ளுங்கள். ஆமென்! கலியாண விருந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆம்!

172. இப்பொழுது கவனியுங்கள். யூதர்களுடைய காலத்தின் முடிவில், ஆயிரமாண்டு அரசாட்சிக்கால ஆலயத்துக்கு அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் திரும்ப வருவதை நாம் அங்கே காண்கிறோம். இங்கே அவர் வெள்ளைக் குதிரையின் மேல் ஏறி வருகிறார். அவரைப்



அதைக்கண்டு அதன் வெளிப்படுத்துதல் என்னவென்று கூறினார். விரைவில் நாம் ஏழு முத்திரைகளைக் குறித்து காணப்போகிறோம். அவைகளில் இவ்வாறு தான் நடந்தது. ஒவ்வொரு முத்திரைகளும் அப்புஸ்தகத்திலிருந்து திறந்து கொடுக்கப்படும் பொழுது அங்கே என்ன நடைபெற்றது என்பதைக் காண்பித்துவிடும்.

62. மீட்பின் திட்டத்தில் ஐந்து ஏழுகள் உள்ளன என்று நாம் கண்டோம். ஐந்து என்ற எண்ணில் உள்ளது. அது அங்கே ஐந்து ஏழுகள் உள்ளன. ஏழு முத்திரைகள், ஏழு ஆவிகள், ஏழு தூதர்கள், ஏழு எக்காளங்கள், ஏழு சபைக் காலங்கள். ஆகவே, ஐந்து ஏழுகள் என்பது கிருபையைக் குறிக்கும் என்பதை நீங்கள் பாருங்கள். ஐந்து என்ற எண் கிருபையைக் குறிக்கும். ஏழு என்பது பரிபூரணத்தைக் குறிக்கும். ஆகவே அது மிகவும் சரியாக பரிபூரணத்தில் ஓடிச் கொண்டிருக்கிறது.

63. அந்தந்தக் காலத்திற்குரிய மனிதனுக்கு, எந்த காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதையும், அந்தக் காலத்திற்குரிய ஆவியைப் பற்றியும், அக்காலத்திற்குரிய சபையைப் பற்றியும், தேவனுடைய வார்த்தையில் ஒவ்வொரு முத்திரையும் திறக்கப்படுகையில் வெளிப்படுத்தப்படுகிறது. வெளிப்படுத்தின விசேஷம் 10 அதிகாரத்தில், முடிவின் வேளையில், கடைசி முத்திரையானது உடைக்கப்படுகையில், அத்தூதனானவர் நிலத்தின் மேல் ஒரு பாதத்தையும் சமுத்திரத்தின் மேல் ஒரு பாதத்தையும் வைத்தவராய், தன் கரங்களை வானத்திற்கு நேராக, உயர்த்தியிருக்க, அவர் தலைமேல் வானவில் சூழ்ந்திருக்கவும், சதாகாலமும் ஜீவித்திருக்கிறவர் பேரில் ஆணையிட்டு, கடைசி முத்திரையிலே இனிக் காலம் செல்லாது என்று கூறுகிறதை நாம் காண்கிறோம். நாம் முத்திரைகளைப் படிக்கப் போகையில் அந்த முத்திரை எங்கே உள்ளது என்று பார்க்கிற வரையிலும் காத்திருங்கள். எழுபது வாரங்களை நீங்கள் பார்த்த பிறகு, முத்திரைகள் எங்கே உள்ளன என்பதைப் பாருங்கள். நேரமானது கடந்து விட்டது. மீட்பானது முடிவடைந்துவிட்டது - அவர் இப்பொழுது சிங்கமாகவும், நியாயாதிபதியாகவும் உள்ளார். இன்று காலையில் அவர் உங்களுடைய இரட்சகராயிருக்கிறார். ஆனால் ஒரு நாளிலே அவர் உங்களுடைய நியாயாதிபதியாக இருப்பார்.

64. 5ம் அதிகாரத்திலிருந்து 8ம் வசனத்திலிருந்து 14ம் வசனம் முடிய உள்ள வசனங்களில் ஆட்டுக்குட்டியானவர் பரலோகத்திலும் பூலோகத்திலும் தொழுது கொள்ளப்பட வேண்டிய வராயிருக்கிறார் என்பதற்குரிய வேளையை வெளிப்படுத்துகிறது. ஏழு முத்திரைகளால்

முத்திரையிடப்பட்ட புஸ்தகம் - பாத்திரரான ஆட்டுக்குட்டியானவர் - நெருங்கின இனத்தான் மீட்பர், 8ம் வசனத்திலிருந்து 14 வசனம் முடிய உள்ள வசனங்களில், தூதர் அவரை தொழுது கொண்டார்கள்; மூப்பர்கள் அவரை தொழுது கொண்டனர். ஜீவன்கள் அவரை தொழுது கொண்டன. "வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும் ஆட்டுக்குட்டியானவருக்கு ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக்கேட்டேன்.'' (வெளி.5:13) என்று யோவான் சொல்லுகிற அளவுக்கு அவனும் அவரைத் தொழுது கொண்டான். இராஜாவாகிய ஆட்டுக்குட்டியானவர் தொழுது கொள்ளப்படும் வேளையாகும் அது.

65. இப்பொழுது சபையானது போய்விட்டது என்பதை நினைவில் கொள்ளுங்கள். இப்பொழுது தானியேலின் 9ம் அதிகாரத்தை எடுத்துக்கொண்டு அதில் 1 முதல் 3முடிய உள்ள வசனங்களை வாசிப்போம். அதன்பிறகு நாம் 20ம் வசனம் முதல் 27ம் வசனம் முடிய எடுத்துக்கொள்ளப் போகிறோம். ஏனெனில் இது தானியேலின் ஜெபம் மாத்திரமே. வாரம் முழுவதிலும், இதை நீங்கள் புரிந்து கொள்ளும்படியாக, மீண்டும் மீண்டும் படித்துப் பார்க்கும்படி நான் உங்களை கேட்டுக்கொள்ளுகிறேன்.

கல்தேயருடைய ராஜ்யத்தின் மேல் ராஜாவாக்கப்பட்ட மேதிய குலத்தானாகிய அகாஸ்வேருவின் புத்திரனான தரியு ராஜ்யபாரம் பண்ணுகிற முதலாம் வருஷத்திலே.

தானியேலாகிய நான் எருசலேமின் பாழ்க்கடிப்புகள் நிறை வேறித்தீர எழுபது வருஷம் செல்லுமென்று கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியோடே சொல்லிய வருஷங்களின் தொகையைப் புஸ்தகங்களால் அறிந்து கொண்டேன்.

(இப்பொழுது அடுத்து வசனம்)

நான் உபவாசம் பண்ணி, இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து, தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும் விண்ணப்பங் களினாலும் தேட என் முகத்தை அவருக்கு நேராக்கி,

என் தேவனாகிய கர்த்தரை நோக்கி ஜெபம் பண்ணி, பாவ அறிக்கை செய்து... (இவ்வாறு வசனம் 20ம் வசனம் வருகிற வரையிலும் இது தொடர்ந்து இப்படியே போகிறது).

தானி. 9:1-4



169. சபையானது உன்னதத்திற்கு போய்விட்ட பிறகு, அப் போது, இந்த சபைகளின் சமஷ்டி அமைப்பானது - அது நித்திரை செய்யும் புத்தியில்லாத கன்னியரைக் கொண்டதாகும் - மெதோடிஸ்ட்டுகள், பாப்டிஸ்ட்டுகள், ப்ரெஸ்பிட்டீரியன்கள், அனலின்றி, வெதுவெதுப்பாயிருக்கும் பெந்தெகொஸ்தேயினர் ஆகிய இவர்களெல்லாரையும் ஒன்றாகக் கொண்ட சமஷ்டி அமைப்பாகும் இது. ஏற்கெனவே அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அதை சாதிக்கும்போது, அவர்கள் இப்போது தங்களுடைய பெரிய ஆட்சியைக் கொண்டவர்களாக ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்துவார்கள். இப்போ திருக்கிற இந்தப் புதிய போப். அவர்கள் யாவரையும் ஒன்று சேர்க்க விரும்புகிறார். இப்போதே அது சம்பவிக்கத் தொடங்கி விட்டதை உங்களால் காணமுடியவில்லையா? நூற்றுக்கணக் கான ஆண்டுகளுக்குப் பிறகு, அல்லது ஆயிரக்கணக்கான, இரண்டு ஆயிரம் ஆண்டுகளுக்கு பிறகு, இவ்வளவு காலத்திலும் நடக்காதவண்ணம், அவர்கள் யாவரையும் ஒன்று சேர்ப்ப தற்காக, அதைக் குறித்த ஒரு உரையை அளிக்கவிருக்கிறார் இந்த போப். ஆனால் இப்போது, அவர் யாவரையும் ஒருங்கிணைத்து, ஒரு சமஷ்டி அமைப்பை ஏற்படுத்திடப் போகிறார். அதில் இணைந்து கொள்ள யூதர்களும் ஒத்துக்கொள்வார்கள். மகிமை! அல்லேலூயா! சதாகாலமும் ஜீவிக்கிற நமது தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. அப்படித்தான் நடக்கபோகிறது. இப்போது, சகோதரனே, ஒரு சிறுவன் கூட அதைக் குறித்து புரிந்து கொள்ளும் அளவுக்கு அது எவ்வளவு எளிமையாக இருக்கிறது. அந்த சமஷ்டி அமைப்பானது, யூதர்களையும், ப்ராடெஸ்டெண்டுகளையும், கத்தோலிக்கரையும் ஒருங்கிணைக் கிறதாயிருக்கும். இதை நினைவில் கொள்ளுங்கள்...

170. இவ்விரு தீர்க்கதரிசிகள் தோன்றும் பொழுது, இவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? பரிசுத்த ஜனங்களின் வல்லமையை சிதறடிப்பவனாகிய இந்த மிருகமாகிய இந்த அதிபதியானவன், என்ன செய்வான்? அவன் மூன்றரை வருடங்களுக்குப் பிறகு அவர்களோடு உள்ள உடன்படிக் கையை முறித்துப் போடுவான். அவன் அவர்களைப் புறம் பாக்கிப் போடுவான். கம்யூனிஸம் அதைச் செய்யப் போகிறது என்று மக்கள் எண்ணுகிறார்கள். தேவ ஆவியானவர் அப்படி எண்ணுகிறவர்ளோடு இடைப்படவில்லை என்பதைக் காண்பிக்கிறது அது. கம்யூனிஸம் அல்ல, மார்க்க சம்மந்தமானதே அது. கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத் தக்கதாக அது அசலுக்கு மிக நெருக்கமாக இருக்கும் என்று வேதாகமும் கூறுகிறது.

உண்மைதானே? இப் பொழுது அதை நோக்கிப் பாருங்கள். ஒரு கேள்வி உண்டாக்கிறதென்றால், அதை நான் அறிய விரும்புகிறேன்.

166. யூதர்களுக்குரிய இந்த வாரங்களின் மத்தியிலே, அது மூன்றரை வருட காலமாகும்; அதிபதியாகிய அந்திக் கிறிஸ்து வரவேண்டும். அவன் ரோமாபுரியிலிருந்து வருகிறான் என் பதை நினைவில் கொள்ளுங்கள். வரவேண்டியவனாகிய அதிபதி. அவன் யார்? ஒரு போப். ஜனங்களின் அதிபதியாயிருப்பவன்; அவன் வரவேண்டியுள்ளது. யோசேப்பை அறியாத பார்வோன் ஒருவன் வரவேண்டும்.

167. ப்ராடெஸ்டெண்டுகளே, 'நல்லது, அப்படித்தான் இருக்கிறது'' என்கிறீர்கள். ஆனால் சற்று ஒரு நிமிடம் பொறுங்கள். ப்ராடெஸ்டெண்டுகளுக்கு ஒரு மதஸ்தாபனம் உள்ளது, அதினால் அவர்கள் சபைகளின் சமஷ்டி அல்லது கூட்டமைப்பை ஏற்படுத்திக் கொண்டு, அதின் மூலம் மிருகத்திற்கு ஒரு சொருபத்தை உண்டாக்கி அதனுடன் செல்லுகிறார்கள். நாம் இங்கே காண்பதென்னவெனில், யூதர்களும் கூட அந்த சமஷ்டி அமைப்பிற்குள் வந்து சேருமாறு அழைக்கப்படுகின்றனர். ஆம் ஐயா! அவர்கள் உடன்படுகிறார்கள். வேதாகமம் அவர்கள் அவ்வாறு செய்ததாகக் கூறியுள்ளது.

168. அவன் அவர்களோடு ஒரு உடன்படிக்கையை செய்து, எழுபதாவது வாரத்தின் பாதி செல்லும்போது, யூதர்களோடு அந்த அந்திகிறிஸ்து செய்து கொள்ளும் உடன்படிக்கையை முறித்துப் போட்டு விடுகிறான். "உன் ஜனங்கள்'' ஏன்? வெளிப் படுத்தின விசேஷம் 11ம் அதிகாரத்தில் நீங்கள் வாசித்தால், அதில் அவர் இரண்டு தீர்க்கதரிசிகளை அனுப்புவதாக கூறியுள்ளார். அவர்கள் அந்த காலத்தில் தீர்க்கதரிசனம் உரைப்பார்கள். அது 11- ம் அதிகாரம். இப்பொழுது 19 வரையிலும் நீங்கள் வரு கிறீர்கள். இவ்விரு தீர்க்கதரிசிகளின் மேலும் அவர்கள் கோப மடைந்து, அவர்களை உண்மையிலேயே கொன்று விடுவார்கள். அது சரிதானே? அவர்களது மரித்த சரீரங்கள் ஆவிக்குரிய பிரகாரமாக சோதோம் கொமோரா என்றழைக்கப்படுவதும், நமது கர்த்தர் சிலுவையில் அறையப் பட்டதுமான எருசலே மின் தெருவில் கிடக்கும். அது சரிதானே. அவர்களது சரீரங்கள் மூன்று பகலும், மூன்று இரவும் அங்கே கிடக்கும். அதற்கு பிறகு, அவர்களுக்குள் ஜீவ ஆவியானது பிரவேசித்து, அவர் கள் எழுந்து மகிமைக்குள் போய்விடுவார்கள். நகரத்தின் பத்திலொரு பங்கு அச்சமயத்தில் வீழ்ந்திடும். அது சரிதானே? அது என்ன? எழுபதாவது வாரத்தின் மத்தியிலே அது நடக்கும்.



66. நேரத்தை மிச்சப்படுத்தத்தக்கதாகவும், ஜனங்கள் நின்று கொண்டிருக்கிறபடியாலும், இப்பொழுது நாம் நேரே 20ம் வசனத்திற்குப் போய்விடுவோம்.

இப்படி நான் சொல்லி, ஜெபம் பண்ணி, என் பாவத்தையும் என் ஜனமாகிய இஸ்ரவேலின் பாவத்தையும் அறிக்கையிட்டு, என் தேவனுடைய பரிசுத்த பர்வதத்துக்காக என் விண்ணப் பத்தை என் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாகச் செலுத்திக் கொண்டிருந்தேன்.

அப்படி நான் ஜெபம் பண்ணிக் கொண்டிருக்கும் போதே, முதல் தரிசனத்திலே நான் கண்ட புருஷனாகிய காபிரியேல், வேக மாய்ப் பறந்து வந்து, அந்திப் பலியின் நேரமாகிய வேளையிலே என்னைத் தொட்டான்.

அவன் எனக்குத் தெளிவுண்டாக்கி, என்னோடே பேசி : தானி யேலே, உனக்கு அறிவை உணர்த்தும்படி இப்போது புறப் பட்டு வந்தேன்.

தானி 9:20-22

67. நாமெல்லாம் அங்கே இருந்திருக்கக் கூடுமென்றால் எப்படி யிருக்கும்! எவ்வாறு அவனை அவன் கண்டு கொண்டான்? ஜெபத்திலே மனிதனாகிய அந்த தூதனை, அவன் (தானியேல் - தமிழாக்கியோன்) அவனை (தூதனை தமிழாக்கியோன்) "மனிதன் என்று அழைத்தான் (தமிழ் வேதாகமத்தில் "புருஷன்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆங்கில வேதாகமத்தில் "Man" என்று உள்ளது - தமிழாக்கியோன்).

நீ மிகவும் பிரியமானவன் ஆதலால், நீ வேண்டிக் கொள்ளத் தொடங்கின போதே கட்டளை வெளிப்பட்டது... அவன் (போவதற்காக வெளிப்பட்டது).... நான் அதை அறிவிக்க வந்தேன்; இப்போதும் சொல்லுகிற வார்த்தையை நீ கவனித்துக் கேட்டு தரிசனத்தை அறிந்துகொள்.

மீறுதலைத் தவிர்க்கிறதற்கும், பாவங்களைத் தொலைக்கிறதற்கும், அக்கிரமத்தை நிவர்த்தி பண்ணுகிறதற்கும், நித்திய நீதியை வருவிக்கிறதற்கும் தரிசனத்தையும் தீர்க்க தரிசனத்தையும் முத்தரிக்கிறதற்கும், மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம் பண்ணுகிறதற்கும், உன் ஜனத்தின் மேலும், உன் பரிசுத்த நகரத்தின் மேலும் ... (அல்லது உன் நகரம்).... எழுபது வாரங்கள் செல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிறது. (அவனது வருகையின் ஆறுவிதமான காரணங்கள் அங்கே காணப்படு கின்றன இப்பொழுது கவனியுங்கள்).

இப்போதும் நீ அறிந்து உணர்ந்து கொள்ள வேண்டியது என்னவென்றால்... (இப்பொழுது கவனியுங்கள்)... எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவது முதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும் ஏழு வாரமும், அறுபத்திரண்டு வாரமும் செல்லும்; அவைகளில் வீதிகளும் அலங்கங்களும் மறுபடியும் கட்டப்படும்; ஆனாலும் இடுக்க மான காலங்களில் இப்படியாகும்.

அந்த அறுபத்திரண்டு வாரங்களுக்குப் பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார்; ஆனாலும் தமக்காக அல்ல; நகரத்தையும் பரிசுத்த ஸ்தலத்தையும் வரப்போகிற பிரபுவின்.... (வரப் போகிற பிரபு).... ஜனங்கள் அழித்துப் போடுவார்கள்; அதின் முடிவு ஜலப்பிரவாகம் போல இருக்கும். முடிவு பரியந்தம் யுத்தமும் நாசமும் உண்டாக நியமிக்கப்பட்டது.

அவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி... (கவனியுங்கள்)... இப்வெழுபது வாரங்களில் ஒன்றில்)..... அந்த வாரம் பாதி சென்றபோது பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார்; அருவருப்பான செட்டைகளோடே பாழாக்குகிறவன் வந்து இறங்குவான். நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன் மேல் தீருமட்டும் சொரியும் என்றான்.

தானி 9:23-27

68. இப்பொழுது அதில் நமக்கு அடுத்த மூன்று, நான்கு அல்லது ஐந்து கூட்டங்களுக்கான பாடமானது உள்ளது. எழுபது வாரங்களைப் பற்றி கர்த்தர் எதையெல்லாம் வெளிப்படுத்தப் போகிறாரோ அது.

69. இப்பொழுது டாக் அவர்களை, எனது கரும்பலகையை இன்றிரவில் அங்கே வைக்கக்கூடுமா என்று கேட்கப் போகி றேன்; அதினால் நான் அதில் வரைந்து குறிப்பிட்டுக் காட்ட இயலும். இப்பொழுது நீங்கள் தவறவிடக் கூடாது என்று நான் விரும்புகிறேன். நீங்கள் என்னோடு சேர்ந்து இதைப் படிக்க வேண்டும். ஆழமாக அதைக் குறித்துப் படிக்க வேண்டும். இல்லையெனில் நீங்கள் அதை தவறவிட்டுவிடுவீர்கள். நான் இவைகளைக் குறித்து கரும்பலகையில் வரைந்திட வேண்டு மென்று விரும்புகிறேன். நீங்கள் உங்களது பென்சில்களையும், பேப்பர்களையும் கொண்டு வந்து, இவைகளில் சம்மந்தப்பட்டுள்ள தேதிகளையும், இந்தக் காலங்களையும் சம்மந்தப்பட்ட அனைத்தையும் குறிப்பெடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.



163. நாம் நமது சுயதேசத்திலே இருக்கிறோம். யூதர்கள் தங்களது சுயதேசத்திலே இருக்கிறார்கள். நாம் காலத்தின் முடிவில் வந்து, எடுத்துக்கொள்ளப்படுதலுக்காக ஆயத்தமாயிருக்கிறோம். எடுத்துக் கொள்ளப்படுதல் நிகழும்போது, சபையானது மேலே செல்லும், அவரை ஆகாயத்தில் சந்திப்பதற்காக நாம் எடுத்துக் கொள்ளப்படுவோம். நாம் யாவரும் அதை அறிவோம். மலையிலிருந்து பெயர்ந்து இருக்கும் கல்லானது எந்த சமயத்திலும் வருதற்காக ஆயத்தமாயுள்ளது. அது வருகையில், அது என்ன செய்கிறது? அது புறஜாதிகளின் காலத்தை முடிவடையச் செய்கிறது. அப்போது எல்லாம் முடிவடைகிறது. தேவன் அவர்களோடு இடைபடுவதை நிறுத்திவிடுகிறார். “அசுத்த மாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும், பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்.' புரிந்து கொண்டீர்களா? அப்போது அவர் என்ன செய்கிறார்? அவர் பரிசுத்த ஆவியால் நிரம்பப் பெற்ற தமது சபையை எடுத்துக் கொள்ளுகிறார்.

164. அசுத்தமாயிருப்பது எது? அவர்கள் நித்திரை செய்யும் புத்தியில்லாத அக்கன்னியர், அவர்கள் இங்கே நியாயத்தீர்ப்புக் கென்று வருகிறார்கள். (இச்செய்தியை தொடரும் போது, அதைப்பற்றி இன்னொரு வரைபடத்தின் மூலம் பார்ப்போம்). அவர்கள் அங்கே வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்புக்கு முன்பாக வருகிறார்கள். அவர்கள் மீட்கப்பட்டோரால் நியாயந் தீர்க்கப்படுவர். பரிசுத்தவான்கள் பூமியை நியாயந்தீர்க்கப் போகிறபடியினால், நாம் நீதிமன்றத்திற்குச் செல்லக்கூடாது என்று பவுல் நமக்கு கூறியுள்ளார். அது சரிதான். நாம் முடிவு காலத்தில் இருக்கிறோம். இப்போது சரியாக அப்படித்தான் இருக்கிறது.

165. இந்த வாரத்தின் மத்தியில்.... இப்போது. இங்கே இந்த எழுபது... இந்த வாரங்களிலே, ஒவ்வொரு வாரமும் ஏழு ஆண்டுகளைக் குறிக்கிறதென்றால், நமக்கு ஏற்கனவே அறுபத்தொன்பது வாரங்கள் முடிந்துவிட்டன, நமக்கு புறஜாதிகளின் காலம் உண்டாயிருந்து அதனுடைய முடிவுக் காலத்தில் நாம் இருந்துகொண்டிருக்கிறோம். பிறகு, யூதர்களுக்கு இன்னும் ஒரு வாரம் மீதமிருக்கிறது. அது சரிதானே? அது சரியாக ஏழு ஆண்டுகள் காலமாகும். இது ஏழு ஆண்டுகள் என்றால், இங்கே இது ஏழு வருடங்கள்தான். ஏனெனில் “உன் ஜனங்கள் மேல் எழுதுபது வாரங்கள் செல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிறது'' என்று கூறினார். ஆகவே, யூதர்களுக்கு இன்னும் ஏழு வாரங்கள் உள்ளன என்பதை நாம் அறிவோம். அது

வேண்டியதிருக்கிறது? அது எந்த நிமிடத்திலும் சம்பவிக்கக் கூடும், இனி வேறு ஒன்றும் இல்லை. நாம் முடிவு காலத்தில் இருக்கிறோம். ஓ, மகிமை! அந்த யூபிலியைப் பற்றிய விஷயத்தை நான் எடுத்துக்கொள்ள இயலுமோ என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அதில் ஒரு பகுதியையாவது உங்களுக்குக் கிடைக்கச் செய்ய நான் விரும்புகிறேன்.

160. கவனியுங்கள், இப்பொழுது எத்தனை பேர் அதைக் கண்டு கொண்டீர்களா? வேத வாக்கியங்களானது அந்த ஏழு வாரங்கள் நாற்பத்தியொன்பது என்பதை எங்கே நிரூபிக்கின்றன என்ப தைக் கண்டு கொண்டீர்களா? அந்த அறுபத்திரண்டு வாரங்கள் 434 ஆண்டுகளாகும் என்பதைக் கண்டு கொண்டீர்களா? அந்த அறுபத்தியொன்பது வாரங்கள் என்பது 483 ஆண்டுகளாகும் என்பதை கண்டு கொண்டீர்களா? அது என்ன? மேசியா சங்கரிக் கப்படுகிற காலம் வரையிலும் உள்ளது 483 ஆண்டுகளாகும். முடிவாக தேவன் கூறின இடத்திற்கு அவர்கள் போய்ச்சேர நாற்பத்தாண்டுகள் பிடித்தது.

161. புறஜாதிகளின் காலமானது எங்கே கடந்து வரும் என்றும், அது எவ்வாறு இருக்கும் என்றும், இந்தக் கடைசி காலம் வரையிலும் அது எவ்வாறு வரும் என்றும், வேதம் கூறியுள்ளதை இங்கே கவனியுங்கள். அது எவ்வாறு இருக்கும் என்று நாம் கூறுவதின்படியல்ல, வேதம் கூறுகிறபடியே அது இருக்கிறது. கடந்த நாற்பதாண்டுக் காலமாக யூதர்கள் தாங்கள் சுயதேசத்திற்கு திரும்பி வந்து, தேவன் அவர்கள் மத்தியில் அப்போது என்ன செய்தாரோ அதே காரியத்தை இப்போதும் அவர் செய்வதற்கு ஆயத்தமாக அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எந்த வழியாகப் போனார்களோ, அதே வழியாக திரும்பி வந்திருக்கிறார்கள். இஸ்ரவேலானது தனது சுயதேசத்திற்குள் வந்திருக்கிறாள்.

162. இந்தக் கடைசி வாரத்தை தேவன் எப்போது ஆரம்பிக்கப் போகிறார்? எப்பொழுது, அது இன்றைக்காகக் கூட இருக்க வியந்து கொண்டிருக்கிறேன். ஆனால் இன்னும் சில நிமிடங்களுக்குள் ஒரு விஷயத்தை இங்கே கொண்டு வரப்போகிறேன். நீங்கள் விசுவாசிப்பீர்களோ அல்லது விசுவாசிக்கமாட்டீர்களோ என்று எனக்குத் தெரியாது. ஆனால் எவ்வாறாயினும் நான் அதைக் கூறியே ஆகவேண்டும்.



70. சபையானது எடுக்கப்பட்ட பிறகு எழுபதாவது வாரமானது ஆரம்பிக்கிறது (இப்பொழுது இதைப் பெற்றுக்கொள்ளுங்கள்.) இப்பொழுது இதை புரிந்துகொண்டவர்கள் யாவரும் ''ஆமென்'' என்று சொல்லுங்கள். (சபையார் 'ஆமென்'' என்று கூறுகிறார்கள் - ஆசி) சபையானது எடுக்கப்பட்ட பிறகு.

71. வெளிப்படுத்தின விசேஷம் 6:1 முதல் 19:21 முடிய உள்ள விஷயங்கள் எழுபதாவது வாரத்தோடு சம்பந்தப்பட்டதாக இருக்கிறது. எனவே நாம் இங்கே நிறுத்தி, மேற்கொண்டு போகிறதற்கு முன்பாக இதை விளக்கியாக வேண்டும். நாம் இங்கே நிறுத்தி, ஏன் இந்த எழுபதாம் வாரம் உள்ளது என்பதை விளக்கியாக வேண்டும். ஏனெனில் நீங்கள் அவ்வாறு செய்யாவிடில் நீங்கள் முத்திரைகளை குறித்து காணத் தவறிவிடுவீர்கள். எக்காளங்களையும் தவற விட்டுவிடுவீர்கள். கோப கலசங்களைத் தவறவிட்டு வீடுவீர்கள். வாதைகளை தவற விட்டு விடுவீர்கள்; தவளைகளைப் போன்ற அசுத்த ஆவிகளையும் குறித்து காணத் தவறவிட்டுவிடுவீர்கள். அம்மூன்று ஆபத்துக்களைக் காணத் தவறிவிடுவீர்கள். சிவப்பான வலுசர்ப்பம், சூரியனில் உள்ள ஸ்திரீ ஆகியவைகளையும் காணத் தவறிவிடுவீர்கள். இந்த எழுபதாவது வாரத்திலேயே மேற்சொன்ன அனைத்துக் காரியங்களும் சம்பவிக்கிறவைகளாக இருக்கிறப்படியினால், அதை நீங்கள் படிக்கத் தவறினால், அவைகள் யாவையும் உங்களால் கண்டு கொள்ள முடியாமல் போய்விடும். அங்கேதான் அது சம்பவிக்கிறது.

72. தீர்க்கதரிசியாகிய தானியேல் பாபிலோனில் அறுபத்தெட்டு ஆண்டுகள் இருந்தான். நான் இதைக் குறித்து சம்மந்தப்பட்ட குறிப்புகளைத் தேடி அறுபத்தெட்டு ஆண்டுகள் என்பதைக் கண்டு கொண்டேன்; எனவே குறிப்புகளைத் தேடிப் பார்த்து கண்டு கொள்ள விரும்புகிறவர்கள், இப்பொழுது நேரத்தை மிச்சப்படுத்திக் கொள்ளலாம். ஏனெனில் நான் அதை செய்திருக்கிறேன். அறுபத்தெட்டு ஆண்டுகள், அவன் கி.மு.606-ல் சிறையிருப்பிற்குள் சென்றான். அந்த தரிசனம் அவனுக்கு வந்தபோது அது கி.மு.538 ஆக இருந்தது. 538 முதல் 606 முடிய 68 ஆண்டுகள் ஆகும். அந்த அஞ்ஞானிகள் மத்தியில் பாபிலோன் தேசத்தில் அவன் 68 ஆண்டுகள் இருந்திருந்தும் அவன் ஜெயத்தை உடையவனாகவே இருந்தான். ஆமென்! நம்மால் ஒரு மணிநேரம் கூட தங்கியிருக்க முடியாது.

73. ஆனால் அவனோ அவர்களின் மத்தியிலேயே அந்த மூன்று தோழர்களைத் தவிர வேறு யாருடைய துணையுமின்றி அங்கே இருந்துவிட்டான். அம்மூவரும் கூட அந்த இராஜ்யத்தின் வெவ்வேறு

பாகங்களில் இருந்து வந்தார்கள். ஆனால் தானியேலோ தேவனோடு தனித்திருந்து அறுபத்தெட்டு ஆண்டுகள் வெற்றியை தொடர்ந்து பெற்றவனாகக் காணப்பட்டான். அதைக் குறித்து எண்ணிப் பாருங்கள் (நான் பிரசங்கிக்க ஆரம்பிக்க விரும்பவில்லை; ஏனெனில் இது ஒரு போத கமான செய்தியாகும்) ஆனால் அவனோ பரிசுத்த ஆவியின் அபிஷேகம் இல்லாமல் அவனுக்காக பரிந்து பேசும்படி இயேசு கிறிஸ்துவின் இரத்தமுமில்லாதவனாக, அத்தேசத்தின் அஞ்ஞான பாரம்பரியங்களினிமித்தமாக இரகசியமாக செலுத்தும் படி நேர்ந்த இளங்காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தத்தை மட்டும் உடையவனாக இருக்கும் போதே அவன் தேவனுக்கு முன்பாக கறைபடாதவனாக, அறுபத்தெட்டு ஆண்டுகள் வெற்றியை நிலைநாட்டியவனாகக் காணப்பட்டான். அவர்கள் அங்கு பிடித்துச் செல்லப்பட்டார்கள். அவர்கள் அவ்வாறு சிறையிருப்பில் போவார்கள் என்று எரேமியா தீர்க்கதரிசி அவர்களைப் பற்றி தீர்க்கதரிசனமாக கூறியிருந்தான்.

74. இப்பொழுது தானியேல்... ஓ, என்னே! இன்று நாம் காண்கிறப்படி, அவன் அன்றைக்கு, நேரமானது நெருங்கிக் கொண்டிருக்கிறதைக் குறித்து காண ஆரம்பித்தான். புஸ்தகங்களை வாசித்ததின் வாயிலாக அவன் அறிந்துகொள்ள ஆரம்பித்ததாக அவன் கூறினான். தானியேலின் ஆளுகையில் முதலாமாண்டில்... ஆளுகையில்...

தானியேலாகிய நான் எருசலேமின் பாழ்க்கடிப்புகள் நிறைவேறித் தீர எழுபது வருஷம் செல்லுமென்று கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியோடே சொல்லிய வருஷங்களின் தொகையை புஸ்தகங்களால் அறிந்துகொண்டேன்.

தானி.9:2.

75. கி.மு. 606. ல் எரேமியா, தீர்க்கதரிசியானவன், அவர்க ளுடைய பாவங்களினிமித்தமும், அவபக்தியினிமித்தமும், எழுபது ஆண்டுகள் சிறையிருப்பில் போவார்கள் என்று முன்னுரைத்தான்.

76. அந்நாளில் அங்கே இன்னொரு தீர்க்கதரிசியும் இருந்தான் என்பது உங்களுக்கு நினைவிலிருக்கும். இந்நேரத்தில் அவனது பெயரை குறிப்பிட என்னால் இயலவில்லை. நான் சற்று திரும்பி அதைப் பற்றி தேடிப் பார்த்தால், இன்னும் சில நிமிடங்களுக்குள் உங்களுக்கு அவனது பெயர் இன்னதென்று குறிப்பிட்டுவிட முடியும். ஆனால் அவன் வந்து, ''எரேமியா, நீ தவறாயிருக்கிறாய், தேவன் இஸ்ரவேலை சில



157. இப்பொழுது, தேவன், எந்த நேரத்தில் யூதர்களோடு மீண்டும் இடைப்பட அனுமதிக்கப் போகிறார் என்பதை பற்றி என்னால் உங்களுக்கு கூற முடியாது. எனக்குத் தெரியாது. எவருக்கும் தெரியாது. ஆனால் செவிகொடுத்துக் கேளுங்கள், இஸ்ரவேல் ஏற்கெனவே தனது சுயதேசத்தில் இருக்கிறதென்றால், ஏற்கெனவே அது.... அங்கே பாறைகளெல்லாம் பொறுக்கியெடுக்கப்பட்டு, நீர்ப் பாசனத்திற்கான தண்ணீர்களெல்லாம், அதாவது தேவன் அவர்களுக்கு வாக்குரைத்த படியெல்லாம், கிணறுகளையும், பெரிய திறந்த ஊற்றுகளையும் அவர்கள் கண்டு கொண்டு விட்டனர். நீங்கள் அது போன்ற மிக அழகான பிரதேசத்தை வேறு எங்கும் கண்டிருக்கவே முடியாது. அவர்கள் ஒரு நகரத்தை கட்டியெழுப்பியிருக்கிறார்கள். அவர்களுக்கு நீர்பாசன வசதியுள்ளது. உலகிலேயே மிகச் சிறந்த நிலத்தை அவர்கள் உடையவர்களாயிருக்கின்றனர். உலகையே விலைக்கு வாங்கக் கூடிய அளவுக்கு விலை மதிப்புயர்ந்த இரசாயனங்கள் அவர்களிடம் உள்ள சவக்கடலில் உள்ளது என்று நாம் காண்கிறோம்.

158. அவர்களுடையவை யாவும் அவர்களுடைய கரங்களில் கிட்டியிருக்கிறது. அதை அவர்கள் எவ்வாறு செய்தார்கள்? ஹிட்லரின் இருதயம் கடினப்படுத்தப்பட்டது; முஸோலினியின் இருதயம் கடினப்படுத்தப்பட்டது. பார்வோனின் இருதயம் கடினப்படுத்தப்பட்டு, அதனால் அவர்களை அது அவர்களுடைய தேசத்திற்கு எவ்வாறு துரத்தியதோ, அதைப் போலவே நடந்துள்ளது. கடந்த நாற்பதாண்டுக் காலமாக அவர்கள் அந்த தேசத்தினுள் வந்துகொண்டேயிருக்கிறார்கள். இப்பொழுது அவர்கள் அங்கேயிருந்து கொண்டு காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

159. புறஜாதி சபையானது லவோதிக்கேயா சபையின் காலத்தின் முடிவிலே வந்துள்ளது. யூதர்கள் தங்களுடைய சுயதேசத்திற்கு ஏற்கனவே வந்துவிட்டார்களென்றால், அப்பொழுது, ஏற்கனவே புறஜாதிகளின் விசுவாச துரோகமானது வந்துவிட்டது என்று அர்த்தம். நமக்கு உடைந்து போயிருக்கிற தேசமும் நமக்கு உண்டாயிருக்கிறது, தலைக்கு மேலே அணுகுண்டுகள் தொங்கிக்கொண்டிருக்கின்றன; வெதுவெதுப்பாயுள்ள சபையும் நமக்கு உண்டாயிருக்கிறது, தங்களை வேறு பிரித்துக்கொண்டுள்ள சபையும் நமக்கு உண்டாயிருக்கிறது, தலைக்கல்லாகிய அவர் வரும்போது அவரோடு சேர்ந்து கொள்ள தகுதியடையும்படி செய்ய, இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைப் போன்றே உள்ளதான ஒரு ஊழியமும் நமக்கு உண்டாயிருக்கிறது, இவ்வளவுக்குப் பின்னும் இன்னும் வேறு என்ன சம்பவிக்க

ஜீவிக்கிறாரெனில், அவர் தீர்க்கதரிசிக்குரிய அடையாளத்தை செய்கிறதை நாங்கள் காணட்டும். அப்போது நாங்கள் அவரை விசுவாசிப்போம்'' என்றார்களாம். யூதர்கள் எப்பொழுதும் அதை விசுவாசிக்கிறார்கள். அவர்கள் மேசியாவை ஒரு தீர்க்கதரிசி என்று அறிந்திருக்கிறார்கள்.

153. அந்நாளிலே, நான் சகோதரன் ஆர்கன்ப்ரைட்டின் இடத்தில் அங்கே அந்த யூதர்களோடு நின்றிருந்தபொழுது, "எங்களிடத்திற்கு எங்கள் ஜனங்களண்டையிலே வாருங்கள்'' என்றார்கள்.

154. நான், 'நிச்சயமாக, நான் வருவதற்கு மிக்க மகிழச்சியடை வேன்'' என்றேன். மிக்க அவசரமாக ஒரு முடிவை நான் எடுத்துவிட்டேன். எகிப்திலுள்ள கெய்ரோவுக்கு நான் புறப்பட்டேன். (ஒலிநாடாவில் முதல் பக்கம் முற்றுப் பெறாமல் முடிகிறது - ஆசி).

155 ....ஆயிரக்கணக்கான அத்தலைவர்கள். ''அவர்களை எங்காவது ஒரு சமவெளிப் பகுதியில் கொண்டு வாருங்கள். அவர் இன்னமும் ஒரு தீர்க்கதரிசியாக இருக்கிறாரா இல்லையா என்பதை நாம் கண்டு பிடித்துவிடுவோம். (ஆமென்!) நல்லது, அவர் என்ன செய்கிறார் என்பதை காண்போமாக'' என்றார்கள். ஓ, அது அவர்களுக்கு மிக அருகாமையில் இருந்தது. அதைத் தான் அவர்கள் விரும்பினார்கள். அவர்கள் மாத்திரம் அதைக் கண்டுக் கொள்ளுவார்களானால், அதை விசுவாசிப்பார்கள்.

156. ஆகவே நான் என்ன செய்தேன்? நான் கெய்ரோவில் இறங்கி, அங்கிருந்து அங்கே போவதற்காக புறப்பட்டேன். அதற்கான டிக்கெட் ஏற்கெனவே என்னிடம் இருந்தது. பிரயாணிகளை விமானத்தில் ஏறிக்கொள்ளும்படியான அழைப்பு கொடுப்பது முடிவதற்கு இன்னும் இருபது நிமிடங்கள் தான் மீதமிருந்தன. அப்பொழுது, ஏதோ ஒன்று என்னிடம், "இப்பொழுது அல்ல, புறஜாதிகளின் அக்கிரமத்தின் பாத்திரம் இன்னமும் நிறைவாகவில்லை. எமோரியரின் அக்கிரமம் இன்னும் நிறைவாகவில்லை. அதைவிட்டு நீங்கியிரு'' என்று கூறியது. நானாக அதைக் கற்பனை செய்தேனோ என்று எண்ணினேன். ஆகவே நான் விமானங்கள் நிறுத்தி வைக்கப் படும் ஷெட்டின் பின்னால் போய் நின்று கொண்டு ஜெபித்தேன். "இப்பொழுது அங்கே போக வேண்டாம், அதை விட்டு நீங்கியிரு" என்று என்னிடம் கூறப்பட்டது. பிறகு நான் வேறு இடத்திற்குப் போவதற்காக டிக்கெட் எடுத்துக்கொண்டு அங்கே போகாமல், வேறே இடத்திற்கு நான் புறப்பட்டுப் போய்விட்டேன். ஏனெனில் அதற்கான வேளையானது இன்னும் வரவில்லை .



ஆண்டுகளுக்கு மாத்திரம், இரண்டு ஆண்டுகளுக்கு மட்டும் அங்கே வைத்திருக்கப் போகிறார்'' என்று கூறினான்.

77. எரேமியா அதற்குப் பதிலாக, ''அப்படியே ஆகக்கடவது ஆமென்! ஆனால் ஒரு நிமிடம் பொறு. தீர்க்கதரிசிகள் என்ற முறையில் நாம் இருவர் ஒருவரோடொருவர் சரிபார்த்துக் கொள்வோம். நமக்கு முன்னால் தீர்க்கதரிசனம் உரைத்தவர்கள் சிலர் இருந்திருக்கிறார்கள், அவர்கள் தவறான காரியங்களை தீர்க்கதரிசனமாக உரைத்தனர். அவர்கள் அவ்வாறு தவறானவைகளை உரைத்ததற்காக தேவன் அவர்களை தண்டித்திருக்கிறார். ஆகவே நாம் நிச்சயமுடைய வர்களாயிருப்போம். ஆனால் தேவனாகிய கர்த்தர் என்னிடம் எழுபது ஆண்டுகள் செல்லும் என்று கூறியிருக்கிறார்'' என்று கூறினான். தேவன் அந்தக் கள்ளத்தீர்க்கதரிசியை அடித்து, அதே ஆண்டில் அவனது ஜீவனை எடுத்துக்கொண்டார். ஏனெனில் தேவன் இந்த உண்மையான தீர்க்கதரிசியிடம் எழுபது ஆண்டுகள் செல்லும் என்று கூறியிருந்தார்.

78. நீங்கள் கவனிக்கும்படியாக நான் விரும்புகிறதென்ன வென்றால், எவ்வாறு தானியேல் ஒரு அந்நிய தேசத்தவனாக இருந்தபோதிலும், தன் சபையை விட்டு புறம்பாக்கப்பட்டு, ஒரு சபை ஆராதனை கூட அவனுக்கில்லாதிருந்த நிலையிலும், அவன் தனக்குத் தானே பாடிக் கொண்டதைக் தவிர துதிப் பாடல்கள் ஒன்றும் இல்லாத நிலையிலும், இவையாவற்றின் மத்தியிலும் கூட, அத்தீர்க்கதரிசி என்ன கூறினானோ அவைகளை விடாமல் பற்றிக் கொண்டிருந்தானே, அதைத்தான். ஆமென்! ஆமென்!

79. போவதற்கு அவனுக்கு எந்த சபையும் இல்லை, யாருடனும் ஐக்கியங்கொள்ள ஒருவரும் இல்லாத நிலை. யாவரும் அந்நிய தேவனுடைய கோவில்களுக்கு சென்றார்கள், யாவரும் தங்களுடைய விக்கிரகங்களையே வணங்கி வந்த நிலை, கிறிஸ்தவ பாடல்கள் ஒன்றும் இல்லாத நிலை, அவன் விசுவாசித்த அநேக காரியங்களை விசுவாசிக்க வேறு யாரும் இல்லை. அப்படிப்பட்ட நிலையில் அவன் தனது பன்னிரண்டு, அல்லது பதினான்கு வயதில் அங்கு சிறைபிடிக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டதிலிருந்து அறுபத்தெட்டு ஆண்டுகள் அவன் தேவனுக்கு உண்மையுள்ளவனாயிருந்தான். எரேமியா தீர்க்கதரிசி கூறியவற்றிலிருந்து, அந்நாட்கள் ஏறத்தாழ நிறைவேறி விட்டன என்பதை அறிந்து கொண்டான். ஆகவே இக்காரியம் எந்தவொரு உண்மையான தீர்க்கதரிசியின் இருதயத்தையும் எப்படியாய் எச்சரிக்கை செய்திடும் என்றும்

அதினால் நாம் பின்னால் திரும்பிப் பார்த்து, இந்த உண்மையான தீர்க்கதரிசி என்ன கூறினான் என்பதைக் கண்டு, நாம் கடைசி காலத்தில் இருக்கிறோம் என்பதை அறிந்துகொள்ளச் செய்திடும் என்பதைப் பாருங்கள்.

80. அவன் கூறினான்: "எனது சகோதரனாகிய எரேமியாவின் புஸ்தகங்களின் வாயிலாக, இஸ்ரவேல் மக்கள் இத்தேசத்தில் எழுபது ஆண்டுகள் தங்குவார்கள் என்று தீர்க்கதரிசனமாக உரைத்தான் என்பதையும், அவன் முன்னுரைத்த நாட்கள் நிறைவேறிவிட்டன என்பதையும் நான் அறிந்து கொண்டேன்'' என்று அவன் தன்னை ஆயத்தம் பண்ணிக் கொண்டவனாய், உபவாசமெடுத்து, தன்னைதானே பரிசுத்தப்படுத்தினவனாய், தன் தலையில் சாம்பலை அள்ளிப்போட்டுக்கொண்டு, இரட்டிலும், சாம்பலிலும் உட்கார்ந்து, உபவாசத்தினாலும் ஜெபத்தினாலும் அவர்கள் வாழ்ந்த நாளானது என்னவென்பதை அறிந்து கொள்ள பார்த்தான்.

81. கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய தானியேல் எரேமியாவின் புஸ்தகங்களை ஆராய்ந்து அதினால், இஸ்ரவேல் மக்கள் பாபிலோனை விட்டு உயிரோடு வெளியே வந்து, தங்கள் சொந்த தேசத்திற்குத் திருப்பிப் போவதற்கான வேளை நெருங்கி விட்டது என்பதை அறிந்து கொண்டபோது, அது அவனை இரட்டிலும் சாம்பலிலும் உட்காரத்தக்கதாக செய்யக் கூடுமானால், ஜீவனுள்ள தேவனுடைய சபையானது, காலமானது மங்கி கொண்டேயிருக்கிறதும் இனிகாலம் செல்லாது என்றும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையும் ஆயிரமாண்டு அரசாட்சியும் வருவதற்கு ஆயத்தமாகவுள்ளன என்பதை அறிந்து கொள்ளும் படியாக இருக்கையில், அந்நிலை எவ்வளவு அதிகமாக அதற்கு செய்வதாக இருக்கும்? எவ்வாறு நாம் நேரத்தை சூதாட்டத்திலும் நீச்சல் குளங்களிலும் ஞாயிற்றுக் கிழமைகளில் வீணாக செலவு பண்ணவும், கர்த்தருக்கென்று நேரமில்லாத வர்களாகவும் இருக்கமுடியும்? உங்கள் மேய்ப்பர் நீங்கள் விரும்பாத ஏதாவதொரு விஷயத்தைக் குறித்து பேசினால் உடனே எழும்பி வெளியேறி விடுகிறீர்கள். சபை ஆராதனையானது நீண்ட நேரம் நடக்குமானால் நீங்கள் அதிருப்தியடைந்து விடுகிறீர்கள். அது ஏன்? நமது நிலைமையை நாம் நோக்கிப் பார்க்கக்கடவோம். நாம் என்ன செய்கிறோம் என்பதை பாருங்கள். அத்தீர்க்கதரிசியின் ஜீவியத்தோடு நமது ஜீவியங்களை நாம் ஒப்பிட்டுப் பார்ப்போம். எந்த சபை ஆராதனைக்கும் போகவே முடியாத நிலையில் ஒரு இராஜ்யத்தில் அவன் இருந்தான்,



தரையிறங்கியிருக்கையில் நடந்ததைப் பற்றி மார்க்க சம்மந்தமானதொரு பத்திரிக்கையில் நான் வாசித்தேன். அவர்களெல்லாம் எங்கெங்கோ இருந்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. அவர்கள் சிதறிப் போயிருந்தார்கள். அவர்கள் உண்மையான யூதர்கள். அவர்களுக்கு ஒரு தருணம் கிடைக்கவில்லை. இப்பொழுது சகோதரனே, அங்கே தான் அந்த 1,44,000 பேர்கள் இருக்கிறார்கள். நாம் வெளிப் படுத்தின விசேஷம் 11-ம் அதிகாரத்தை எடுத்துக்கொள்ளும் போது, அதைக் குறித்து நீங்கள் காண்பீர்கள். காத் கோத்திரத்தில் பன்னீராயிரம், ஆசேர் கோத்திரத்தில் பன்னீராயிரம், ரூபன் கோத்திரத்தில் பன்னீராயிரம் பேர்கள்...'' என்று அவர் கூறினார். அவர்கள் யாவரும் எங்கே நின்றுகொண்டிருந்தார்கள்? சீனாய் மலையில் மேல்தான். யூதர்கள் தங்கள் சுயதேசத்திற்கு திரும்பி விட்டார்கள். அவர்கள் அங்கே இருந்தனர், வால் ஸ்ட்ரீட்டில் உள்ள நேர்மையற்ற அந்த யூதர் கூட்டமல்ல அவர்கள்; இல்லை ஐயா, அது உண்மையான யூதர்களாகும்.

151. அந்தப் பத்திரிக்கையிலே, அங்கேயுள்ள யூதர்களைக் கொண்டு வருவதற்காக விமானங்கள் வந்திறங்கிய போது, நடந்ததைப் பற்றி கட்டுரை வெளியாகியிருந்தது. அவர்கள் விமானத்தில் அருகில் கூட போகவில்லை. அவர்களுடைய வயது முதிர்ந்த யூத ரபீ அங்கே நின்று கொண்டு, ''நமது தீர்க்கதரிசி, நாம் நமது சுயதேசத்திற்கு போகப் போகையில், நாம் கழுகுகளின் செட்டைகளின் மேல் சுமந்து சென்று கொண்டு போகப்படுவோம் என்று கூறியதை நினைவில் கொள்ளுங்கள்'' என்று கூறினார். அவர்கள் இன்னமும் மரக்கலப்பையால் தான் உழுது கொண்டிருந்தார்களாம்.

தேசங்கள் உடைகின்றன, இஸ்ரவேல் விழித்தெழும்புகிறது. தீர்க்கதரிசிகள் முன்னுரைத்தவை யாவும்

அவர்களுக்கென்று மீதமுள்ள எழுபதாவது வாரத்தைப் பற்றி பார்க்க நாம் நெருங்கிக்கொண்டிருக்கிறோம்.

152. சகோதரன் பெத்ரூஸ் அவர்கள் அவர்களுக்கு அச்சிறிய புதிய ஏற்பாட்டுப் புஸ்தகங்களை அனுப்புகையில் நான் அங்கே நின்று கொண்டிருந்ததை எண்ணிப் பார்க்கிறேன். அவர்கள் அதைப் படித்துவிட்டு, "இவர்தான் மேசியா என்றால், அவர் செத்தவராக அல்ல, ஜீவிக்கிற வராக இருக்கிறாரெனில், அவர் தீர்க்கதரிசிக்குரிய அடையாளத்தை செய்து காண்பிக்கட்டும், அதை நாங்கள் காண் போமாக'' என்றார்களாம். 'அவர் உயிரோடெழுந்தாரென்றால், தமது சபையில்

யாவும் நிறைவேறியதை நாம் கண்டிருக்கிறோம். நாம் அந்தச் செய்தியைப் பெற்றவர்களாக இருக்கிறோமென்றால் கிறிஸ்து புறக்கணிக்கப் பட்டுள்ளதையும் நாம் காண்கிறோம். இந்த மதஸ்தாபனங்களுள் ஒன்றினுக்காவது சார்ந்தவராக அவர் இருக்கவில்லை. எனவே நீங்கள் அதனுள் பிரவேசிக்க முடியாது. எனவே அவர் அவைகளைவிட்டு வெளியே தூக்கியெறியப் பட்டுள்ளார். அதை நீங்கள் கண்டீர்களா? அவர்கள் மத்தியில் கிறிஸ்துவால் கிரியை செய்ய இயலாது.

"நீங்கள் யார்? "நான் ஒரு கிறிஸ்தவன்'' என்று பதில் வருகிறது. ''நீங்கள் எந்த ஸ்தாபனத்தை சார்ந்தவர்?" “நான் எதையும் சேர்ந்தவனல்ல'' என்று பதிலளிக்கிறோம்.

148. 'அப்படியாயின் நாங்கள் உன்னை உபயோகப்படுத்திக் கொள்ள முடியாது'' என்று கூறுகின்றனர். பார்த்தீர்களா? கிறிஸ்து புறக்கணிக்கப்பட்டுள்ளார். அவர் புறக்கணிக்கப் பட்டிருக்கிறார் என்பதை பாருங்கள். எலியாவும் அதே விதமாக புறக்கணிக்கப்பட்டான், யோவானும் அவ்வாறே புறக்கணிக் கப்பட்டான். ஆனால் என்ன? அதனால் அவர்கள் எந்த விதத்திலும் பாதிக்கப்பட்டனரா? அது செய்தியை பாதித்ததா? “ஓ வணங்காக் கழுத்துள்ளவர்களே' என்று அவர்கள் கூறினர். அதை அவர்கள் மேல் செய்தியாளர்கள் ஊற்றினர். அவர்கள் தங்கள் ஊழியத்தில் முழுப் பெலத்தோடு ஈடுபட்டனர். அவர்கள் தொடர்ந்து அதில் முன்னேறிச் சென்றனர். யார் என்ன சொன்னாலும், அதை பொருட்படுத்தாது, முடிவு வரையிலும் தேவனுடைய செய்தியானது தொடர்ந்து முன்னேறிச் சென்று கொண்டேயிருக்கும். அப்போது நிர்ணயிக்கப்பட்ட அழிவு சொரியப்படும். நாம் இறுதி கட்டத்தில் இருக்கிறோம்.

149. இப்பொழுது, முதலாம் உலகப் போரின் காலத்திற்குப் பிறகு, நாற்பதாண்டுக் காலமாக யூதர்கள் தங்களுடைய சுயதேசத்திற்கு திரும்பி வந்து கொண்டேயிருக்கின்றனர். இஸ்ரவேலானது தன் சுய தேசத்திலிருக்காத வரையிலும், அவர்களோடு தேவன் இடைபடுவதேயில்லை.

150. மற்ற தேசங்களிலிருந்த அந்த யூதர்கள் தங்களுடைய நாட்டிற்கு திரும்பி போய்க் கொண்டிருக்கையில் அதைக் குறித்து 'லுக்' என்ற பத்திரிக்கையில் ஒரு கட்டுரை வெளியாகியிருந்தது. உங்களுக்கு நினைவிருக்கும். யூதர்கள் ஈரானில் இருக்கையில், அவர்களை ஏற்றிக்கொண்டு வருவதற்காக விமானங்கள் அங்கே



எவரிடத்திற்கும் அவன் போகமுடியாத நிலை; அவனது நகரம் உடைத்து நொறுக்கப்பட்டு சுட்டெரிக்கப்பட்ட நிலையில் இருந்தது. அவனது ஜனங்கள் சிறைபிடிக்கப்பட்டிருந்தனர். அறுபத்தெட்டு ஆண்டுகள் கடந்து விட்டன. எழுபது ஆண்டுகள் ஆவதற்கு இன்னும் இரண்டு ஆண்டுகளே மீதமாயிருந்தது.

82. ஆகவே அவன் அந்த புஸ்தகத்தில் வாசிக்க ஆரம்பித்து, நேரமானது நிறைவேறுதற்கு நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதை அவன் கண்டபோது, அவன் அதைக் குறித்து கண்டு பிடிக்க தேவனிடத்தில் ஜெபத்தின் மூலம் போனான். என்னே ஒரு நேரம் அது! தேசங்கள் உடைந்து கொண்டிருக்கவும், சமுத்திரம் முழக்கமாயிருந்து கொண்டிருக்கவும், மனுஷருடைய இருதயங்கள் பயத்தினாலும், காலத்தைப் பற்றி தடுமாற்றத்தினாலும் இவைகள் யாவற்றினிமித்தமும், சோர்வடைந்து போயிருக் கவுமான இப்படிப்பட்ட வேளையில், சுவற்றில் தோன்றிய கையுறுப்பினிமித்தமும், இனப்பாகுபாட்டினால் ஒற்றுமைக் குலைவு ஏற்படுவதுமான நிலையிலும், இவ்வுலகில் நடை பெற்றுக் கொண்டிருக்கும் எல்லா தீங்குகளும் உள்ள நிலையில், வீண் சச்சரவுகள், சண்டைகள், கலகங்கள், ஆயுதங்கள் தலைக்கு மேலே தொங்கிக்கொண்டிருத்தல் ஆகிய இவ்விதமான மோசமான நிலையில் நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? இங்கே உள்ள சிறிய அளவுள்ள கியூபா தேசமானது பத்து நிமிடங்களுக்குள்ளாக உலகையே அழித்து விடுமாம். தேவனையும் அவருடைய வல்லமையையும் அறியாத அந்த அவபக்தியான மனிதர் ஒருவரோடொருவர் சச்சரவிட்டு கொண் டிருக்கின்றனர். சபையிலோ பரிசுத்த ஆவியானவர் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் மத்தியில் அசைவாடிக் கொண்டிருந்து, இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும், தாம் ஜீவனோடிருக்கிறவர் என்பதைக் காண்பித்துக் கொண்டிருக்கிறார்; அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் என்பதைக் காண்பித்துக் கொண்டிருக்கிறார். காரியங்கள் இவ்வாறிருக்கையில், நாம் எவ்வாறு அசதியாயிருக்க முடியும்? அவைகளைக் கண்டும் காணாதவர்கள் போல் எவ்வாறிருக்க முடியும்? நாம் சோதித்துக் கொண்டு, அம்மகத்தான வேளை நெருங்குவதாக விழிப்பாய் கவனித்துக்கொண்டேயிருக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

83. இப்பொழுது அவன் எரேமியாவின் புஸ்தகத்தில் 25 ம் அதிகாரத்திலிருந்துதான் வாசித்தான். நாம் இப்பொழுது எரேமியா 25ம் அதிகாரத்திற்கு, அங்கே அவன் என்ன கூறுகிறான் என்பதைப்

பார்ப்போம். சரியாக நாம் 8ம் வசனத்தில் துவங்குவோமாக. ஏனெனில் அது... அதை சரியாக நீங்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன். வாசிப்பதற்காக எனது குறிப்பில் இங்கே நான் 11ம் வசனத்தையே குறித்து வைத்துள்ளேன். ஆனால் நாமோ 8ம் வசனத்திலிருந்தே வாசிக்கத் துவங்குவோமாக.

ஆகவே சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்... (நான் அவ்விதமாகக் கூறுவதை விரும்புகிறேன். ஒரு தீர்க்கதரிசியானவன் "தேவனாகிய கர்த்தர் உரைப்பது என்னவென்றால்'' என்ற வார்த்தையோடு எழுந்து நின்று கூறுவதை நான் கேட்க முடிகிறதென்றால், சகோதரனே, அதுதான் சரியான காரியமாகும். என்னைப் பொறுத்த மட்டில் அதுவே தீர்வாயிருக் கிறது. அதுவே எல்லாமாயிருக்கிறது).

சேனைகளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால் (ஆங்கில வேதாகமத்தில் 8ம் வசனத்தில் இந்த வார்த்தையோடு தான் வசனம் துவங்குகிறது. ஆனால் தமிழ் வேதாகமத்திலோ 9ம் வசனத்தில் தான் இவ்வசனம் இருக்கிறது தமிழாக்கியோன்) நீங்கள் என் வார்த்தைகளைக் கேளாமற்போனபடியினால்.

இதோ நான் வடக்கேயிருக்கிற சகல வம்சங்களையும் என் ஊழியக்காரனாகிய நேபுகாத்நேச்சார் என்கிற பாபிலோன் ராஜாவையும் அழைத்தனுப்பி, அவர்களை இந்தத் தேசத்துக்கு விரோதமாகவும், இதன் குடிகளுக்கு விரோதமாகவும், சுற்றிலுமிருக்கிற இந்த எல்லா ஜாதிகளுக்கும் விரோதமாகவும் வரப் பண்ணி, அவைகளைச் சங்காரத் துக்கு ஒப்புக் கொடுத்து, அவைகளைப் பாழாகவும் இகழ்ச்சிக் குறியாகிய ஈசல் போடுதலாகவும் நித்திய வனாந்தரங்களாகவும் செய்வேன்... (தேவன் தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களிடம் தான் இங்கே பேசிக் கொண்டிருக்கிறார். அவர்கள் தேவனற்றவர்களல்ல, சபை அங்கத்தினர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்).

மகிழ்ச்சியின் சத்தத்தையும் சந்தோஷத்தின் சத்தத்தையும் (இன்றைக்கு நமக்கு ராக் அண்ட் ரோல், ரிக்கி, எல்விஸ் ஆகிய வைகள் இருப்பதைப் போல ஓ...) மணவாளனின் சத்தத்தையும் மணவாட்டியின் சத்தத்தையும், ஏந்திரத்தின் சத்தத்தையும் விளக்கின் வெளிச்சத்தையும், அவர்களிலிருந்து நீங்கப் பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.



உண்மையான அப்போஸ்தல விசுவாசத்திற்கு, மீதியாயிருக்கிற பெந்தெகொஸ்தே மக்களை திருப்புவான்.

146. உண்மையான அப்போஸ்தல விசுவாசத்தைக் குறித்து, நீங்கள் அப்போஸ்தல நடபடிகள் புஸ்தகத்தில் காணலாம். அப்புஸ்தகத்திலும் ஒருவனும், ஒருக்காலும் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமம் என்று சொல்லி ஞானஸ்நானம் பண்ணப்படவேயில்லை என்பதை நீங்கள் காணலாம். அங்கே ஒருவரும் தெளிப்பு செய்யப்படவில்லை என்பதைக் காணலாம். பெந்தெகொஸ்தே என்ற நாமகரணத்தைக்கொண்டு இன்றைக்கு நடைபெறும் ஒருவித காரியமும் அன்றைக்கு அப்போது நடக்கவேயில்லை. அவர்களிடத்தில் உண்மையான பிரத்தியட் சமாகுதலும், அவர்கள் மத்தியிலே மாசுமருவின்றி இருந்த தேவ குமாரன் அவர்களோடு கிரியை செய்தலாகிய தேவ ஆவியானவரின் காரியம் உண்டாயிருந்தது. இந்தச் செய்தியோடு வரவேண்டியவனாகிய இந்த நபர் அல்லது வரப்போகிற இந்த அம்மனிதர், எலியாவைப் போல் இருக்கவேண்டும். எலியா மூன்று தடவைகளில் வரவேண்டியிருக்கிறது. அந்த நபர் யோவான் ஸ்நானன் தான் என்று நீங்கள் கூறலாம். மல்கியா 3ம் அதிகாரத்தின்படியேயான செய்தியாளன் - தூதன் யோவான் ஸ்நானன் என்று இயேசு கூறினார் என்பதை நீங்கள் கவனிக்கலாம். மல்கியா 4ம் அதிகாரத்தின்படியான தூதன் அவன் அல்ல. "இதோ என் தூதனை எனக்கு முன்பாக அனுப்பு கிறேன்...' (மல் 3:1) மத்தேயு 11ம் அதிகாரத்தில் 6ம் வசனம் தொடங்கி தொடர்ந்து நீங்கள் பார்த்துக் கொண்டேயிருப்பீர்களென்றால், அங்கே அதைக் குறித்து நீங்கள் காணலாம்.

147. இப்பொழுது, இந்தக் கடைசி நாட்களிலே, ஜனங்களின் மத்தியிலே எலியாவின் ஆவியானது வரவேண்டிய தாயிருக்கிறது. முன்பு அவர்கள் செய்ததைப் போல வே அவனும் கிரியை செய்யவேண்டும். அவனுடைய சுபாவமானது அதே விதமாகத்தான் இருக்கவேண்டும். அதே நபரைப் போலவே இத்தூதனும் அதே தன்மையைக் கொண்டிருப்பான். சபையின் சுபாவத்தைப் போலவே அந்தச் செய்தியானது புறப்பட்டுப் போகும்... முயற்சித்துக்கொண்டு.... அவன் ஜனங்களால் வெறுக்கப்படுவான். கீழ்த்தரமான, கெட்ட ஸ்திரீகளை அவன் வெறுப்பவனாயிருப்பான். வனாந்திரத்தை நேசிப்பவனாகவும், எலியாவைப் போல் யோவானைப் போல், அவன் மனோ நிலையில் மாறுபட்ட பாங்கை உடையவனாகவும், எப்பொழுதும் மனநிலை குலைந்தவனாகவும் இருப்பான், இவை

ஒவ்வொன்றும், கூறப்பட்ட வண்ணமாக அவ்வாறே சம்பவித்தது. அதற்கடுத்த காலத்திற்கு நாம் வருகையில், சிறிதளவு ஒளிவர ஆரம்பிக் கிறது. ''உனக்கு சிறிய பெலன் இருக்கிறது, நீ ஒரு நாமத்தைக் கொண்டு உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறாய், ஆனால் நீ செத்தவனாயிருக்கிறாய். நான் வந்து விளக்குத்தண்டை உன்னிடத்தினின்று அகற்றாதபடிக்கு உனக்கிருக்கிறவைகளை நீ ஸ்திரப்படுத்து'' என்று கூறப்பட்டது.

144. அதன்பிறகு வெஸ்லி தன்னுடைய காலத்தோடு அங்கே வருகிறார். வெஸ்லியின் காலமானது சரியாக எங்கே துவங்கிற்று என்பதை நாம் கண்டோம். அது எவ்வாறு அழைக்கப்பட்டது? அன்பைக் குறித்து நாம் கேள்விப்பட்டதிலேயே அதைப் பெற்றிருந்ததாக கருதப்பட்ட அக்காலம் பிலதெல்பியா சபைக் காலமாகும். அதுதான் ஜான் வெஸ்லியின் காலத்தில் தான் அது உண்டாயிருந்தது. அவருடைய காலம் முடிவடைந்த பிறகு, பெந்தெகொஸ்தேயின் காலம் வந்தது, அது வெதுவெதுப்பான காலம். பின்பு, நாம் அங்கே திரும்பிச் சென்று பெந்தெ கொஸ்தேயின் காலத்தின் இறுதிக் கட்டத்தில்தான், எவ்வித மான செய்தியானது வரும் என்பதைக் குறித்து கண்டோம். ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். அந்தக் காலத்தின் இறுதிக் கட்டத்தில் தான், அந்தந்த சபைக் காலத் தூதனாவன் வந்தான் என்பதை. பரிசுத்த பவுல் இறுதிக்கட்டத்தில் தான் வந்தான். ஏனையோரும் அவ்வண்ணமாகவே, அவர்வர்களுடைய சபைக் காலத்தின் இறுதிக்கட்டத்தில் தான் வந்தனர். பரிசுத்த ஐரேனியஸும் அப்படியே. ஏனையோரும் அப்படியே. ஒரு சபைக்காலத்தின் தூதனாவன் தன் காலத்தின் இறுதிக்கட்டத்தில் வந்தபோது, அச்செய்தியோடு அக்காலம் அடுத்த காலத்திற்குள்ளாக தாண்டிச் சென்று விட்டது, அவன் அதை எடுத்துக் கொண்டு, அடுத்த காலத்திற்குள்ளாகத்தான் சென்றான். பார்த்தீர்களா?

145. இப்பொழுது, இக்காலத்தில் நாம் காண்பது என்னவெனில்... நாம் இங்கே கொண்டிருக்கிறபடியான நட்சத்திரங் கள் அங்கே வரையப்பட்டுள்ளன. நமக்கு ஒரு நட்சத்திர செய்தியாளன் உண்டாயிருக்கிறான். நமக்கு ஒரு நபர் உண்டு, ஒரு செய்தியுண்டு, அது காலத்திற்கு என புறப்பட்டுச் செல்லு கிறது. அதை ஒரு கூட்டம்மக்கள் நிராகரிப்பார்கள், ஒரு கூட்டம் மக்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள். இந்தக் காலத்திற்குரிய தூதன் எலியாவின் வல்லமையோடு வருவான். அவ்வாறு தான் அது இருக்கும். அவன் வந்து பிள்ளைகளுடைய இருதயங்களை பிதாக்களின் விசுவாசத்திற்கு திருப்புவான்,



இந்த தேசமெல்லாம் வனாந்தரமும் பாழுமாகும்..... (அத் தீர்க்கதரிசி கதறுவதைக் கேளுங்கள். இம்மகத்தான தேவ ஊழியக்காரனைப் போலவே பாவனை செய்வதற்கில்லை. நான் தீர்க்கதரிசனமாக உரைப்பது என்னவென்றால், இந்த முழுத் தேசமும் வனாந்தரமும் பாழுமாகும். தேவன் இத்தேசத்தை அதன் பாவங்களுக்காக தண்டிப்பார். அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களும் ஆபிரகாமின் வித்துமாயிருந்த இஸ்ரவேலரோடு தேவன் உடன்படிக்கை செய்து அவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்து கொடுத்திருந்தார். அவர்களையே தேவன் தப்பவிடவில்லை. அவர்கள் தேவ பக்தியுள்ளவர்களாகக் காணப்பட்டிருந்தாலும், பெரிய ஆலயக் கட்டிடங்களை உடையவர்களாய் இருந்தாலும், ஆசாரியர்கள், போதகர்களைக் கொண்டிருந்தாலும், அவர்களுடைய ஒழுக்கக்கேடான காரியங்களுக் காவும், அவர்கள் மத்தியில் காணப்பட்ட இன்னபிற காரியங்களுக்காகவும், அவர்கள் விதைத்ததை அறுக்கும்படி தேவன் செய்தார். அதே விதமாக நமக்கும் கிடைக்கும்!)

(11ம் வசனம்) இந்தத் தேசமெல்லாம் வனாந்தரமும் பாழுமாகும்; இகழ்ச்சிக்குறியாகிய ஈசல் போடுதலாகவும்.... (அதாவது யாவரும் அவர்களை உற்று நோக்கி, "இதோ பார் அவர்களை, அவர்கள் மகத்தானவர்களாய் இருந்தார்கள். இப்பொழுது அவர்கள் இருக்கிற நிலையைப் பாருங்கள் என்பார்கள்)... இந்த ஜாதிகளோ எழுபது வருஷமாகப் பாபிலோன் ராஜாவை சேவிப்பார்கள். (அதுதானே ஒரு ஜீவியகாலமாகும். அதுதானே ஆசீர்வதிக்கப்பட்ட உனது சொந்த தாயார் ஒரு குழந்தையாக இருந்தபோது ஆரம்பித்ததாகும். அவர்கள் அங்கே தேவனற்று இருந்தார்கள். ஒரு சபையில்லாமல் இருந்தார்கள், பாடல் இல்லாமல் இருந்தார்கள்; எந்தவொன்றும் இல்லாமல் ஒரு முழு சந்ததியின் காலத்திற்கும் இருந்தார்கள்; இவ்வண்ணமாக அந்த பாவ சந்ததியார் யாவரும் முற்றாக மரித்து ஒழிந்து போகும் வரையிலும் அங்கே இருந்தார்கள்).

எழுபது வருஷம் நிறைவேறின பின்பு, நான் பாபிலோன் ராஜாவினிடத்திலும், அந்த ஜாதியினிடத்திலும், கல்தேயருடைய தேசத்தினிடத்திலும், அவர்களுடைய அக்கிரமத்தை விசாரித்து அதை நித்திய பாழிடமாக்கி நான் அந்தத் தேசத்துக்கு விரோதமாய் உரைத்த என் வார்த்தை களையெல்லாம், எரேமியா சகல ஜாதிகளுக்கும் விரோதமாகத் தீர்க்கதரிசனமாய்ச் சொன்னதும், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது மான யாவையும் அதின் மேல் வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அநேகம் ஜாதிகளும் பெரிய ராஜாக்களும் அவர்களை அடிமை கொள்வார்கள்; நான் அவர்களுக்கு அவர்கள் கிரியைகளுக்குத்தக்க தாகவும், அவர்கள் கைகளின் செய்கைகளுக்குத்தக்கதாகவும் பதில் அளிப்பேன் என்கிறார்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் என்னை நோக்கி: நான் உன்னை அனுப்புகிற ஜாதிகள் குடித்து, நான் தங்களுக்குள் அனுப்பும் பட்டயத்தால் அவர்கள் தள்ளாடி புத்தி கெட்டுப் போகும்படிக்கு (பட்டயத் தால் என்பதற்குப் பதிலாக 'வார்த்தையால்'' என்று தீர்க்கதரிசி இந்த இடத்தில் வாசிக்கிறார் - தமிழாக்கியோன்).

இந்த உக்கிரமாகிய மதுபானத்தின் பாத்திரத்தை நீ என் கையிலிருந்து வாங்கி, அவர்கள் எல்லாருக்கும் அதிலே குடிக்கக்கொடு என்றார். (இன்னொரு விதமாகக் கூறுவதானால், "எரேமியாவே, நான் உன்னிடம் இந்தச் செய்தியைக் கொடுத்திருக்கிறேன். அமரிக்கையாக உட்கார்ந்திருக்காதே. ஒரே இடத்தில் தங்கியிருக்காதே. சகல ஜாதிகளுக்கும் தீர்க்கதரிசனம் உரைத்திடுவாயாக'' என்றார். இதை நீங்கள் புரிந்து கொண்டீர்களா? ''சகல தேசத்தாருக்கும் தீர்க்கதரிசனம் உரைப்பாயாக. எனது அற்புதங்களையும் அடையாளங்களையும் காண்பி. நான் வந்து இதைச் செய்ய போகிறேன் என்பதை அவர்கள் அதின் மூலம் அறிந்து கொள்வார்களாக). எரே 25:8-16.

84. இந்த நாளில் அவர்கள் என்ன செய்கிறார்கள்? அவர்கள் உங்களை கள்ளத்தீர்க்கதரிசி என்றும், ஒத்துப் போகிறவன் என்றும், மதவெறியன் என்றும், குறி சொல்லுகிறவன் என்றும் சொப்பனக்காரன் என்றும் அல்லது ஒரு விதமான மனோவசிய முறையில் உள்ளத்தை அறிந்து சொல்லுகிறவன் என்றும் அழைக்கிறார்கள். ''அவர்கள் புத்தி கெட்டுப்போவார்கள்'' புத்திகெட்டு போகுதல் என்ற இவ்வார்த்தையை பகுத்துப் பார்த்தால், இதற்கு "பித்துப்பிடித்த'' என்ற அர்த்தமும் இருக்கிறது. சரியாக அவர்கள் பித்துப் பிடித்த'' என்று அர்த்த மும் இருக்கிறது. சரியாக அவர்கள் "பித்துப் பிடித்தவர்களாக ஆவார்கள். அதினால், அவர்கள் "ஆ, அந்த பரிசுத்த உருளை கூறுகிறதற்கு நீங்கள் ஒரு கவனமும் செலுத்த வேண்டாம். அந்த அபத்தத்தை பொருட்படுத்த வேண்டாம்'' என்பார்கள். ''நான் அவர்கள் மத்தியில் அனுப்பும் வார்த்தையினால் அவர்கள் இப்படியாவார்கள்.''



செல்லுகையில், அவள் மகிமைக்குள்ளாக உயரே எடுத்துக் கொள்ளப்படுவாள்.

141. இப்பொழுது இங்கே நோக்கிப் பாருங்கள். யூதர்களுடைய ஆலயம் பாழாக்கப்படுவதற்கு எவ்வாறு நாற்பதாண்டுகள் பிடித்ததோ, அவ்வாறே அவர்கள் இப்பொழுது தங்கள் சுயதேசத்திற்கு திரும்பி வருவதற்கு கடந்த நாற்பதாண்டுக் காலமாக அது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மற்றொரு ஆலயத்தை கட்டும் வரையிலும், அதற்காக அவர்கள் திரும்பி வருதற்காக அவர்களுக்கு சுமார் நாற்பதாண்டுக் காலம் ஆகியிருக்கிறது. நாம் சரியாக காலத்தின் இறுதிக் கட்டத்தில் இருக்கிறோம் என்பதை காணுங்கள். நல்லது, புறஜாதிகள் ஒருவேளை...

142. இப்பொழுது, நாம் எடுத்துக்கொள்வோமாக... நாம் சபையைக் குறித்தும், கல்லானது வருகிறதைக் குறித்தும் காண்கிறோம். நாம் கடைசி காலத்தை எடுத்துக்கொள்வோமாக. நாம் அதைக் குறித்து ஆராய்ந்து, அது எவ்வாறு இருந்தது என்பதை கண்டோம். அதைக் குறித்து சில குறிப்புகள் இங்கே நான் கொண்டிருக்கிறேன் என்று நான் நம்புகிறேன். ஒரு நிமிடம் அதைக் குறித்து நாம் பார்ப்போமாக. வரப்போகிற பிரபுவாகிய அந்திக்கிறிஸ்துவானவன் யூதரோடு ஒரு உடன்படிக்கையைச் செய்வான். தானியேல் 9ம் அதிகாரம் 27ம் வசனத்தில் நாம் பார்க்கையில், வாரத்தின் பாதி சென்ற போது, அது மூன்றரை வருடங்களாகும். அப்போது மிருகமானது ஒரு உடன்படிக்கையை செய்து கொள்ளுவான். அந்த ஒன்றைக் குறித்து இன்று சற்று நேரம் கழித்து பார்க்கலாம் என்று நான் விரும்புகிறேன். அவ்வுடன்படிக்கையைக் குறித்து, இப்பொழுதே அதைக் குறித்து பார்க்கலாம் என்று நான் விரும்புகிறேன்.

143. இந்த புறஜாதிக் காலத்திலுள்ள சபைக் காலங்களுக்கான, ஒவ்வொரு சபைக்கென்று உள்ள தூதன் இன்னான் என்றும், அக்காலத்திற்குரிய செய்தி இன்னதென்றும், அக்காலத்தில் என்ன சம்பவிக்கும் என்பதைக் குறித்தும் பிழையேதுமின்றி நிரூபிக்கப்பட்டது. இந்தக் காலமானது மகிமையானதொரு காலமாக விளங்கியது. அதற்கடுத்த காலத்தில், "நிக்கொலாய் மதஸ்தருடைய சொற்கள்'' என்றழைக்கப்படும் ஒன்று அப்பொழுது உண்டாயிருக்கும் என்று கூறப்பட்டது. அதற் கடுத்த காலத்தில் அது உபதேசமாக ஆகிவிடும் எனப்பட்டது. அதற்கடுத்து, நிக்கொலாய் சபையோடு விவாகம் செய்தல் உண்டாகுமென்றும், பரிசுத்தவான்களை உபத்திரவப்படுத்துதல் உண்டாயிருக்கும் என்றும் கூறப்பட்டது.

அவர்கள் அந்த கூர்நுனிக் கோபுரத்தின் மேல் ஒருபோதும் தலைக்கல்லை வைக்கவேயில்லை. அது மானிடக் கரங்களினால் வெட்டி யெடுக்கப்பட்ட ஒன்றல்ல. அந்தக் கல்லை வெட்டியெடுத்தது தேவனுடைய கரங்கள் தாமே. அதை நீங்கள் புரிந்து கொண்டீர்களா? அது என்ன செய்தது? அது அந்தச் சிலையின் பாதத்தின் மேல் மோதி அதை நொறுக்கி தூள்தூளாக்கியது. அல்லேலூயா! அந்தக் கல் வரும்போது, அப்பொழுது என்ன நடந்தது? அந்தக் கல் வரும்போது, புறஜாதிகளின் காலம் முடிவடைந்ததினால், சபையானது எடுத்துக் கொள்ளப் படுதலில், மகிமையிலே உன்னதத்திற்குச் சென்றுவிட்டது. தேவனே புறஜாதி காலத்தை முடிவடையச் செய்கிறார்.

138. இங்கு சபைக்கு சில காலத்திற்கு முன்பாக ஒரு மனிதனும் அவரது மனைவியும் வருவதுண்டு, அவர்கள் தங்கள் வேதாக மத்தை எடுத்துக்கொண்டு, அதை ஓரிடத்தில் வைத்துவிட்டு, அவர்கள் பாடிக்கொண்டே செல்வதுண்டு. ஓ நான் அந்தக் கல் வர காத்திருக்கிறேன். அது பாபிலோனிலே உருண்டோடியது, பாபிலோனில் உருண்டோடியது, (தங்கள் வீட்டிற்கு சென்று கொண்டே அவர்கள் கூறு வதுண்டு ) பாபிலோனுக்கு உருண்டோடி வரும் கல்லை நான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்

139. அதோ அவர்தான் அது. கிறிஸ்துதான் அந்தக் கல். அவர் மானிடனால் பிறப்பிக்கப்படவில்லை. அவர் தேவனால் பிறந்தவர். அவர் தேவ ஆவியினால் மறுபடியும் பிறந்த ஒரு சபைக்காக வருகிறார். ஏனெனில் அந்தத் தலைக்கல்லின் சத்துவமானது ஒரு காந்தத்தைப் போல் சபைக்குள் பாய்ந்தோடுகிறது.

140. நான் அந்த ஆலையிலே நடப்பதை பார்த்திருக்கிறதை நினைவு கூருகிறேன். அங்கே இருக்கும் ஓட்டை உடைசல் உலோகத்துண்டுகளை அவர்கள் வடிவமைக்கிறதை கண்டிருக்கிறேன்; அதற்காக அங்கே ஒரு பெரிய காந்தக் கல்லானது அவைகளண்டையில் நகர்ந்து வரும்பொழுது, அதுதான் காந்த சக்தியால் தன்னண்டையில் இழுத்துக்கொண்டு போகும். நாம் தானே அந்த மகத்தான தலைக்கல்லினால் அதன் காந்தத்தினால் கவரப்படவேண்டும். பரிசுத்த ஆவியாகிய கிறிஸ்துவே தலைக் கல்லாயிருக்கிறார். பரிசுத்த ஆவியின் காந்தவிசையைப் பெற்றிருக்கும் நாம் ஒவ்வொருவரும், அந்தக் கல்லானது வந்து அச்சிலையை மோதி அதை நொறுக்குகையில், சபையானது அக்கல்லிடமாக பாய்ந்தோடும். பரிசுத்தவான்களின் எடுத்துக் கொள்ளப்படுதல் நிகழும்போது, அந்த நாளுக்குள்ளாக அவள்



85. வரலாறானது திரும்புகிறது என்பதை நீங்கள் கவனித்தீர்களா? எரேமியா அவர்களுடைய பரிசேயரோடும், சதுசேயரோடும், ஏரோதியரோடும் இன்னும் அவர்கள் யாராயிருந்தாலும் சரி அவர்களோடு ஒத்துப் பேசவில்லை. அவன் வார்த்தையை அப்படியே உரைத்தான். அதுதானே அவர்களை அவன் மேல் வெறி கொள்ளச் செய்தது. இப்பொழுது கவனி யுங்கள்.

அப்பொழுது நான் அந்தப் பாத்திரத்தைக் கர்த்தருடைய கையிலிருந்து வாங்கி, கர்த்தர் என்னை அனுப்பின எல்லா ஜாதிகளுக்கும் குடிக்கக் கொடுத்தேன்.... (எரேமியா வீட்டில் தங்கியிருக்கவில்லை. எரேமியா ஒரு சிறிய இடத்தில் தங்கியிருக்கவில்லை, ஆனால் அவனோ சகல ஜாதிகளிடத்திலும் போய் அவர்கள் அதைக் குடிக்கும்படி செய்தான்).

எரே. 25:17.

86. எரேமியா அவருடைய வார்த்தையாகிய மதுவை, கர்த்தருடைய வார்த்தையை எடுத்துக்கொண்டான். அம்மது அவருடைய வார்த்தையின் வல்லமையாக இருக்கிறது. மதுவுக்கு ஒரு வல்லமை உண்டு. மது போதையூட்டுவதாக இருக்கிறது. மது அதன் பின்னால் ஒரு வல்லமையுடையதாக இருக்கிறது. "நான் கர்த்தருடைய வார்த்தையை எடுத்து'' என்று எரேமியா கூறுகிறான். "அது பிரத்தியட்சமாகும்படி செய்தேன்'' என்று கூறுகிறான். "மதுவில் வல்லமையுண்டு, அதை நான் அவர்களுக்கு முன்பாக கிரியை செய்யும்படி செய்தேன். அவர்களோ செவி கொடுக்க மறுக்கின்றனர்'' என்றான். "அப்படியென்றால் நான் அவர்களை எழுபது ஆண்டுக் காலம் பாபிலோனுக்கு அனுப்பி விடுவேன்'' என்று தேவன் கூறினார். அதைதான் அவர் செய்தார். நீதிமானும் சென்றான். துன்மார்க்கனும் சென்றான்.

87. இப்பொழுது பாடத்திற்கு மீண்டும் வருவோம். தானியேல் புஸ்தகங்களைப் படித்துக்கொண்டிருந்தான். எண்ணிப் பாருங்கள். இன்று காலையில் நாம் வாசித்த அதே வசனங்களையே தானியேலும் வாசித்தான். நாம் கடைசி காலத்தில் இருக்கிறோம் என்பதை உங்களுக்கு காண்பிக்கும்படி அடுத்த சில செய்திகளின் போது தானியேல் வாசித்த அதே வேதாகமத்தை, அதே புள்ளிகளோடு, அதே வாக்கியங்களை அதே விஷயங்களை தேவனுடைய உதவியைக் கொண்டு நான் வாசித்துக் காண்பிப்பேன்; தானியேலின் வார்த்தையை எரேமியாவிடத்திலிருந்து எடுத்துக் கொண்டு, பாபிலோனுக்குள் செல்கிறான். அவன் தானே அபிஷேகம் பண்ணப்பட்ட தீர்க்கதரிசியாக இருந்தான். (ஒலிநாடாவில் இரண்டாம்

பக்கம் அரைகுறையாக ஆரம்பிக்கிறது - ஆசி)... அவர்கள் மத்தியில் அற்புதங்கள்... ஆயினும் அவன் தன்னந்தனியாக நின்று கொண்டிருந்தான். ஆமென்! அவன் தனியாக நின்றான்.

88. ஆனால் எரேமியா அனேகமனேகமாண்டுகளுக்கு முன்பாக அவ்வசனங்களை எழுதியிருந்தான். பிறகு தானியேல் வார்த்தையின் வியாக்கியானத்தைப் பெற்றான். அதினால் அவன் கூறினான், “ஒரு நிமிஷம் பொறுங்கள். நாம் கால முடிவில் அருகில் வந்து கொண்டிருக்கிறோம். ஏனெனில் நான் இந்த தேசத்தில் ஏற்கெனவே அறுபத்தெட்டு ஆண்டுகள் இருந்து விட்டேன். கர்த்தருடைய தீர்க்கதரிசி (ஆமென்!) எனது சகோதரன், தேவனுடைய உண்மையான தீர்க்கதரிசியானவன், தன்னை உண்மையான தீர்க்கதரிசிதான் என்று நிரூபித்துக் காண்பித்தவன். நமக்கு தீர்க்கதரிசனமாக உரைத்துள்ளான். 'எழுபது ஆண்டுகள் நிறைவேறித் தீரும் என்று அவன் முன்னுரைத்ததை இங்கே ஒரு புஸ்தகத்தில் எழுதி வைத்துள்ளேன்'' என்று கூறினான். 'அந்தச் சந்ததியாரெல்லாரும் மரித்துப் போய்விட்டனர். இப்பொழுது நீர் என்ன செய்யப்போகிறீர் கர்த்தாவே? நீர் எங்களை இங்கிருந்து அனுப்பிவிடுவதாக வாக்கு ரைத்தீரே'' என்று ஜெபித்தான். அவன் விண்ணப்பம் பண்ணு வதற்காக தன்னை ஆயத்தப்படுத்தினான்.

89. ஓ, தேவனே, ஜெபிப்பதற்காக நாங்கள் உமக்கு நேராக எங்களைத் திருப்பிக்கொள்ள வேண்டுமென ஒருவேளை உண்டென்றால், அது இப்பொழுதுதான், அவருடைய உண்மையான ஊழியக்காரர் நாங்கள் என்ற ரீதியில், அப்போஸ்தலருடைய நிரூபங்களைக்கொண்டும், பரிசுத்த ஆவியானவரின் எச்சரிக் கையை கொண்டும், நாம் கடைசி நாளில் இருக்கிறோம் என் பதைக் காண்பிக்கிறோம். கடைசி நாட்களில் மனிதர் துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ள வர்களாயும், தேவபிரியராயிராமல், சுகப்போகப்பிரியராயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும் நல்லோரைப் பகைக்கிறவர்களாயும் இருப்பார்கள் என்று பரிசுத்த ஆவியானவர் கூறுகிறார். அந்நிருபத்தின் மூலம் அதை புரிந்து கொள்கிறேன்.

90. கடைசி நாட்களில் பரியாசக்காரர் தோன்றுவார்கள் என்பதை நான் அறிகிறேன். கடைசி நாட்களில் ஜாதிக்கு விரோதமாக ஜாதி இருக்கும் என்பதை நான் அறிகிறேன். கடைசி நாட்களில் கடல் கொந்தளிப்பினால் பேரலைகள் ஏற்படும் என்பதை நான் அறிவேன். பறக்கும் தட்டுகளாகிய அச்சமூட்டக்கூடிய காட்சிகள், வானங்களில் மர்மமான தோற்றங்கள் ஏற்படும் என்றும், மனுஷருடைய



136. லூத்தரின் ஊழியத்திலிருந்து பெந்தெகொஸ்தேயின் காலம் முடிகிற வரையிலும் சபையானது மிகச் சிறிய எண்ணிக்கையில் தான் இருந்து வந்திருக்கிறது. எனவே தான் இந்த வரைப்படத்தில் நீங்கள் பார்க்கிறபடி ஒளியானது ஏறத்தாழ அணைந்துவிடப் போகும் அளவுக்கு ஆகிவிட்டது. அது பெந்தெகொஸ்தேயின் காலமாயுள்ளது, அது பெந்தெ கொஸ்தே - ஆனால் அது பெந்தெகொஸ்தே ஸ்தாபனம் அல்ல-ஏனெனில் அவர்கள் லவோதிக்கேயாவினர் செய்தது போலவே செய்தனர், நிக்கொலாய் மதஸ்தினரைப் போலவே அதுவும் மதஸ்தாபனமாகிவிட்டது. ஆனால் உலக முழுவதிலும் உள்ள உண்மையான சபையோ தன் மத்தியிலே இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைப் போலவே உள்ள ஒரு ஊழியத்தை வரப் பெற்றிருக்கும் அளவிற்கு அது வளர்ச்சி பெற்று விட்டது. இப்பொழுது அவர்கள் பெற்றிருப்பது என்ன? அவர்கள் ஒரு கிரமமான நிலையிலே உள்ள ஒரு காரியத்தைப் பெற்றுக் கொண்டுவிட்டனர். இப்பொழுது அடுத்ததாக உள்ள காரியம் தான் என்ன? இந்தப் புறக்கணிக்கப்பட்ட தலைக்கல்லானது மலையிலிருந்து, கைகளினால் பெயர்க்கப்படாமல், பெயர்ந்து கூர்நுனிக் கோபுரத்துக்கு வந்துள்ளது. தேவன் அதை அனுப்பியிருக்கிறார். அதை நீங்கள் கண்டுகொண்டீர்களா? (சபையார், "ஆமென்'' என்று கூறுகின்றனர்- ஆசி) புறக்கணிக்கப்பட்ட இந்தக்கல் தான் தலைக்கு தலைக்கல்லாயிருக்கிறது. இந்த புறஜாதியின் காலத்தில் அவர்களால் புறக்கணிக்கப்பட்ட இந்த கல் கிறிஸ்துவாக இருக்கிறார். கிறிஸ்து வெட்டப்பட்டு, சபையின் மேல் ஒரு பிரதிநிதியாக அல்லது தேவகுமாரனாக அல்லது ஒரு பெரிய பிரமுகராக ஏற்படுத்தப்படவில்லை. அவர் பரிசுத்த ஆவியாயிருக்கிறார். கிறிஸ்து வருதலே கூர்நுனிக் கோபுரத்தின் மேல் தலைக்கல் இணைவதாகும். அதை நீங்கள் கண்டு கொண்டீர்களா? ["ஆமென்']

137. இப்பொழுது அவை உரிய வடிவத்தைப் பெற்றிருக்கிறபடியால் ... கூர்நுனிக்கோபுரத்தைப் போல் நான் எங்கே இதை உருவகப்படுத்தியிருக்கிறேன் என்பதை கண்டீர்களா? பரிசுத்தர் உயிர்த்தெழுதலே மகிமைக்குள் அவர்கள் பவனி செல்லுதலை உண்டாக்குகிறது. இப்பொழுது அதை நீங்கள் புரிந்து கொண்டீர் களா? சகலவற்றையும் காண்கிற அந்தக் கண், புறக்கணிக்கப்பட்ட அந்தக் கல்லாகிய கிறிஸ்துவாகிய தலைக்கல் சரியாக வேதாகமம் கூறியபடியே வருகிறது. கைகளால் பெயர்க்கக்கூடாத இந்தக் கல் பர்வதத்திலிருந்து பெயர்ந்து வருகிற வரையிலும் தானியேல் இப்புறஜாதியாரின் காலத்தை கவனித்துக் கொண்டிருந்தான்.

இடிக்கப்பட்டன. பிறகு காலமானது ஒவ்வொரு சபைக்காலமாக கடந்து செல்லுகையில், சபையானது லூத்தர் நீதிமானாகுதலைக் குறித்து பிரசங்கித்தலின் வழியாக சபை செல்லும் வரையிலும், எப்பொழுதும், மிகச் சிறுபான்மையாக ஆகிக் கொண்டே வந்தது. அதற்கு முன்பாக அந்தக் காலத்தில் நீங்கள் உங்களை கிறிஸ்தவர் என்று அறிக்கை யிட்டால், அவர்கள் உங்களை கொலை செய்வார்கள். அக்காலம் இரத்த சாட்சிகளின் காலமாயிருந்தது.

134. வெஸ்லியின் காலத்தில் நீங்கள் கிறிஸ்துவைக் குறித்து அறிக்கையிட்டால், அச்செய்தி ஒரு புதிய வழியாக இருந்த படியால், உங்களைப் பரிசுத்த உருளை என்று கேலி பேசுவர். வெஸ்லியும், ஆஸ்பரியும் இங்கே வந்தபொழுது அமெரிக்காவில் அவர்கள் கூட்டங்கள் நடத்தினர்; அதற்கு மக்கள் சென்றனர். அக்கூட்டங்களை அவர்கள் பள்ளிக் கூடங்களில் தான் நடத்த வேண்டியிருந்தது. ஏனெனில், சபைகள் அவர்களுக்கு கூட்டங்கள் நடத்த இடங்கொடுக்கவில்லை. நீங்கள் உங்கள் வரலாற்றைப் படித்துப் பாருங்கள் அக்கூட்டங்களில் மக்கள் மேல் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார், அதினால் மக்கள் தரையில் விழுந்தனர், அந்த அளவுக்கு நடந்தது, அப்படி விழுந்தவர்கள் மேல் அவர்கள் மயக்க மடைந்தனரோ என்றெண்ணி, மக்கள் தண்ணீரைத் தெளித்து அவர்களுக்கு விசிறி விடுவதுண்டு. எனது ஐம்பது வயது வாழ்க்கையில் நானே அவர்களுடைய கூட்டங்களுக்கு சென்றிருக்கிறேன். பரிசுத்த ஆவியின் வல்லமையால் அவர்கள் அவ்விதமாக கீழே விழுவதையும், அவர்கள் முகத்தின் மேல் மற்றவர்கள் தண்ணீரைத் தெளிப்பதையும் நானே கண்டிருக்கிறேன். பழைய சுயாதீன மெதோடிஸ்டுகள் அநேக ஆண்டுகள் முன்பாக அவ்விதமான அனுபவத்தைக் பெற்றிருந்தனர். அதினிமித்தம் ஒரு உபத்திரவம் உண்டாயிருந்தது.

135. வெஸ்லியின் அந்த காலம் நடந்து முடிந்த பிறகு, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தோடு பெந்தெகொஸ்தே யுகம் வந்தது. நீங்கள் இவ்வாறு காலந்தோறும் வளர்ந்து கொண்டே வருகிறதை கவனித்தீர்களா? இப்பொழுது, தலைக்கல்லானது இன்னமும் அதன் மேல் வரவில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள் ஏன்? அவர்கள் சபையை - அல்லது கூர் நுனிக் கோபுரத்தை தலைக்கல் வந்து பொருத்துவதற்கு ஏற்றவாறு அதன் சிகரப் பகுதியை வடிவமைத்து இருந்தனர். ஆனால் எதைப் பற்றி கூறுகிறேன் என்பதை புரிந்துகொண்டீர்கள், இல்லையா?



இருதயங்கள் அச்சத்தினால் சோர்ந்து போகும் என்றும் நான் அறிவேன். காலத்தைக் குறித்து திகைப்பு, மக்கள் மத்தியில் இக்கட்டுகள் ஏற்படும். கடைசி நாட்களில் அவர்கள் யாவரும் சங்கங்களுக் குள்ளும், ஸ்தாபனங்களுக்குள்ளும் போய், சபைகளின் சமஷ்டி அமைப்பை ஏற்படுத்திக் கொள்வார்கள் என்பதைக் குறித்தும் நான் படிக்கிறேன். கடைசி நாட்களில் ஸ்திரீகள் தங்கள் தலைமுடியைக் கத்தரித்துக் கொள்வார்கள் என்பதையும் நான் அறிவேன். அவர்கள் குட்டையான உடைகளை அணிந்து, குதி உயர்ந்த செருப்புகளை அணிந்து நடப்பார்கள் என்றும், அவர்கள் நடந்து செல்லுகையில் கால்களில் சிலம்பு ஒலிக்கத் திரிவார்கள் என்பதையும் நான் படித்து அறிந்துகொண்டுள்ளேன். கடைசி நாட்களில் ஒழுக்கமானது மிகவும் தரந்தாழ்ந்து போய்விடும் என்பதை அறிந்திருக்கிறேன். கடைசி நாட்களில் பிரசங்கிகள் கள்ள மேய்ப்பர்களாக, ஒத்துப்போகிறவர்களாக இருந்து தேவனுடைய வார்த்தையை மக்களுக்குப் போஷிக்காமல், அதற்குப் பதிலாக சடங்காச்சாரக் கோட்பாடுகளின் பின்னால் செல்லுகிறவர்களாய் இருப்பார்கள் என்பதை நான் அறிகிறேன். ஆனால் கடைசி நட்களிலே வனாந்தரத்திலிருந்து கூப்பிடுகிறதும், மக்களை மூலமுதலான செய்திக்கு திரும்பும்படி அழைக்கிறதும், தேவனுடைய காரியங்களுக்குத் திரும்பும்படி அழைக்கிறதுமான ஒரு சப்தம் உண்டாயிருக்கும் என்று நான் அறிகிறேன். இப்படியாக புஸ்தகத்தின் வாயிலாக மேற்சொன்ன காரியங்களெல்லாம் சம்பவிக்கும் என்பதை வாசித்து அறிந்துகொண்டுள்ளேன்.

91. கடைசி நாட்களிலே ஒரு பஞ்சம் உண்டாகும் என்பதையும் அறிந்திருக்கிறேன். கடைசி நாட்களிலே ஆகாரக் குறைவினாலும், ஜலக்குறைவினாலும் மட்டும் உண்டாகிற பஞ்சமல்ல, உண்மையான தேவ வார்த்தையைக் கேட்கக் கிடைக்காத பஞ்சம் ஏற்படும் என்றும், அந்த அளவுக்கு சபைகள் சடங்காச்சார மதஸ்தாபனங்களாக ஆகிவிடும்; ஆனால் மக்களோ, தேவனுடைய மெய்யான வார்த்தையைக் கேட்பதற்காக கிழக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும், வடக்கிலிருந்தும், தெற்கிலிருந்தும் புறப்பட்டுச் செல்வார்கள். ஆனால் சபைகளோ, வெற்று சடங்காச்சார மதஸ்தாபனங்களாக ஆகி இறுக்கமடைந்து போய் வார்த்தைக்கு செவி கொடாதவர்களாக ஆகிவிடுவார்கள். இவையெல்லாம் நான் புஸ்தகங்களிலிருந்து அறிந்துகொண்டுள்ளேன். ஆனால் அந்நாளிலோ, ஓ, தேவனே, தாவீதிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும்.

92. கடைசி காலத்திலே அந்த நாள் வருவதற்கும் முன்பாக அவர் எலியாவை அனுப்புவார் என்றும், அவன் ஒரு செய்தியை உடையவனாயிருந்து, பிள்ளைகளுடைய இருதயத்தை பிதாக்களுடைய இருதயத்திற்குத் திருப்பி, அவர்களை மூலமுதலான உபதேசத்திற்குத் திருப்பி அங்கிருந்து அவர்களை துவங்கும்படி செய்வார் என்றும் அறிந்துகொண்டுள்ளேன். ஆவியானவர் புறஜாதி சபையை விட்டு யூதர்களிடமாகத் திரும்புவதற்காக சற்று முன்பாக அந்தக் காரியம் நடக்கும் என்பதை நான் அறிவேன்.

93. எழுத்தின் வாயிலாக மாத்திரமல்ல, வார்த்தையின் மூலமாகவும், எழுதப்பட்ட வார்த்தையின் மூலமாகவும், இஸ்ரவேல் தனது சொந்த நாட்டிற்கு திரும்பிடும் என்பதை நான் அறிந்திருக்கிறேன். அவள் அங்கே உள்ளே போய்க் கொண்டிருக்கிறதை நான் காண்கிறேன்.

94. தீர்க்கதரிசிகளின் எழுத்துக்களின் வாயிலாக இஸ்ரவே லானது ஒரு தேசமாக உருவெடுக்கும் என்பதை நான் அறிந்திருக்கிறேன். அவர்கள் ஆலய வழிபாட்டை திரும்ப ஏற்படுத்துவார்கள். அவள் தன் சுயதேசத்திற்கு திரும்பி வந்திருக்கையில் தேவன் அவர்களோடு இடைபடும்படி போவார். ஓ! அவர்களுக்காக இரண்டு தீர்க்கதரிசிகள் கடைசி நாட்களில் எழும்புவார்கள் என்பதை நான் அறிந்துள்ளேன். புறஜாதி சபையானது கடந்து செல்லுகையில் இரண்டு தீர்க்கதரிசிகளாகிய எலியாவும், மோசேயும் இஸ்ரவேல் மக்களுக்காக அவர்களிடம் வருவார்கள். நாம் இவைகளை படிக்கையில் அதைக் குறித்து பார்ப்போம்.

95. பாபிலோனில் அவர்கள் இருக்கவேண்டிய காலமானது ஏற்குறைய நிறைவேறித் தீர்ந்தது என்பதை தீர்க்கதரிசிகள் கண்டனர். அது சரிதான்.

96. தானியேல் கேட்ட விஷயங்களைப் பற்றி மட்டும் காபிரியேல் அங்கே வெளிப்படுத்த வந்திருப்பதாகத் தோன்றவில்லை. முடிவு காலம் வரையில் யூத இனத்திற்கு என்ன தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதைப் பற்றி காலங்கள் பூராவிலும் உள்ள விஷங்களையும் அவன் அவனுக்குக் கூறுகிறான். ஆமென்! ஒரு சிறிதளவு விஷயத்தைப் பற்றித்தான் அவன் கேட்டிருந்தான். ஆனால் அவனுக்கோ முழு விஷயமும் கொடுக்கப்பட்டது. அவன் விரும்பிக் கேட்டதெல்லாம்...

97. 'இன்னும் எவ்வளவு காலம் செல்லும், கர்த்தாவே?'' என்று கேட்டு தானியேல் அதைக் கண்டுபிடிக்க முயன்று கொண்டிருந்தான். ''எனது சகோதரனும் உமது ஊழியக்காரனுமாகிய எரேமியா அறுபத்தெட்டு



அடிப்பாகத்தில் கூர்நுனிக் கோபுரத்தையும் காணலாம். அந்த கூர்நுனிக் கோபுரத்தின் மேலே ஒரு தலைக் கல்லையும், அதனுள் ஒரு பெரிய கண் ஒன்று இருப்பதையும், அந்த கூர்நுனிக் கோபுரத்தின் அடிப்பாகத்தில் "மகத்தான முத்திரை'' என்று இருப்பதையும் நீங்கள் காணலாம். அமெரிக்க கழுகே அந்த மகத்தான முத்திரையாக ஏன் இருக்கக்கூடாது? அதுவே தேவனுடைய முத்திரையாக இருக்கிறது. நாம் ஒரு சிறிய பாடலைப் பாடுவது வழக்கம். அது நினைவிருக்கிறதா?

சாலை நெடுகிலும் ஆத்துமாவுக்கென உள்ள மெய்யான புகலிடமாக உன்னை கவனித்திருக்கும் கண் ஒன்று உண்டு நீ எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் இம்மகத்தான கண் அறிந்தேயுள்ளது ஒரு கண் உன்னை கண்காணித்துக் கொண்டேயிருக்கிறது.

அது சரிதான். நமக்கு சிறிது மகிழ் கொண்டாட்டம் ஏற்படும் போது நாம் கூறுவதுண்டு. அது உங்களுக்கு ஞாபகமிருக்கும். நீ, திருடி ஏமாற்றி பொய் சொல்லி ஒரு சபையில் நீ சாட்சி சொன்னால் ஒரு கண் உன்னைக் கண்காணித்துக் கொண்டேயிருக்கிறது.

130. இப்பொழுது, அந்த மகத்தான முத்திரையைப் பற்றி, இப்பொழுது, நாம் அதை அறிவோம்.... அதை நான் புரிந்து கொள்ளவில்லை; கூர்நுனிக்கோபுரத்தின் அளவிடுதலைப் பற்றி. ஆனால் நான் கடந்த சில போதகங்களிலே அவைகளைப் பற்றி உங்களிடம் கூறிக் கொண்டிருந்தேன். அது யாவும் ஒன்று சேர்ந்து சொல்லுகிறதை நீங்கள் காண்கிறீர்கள்?

131. கூர்நுனிக் கோபுரமானது சபைக்கு அடையாளமாயிருக் கிறது. அது கீழே அகன்று காணப்பட்டு, மேலே போகப் போக குறுகிய ஒரு புனலைப் போல் வடிவமைந்து காணப் படுகிறது.

132. அது மேலே சிகரமான பகுதி வரையிலும் வளர்ந்து வந்தது. ஆனால் அவர்கள் அதன் வேலையை முற்றாக முடிக்கவில்லை என்பதை நாம் கண்டோம். ஏன்? ஏன்? ஏன் அவ்வாறு உள்ளது என்று நான் வியக்கிறேன். ஏனெனில் வேதம் கூறுகிறபடி தலைக்கல்லானது புறக்கணிக்கப்பட்டுள்ளது. அவர்கள் அதைப் புறக்கணித்தனர்.

133. இப்பொழுது சபைக்காலத்தை கவனியுங்கள். இப் பொழுது கவனமாக செவிகொடுங்கள். இதை நீங்கள் தவற விட்டுவிடாதீர்கள். லூத்தரின் சீர்திருத்தம் தொடங்கிய முதற் கொண்டு சபைக் காலமானது மறுபடியும் புறப்பட்டது. ஆதி அப்போஸ்தலர்களின் உபதேசமாகிய அஸ்திபாரக்கற்கள் முதலில் ஆதிகாலத்தில்

என்று அர்த்தமாம். அங்கே அந்த இரும்பும் களி மண்ணும் ஒன்றோடொன்று கலவாது. (அவர் குருஷ்சேவ் - தமிழாக்கியோன்) தனது ஷூவைக் கழற்றி மேசையின் மேல் ஓங்கி அடித்தார். அது கலவாது. ஆனால் இந்த சாம்ராஜ்யத்தின் நாட்களில் தான் கைகளால் பெயர்க் கப்படாத கல்லொன்று உருண்டோடி வந்து, அச்சிலையின் பாதத்தில் மோதி அதை நொறுக்கும்.

127. அக்கல் ஒரு மலையிலிருந்து வெட்டியெடுக்கப்பட்டு பெயர்ந்து வந்தது. அது ஒரு கல்மலையாயிருக்கவேண்டும். அது தானே அக்கல் மலையிலிருந்து பெயர்த்து எடுக்கப்பட்டது. இப்பொழுது நீங்கள் அதை கவனித்தீர்களா?...

128. உலகம் முழுவதிலும் உள்ள சகோதர ஊழியக்காரரே, சகோதர சகோதரிகளே, என் அறிவுக்கெட்டியபடி முதலாவதாக எழுதப்பட்ட வேதாகமம் எதுவென்றால், அதை தேவன் வானத்தில்தான் எழுதிவைத்தார். ஏனெனில், அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்து, தங்களுக்கு மேலாக, பரலோகத்திலே ஒரு தேவன் உண்டு என்று அவர்கள் கண்டு கொள்ள வேண்டும் என அவர் கருதினார். நீங்கள் வானராசிகளைப் பற்றி கவனித்துப் பார்த்தீர்களானால்... மக்களே, நீங்கள் ஒருவரும் அதன் பின்னால் செல்ல வேண்டாம், நீங்கள் வேதாக மத்தோடு நிலைத்திருங்கள். கவனித்தீர்களா? நான் அறிந்திருக்கிறபடி அவ்வானராசிகளிலே முதலாவதாக துவக்கமாக உள்ளது கன்னியாகும். அவ்வானராசிகளின் எண்ணிக்கையிலே கடைசியாக உள்ளதென்னவெனில் சிங்கமாகும். கன்னிராசி என்பது கிறிஸ்து கன்னியின் மூலம் வருவதைக் குறிக்கிறது. இரண்டாம் வருகையானது யூதா கோத்திர சிங்கமாக அது இருக்கிறது. புரிந்து கொண்டீர்களா? அவ்வானராசிகளிலே கடைசிக்கு முந்தினது கடக ராசியாகும். அது புற்று நோயின் காலமாகும். (ஆங்கிலத்திலே கடக ராசிக்கு 'கான்சர்' என்ற பதம் உள்ளது- தமிழாக்கியோன்).

129. இன்னொன்று எழுதப்பட்டது, அல்லது வைக்கப்பட்டது ஒன்று உள்ளது என்று நாம் கண்டு கொண்டுள்ளோம். அதுதான் கூர்நுனிக் கோபுரம் ஆகும். கூர்நுனிக் கோபுரம் அதன் அடிப் பாகத்தில் எவ்வாறு ஒரு மலையைப் போல் அகன்று துவங்கி, போகப் போக அது மேலே குறுகி தலைக்கல்லானது கூர்நுனிக் கோபுரத்தின் மேல் ஒருக்காலும் வைக்கப்படவில்லை - எகிப் திலே இருக்கும் அந்த பெரிய கூர்நுனிக் கோபுரத்தில், உங் களிடம் உங்கள் பாக்கெட்டில் ஒரு டாலர் மதிப்புள்ள நோட்டு இருக்கிறதென்றால் அதை எடுத்துப் பாருங்கள். அதில் நீங்கள் ஒரு பக்கத்தில் அமெரிக்க முத்திரையும், மற்ற பக்கத்தில் அதன்



ஆண்டுகளுக்கு முன்பாக தீர்க்கதரிசனமாக, இந்த மக்கள் இத்தேசத்தில் எழுபது ஆண்டுகள் இருப்பார்கள் என்று முன்னுரைத்திருந்தான். இப்பொழுது பழைய சந்ததியினர் யாவரும் மாண்டு போய் விட்டனர்'' என்று ஜெபித்தான்.

98. நாற்பதாண்டுகளுக்கு முன்பாக ஒரு பழைய பெந்தெகோஸ்தே சந்ததியினர் எழும்பினர். அவர்கள் “முதுபெரும்வீரர்கள்'' என்று அழைக்கப்பட்ட அவர்கள் ஸ்தாபனமாக ஆகி, தம்பட்டமடித்துக் கொண்டு வெற்று ஆரவாரம் செய்து, ஹோரேப், நேபா மலைகள் வழியாகக் கடந்து சென்றார்கள். ஆனால் நாம் இறுதியாக இப்பொழுது அந்நதியண்டை வந்து விட்டோம். தேவன் ஒரு புதிய சந்ததியை எழுப்பி அவர்கள் நதியைக் கடந்து செல்ல யோசுவா என்ற ஒருவனை எழும்பச் செய்யப்போகிறார். நியாயப் பிரமாணம் தவறினது; மோசே அதனுடன் சென்றான். மோசே தவறினான். யோசுவா அவர்களை நடத்திச்சென்றான். ஸ்தாபனங்கள் தவறிவிட்டன என்றும் ஆனால் தேவ ஆவியானவர் (யோசுவா - யோசுவா என்ற வார்த்தை இயேசு நமது இரட்சகர்'' என்று பொருள்படும்) பரிசுத்த ஆவியானவர் ஜனங்களின் மத்தியில் பிரவேசித்து, மேலே போக, யோர்தான் நதியைக் கடக்கும்படி செய்ய, அவளை ஆயத்தம் செய்வார். அதுதான் நடைபெறப் போகிறது என்பதை நான் புஸ்தகத்தை வாசித்ததன் வாயிலாக அறிந்து கொண்டுள்ளேன்; இப்பொழுது நான் என்னத் தேடிக் கொண்டிருக்கிறேன் என்பதை தேவன் அறிவார். தேவனுடைய ஜனங்களைத் தேற்றி இப்பொழுது என்ன சமீபமாயிருக்கிறது என்பதைப் பற்றி அவர்களுக்கு கூறவும், இன்று இக்காலையில் இங்கே பிரசன்னமாயிருப்பவர்களுக்கும், இந்த ஒலிநாடாக்கள் உலகம் பூராவிலும் போகப் போகிறதே அவ்விடங்களிலுள்ள தேசங் களில் இதைக் கேட்பவர்களுக்கும், நாம் கடைசி காலத்தில் இருக்கிறோம் என்பதைக் கூறத்தக்கதாகவே நான் இருக்கிறேன்.

99. இராஜ்யமானது முற்றாக திரும்ப அளிக்கப்படுகிற வரையிலும் உள்ள காலம் முழுவதிலும் உள்ளவற்றையும், ஆயிரமாண்டு அரசாட்சி துவங்கும் வரையிலும் உள்ள காரியங்க ளெல்லாம் அவர் வெளிப்படுத்தினார். அது காபிரியேலின் செய்தியாக இருந்தது. "உன் ஜனங்கள் மேல் எழுபது வாரங்கள் செல்லும்படி குறிக்கப்பட்டுள்ளது. யூத சந்ததியினரின் முடிவு வரைக்கிலும் எழுபது வாரங்கள் குறிக்கப்பட்டுள்ளது என்பதை உனக்கு அறிவிக்கும்படியாக நான் வந்தேன்'' என்றான். அவன் அவன் என்ன கூறினான் என்பதை

இப்பொழுது கவனியுங்கள். திரும்பக் கட்டுவற்காக கட்டளை வெளிப்படுவது முதல் ...

''.... உன் ஜனத்தின் மேலும், உன் ... நகரத்தின் மேலும் எழுபது வாரங்கள் செல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிறது...' (உன் நகரம்! பாபிலோன் அவனது நகரமல்ல. அவனது நகரமானது எது? அது எருசலேமாகும்).

100. நாம் அந்த ஏழு, இல்லை ஆறு விதமான உறுதியான விஷயங்களைப் பற்றி படிக்கும் போது, அந்நகரமானது என்ன என்றும், அதை நிறுவியது யார் என்பதையும் நிரூபித்து அது எங்கிருந்து வந்தது என்பதைப் பற்றியும் நாம் பார்ப்போம். எவ்வளவு காலம் அது நிலை நிற்கும்? அது திரும்பக் கட்டப்படுமா? அது எப்பொழுது? என்பதையும் பார்க்கலாம். நமக்காக மகத்தான விஷயங்கள் வைத்து வைக்கப்பட்டுள்ளன.

''மீறுதலைக் தவிர்க்கிறதற்கும், எழுபது வாரங்கள் மேலும் உன்... நகரத்தின் மேலும் செல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிறது...'' (அவர் கூறவில்லை ... 'தானியேலே...'' அந்த எழுபது வாரங்கள் பற்றி அவன் அவனிடம்... நான் கூற வந்தது எழுபது வருடங் களைப் பற்றி; அறுபத்தெட்டு ஆண்டுகள் முடிந்து இன்னும் இரண்டு ஆண்டுகளே இருந்தன. எரேமியாவின் தீர்க்கதரிசனம் மிகவும் சரியாக நிறைவேறியது என்று நாம் கண்டோம். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அவர்கள் அங்கிருந்து வெளியேறினர். நெகேமியா மன்னனிடம் சென்று, உத்தரவு பெற்று, இடுக்கமான காலங்களில் அலங்கங்களை கட்டினான், அவர்கள் வேலை செய்தார்கள்... அவன் கூறினான். ''அலங்கம்...'' இதற்கு செவி கொடுங்கள்) ''மீறுதலைக் தவிர்க்கிறதற்கும், பாவங்களைத் தொலைக்கிறதற்கும்" (பாவங்களைத் தொலைக்கிறதற்கும்! யாருக்கு? யூதர்களுக்கு... உன் ஜனத்தின் மேலும் குறிக்கப்பட்டிருக் கிறது'' புறஜாதியர்கள் மேல் அல்ல- உன் ஜனத்தின் மேல் அதாவது யூதர்கள் மேல் உன்... நகரத்தின் மேலும்...'' அது நியூயார்க் அல்ல, போஸ்ட்டன் அல்ல, பிலதெல்பியா அல்ல, சிக்காகோ அல்ல, லாஸ் ஏஞ்சலிஸ் அல்ல, ரோம் அல்ல, ஆனால் எருசலேம் நகரத்தின் மேல்தான்) மீறுதலைத் தவிர்க் கிறதற்கும், பாவத்தைத் தொலைக்கிறதற்கும், அக்கிரமத்தை நிவிர்த்தி பண்ணு கிறதற்கும், நித்திய நீதியை வருவிக்கிறதற்கும், தரிசனத்தையும் தீர்க்க தரிசனத்தையும் முத்தரிக்கிறதற்கும் மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம் பண்ணுகிறதற்கும்.'' (கவனியுங்கள்).



124. அவர் ஒரு வார்த்தை கூறட்டும், அதுபோதும், அதுவே எல்லாமாயிருக்கிறது என்று கூறப்படும். இது இவ்வாறிருக்கிறது. அதைப் பற்றி பின்னால் பார்க்கலாம். "மிருகத்தோடே யுத்தம் பண்ணத்தக்கவன் யார்? அவனைப் போல் யாரால் பேச முடியும்? யார் அதைச் செய்ய முடியும்?' என்பார்கள் (வெளி.13:4) "நாம் மிருகத்திற்கு ஒரு சொரூபத்தை உண்டாக்கு வோமாக'' என்பார்கள். அதைச் செய்வது சபைகளின் சமஷ்டி அமைப்புதான். அறிந்து கொண்டீர்களா? சபை ஸ்தாபனங்களையெல்லாம் ஒன்று சேர்த்து ஒரு சமஷ்டி அமைப்பை அவர்கள் ஏற்கெனவே ஏற்படுத்திக்கொண்டுவிட்டார்கள். ஓ, நாம் முடிவுக்கு மிக அருகாமையிலே இருக்கிறோம். அங்கே அதற்கு அந்தளவு தான் இருக்கிறது. சினேகிதரே! நாம் முடிவு காலத்தில் இருக்கிறோம். "மிருகத்திற்கு ஒரு சொரூபத்தை உண்டாக்குவோமாக'' என்பார்கள். ஒரு சொரூபம் என்பது என்னவெனில், இன்னொன்றைப் போல் தோற்றமளிக்கும் ஒன்றாகும். புரிந்து கொண்டீர்களா? இப்பொழுது நாம் முடிவு காலத்தில் இருக்கிறோம்.

125. இப்பொழுது, இந்த காலத்தின் முடிவில் இங்கே கவனி யுங்கள். இப்பொழுது தானியேல் 2ம் அதிகாரம் 34, 35 ஆகிய வசனங்களிலே, அந்த சிலையை அவன் அதிகமான அளவு கருத்தூன்றி கவனித்தான். அவன் பார்த்துக்கொண்டிருக்கையிலே, கைகளால் பெயர்க்கப்படாத கல் ஒன்று மலையிலிருந்து பெயர்ந்து வந்து, அச்சிலையின் பாதத்தில் மோதி அதை நொறுக்கிப் போட்டது என்பதை கவனித்தான். அது அச்சிலையின் தலையில் மோதவில்லை, இப்பொழுது அதன் பாதத்தில் தான் அக்கல் மோதியது. அதுவே முடிவு காலமாயுள்ளது. அந்த பத்து விரல்களின் காலம்.

126. திரு ஐசன்ஹேவர் அவர்கள் ஜனாதிபதி பதவிக் காலம் முடியும் முன்னர்; அமெரிக்காவில் கடைசியாக வந்த ப்ராடெஸ்டெண்ட் ஜனாதிபதி அவர்- இனிமேல் அப்படி ஒருவர் வருவாரோ என்பது எனக்கு சந்தேகமாயிருக்கிறது, ஆனால் அப்பொழுது... உங்களுக்குக் காண்பிப்பதற்காகத் தான்.... மக்கள் விழிப்படைவார்களானால் நல்லது. ருஷ்யா வுடனான தனது கடைசி சந்திப்பிலே, அப்பொழுது, ஐந்து கிழகத்திய கம்யூனிஸ்ட் நாடுகளும் ஐந்து மேற்கத்திய நாடுகளும் சந்தித்தன. திருவாளர் ஐசன்ஹோவர் மேற்கத்திய நாடுகளுக்கு தலைமை வகித்தார். நான் அறிந்திருக்கிறப்படி, எனக்குக் கூறப்பட்டபடி, குருஷ்சேவ் என்பதற்கு ருஷ்ய மொழியில் 'களிமண்'' என்ற அர்த்தமாம். ஆங்கிலத்திலே ஐசன் ஹோவர் என்பதற்கு இரும்பு

கலந்ததாகக் கண்டீரே.... ஆகிலும் இதோ களி மண்ணோடே இரும்பு கலவாதது போல அவர்கள் ஒருவரோ டொருவர் ஒட்டிக் கொள்ளாதிருப்பார்கள் (தானி 2:43). ஆனால் அவர்கள் தங்களுக்குள் தங்கள் வித்துக்களை கலந்து அதன் மூலம் ஒருவர் மற்றவருடைய வல்லமையை முறியடிப்பதற்காக முயற்சி செய்வார்கள்.'' புரிந்து கொண்டீர்களா?

121. தானியேல் அச்சொப்பனத்தை வியாக்கியானம் செய்தபடி, பொன்னாலான அத்தலை நேபுகாத்நேச்சார் ஆவான். அவன் கூறினான், “உமக்குக் கீழ்த்தரமான வேறொரு இராஜா உமக்குப் பிறகு தோன்றுவான்'' அவன் தான் மேதிய பெர்சியனாகிய தரியு ஆவான். அவன் வந்து புறஜாதி சாம்ராஜ்யத்தை எடுத்து ஆளத்துவங்கினான். மேதிய பெர்சிய இராஜ்யத்திற்குப் பிறகு அடுத்ததாக வந்தது எது? கிரேக்கர்கள். மகா அலெக்சாண்டர் ஆண்டான். கிரேக்கர்கள் இராஜ்யத்தை எடுத்துக்கொண்டார்கள். அதன்பிறகு கிரேக்கரிடமிருந்து இராஜ்யத்தை எடுத்துக் கொண்டது யார்? ரோமர்கள். அது முதற்கொண்டு புறஜாதி யாரை ஆண்டு கொண்டு வந்தது யார்? ரோமர்கள் - ரோமர்கள் தான். இப்பொழுது, அதுவே இரும்பாயிருக்கிறது.

122. பிறகு, கவனியுங்கள், ரோமாபுரியானது முடிவு வரையிலும் நிலைத்திருக்கிறது, ஏனெனில் அது கால்விரல்களிலும் கூட காணப்படுகிறது. அவன் களிமண்ணைப் பார்த்தான் - அது மக்களைக் குறிக்கிறது, நாம் அதனால்தான் உண்டாக்கப்பட்டிருக் கிறோம். இரும்பானது ரோமாபுரியின் வலுமையைக் குறிக்கி றது. அது சகல தேசங்களில் வியாபித்து நிற்கிறது. வானத்தின் கீழே , சகல தேசத்தார் மேலும் ரோமுக்கு வல்லமை உண்டாயிருக்கிறது.

123. உலகிலே ஒரு யுத்தத்தை துவக்கவோ, அல்லது அதை நிறுத்திவிடவோ ஒரேயொரு மனிதனால் இயலும். அதற்காக அவர் ஒன்றும் செய்ய தேவையில்லை. ஒரு வார்த்தை சொல்லுவது மாத்திரம் போதும், அதைக் கொண்டு அவர் செய்வார். அதுதான் போப். "கத்தோலிக்கன் ஒருவனும் ஆயுதத்தை எடுக்கக் கூடாது'' என்று அவர் சொன்னால் போதும். அதுவே யாவற்றுக்கும் முடிவானதாக இருக்கும், சகோதரனே. நீங்கள் என்ன வேண்டுமானால் பேசலாம். கிறிஸ்தவ அகிலத்தின் மிகப் பெரும் பகுதி கத்தோலிக்க மதமாயிருக்கிறது. புரிந்து கொண்டீர்கள்?



இப்போது நீ அறிந்து உணர்ந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டு (அது அவரது நகரம்) கிறதற்காக கட்டளை வெளிப்படுவது முதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும் ஏழு வாரமும்...'' எழுபது வாரங்களின் இந்த ஏழு வாரங்கள்.

101. அதை நாம் எடுத்துக்கொள்ளுகிற வரையிலும் பொறுத்திருங்கள். ஓ, என்னே ! அது ஒரு ஆசீர்வாதமாயிருக்கிறது. எனவே நான் ஒரு கயிற்றை எனக்கு எடுத்துக்கொண்டு இங்கே இந்த இடத்தில் என்னைக் கட்டி வைத்துவிடப்போகிறேன்....

102. முழுக்காலமும் முடிவு வரையிலும் அதை வெளிப்படுத்தினான். ''அந்த இரண்டு ஆண்டுகள் முடிந்து சிறையிருப்பும் நிறைவேறித் தீரப்போகிறது என்கிற விஷயத்தை மட்டும் நான் உன்னிடம் கூறப்போகிறதில்லை” என்று அவன் கூறினான். அந்தத் தீர்க்கதரிசி கூறிய வண்ணமாகவே, அவர்கள் அங்கே சரியாக எழுபது ஆண்டுகள் மாத்திரமே தங்கியிருந்தார்கள். அதன் முடிவில் அவர்கள் அங்கிருந்து புறப்பட்டுச்சென்று விட்டார்கள். ஏசாயா - நான் தானியேலைப் பற்றி குறிப்பிடுகிறேன். தானியேல் அத்தீர்க்கதரிசியை விசுவாசித்தான். எனவே அவன் இங்கே ஆயத்தமாக இருந்தான்.

103. அவன்... காபிரியேல் வந்தபொழுது, “முடிவு வரைக்கிலும் உள்ள சகல காலத்தின் காரியத்தையும் நான் உனக்குக் காண்பிக்கவே வந்திருக்கிறேன்'' என்று அவனிடம் கூறினான். பாருங்கள்?

...அருவருப்பானது... முடிவு பரியந்தமும் அவன் பாழாக்குவான்...'' (சகலவற்றின் முடிவு என்பது தான் அங்கே Consummation என்ற வார்த்தைக்கு அர்த்தமாம்).

104. ''என்ன நடக்கப்போகிறது என்பதை நான் உனக்குக் காண்பிப்பேன்'' என்றான். இப்பொழுது கவனியுங்கள். இதை அறிந்து கொள்ளுங்கள். 'நான் ...தானியேலே, நான் உன்னிடம் அனுப்பப்பட்டேன். இப்பொழுதிலிருந்து உலக முடிவு வரைக்கிலும், யூதர்களுக்கும், எருசலேமுக்கும் என்ன தீர்மானிக் கப்பட்டுள்ளது என்பதை உனக்கு அறிவிக்கவே வந்தேன். ஏனெனில் பரலோகத்தில் நீ மிகவும் பிரியமானவன். உன் ஜெபம் கேட்கப்பட்டது” என்றான்.

105. இப்பொழுது, போதனை கற்க வந்தோரே இதை புரிந்து கொண்டீர்களா? இந்த எழுபது வாரங்கள் என்னவென்று நாம் கண்டுபிடித்துவிட்டோமானால், அப்பொழுது, சகலவற்றின் முடிவும் எப்பொழுது என்பதையும் நாம் அறிவோம். ஓ, என்னே! அதை அறிய

தேவன் நமக்கு உதவி செய்வாராக. இப்பக்கங்களில் ஏதோ ஒன்றில் அதைப் பற்றி சரியாக, அதாவது, அப்பொழுது இருந்த காலத்திலிருந்து இந்தக் காலம் வரையிலும், முடிவு பரியந்தமும் உள்ளவற்றையெல்லாம் சரியாக அப்படியே நமக்குக் கூறுகிறது. ஒரு நிமிடம் கூட அதில் பிசகிப்போகாது. தேவனுடைய மகத்துவமான வார்த்தையானது எப்படிப்பட்டது!

106. தேவன் பூமியை உண்டாக்கி, அதை அதன் சுற்றுப் பாதையில் அமைத்தபோது - அன்றொரு நாள் இரவில், ஞாயிறு இரவில் நான் பிரசங்கிக்கையில் எவ்வாறு அங்கே ஒன்றும் பிசகாமல் சரியாக இயங்குகிறது என்பதைப் பற்றிப் பிரசங்கித்தேன். இப்பூமியானது மிகவும் முழுநிறைவாக துல்லியமாக சுழலுகிறது. அதினால் அவர்களால், இன்றிலிருந்து இருபது ஆண்டுகளில் எப்பொழுது சூரியனும் சந்திரனும் கடந்து செல்லும் என்பதை அந்த சரியான நிமிடத்தையும் கூறி கணக்கிட்டுக் கூற முடியும். இவ்வுலகில் நாம் பெற்றிருக்கிற எந்தவொரு கடிகாரத்தையும் கொண்டு சரியாக என்னால் உங்களுக்கு அதைக் கூற முடியாது, நமக்கிருக்கிற மிகச் சிறந்த கடிகாரம் கூட மாதத்திற்கு இரண்டு அல்லது மூன்று நிமிடங்கள் பிந்திப்போகும். அல்லது இரண்டு அல்லது மூன்று நிமிடங்கள் முந்திப் போகும். அந்த அளவுக்கு முழு நிறைவான, துல்லிய மானதை நம்மால் உண்டாக்க இயலாது, ஏனெனில் பரிபூரண மானது, முழு நிறைவானது ஒன்றேயொன்று தான் உண்டு. அவர்தான் தேவன். தேவனும் அவரது வார்த்தையும் ஒன்று தான். எனவே தேவனுடைய வார்த்தையானது முழு நிறைவானது - பரிபூரணமானது.

107. நாம் இந்த நாட்களைப் பற்றி கண்டு கொண்டோமானால், அப்பொழுது, எப்பொழுது சகலவற்றின் முடிவும் இருக்கும் என்பதையும் கண்டு கொள்வோம். அதை நீங்கள் புரிந்து கொண்டீர்களா? முடிவுபரியந்தமும் அது தீர்மானிக்கப் பட்டுள்ளது.

24ம் வசனம்... உன் ஜனத்தின் மேலும் உன் .... நகரத்தின் மேலும் (அதுதானே எருசலேமாகும்.... 21வது - 24 வசனம் இங்கே இருக்கிறது. இயேசுவும் இதைப் பற்றி மத்தேயு 24ம் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளார்).

108. இப்பொழுது சகோதரர் காலின்ஸ் அவர்களே! - அவர் இக்காலையில் இங்கே இருப்பாரானால்... அவர் இங்கே இருக்கிறாரா இல்லையா என்பது எனக்குத் தெரியவில்லை - கேள்வி நேரத்தின் போது அவர் அன்றொரு நாள் ஒரு கேள்வியைக் கேட்டார். (சகோதரன்



கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்தியடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை. தேவ எக்காளம் முழங்கும், அப்போது மரித்தவர்கள் முதலாவது உயிரோடெழுந்திருப் பார்கள், பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் (எடுத்துக்கொள்ளப்பட்டு, (ஆமென்!) (நாம் இங்கே இந்த இடத்தில் தான் சந்திக்கிறோம்) இருப்போம்" (1தெச.4:15,16). நீங்கள் அங்கே இருக்கிறீர்கள். நாம் எங்கேயுள்ளோம்? சரியாக இந்த இடத்தில். மேசியா எங்கே சங்கரிக்கப்பட்டார்? வேதவாக்கியம் கூறுகிற அதே இடத்தில் தான். எங்கே அந்த எழுபதாவது வாரமானது துவங்கும்? இந்த சபையானது முற்றாக துண்டிக்கப்பட்டதுமே சரியாக அந்த நேரத்தில்தான். பின்பு தேவன் யூதரிடம் திரும்பிச் செல்லுகிறார்.

119. சபையானது எடுக்கப்பட்டு போய்விட்ட பிறகு, யூதர்களின் வேளையானது வருகிறது என்பதை நீங்கள் நினைவில் கொண்டிருக்கவில்லையா? ஆனால் முதலாவதாக, அடுத்த படியான நிகழ்வு வரிசைக்கிரமத்தில் என்னவெனில், புறஜாதியார் மத்தியில் ஒரு ஜாதியாராக ஒரு எழுப்புதல் உண்டாகி வல்லமையான ஜாதி உருவாவது கிடையாது. வரிசைக்கிரமாக நிகழ வேண்டியவைகளில் அடுத்தபடியாக உள்ளதென்னவெனில், தேவனுடைய இராஜ்யம் வருதல், கிறிஸ்துவின் வருகையாகும்.

120. நீங்கள் விரும்பினால், நாம் இப்பொழுது தானியேலின் புஸ்தகம் 2ம் அதிகாரம் 34ம் வசனத்திற்கு செல்லலாம். தானியேல் 2ம் அதிகாரம் 34, 35 வசனங்கள் - தானியேலுக்குக் கொடுக்கப்பட்ட பொழுது - தானியேலுக்கு அத்தரிசனம் கொடுக்கப்பட்ட பொழுது, அதில் அவன் தன் ஜனங்களின் காலமானது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு முடிவுற்றிருந்ததையும், புறஜாதியாரின் நாட்களின் வருகையையும், அம்மகத் தான பெரிய கல்லைக் குறித்த தரிசனத்தையும் அவன் கண்டான். அல்லது அந்த பெரிய பயங்கரமான சிலையை அவன் கண்டான். அதற்கு பொன்னாலாகிய தலை உண்டாயிருந்தது, அதன் மார்புப் பகுதி வெள்ளியினால் ஆனதாயிருந்தது (இப்பொழுது கவனியுங்கள், இங்கே உலோகங்கள் படிப்படியாக கடினமான உலோகத்திற்கு மாறுகிறது, பொன்னிலிருந்து வெள்ளிக்கு) அடுத்த தாக, அச்சிலையின் தொடைப்பகுதி வெண்கலத்தால் ஆனதாயிருந்தது. பிறகு கால்கள் பாதங்கள் இரும்பினாலானது. ஆனால் கால் விரல்கள், பத்து விரல்கள், அவைகள் யாவும் இரும்பும் களிமண்ணும் கலந்ததாயிருந்தது. "நீர் இரும்பை களி மண்ணோடே

சென்றார்கள். அங்கேயிருந்த துருக்கியப் படைகள் ஒரு துப்பாக்கி ரவையைக் கூட சுடாமல் தளபதி ஆலென்பி அவர்களிடம் சரணடைந்தனர். அப்போதிலிருந்து தேவன் முசோலினியின் இருதயத்தையும், ஹிட்லரின் இருதயத்தையும், ஸ்டாலினுடைய இருதயத்தையும் கடினப் படுத்திக்கொண்டேயிருந்ததினால், அத்தேசங்களிலெல்லாம் மனிதர்கள் யூதர்களை பகைக்கத் துவங்கினர்.

116. அதன்பிறகு, அம்மகத்தான பறவைகளாகிய ஈஸ்ட்டர்ன் ஏர்லைன்ஸ் விமானங்கள் அல்லது 'பான் அமெரிக்கன் ஏர்லைன்ஸ்' விமானங்கள் அவர்களை ஏற்றிக் கொண்டு அங்கே பறந்து சென்றன. அது டி.டபுள்யூ.ஏ என்ற விமானக் கம்பெனி என்று நம்புகிறேன். அதைப் பற்றி "லைஃப்' அல்லது 'லூக்'... அது 'லைஃப்' என்ற பத்திரிக்கை தான் என்று கருதுகிறேன். அதில் அதைப்பற்றி கடந்த மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு முன்பாக செய்தி வெளியிட்டிருந் தார்கள். கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக தங்கள் சுய தேசத்தை விட்டு சிதறிப் போயிருந்த யூதர்களை தேவன் திரும்ப கூட்டிச் சேர்த்துக்கொண்டேயிருக்கிறார், அந்த வேளையில் புறஜாதியார் தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டேயிருக்கி றார்கள். இப்பொழுது புறஜாதியார், வெளிப்படுத்தின விசேஷம் 3ம் அதிகாரத்தின்படி, கிறிஸ்துவை சபையை விட்டே வெளியே புறம்பாக்கிப் போட்டுவிட்டார்கள். அவராலேயே தம் சபைக்குள் மறுபடியும் பிரவேசிக்க இயலவில்லை. அவருக்கு போவதற்கு எந்த ஸ்தலமும் இல்லை. அவர் புறக்கணிக்கப் பட்டிருக்கிறார். இது எடுத்துக்கொள்ளப்படுதலுக்கான வேளையா யிருக்கிறது.

117. மீட்கப்பட்டோர் யாவரும் இக்காலத்திலே... இங்கே... இந்த சிறு புள்ளிகள், உயிர்த்தெழுதலில் பரிசுத்தவான்கள் மேலே போவதைக் குறிக்கின்றன.... நாம் யாவரும் ஒன்று சேர்ந்து இங்கே சந்திக்கிறோம் என்பதை நீங்கள் இங்கே பாருங்கள். 'கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம், நித்தியரையடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை'' என்று வேதம் கூறுகிறது. (1 தெச. 4:15). இங்கே , இந்த, இந்த, இந்த காலம் முதற்கொண்டு உள்ளவர்கள்.

118. இப்பொழுது, பெந்தெகொஸ்தே சகோதரரே! நீங்கள் எவ்வாறு இதை லவோதிக்கேயா சபைக் காலத்தோடு சம்மந்தப்படுத்திப் பேச முடியும்? அவர்கள் இந்த ஒவ்வொரு காலங்கள் தோறும் நித்திரை செய்து காத்துக் கொண்டிருக் கிறவர்களாவர் உயிரோடிருக்கும் நாம் (இங்கேயிருக்கிற அந்த சிறிய மீதியாயிருக்கிற கூட்டத்தினர்),



காலின்ஸ் என்று நான் அவரை அழைப்பது சரிதான் என்று நான் கருதுகிறேன்). பாழாக்கும் அருவருப்பு என்றால் என்ன அர்த்தம் என்பதே அவரது கேள்வியாகும். (பார்த்தீர்களா?) இயேசு அதைப் பற்றி மத்தேயு 24 ம் அதிகாரத்தில் பேசினார் என்று நாம் பார்த்தோம். ஆம், மத்தேயு 24:15.

109. இப்பொழுது நான் அதை விரைவாக எடுத்துக்கொள்கி றேன். அப்பொழுது நீங்கள் தானியேலிருந்து குறிப்பிட்டுள்ள அதே காரியத்தைக் குறித்து, இயேசுவும் பேசுவதைக் காணலாம். குறிப்பெடுத்துக் கொள்கிறவர்களுக்காகக் கூறுகிறேன். மத்தேயு 24:15. நீங்கள் ஒவ்வொருவரும் விசேஷமாக இன்றிரவிலும், அடுத்த ஞாயிற்றுக்கிழமையிலும், பென்சில்களையும், தாள்களையும் கொண்டு வருமாறு விரும்புகிறேன். ஏனெனில்... 24 ம் அதிகாரம் 15 வசனம் (மத்தேயு).

மேலும், பாழாக்கும் அருவருப்பைக் குறித்து தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே. (இது 486 ஆண்டுகளுக்கு முன்னால் உள்ளதாகும்) தானியேல் தீர்க்கதரிசி... ( வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன்)... (உங்களுடைய வேதாகமத்தில் பாருங்கள் அது வளை அடைப்புக் குறிகளுக்குள் எழுதப்பட்டுள்ளது) ("வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன்'' என்ற வாக்கியம் வளை அடைப்புக்குறிகளுக்குள் தான் ஆங்கில வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தமிழில். அவ்வாறில்லை - தமிழாக்கியோன்).

110. இப்பொழுது அவர் யூதர்களிடம் பேசிக்கொண்டிருக்கிறார். ''இந்த ஆலயத்தைக் குறித்து என்ன? எப்பொழுது இது அழிக்கப்படும்? எப்பொழுது அது திரும்பக்கட்டப்படும்? ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராதபடி ஆக்கப்படும்? இதெல்லாம் எதுவரைக்கிலும் இருக்கும்?'' என்கிற விஷயங்களை யெல்லாம் அவர்கள் அறிய விரும்பினார்கள்.

111. "பாழாக்கும் அருவருப்பை அங்கே நீங்கள் நிற்கக்காணும் போது...'' தானியேல் பரிசுத்த ஸ்தலத்தில் நின்றிருந்த போது.... ''இது வந்து நிறைவேறுவதை நீங்கள் காணும்போது தான் என்ன பேசுகிறோம் என்பதைப் பற்றி வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன்...'' என்று அவர் கூறினார். எனவே தான் நாம் தேவனிடம் சந்தேகத்தின் நிழல் ஒன்று கூட இல்லாதபடி அதை நமக்காக பரிபூரணமாக நிறைவானதாக ஆக்கித் தரும்படி ஜெபித்துக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஏனெனில் அவ்விஷயங்களுக்கு நாம் நமது சொந்த வியாக்கியானத்தைப் போடக்கூடாது. கர்த்தர்

உரைக்கிறதாவது என்னவென்றால் என்பதன் மூலமாகத்தான் அது வரவேண்டும். எனவே, நான் அதை சரியாகப் புரிந்துகொள்ளுகிற வரையிலும் நான் அதை அங்கே தான் விட்டுவிடுகிறேன்.

112. அவனுக்கு யாவற்றையும் வெளிப்படுத்தினான். அந்த அருவருப்பானது... 'எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன்'' என்ற தீர்க்கதரிசனத்திற்கு (ஓசியா 11:1) கூட்டு அர்த்தம் உள்ளது போல, இதுவும் உள்ளது. இஸ்ரவேல் மக்கள் வெளியே அழைக்கப்பட்டனர் (எகிப்தை விட்டு வெளியே வர - தமிழாக்கியோன்) அதே போல் இயேசுவும் வரவழைக்கப்பட்டார் (எகிப்திலிருந்து வரழைக்கப்பட்டார் - தமிழாக்கியோன்) நான் இங்கே நின்று கொண்டிருப்பது எவ்வளவு நிஜமாயிருக்கிறதோ, அதே போல அவ்விஷயமும் சரியாக அப்படியே நிச்சயமாக நடக்கும். அவர் யாவற்றையும் மறைவாக ஆக்கி வைத்திருக்கிறார்.

அதை அவர் ஒரு வழியில் அவ்வாறு செய்திருக்கிறார். யாவற்றையும் சபை அறியாதபடி மறைத்து வைத்திருக்கிறார். ஓ, நாம் அந்த ஆறுவிதமான காரியங்களைப் பற்றி படிக்கப்போகிறோமே, அதற்குள் நாம் போகையில், அப்பொழுது, எவ்வாறு அவர் இதெல்லாவற்றையும் சபை அறியாதபடி மறைத்து வைத்திருக்கிறார் என்பதையும் அவ்வாறு அவர் செய்ததால், அவர் எப்போது வருவார் என்பதை சபை அறியாததால், சபையானது அசதியாயிராமல் விழிப்பாய் இருக்கட்டும் என்பதற்காக அவர் செய்தார் என்பதையும் நாம் அறிவோம். ஆனால் இப்பொழுது, சபைக் காலம் முடிவடையப் போகிறது. ஆகவே, அது வருகைக்காக இப்பொழுது ஆயத்தமாயுள்ளது. அது ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது.

113. வேதப் புஸ்தகத்தில் மிக மிக முக்கியமான வேத வாக்கிய மாக இந்த ஒரு வசனம் இருக்கிறது. அது என்ன கூறுகிறது? அதுதானே யூத தேசத்தின் யூத மக்களின் காலத்தின் முடிவைப் பற்றி கூறுகிறது. இந்த வேதவாக்கியமானது, எழுபது வாரங்களைப் பற்றிய இவ்வேத வாக்கியங்களானது, தானியேல் ஆரம்பித்த அவ்வேளை துவங்கி, உலக முடிவின் காலம் முடிய உள்ளதைப் பற்றி வெளிப்படுத்தி, சரியாக அந்த நேரத்தைப் பற்றி எடுத்துரைக்கிறது. அது மகத்தான நேரங்காட்டிகளில் ஒன்றாகக் காணப்படுகிறது. ''அந்த வாரத்தின் கிழமை என்ன என்பதை அறிய வேண்டுமானால், காலண்டரைப் பாருங்கள்'' என்றும் "என்ன காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை அறிய வேண்டுமானால், யூதர்களைப் பாருங்கள்'' என்றும் நான் கூறுவதுண்டே, அதை எத்தனை பேர்கள்



தேவன் யூதரோடு இடைப்பட்டார், அல்லது அவர் ஒரு போதும் அதற்குப் பிறகு யூதரோடு இடைப்படவில்லை. அவர்களை அவ்வாறு ஆக்குவதற்கு அவருக்கு நீண்ட காலம் பிடித்தது ...... சகல புறஜாதியாருக்குள்ளும் யூதர்களை சிறைப்பட்டுக் போகச் செய்ய அவருக்கு நாற்பதாண்டுகள் பிடித்தது. புறஜாதியாரின் நாட்கள் முழுவதிலும், அவர்களைப் பற்றிய வேத வாக்கியத்தை நிறைவேறச் செய்வதற்காக அவர் அவர்களை அதற்கான ஆயத்த நிலையிலே தயார் செய்து கொண்டிருந்தார். நான் கூறுவதை புரிந்து கொண்டீர்களா? புரிந்து கொண்டவர்கள் யாவரும் ஆமென்'' என்று கூறுங்கள் (சபையார் '' ஆமென்'' என்று பிரதியுத்தரம் கூறுகிறார்கள் - ஆசி).

114. இப்பொழுது என்ன நடந்திருக்கிறது? இந்தக் கடைசி சபைக் காலத்திற்கு மேலே உற்று நோக்குங்கள். சிறிதளவு உள்ள கால நீட்டிப்பைப் பார்த்தீர்களா? புறஜாதி நாட்கள் முடி வடைந்து கொண்டிருக்கின்றன. கடந்த நாற்பதாண்டுகளாக யூதர்கள் தங்கள் சுய தேசத்திற்கு, எருசலேமுக்கு திரும்பிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். நாம் எங்கேயிருக்கிறோம் என்பதை கண்டு கொண்டீர்களா? மேசியா சங்கரிக்கப்பட்டது முதற்கொண்டு, தீத்து தேவாலயத்தை பாழாக்கி, யூதர்களை சிதறடித்தது வரையிலும் நாற்பதாண்டுகள் ஆயிற்று. இப்பொழுது யூதர்களை அவர்களுடைய சுயதேசத்திற்குள் விரட்டியடித்து அனுப்புவதற்காக எல்லாவிதமான பார்வோன்களின் இருதயங்களை கடினப்படுத்துவதற்கு தேவன் இன்னொரு நாற்பதாண்டுக் காலத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார். ஆனால் இன்றைக்கு அவர்கள் மீண்டும் தங்கள் சுய தேசத்திற்கு திரும்பி வந்துவிட்டார்கள். சபையானது அதன் முடிவு காலத்திலுள்ளது. ஆமென்! நான் வாசிக்க முயலுகிறேன், ஆனால் என்னால் இயலவில்லை.

115. கவனியுங்கள்! யூதர்கள் தங்களுடைய சுயதேசத்தில் இருக்கிறார்கள், அங்கே அவர்கள் திரும்பிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். "உலக யுத்தத்தின் மும்முரம் தளர்வுறுதல்' என்ற புத்தகத்தின் இரண்டாவது வால்யூமை நீங்கள் வாங்கிப் படித் தீர்களானால், அதில், முதலாம் உலகப் போரின் முடிவுக்குப் பிறகு, ஜெனரல் ஆலென்பி அவர்கள் எருசலேமுக்கு மேலாக விமானத்தில் பறந்து சென்று, அதைக் கைப்பற்றி, எருசலேமைப் பிடித்தார். அங்கே அந்த கிறிஸ்தவ மனிதர்கள் மரியாதை நிமித்தம் தங்கள் தொப்பிகளை கழற்றினவர்களாக எருசலேமுக் குள் அணிவகுத்துச்

அங்கே அவ்வாறு உள்ளன. அது சரியாக பொருத்தமாயிருக்கிறதை நாம் அறிவோம்.

111. தேவன் எப்பொழுதும் ஸ்தாபிக்கப்பட்ட மார்க்கத்திற்கு எதிராகவே இருந்தார். எப்பொழுதும் அவ்வாறே இருந்து கொண்டும் இருக்கிறார் என்பதையும் நாம் அறிவோம். ஆம், ஐயா! “நிக்கொலாய் மதஸ்தருடைய போதகத்தை நான் வெறுக்கிறேன்'' என்று அவர் கூறினார். “நிக்கொலாய் மதஸ்தர்'' என்றால் ''நிக்கோ '' என்பதற்கு "மடங்கடித்தல்'', ''மேற்கொள்ளுதல்'' என்று அர்த்தங்கள் உண்டு. ''லெய்டி' என்றால் சரீரம், சபை என்று பொருளாகும். ஆகவே 'சபையை மடங்கடித்தல்'' அல்லது 'சபையை மேற்கொள்ளுதல்'' என்பது 'நிக்கொலாய் மதஸ் தருடைய போதகம்'' என்ற வார்த்தைக்கு அர்த்தமாகும். அதாவது தங்களுக்கென ஒரு பரிசுத்த மனிதனை தங்கள் மேல் ஏற்படுத்திக் கொண்டு, அவனை சபைக்கு மேலாக மேலாதிக்கம் கொண்டவனாக சபையை மடங்கடித்து ஏற்படுத்திக் கொள்ளு தல் என்பது இதன் உண்மையான அர்த்தமாகும். நாமோ பிள்ளை களாயிருக்கிறோம்; தேவனாகிய இராஜா ஒருவர் மாத்திரமே நமக்கு மேலாக உண்டு. நமக்கு ஒரேயொரு பரிசுத்தர் உண்டு; அவர்தான் தேவன். ஆமென்! அவர் நமது மத்தியில் பரிசுத்த ஆவியின் ரூபத்தில் இருக்கிறார். அவரே நமது பரிசுத்தர்.

112. அந்த யூதருடைய காலத்தைக் குறித்து நாம் ஆராய்ந்து வருகையில், அங்கே வரலாற்றின்படியேயும் ஆண்டுக் குறிப்பிட்டபடியேயும் சரியாக அவர்களுக்கு அங்கே 69 வாரங்கள் உண்டாயிருந்ததைக் குறித்து, உறுதிபட நிச்சயமாக அதற்கு ஆதரவான முடிவை நாம் கண்டு கொண்டோம். தேவனுடைய தீர்க்கதரிசன ஆண்டின் படியே அது இருக்கிறது என்பதை தீர்க்கதரிசன காலண்டரின் வரலாற்றை பழைய ஏற்பாட்டிலிருந்து புதிய ஏற்பாடு வரைக்கிலும் எடுத்துரைத்து, சரியாக அது அவவாறே இருக்கிறது என்பதை காண்பித்தேன். நாம் புறஜாதி சபையைக் குறித்து, அதனுடைய துவக்கத் திலிருந்து பார்த்து, அது கடைசி நாள் வரையிலும் உள்ளதைக் குறித்தும் பார்த்தோம். நாம் இப்பொழுது கடைசி காலத்தில் வாழ்கிறோம் என்பதை அறிவோம். ஆமென்! நீங்கள் புரிந்து கொண்டீர்களா?

இப்பொழுது இக்காலத்தில் கடைசி நாட்களிலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்றால், நாம் எங்கே இருந்து கொண்டிருக்கிறோம்? நீண்ட காலத்திற்கு முன்பாக... கவனியுங்கள்... இங்கே வரையப்பட்டிருக்கிற இந்தக் கோட்டை பாருங்கள். அங்கே



கேட்டிருக்கிறீர்கள்? அது சரிதான். இங்கிருந்து எடுக்கப்பட்ட தேவனுடைய காலண்டர் அங்கே இருக்கிறது. எந்தவொரு வேத விற்பன்னரும், வேத வல்லுனரும், எவரும் கூட யூதர்கள் தான் காலத்தைச் சுட்டிக் காட்டும் கடிகாரமாக இருக்கிறார்கள் என்பதைக் கூறிவிடுவர்.

இப்பொழுது என்ன சமயம் நமக்கு இருக்கிறது? நாம்... மக்கள் உஷணமடைந்துள்ளனர்... ஓ, நான்.....

114. புறஜாதிகளுக்கும் அதற்கும் சம்மதமேயில்லை. இந்த ஏழு முத்திரைகள், ஏழு வாதைகள், ஏழு ஆபத்துக்கள், ஏழு எக்காளங்கள் ஆகியவற்றுக்கு அவர்களோடு சம்மந்தமேயில்லை. புறஜாதி சபையாகிய நமக்கும் அதற்கும் சம்மந்தமேயில்லை. அது இஸ்ரவேல் மக்களைப் பற்றினதாக மட்டுமே இருக்கிறது. (எழுபது வாரங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார் - தமிழாக்கியோன்) ''தானியேலே உன் ஜனங்கள் மேலும், எருசலேமின் மேலும்'' என்று தான் சொல்லப்பட்டது.

115. இப்பொழுது, யூதர்கள் தங்களுடைய சுய தேசத்தில் வந்திருக்கும் போது மாத்திரமே தேவன் அவர்களோடு இடைபடுகிறார் என்ற உண்மைகளையும் இது தெரியப்படுத்துகிறது. அல்லேலூயா! அங்கே, சரியாக அங்கேதான் நான் மையப் பகுதியைப் போய் தொட்டுவிட்டேன் என்று நினைக்கிறேன். தானியேலின் காலத்திலிருந்த இஸ்ரவேல் காலத்திலிருந்து அவர்கள் கணக்கிட்டு... ஒரு பெரிய எழுத்தாளர்... அவரைப் பின்பற்றுகிறவர்கள் சிலர் இங்கேயிருக்கிறார்கள், ஆகவே நான் அதை கூறமாட்டேன். ஆனால் அக்காரணத்தினால் தான் அவர்களிடத்தில் தவறான விஷயங்களெல்லாம் உள்ளது.

116. ஏழாம் நாள் ஆசாரிப்பு சபையாக ஆவதற்கு முன்னால் அச்சபையார் மில்லர் என்பாரைப் பின்பற்றிக் கொண்டிருந்த போது, 1919-ல் அவர்கள் என்ன செய்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? அவர்கள் தங்களுக்கு செட்டைகளை உண்டாக்கிக் கட்டிக் கொண்டு, அன்று ஒரு நாள் காலையில் பறக்கப்போகிறோம் என்று கூறி எழுந்தார்கள். அதைப்பற்றி நீங்கள் 'கூரியர்'' என்ற செய்தித்தாளில் பார்த்திருக்கிறீர்கள். அவர்கள் அந்த மில்லரைட்டுகள் அவர்கள் தானியேலின் எழுபது வாரங்களைப் பற்றி போதிப்பார்கள். பார்த்தீர்களா? சில காலத்திற்குப் பிறகு, அவர்களுடைய தீர்க்கதரிசினியாகக் கருதப்பட்ட திருமதி எல்லன் வொயிட் என்ற அம்மையாரால், தங்களை மாற்றியமைத்துக் கொண்டு தங்களைத்

தானே செவன்த் டே அட்வென்டிஸ்டுகள் (ஏழாம் நாள்காரர்கள் - தமிழாக்கியோன்) என்று அழைத்துக் கொண்டார்கள். இப்பொழுது அவர்கள் தங்களுடைய பெயரை, ''தீர்க்கதரிசனத்தின் சத்தம்'' என்று மாற்றிக் கொண்டு விட்டார்கள். ஒரே விதமான மதக் கோட்பாட்டுக்கு மூன்று வெவ்வேறு பெயர்கள்.

117. இப்பொழுது, அவர்கள் தவறாயிருக்கிறார்கள். ஏனெனில், இந்த எழுபது வாரங்களை யூதர்கள், புறஜாதிகள் ஆகிய இருவருக்குமே சம்பந்தப்படுத்திப் போதிக்கிறார்கள். ஆனால் ஆண்டவரோ, இங்கே, 'அது உன் ஜனங்கள் மேல்...'' என்று தான் குறிப்பிட்டுள்ளார் பாலஸ்தீனாவுக்கு வெளியே யூதர்கள் இருக்கையில் அவர்களோடு தேவன் இடைபடுவதேயில்லை. மேசியா 72வது வாரத்தில் மேசியா சங்கரிக்கப்பட்டார் (தமக்காக அல்ல, நமக்காக) அப்பொழுது இஸ்ரவேல் மக்கள் சிதறடிக்கப் பட்டார்கள்; சமீபத்தில் சில ஆண்டுகளுக்கு முன்னர் தான் தங்கள் சுயதேசத்திற்கு வந்தனர். அதுவரைக்கும் அவர்கள் ஒருக்காலும் திரும்பி வரவேயில்லை. ஆகவே அந்த இடைப்பட்ட காலமானது சபைக் காலத்தின் நிமித்தமாக அந்தக் கணக்கில் சேர்க்கப்படவேயில்லை நீங்கள் அதைப் புரிந்து கொண்டீர்களா? (சபையார் ''ஆமென்'' என்று கூறுகின்றனர்ஆசி) அது 1919ம் ஆண்டு அல்ல. ஒரு காரியம் 1919- இல் நடைபெற்றது என்பதைக் குறித்து நான் உங்களுக்கு காண்பிக்க முடியும். ஆனால் அதுதானே, அந்த மூன்றாவது தூதனின் செய்தியானது உரைக்கப்பட்டபோது நடைபெற்றதாகும். அப்போது தான் சரியாக அந்த ஆபத்து' புறப்பட்டுச் சென்றது. ஆனால் அது அது அல்ல. .. யுத்தமானது மர்மமான முறையில் நின்று போன போதுதான் ஆகும். 7ம் அதிகாரத்திற்கு நாம் போகும் போது அதைக் குறித்துப் பார்க்கலாம். அத்தூதன், ''ஊழியக்காரராகிய யூதர்கள் முத்தியிரையிடப்பட்டுத் தீருமளவும் பூமியின் நான்கு காற்றுகளையும் பிடித்திருங்கள்'' என்று தன் செய்தியைக் கூறினான். அதைப் பற்றி நான் அநேக சமயங்களில் பிரசங்கிக்க நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். அவர்கள், புறஜாதிகளின் காலமெல்லாம் முடிந்து கடந்து செல்லும் வரையிலும் காத்திருந்தார்கள். அதன் பிறகு அவர் வரும் பொழுது, 1,44,000 யூதர்களை முத்திரையிடுகிறார்; அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்கின்றனர். வெளிப்படுத்தின விசேஷம் 7ம் அதிகாரத்தில் 1,44,000 பேர்கள் முத்திரையிடப்படுகின்றனர். நீங்கள் அதை படித்திருக்கிறீர்கள். ஏற்கெனவே, "நான் பார்த்தபோது, இதோ, தேவனுக்கு முன்பாக சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும், ஜனங்களிலும், பாஷைக் காரரிலுமிருந்து வந்ததும் திரளான கூட்டமாகிய ஜனங்கள் வெள்ளை



இருந்தான். வேதத்திலே நாம் ஒவ்வொரு காலத்தினுள்ளும் சென்று, அந்தந்த சபைக் காலத்தின் தூதனுடைய சுபாவமானது எவ்வாறிருக்கும் என்பதைக் குறித்து கண்டு கொண்டோம். வரலாற்றை நாம் எடுத்து ஆராய்ந்து, வேதம் கூறுகிறபடியான சுபாவத்தைக்கொண்டிருந்த அம்மனிதனை அங்கே நாம் கண்டுபிடித்தோம். அதிலிருந்து, அந்தக் குறிபிட்ட மனிதனே அந்த சபைக் காலத்திற்குரிய தூதன் என்பதை கண்டு பிடித்துக் கொண்டோம். பின்பு, நாம், என்ன ஆவியென்றும், அம்மனிதன் என்ன செய்தான் என்பதைக் குறித்தும் கண்டு கொண்டோம். அத்தூதன் ஆவியினால் நிரப்பப்பட்ட பரிசுத்த வான் என்பதையும் கண்டோம். பரிசுத்த ஐரேனியஸ், பரிசுத்த கொலம்பா இன்னும் ஏனையோரும் பரிசுத்த ஆவினால் நிரப்பப்பட்டிருந்தார்கள். நாம் திருவசனங்களின் வாயிலாக, இன்ன தன்மையுடைய ஆவியானது இன்ன தன்மையுடைய மனிதன் மேல் அதற்கான காலத்தில் இருக்கும் என்பதையும் கண்டு கொண்டோம். அது அவ்வாறுதான் உள்ளது. அது தவறாக இருக்கவே முடியாது. ஆமென். தேவனுக்கு மகிமையுண்டா வதாக. அது....

110. எனக்கு தெரியாது, சகோதரனே, தேவனுடைய வார்த்தையே பேசுகிறதாயிருக்கிறபடியால், நான் அறிந்திருக்கிற எல்லாவற்றையும் விட கூடுதலாக அது எனக்கு இருக்கிறது. தேவன் கூறுகிற எதையும் நான் கேட்கும் பொழுது, நான் அதற்கு “ஆமென்'' என்று கூறுகிறேன். அதுதான் சரி. அத்துடன் அது முடிவு பெறுகிறது. தேவன் அவ்வாறு கூறியுள்ளார். அதுவே கிரியை செய்கிறதாயிருக்கிறது. அவ்விதமாக சம்பவிக் கும் என்று தேவன் கூறினாரெனில், அதைக் குறித்து நாம் வரலாற்றிலும், திருவசனத்திலும் அப்படியே இருக்கக் காண்கிறோம். குறிப்பிட்ட இந்த சபைக் காலத்தைக் குறித்து நாம் வேதத்தில் படிக்கிறோமென்றால், அது என்ன செய்யு மென்பதைக் குறித்தும், அக்காலத்தில் என்ன சம்பவிக்கும் என்பதைக் குறித்தும், அக்குறிப்பிட்ட சபைக் காலத்திற்கு என்ன தன்மையிலான செய்தியாளன் - தூதன் இருப்பான் என்பதைக் குறித்தும் அறிந்து கொள்கிறோம். 'லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது என்னவெனில்...” “சர்தை, தீயத்தீரா சபையின் தூதனுக்கு எழுத வேண்டியது....” இன்னும் இந்த வெவ்வேறு சபைகள் யாவுக்கும் எழுதப்பட்டது. நாம் வரலாற்றில் இதைக் குறித்து ஆராய்ந்து பார்த்தால், அந்தந்த சபைக் காலத்தின் தூதனைக் குறித்தும், அவர் யார் என்பதைக் குறித்தும் அங்கே கண்டு கொள்கிறோம். எனவே அதனதனு டைய வரைபடத்தை வரைந்து, அத்தூதர்களின் பெயர்களை அந்தந்த சபைகளுக்கு கீழாக எழுதிக் குறிப்பிட்டோம். அவைகள்

யாரைக் குறித்து பேசிக் கொண்டிருந்தாரென்றால் .... அச்சபைக் காலங்களில் அம் மகத்தான நட்சத்திரங்களான மனிதர் யாவரும், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் குறித்தும், இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் உள்ள ஞாஸ்நானத்தைக் குறித்தும், தேவ ஆவி யாயைப் பெறுவதைக் குறித்தும், அன்னிய பாஷைகளில் பேசுவதைக் குறித்தும் பாஷைகளை, வியாக்கியானம் செய்வதைக் குறித்தும், சுகமளித்தலைக் குறித்தும், அற்புத அடையாளங்கள் செய்வதைக் குறித்தும் போதித்தவர்களாயிருந்தனர். அப்படிப்பட்டவைகள் தான் தேவனுடைய செயல்களாகும். அவர் தம்முடைய சிந்தையை மாற்றிக் கொள்ள முடியாது. ''நல்லது, இதுவே சபையைக் குறித்து என்னுடைய திட்ட மாயிருக்கிறது, அப்போஸ்தல சபையைக் குறித்து எனது அபிப்பிராயம் என்னவெனில், பிரமுகர்களைக் கொண்டதான சபையாக சபை இருக்கவேண்டும்' என்ற அல்ல, தேவன் மாற மாட்டார். அது இன்னமும் பரிசுத்த ஆவியாக இருக்கிறது.

108. நாம் அதை கவனித்துப் பார்த்து, அதன்பின்பு, தேவனு டைய சுபாவத்தைக் குறித்து கண்டுகொண்டோம். அதன் பின்பு வேதவாக்கியங்களை எடுத்துப் பார்த்தோம்; பிறகு, வரலாற்றை எடுத்துப் பார்த்தோம், அதுதானே தேவன் யோவான் மூலமாக வேத வாக்கியங்களில் கூறியபடியே நடைபெறும் என்று சொல்லப்பட்ட, முன்னுரைக்கப்பட்ட சம்பவங்கள் யாவும் அப்புறஜாதி காலத்தினுள், அந்தந்தக் காலத்தின்படியும், தேதியின்படியும், பிசகாமல் அப்படியே சம்பவித்தது.

109. நாம் தானே, லவோதிக்கேயா சபையின் காலத்திலே, அதைக்குறித்து, சந்தேகத்தின் எந்தவொரு நிழலுமின்றி, திட்ட வட்டமாக கண்டுகொண்டோம். நாம் தான் அக்காலத்திற் குரியவர்கள் என்பதை நாம் அறிவோம். நாம் லூத்தரன் காலத்தின் வழியாகக் கடந்து வந்திருக்கிறோம்; நாம் வெஸ்லியின் காலத்தின் வழியாகக் கடந்து வந்திருக்கிறோம் என்பதையும் நாம் அறிவோம். நாம் இப்பொழுது லவோதிக்கேயா வாகிய கடைசி சபைக் காலத்தில் இருக்கிறோம். அந்த சபைக்காலங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தூதர்கள் உண்டா யிருந்தனர். அச்சபைக் காலங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தூதர்கள் (செய்தியாளர்கள் - தமிழாக்கியோன்) உண்டாயிருந் தனர் என்பதை நாம் உணருகிறோம். நாம் அதைக் கண்டு கொண்டோம். ஏழு நட்சத்திரங்கள் அவருடைய கரத்திலிருந்தன; அவை தேவனிடத்தினின்று புறப்பட்டுச் சென்ற ஏழு ஆவிகளேயாம். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு செய்தியாளன் - தூதன்



அங்கி தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்துக் கொண்டு (யோவான் அவர்களைப் பார்த்தான்). அல்லேலூயா, ஆமென், மகிமையும் ஞானமும் கனமும் வல்லமையும் பெலனும் என்றென்றைக்கும் நமது தேவனுக்கே உண்டாவதாக; ஆமென்'' என்று அவர்கள் ஆர்ப்பரித்தார்கள் (வெளி. 7:9-12).

118. யோவானால் அவர்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் அவன் திரும்பி சீனாய் மலையின் மேல் (மகிமை!) ஸ்திரீகளால் (சபைகளால்) கறைப்படாத 1,44,000 பேர்களாகிய யூதர்களைக் காண்கிறான். அவர்கள் லூத்தரன், மெதோடிஸ்டு, பாப்டிஸ்டு, பிரஸ்பிடேரியான் போன்ற எந்தவொரு ஸ்தாபனத்தையும் சார்ந்து கொள்ளவில்லை, ஆனால் அவர்கள் துவக்க முதலே யூதர்களாகவே இருந்து தங்கள் யூத ஆசார நெறிகளை வழுவாது காத்து வந்தவர்களாக இருந்து வந்துள்ளனர். அவர்கள் தங்களுடைய ஆலயத்தை சீனாய் மலையின் மேல் கொண்டிருந்து, அங்கே தொழுது கொண்டவர்களாக இருந்து வந்துள்ளனர். அவர்கள் தான் அந்த 1,44,000. சபையானது மகிமையில் எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு அவர்கள் வருகிறார்கள்.

119. எனவே திரு. ஸ்மித் அவர்கள் தவறாயிருக்கிறார்கள். அவர் தவறாகத்தான் இருக்க வேண்டும்; ஏனெனில் இதை அவர் 1919இல் முடித்து அதிலிருந்து 1,44,000 பேர்களைப் பற்றிய காரியத்தை துவக்குகிறார். அப்படியானால் நீங்கள் ரஸ்ஸலைட்டுகள் போதனைகளுக்கு மீண்டும் வந்துவிடுகிறீர்கள். அது 1914 - இல் இயேசு வந்து, தமது சபையை 1919-இல் எடுத்துக் கொண்டு விட்டார் என்றும், இப்பொழுது, அவர் தாமே கண்ணுக்குப்புலனாகாத ஒரு இரகசியமான சரீரத்தில் இருந்து கொண்டு பூமி முழுவதும் சுற்றி வந்து, ரஸ்ஸலைட்டுகளாகயிருந்த தாத்தா, பாட்டிகளையெல்லாம் கல்லறைகளிலிருந்து உயிர்த்தெழச் செய்து கொண்டு வருகிறார் என்கிறார்கள். சுத்த அபத்தம் இது! தேவனுடைய வார்த்தைக்கு பொருத்த மற்றதாக இது இருக்கிறது. அது சரியானதாக தோற்றமளிக்காது. இல்லை, ஐயா, அது சரியாக இருக்காது.

120. ஆனால் தேவனிடத்திலிருந்து சத்தியம் இருக்கிறது. தேவன் ஒருவர்தான் அதை வெளிப்படுத்தி, அதை சரியாக அதற்குரிய இடத்தில் வைத்து மிகச் சரியாக நமக்கு காண்பிக்க முடியும். அவர் அதைச் செய்வார் என்று நான் விசுவாசிக்கிறேன். எனக்கு அது என்னவென்று தெரியாது. நான் உண்மையைச் சொல்லுகிறேன்....

எனக்குத் தெரியாது. ஆனால் அவர் அதைச் செய்வார் என்று நான் விசுவாசித்துக்கொண்டிருக்கிறேன்.

121. இதை நீங்கள் மனதில் கொள்ளுங்கள். ஆகவே நீங்கள் இதைக் காணுங்கள். இஸ்ரவேல் நாட்டிற்கு யூதர்கள் போகிற வரையிலும் தேவன் அவர்களோடு இடைபடவே மாட்டார்.

122. இஸ்ரவேலுக்குப் போவதைக் குறித்து பேசிக்கொண்டு இங்கே ஒரு சகோதரன் உட்கார்ந்துகொண்டிருக்கிறார், அவருக்கு நான் இதைத் தான் கூற முயற்சிக்கிறேன். இஸ்ரவேலை விட்டு விலகியிருங்கள்! யூதர்களை மனந்திரும்பச் செய்து குணப்படுத்த வேண்டும் என்று பேசுகிறவர்களே, நீங்கள் யாவரும் அவர்களை விட்டு அகன்று விடுங்கள். இந்த செய்தியானது முடிவடையும் முன்னர், ஒரே இராத்திரியில் வார்த்தையாலும் ஆவியாலும் இஸ்ரவேல் முழு ஜாதியாராக இரட்சிக்கப்படுவார்கள் என்பதை நீங்கள் காண்பீர்கள்; இது கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால் என்பதாக இருக்கிறது. வேதம் அவ்வாறே கூறுகிறது. ஆனால் சுவிசேஷமானது அவர்களுக்கு கூட இல்லை. அங்கே அவர்களுக்குள் சில மதம் மாறுபவர்கள் யூத சமயத்தை விட்டு வெளியேறி வந்து இரட்சிக்கப்படுகிறார்கள். அது உண்மைதான். என் முழு இருதயத்தோடு நான் அதை விசுவாசிக்கிறேன். ஆனால் நினைவில் கொள்ளுங்கள்; இஸ்ரவேல்; தங்கள் சுயதேசத்தை விட்டு வெளியேறியிருக்கையில், அவர்கள் இரட்சிக்கப்படுவதேயில்லை. இப்பொழுது அவர்கள் தங்கள் தேசத்திற்கு திரும்பிக்கொண்டிருக்கிறார்கள். ஒரு நாளிலே முழு தேசமாக அவர்கள் யாவரும் இரட்சிக்கப்படுவார்கள், வேதம் அவ்வாறு கூறுகிறது. ஒரு நாளானது இஸ்ரவேலர் எல்லோரையும் முழுவதுமாக தேவனிடத்தில் திரும்பக் கொண்டு வரும். அப்படிப்பட்டதான மகத்தான காரியம் இந்நாட்களில் ஒன்றில் இஸ்ரவேலை சந்திக்கும். அது அத்தேசம் முழுமையையும் அசைக்கும். ''ஒரே நாளில் நீர் இதைச் செய்தீர்'' என்று தீர்க்கதரிசி முழக்கமிட்டான். ஒரே நாளில் அவர்கள் அதைக் காண்பார்கள்.

123. மகத்துவமுள்ள காரியம் அங்கே உண்டாயிருக்கும். எனது கருத்து என்னவெனில், அவர்களுக்கென ஒரு மகத்தான தீர்க்கதரிசி இஸ்ரவேலுக்கு முன்பாக எழும்பி நின்று, மேசியா இன்னும் ஜீவிக்கிறார் என்றும் அவர்கள் புறக்கணித்த மேசியா வந்திருக்கிறார் என்று நிரூபிப்பான். ஏனெனில்...



ஒரு காலவரையறை அளிக்கப்படவில்லை. ஆனால் நமக்கு அடையாளம் இருக்கிறது. நமக்கு ஒரு அடையாளக் கம்பம் உள்ளது. அந்த அறுபத்தியொன்பது வாரங்களில் அல்லது 483 ஆண்டுகளில் யூதருக்கு தாம் என்ன செய்யப் போவதாகக் கூறினாரோ, சரியாக அப்படியே தேவன் அவர்களுக்கு செய்திட்டார். இன்னும் ஒருவாரம் மீதியாக விடப்பட்டிருக்கிறது. இன்னும் ஒருவாரம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

106. இப்பொழுது அந்தக் கணக்கை நாம் இங்கே சம்பந்தப் படுத்த முடியாது; ஏனெனில் இது புறஜாதி சபையாக இருக்கிறது. எத்தனைபேர்கள் அதைப் புரிந்து கொண்டீர்கள்? இங்கே இது வெளிப்படுத்தின விசேஷம் ஆகும். முதலாம் அதிகாரம் தொடங்கி, 3ம் அதிகாரம் வரையிலும்; லவோதிக்கேயா வரையிலும் நம்மை எடுத்துச் செல்லுகிறது. இப்பொழுது அது எவ்வாறு முழுவதும் சபை- சபை உலகைக் குறித்தே எடுத் துரைக்கிறது என்பதை நாம் சரியாக கண்டு கொண்டோம். பாவி, தான் இரட்சிக்கப்பட விரும்பினாலொழிய தேவன் அவனை சபையில் சேர்த்திடவேயில்லை. ஆனால் சபை உலகானது முழுவதும் வெண்மையாக இருந்தது. பிறகு நிக்கொலாய் மதஸ்தர் உள்ளே நுழைந்தனர்; அவர்கள் ஒரு ஸ்தாபனத்தை உண்டாக்கிட விரும்பினர். முக்கிய பிரமுகர்கள் உள்ளே நுழைந் தனர். இக்காரியம் ரோமாபுரியிலுள்ள நிசாயாவில், நிசாயா கவுன்சிலைக் கூட்டிய பொழுது நடந்தது. அவர்கள் என்ன செய்தனர்? சபையை அவர்கள் மதஸ்தாபனமாக ஆக்கினர். பிறகு அது கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்த ஆரம்பித்தது. பிறகு அடுத்த சபைக் காலத்தில் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தால் நிரம்ப பெற்றிருந்த கிறிஸ்தவமானது ஏறத்தாழ அடியோடு ஒழித்துக் கட்டப்பட்டது.

107. ஆனால் பின்பு, நீங்கள் யாவரும் அறிந்திருக்கிறபடி நான் சென்று, வரலாற்றையும், 'நிசாயா பிதாக்கள், ' 'நிசாயா கவுன்சிலுக்கு முந்தைய காலத்து பிதாக்கள்' போன்ற வரலாற்றுப் புத்தகங்களையும், என்னால் முடிந்த அளவு கிடைக்கக்கூடிய சபையைக் குறித்த அனைத்து வரலாற்றுப் புத்தகங்களையும், மிகவும் தொன்மை வாய்ந்த கையெழுத்துப் பிரதிகளையும் நான் பெற்றுக்கொண்டு, அவைகளிலிருந்து உங்களுக்கு எடுத்துக் காண்பித்தேன். அவைகளிலிருந்து, தேவன் பேசிக் கொண்டிருந்தது எந்த சபையோடு என்பதை உங்களுக்கு நிரூபித்துக் காண்பித்தேன். தேவன் மதஸ்தாபனமாக ஆகிய கத்தோலிக்க சபையோடோ அல்லது வேறு எந்த மதஸ்தாபனத்தோடே பேசிக் கொண்டிருக்கவில்லை. தேவன்

வந்தோம். ஏழு முத்திரைகள், ஏழு கோபகலசங்கள், ஏழு எக்காளங்கள் முதலிய யாவும் ஒன்றாக காட்சியளிக்கின்றன. அவை யாவும், யூதரோடும், பூமியின் மேல் உள்ள ஜனங்கள் மேலும் விழும் தேவனுடைய நியாயத் தீர்ப்பு, மீதியாயிருக்கிறவர்கள் ஆகியோருடன் சம்மந்தமுள்ள வையாகும். அவைகளைப் பற்றி நாம் பார்க்கப் போகிற ஒரு இடத்திற்கு நாம் வந்து கொண்டிருக்கிறோம்.

103. வரப்போகிற இந்த மகா உபத்திரவ காலத்திலே அங்கே லட்சக்கணக்கான புறஜாதியார் மரித்துப் போவார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அந்த புறக்கணிக்கப்பட்ட மணவாட்டி, ஸ்திரீயின் வித்தாகிய அம்மீதியாயிருக்கிறவர்கள், நித்திரை செய்யும் கன்னியர் அவர்கள். அவ்வுபத்திரவத்தின் வழியாக அவள் கடந்து செல்லுவாள். இவ்வெழுபது வாரங்கள் எவ்வாறு மிகவும் தெளிவாக இருக்கிறதோ அதைப் போலவே அதுவும் இருக்கிறது. அவர்கள் அதின் வழியாக கடந்து செல்லுவார்கள். எனவே இது வரையிலும் நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெறாதிருப்பின், உங்களால் இயன்ற அளவு விரைவாக அதைப் பெற்றுக்கொள்ளுங்கள். நாம் கடைசி காலத்தில் இருக்கிறோம்.

104. இப்பொழுது, ஏழு சபைக் காலங்களைக் குறித்து கவனியுங்கள். நான் இப்பொழுது அவைகளைக் குறித்து பேச வேண்டியதில்லை. ஏனெனில் அவைகளைப் பற்றிய செய்தியானது ஏற்கனவே ஒலிநாடாவில் பதிவு செய்யப்பட்டு உள்ளது. அவைகள் புஸ்தக வடிவில் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதுதான் அவர்களுடைய காலமாயிருந்தது... தேவன் புறஜாதியாருக்கு இவ்வளவு நாட்கள், இவ்வளவு மணி நேரங்கள், அல்லது இத்தனை ஆண்டுகள் என்றெல்லாம் நிர்ணயித்திடவில்லை. அவ்வாறு அவர் ஒன்றும் சொல்லவில்லை. "புறஜாதியாரின் காலம் நிறைவேறுகிறவரையிலும்'' என்று தான் அவர் கூறினார். புறஜாதிகளோடு தேவன் இடைபடுவதை நிறுத்திக் கொள்கிறவரையிலும், புறஜாதியார் அலங் கங்களை மிதிப்பார்கள்.

105. இப்பொழுது நாம் காண்பது என்னவெனில், இந்தக் காலங்கள் முழுவதிலும், நாம் நம்மிடையே பரிசுத்த ஆவியானவர் வரப் பெற்றிருந்தோம். அதன் பிறகு, தேவன், துவக்கத்தில், கிறிஸ்து புறக்கணிக்கப்பட்டபோது துவங்கி அவர்களுக்கு கூற ஆரம்பித்தார்.... தேவன் புறஜாதியாரின் ஆளுகையின் போது என்ன சம்பவிக்கும் என்பதை அப்படியே சரியாக யோவானுக்கு காண்பித்தார். யூதர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளதைப் போல, உங்களுக்கு குறிப்பிட்ட



124. அவர்கள் இப்பொழுது இஸ்ரவேல் பைபிள் என்ற அந்த சிறிய வேதாகமத்திலிருந்து வாசித்துக் கொண்டிருக் கின்றனர். அவர்கள் அதை பின்னாலிருந்து முன் நோக்கி வாசிக்கிறவர்கள், அது யூத மொழியில் எழுதப்பட்டுள்ளதால் அவ்வாறு செய்வார் கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். லேவி பெத்ரூஸ் என்பவர் அவர்களுக்கு 10 லட்சம் வேதாகமங்களை அனுப்பி வைத்தார். அவர்கள் அதைப் படித்து விட்டு, "இந்த இயேசுவானவர்...'' அந்த யூதர்களெல்லாம் ஈரான் நாட்டிலிருந்து அங்கே கொண்டு வரப்பட்டவர்களாகும். அவர்கள் மேசியா என்றொரு காரியத்தைக் குறித்தே ஒருபோதும் கேள்விப் பட்டிராதவர்கள் ஆவர். அவர்கள் தங்கள் சுயதேசத்திற்கு புறப்பட ஆயத்தமாகையில், அவர்களுக்கென வந்த ஆகாய விமானங்களில் ஏற மறுத்து விட்டனர். அவர்கள் இன்னமும் பழைய கலப்பையை வைத்துத் தான் உழுது கொண்டிருந்தனர். அதைப் பற்றி 'லுக்'' என்ற பத்திரிக்கையில் படித்திருக்கிறீர்கள். எத்தனை பேர்கள் அதைப் பற்றிய கட்டுரைகளை 'லுக்' (Look) 'டைம்' (Time) ஆகிய பத்திரிகைகளில் படித்தீர்கள்? அவர்கள் விமானங்களில் ஏறமாட்டோம் என்றார்கள். அந்த வயது சென்ற அவர்களுடைய ரபீ அங்கே நின்று, “நாம் நம்முடைய சுயதேசத்திற்கு கழுகின் செட்டைகளில் கொண்டு செல்லப்படுவோம் என்று நம்முடைய தீர்க்கதரிசி கூறுயிருக்கிறதை நினைவில் கொள்ளுங்கள்'' என்று கூறினார்.

தேசங்கள் உடைகின்றன; இஸ்ரவேல் விழித்தெழுகிறது வேதம் முன்னுரைத்த அடையாளங்கள் இவைகள் புறஜாதி நாட்கள் எண்ணப்படுகின்றன அச்சங்கள் நிரம்பியுள்ளன சிதறியவரே உமக்குச் சொந்தமானதிற்கு திரும்பிடுவீர்

125. நீங்கள் விழித்துக்கொண்டுவிடுவது நல்லது. நீங்கள் அதைப்பற்றி திரும்ப திரும்ப திரும்பக் கேட்டுக் கொண்டேயிருக்கிறீர்கள்; ஆனால் இந்நாட்களில் ஒன்றில் இனிமேல் கேட்க முடியாதபடி அது கடைசி வேளையாக இருக்கப்போகிறது.

126. இஸ்ரவேல் தன் சுயதேசத்திற்குத் திரும்பிக்கொண்டிருக்கிறது. தேவன் எந்த நாளில் இஸ்ரவேலை ஒரு தேசமாகத் தீர்மானிக்கிறாரோ, அந்த நாள் முதற்கொண்டு தான் வேறெந்தவொரு புறஜாதியானும் இரட்சிக்கப்படமாட்டான். அப்பொழுது இந்த எழுபது வாரங்களைப் பற்றிய விஷயத்திலிருந்து அதை நிரூபிப்பேன். நான் வானவியல் காலண்டரையும், ஜூலியன் காலண்டரையும் வானவியல்.... ரோமானியக் காலண்டரையும் நான் எடுத்து கொள்ளப்போகிறேன். எங்கோ ஏதோ ஒன்று இருக்கிறது. தேவன் அதைப்பற்றி அறிவார்.

அவரால் அதை வெளிப்படுத்த முடியும். ஜூலியன் காலண்டருக்கு ஒரு வருடத்திற்கு 365 '/, நாட்கள் உண்டு என்பதை நான் அறிவேன். எனவே, அவை யாவும் கலந்து போய்க் கிடக்கின்றன. ஆனால் உண்மை எங்கோ உள்ளது.

127. அநேக சபைகளும், அநேக ஸ்தாபனங்களும், அநேக மக்களும், சிலர் இதை வணங்கிக்கொண்டும், சிலர் ''மரியே வாழ்க'' என்று கூறிக்கொண்டும் இன்னொன்றை வணங்கிக் கொண்டும், இவ்வாறு சென்று கொண்டிருக்கின்றனர். ஆனால் எங்கோ ஒரு சத்தியமானது இருக்கவேண்டும். ஏதோ ஓரிடத்தில் தேவன் என்னப்பட்ட ஒருவர் இருக்கவேண்டும். எங்கோ ஒரு செய்தியானது இருக்கவேண்டும். கள்ளத்தீர்க்கதரிசிகள் எழும்புகிறதையும், இருதயத்தின் இரகசியங்களைப் பகுத்தறிந்து கூறுகிற வரத்தையுடையவர்களைப் போல் பாவனை செய்து கொண்டும், இன்னும் இதைப்போல் பல்வேறு விதமான காரியங்களைக் கொண்டவர்களாயும் செயல்படுகிறதையும் நான் காண்கிறேன். ஆகவே இந்த போலிகள் எல்லாம் ஏதோ ஒரு அசலான நிஜமான ஒன்றைப் பார்த்துத் தான் செய்யப்படுகிறது. ஆகவே அந்த அசலான நிஜமானதொன்று எங்கோ இருக்கிறது.

128. மக்கள் மாம்சத்தில் இருந்துகொண்டு, சப்தமிட்டுக் கொண்டும், ஒழுக்கக்கேடாக நடந்துகொண்டு, எல்லாவிதமான ஜீவியங்களையும் ஜீவித்துக்கொண்டும் இருக்கிறதை நான் காண்கிறேன். எங்கோ ஒரு இடத்தில் அசலான பரிசுத்த ஆவி இருந்தாக வேண்டும். தேவ பக்தியுள்ளவர்களைப்போல் மக்கள் நடிக்கிறதையும், ஆழ்ந்த பற்றுடையவர்களைப் போலவும் நடக்க முயற்சிக்கிறதையும் நான் காண்கிறேன். உண்மையான தேவன் எங்கோ இருக்கிறார் என்பதை நான் அறிந்திருக்கிறேன். எங்கோ ஒரு உண்மையான ஆவி இருந்து கொண்டுதானிருக்கிறது. ஏனெனில் அந்த பழைய போலியானவன், அந்தப் பழைய மாய்மாலக்காரன், அந்த அசலைப் போலவே உருவாகியிருக்கிறான். அங்கே உண்மையான ஒரு மனிதன், ஒரு ஜனக் கூட்டம், ஒரு சபை, ஒரு தேவன் இருக்கத்தான் வேண்டும். எங்கோ உண்மையானதொன்று இருக்கத்தான் வேண்டும். ஏனெனில் இந்தப் போலிகள் எல்லாம் அந்த அசலானவைகளைப் பார்த்துத்தான் அதைப் போல நடித்துக்கொண்டு வந்திருக்கின்றன. ஆகவே எங்கோ அசலானது இருக்கத்தான் செய்கிறது.

129. இந்த சபைக்கு உங்களுடைய வரங்களைப் பற்றி கூறியிருக்கிறேன். உங்களுடைய வரங்களை கவனித்துப் பாருங்கள். அவைகளை வேதப்பிரகாரமாக வைத்திருங்கள். வானங்கள் பூராவும்



100. நீங்கள் கவனியுங்கள், நாற்பது ஆண்டுகள் கழித்து, ஆகவே உண்மையிலேயே யூதர்களின் காலமானது சிறிது நீட்டிக்கப்பட்டிருந்தது, முழுவதும் ஆகும் வரையிலும்... ஆனால் தேவன் அவர்களோடு அதற்குப் பிறகு இடைபட வேயில்லை. அவர்கள் கிறிஸ்துவைப் புறக்கணிக்கிற வரையிலும் தான் அவர்களோடு இடைப்பட்டுக்கொண்டிருந்தார். அவர்கள் கிறிஸ்துவை சிலுவையில் அறைந்த பொழுது, "இவனுடைய இரத்தம் பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக'' என்று சொன்னார்கள். (மத்.27:25) அது முதற்கொண்டு அவர்களோடு தேவன் இடைப்படுவதை நிறுத்திவிட்டார். ஆனால் அவர்கள் சிறதடிக்கப்படுவதற்கு முன்பாக... கவனியுங்கள்! ஓ, சகோதரனே! அவர்கள் உலகம் பூராவிலுமாக சிதறடிக்கப்படு வதற்கு முன்னர், ஆலயத்தை தகர்த்தது அவர்கள் உலகம் முழுவதிலுமாக சிதறடிக்க தேவனுக்கு நாற்பது ஆண்டுகள் ஆயிற்று. ஆனால் தேவன் அவர்களோடு அதற்குப் பிறகு இடை படுவதை விட்டு விட்டார். தேவன் அவர்களோடு இடை படுவதை அதற்குப் பிறகு நிறுத்திவிட்டார். அது முதற் கொண்டு புறஜாதிகளோடு இடைப்பட தேவன் ஆரம்பித்தார். நீங்கள் இதை அறிவீர்களா? இப்பொழுது அதைப் புரிந்து கொண்டீர்களா? இப்பொழுது, இங்கே நாம் சபைக் காலங்களில் புறஜாதிக் காலத்தில் துவங்குகிறோம். தேவன் யூதர்களை விட்டு அகன்று விட்டார்.

101. இப்பொழுது, இங்கு எங்கோ இருந்து கொண்டிருக்கிற எனது விலையேறப் பெற்ற சகோதரனும், யூதர்களுக்கென மிஷனரியாக உள்ளவருமான சகோதரனே, நீங்கள் அதைப் பிடித்துக் கொண்டு புரிந்துகொள்ளுங்கள். தேவன் அங்கே தானே யூதர்களோடு இடைபடுவதை விட்டு நீங்கி விட்டார் என்பதை அறிந்து கொள்ளுங்கள். ஏனெனில் தேவன் எப்பொழுதும் இஸ்ரவேல் மக்களோடு ஒரு ஜாதியார் என்று ஒட்டு மொத்த மாகத்தான் இடைபடுகிறார். இஸ்ரவேல் ஒரு தேசம் என்பதை நாம் யாவரும் அறிவோம். புறஜாதியாரோ ஒரு ஜனங்களாகும். அவர் புறஜாதியார் நடுவிலிருந்து ஒரு கூட்டம் மக்களை தம் நாமத்திற்காகத் தெரிந்தெடுக்கவேண்டியுள்ளது. அதைப் பற்றி இன்னும் சில நிமிடங்களில் நாம் பார்ப்போம்.

102. ஆனால் இப்பொழுதோ, புறஜாதியாரின் காலத்தில், இந்த ஏழு சபைக்காலங்களைப் பற்றி நாம் ஆராய்ந்ததில், கிறிஸ்து வானவர் சிலுவையிலறையப்படுதல் தொடங்கி, சபைக் காலங்கள் முடியும் வரையிலும்... அவை யாவையும் பற்றி நாம் பார்த்துக் கொண்டே

96. இதுவரைக்கிலும் கூறப்பட்டவைகளை யாவரும் புரிந்திருக் கிறீர்களா? அவ்வாறு நீங்கள் புரிந்து கொண்டால் .... யாவரும் இதுவரைக்கிலும் கூறப்பட்டவைகளை, அவை பரிபூரணமாக சத்தியமாயுள்ளன என்றும், அது வேத பூர்வமானது என்றும், அவைகள் தீர்க்கதரிசன ஆண்டுகள் என்றும் புரிந்து கொண்டீர்களா?

97 மேசியா புறக்கணிப்படுகிறவரையிலும் உள்ள காலம் வரையிலும் நாம் பார்த்தோம். மேசியா புறக்கணிக்கப்பட்டதிலிருந்து அது வரைக்கிலும்... கடைசி வாரம்.

98. இதை விளக்குவதாக நான் இப்பொழுது இந்த இடத்தில் நிறுத்திட விரும்புகிறேன். அவர்கள் மேசியாவை புறக்கணித்தது என்பது, அவர்கள் இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணித்து, சிலுவையில் அவரை அறைந்த தாகும். 'பிரபுவாகிய மேசியா சங்கரிக்கப்படுவார். ஆனாலும் தமக்காக அல்ல...'' என்று வேதாகமம் கூறியது உங்களுக்கு ஞாபகத்திலிருக்கும். இப்பொழுது, அத்தீர்க்கதரிசனம் எவ்வளவு துல்லியமாக நிறைவேறியது என்பதை எண்ணிப் பாருங்கள். இது உங்களுக்குள்ளாக ஆழப் பதிய வைக்கப்பட வேண்டும் என நான் விரும்புகிறேன். அத்தீர்க்கதரிசனம் சரியாக அந்த தேதியின்படியே துல்லியமாக குறிப்பிட்ட காலத்தில் முன்னுரைக்கப்பட்டபடியே நிறைவேறியிருக்கிறது என்றால், மீதமுள்ள இந்த ஒரு வாரமாகிய ஏழு ஆண்டுகள், அதாவது ஏழு நாட்களாகிய ஏழு ஆண்டுகளும் கூட அதே விதமாக திருவசனத்தின்படியே நிறைவேறிடும்.

99. இப்பொழுது ஞாபகத்தில் வைத்திருங்கள்: மேசியா சங்கரிக்கப்பட்டார். அத்தோடு தேவன் யூதர்களோடு இடை படுவதை நிறுத்திவிட்டார். அதற்குமேல் அவர்கள் காலம் நீடித்திருக்கவில்லை. ரோம சாம்ராஜ்யத்தால் அவர்கள் சிதறடிக்கப்பட்டனர். இங்கே நான் வரைந்திருக்கிற வரைப்படத்தில் நீங்கள் அதைக் கவனித்தீர்களா? நீங்கள் இதைப் புரிந்து கொண்டு, அதை வரைந்தெடுத்துக் கொள்ள வேண்டுமென நான் விரும்புகிறேன். இங்கே நான் வரைந்திருக்கிற சிலுவையை கவனியுங்கள். அங்கேதான் அவர்கள் அவரை புறக்கணித்தனர். ஆனால் அவர்கள் காலமானது அதையும் தாண்டி ஒரு சிறிது காலத்திற்கு நீட்டிக்கப்பட்டிருந்தது. அதைக் கவனியுங்கள். ஏன்? முப்பது, நாற்பது, ஐம்பது, அறுபது எழுபது - நாற்பது ஆண்டுகள் கழித்து ரோமத் தளபதியாகிய தீத்து என்பவன் இஸ்ரவேல் மக்களை - எருசலேமை அழித்துப் போட்டு, அம்மக்களை உலகம் பூராவிலும் சிதறடித்துப் போட்டான்.



உண்மையானவைகளைக் கொண்டிருக்கையில் பதில்களை எடுத்துக் கொள்ளாதீர்கள். உண்மையானவைகளையே நாம் பாதுகாத்து வைத்துக்கொள்வோம். உண்மையானவைகளையே பெற்றுக் கொள்வோம். அல்லாவிடில் நமக்கு ஒன்றுமே வேண்டாம். ஆமென்!

130. இப்போது, முடிவாக, இஸ்ரவேல் தன் சுயதேசத்தில் இருக் கையில் மாத்திரமே தேவன் அவர்களோடு இடைப்படுகிறார் என்பது ஒரு உண்மையாயிருக்கிறது. நாம் எடுத்துக் கொள்வோமாக... தேவன்..... ஆபிரகாம் சுயதேசத்தை விட்டு எகிப்தில் போயிருக்கும் போது என்ன நடந்தது? தேவனுடைய சித்தத்தை விட்டு அவன் விலகிப் போய்விட்டான், ஆகையால் சுயதேசத்திற்கு திரும்பி வருமட்டும் அவன் ஒருபோதும் ஆசீர்வதிக்கப்படவேயில்லை. அவன் சுயதேசத்திற்கு திரும்பி வருகிற வரையிலும், தேவன் அவனுக்கு ஒரு தரிசனத்தைக் கூட கொடுக்கவில்லை. அவனோடு பேசவேயில்லை.

131. இஸ்ரவேலைப் பாருங்கள், அந்த மக்கள் எகிப்தினுள் அனுப்பப்பட்டிருந்தபோது, அங்கே அவர்களிருந்த அந்த நானூறு ஆண்டுக்காலம் முழுவதும் ஒரு அற்புதம் கூட, ஒரு அடையாளம் கூட அவர்கள் மத்தியில் நடக்கவேயில்லை. வேத வரலாற்றில் அதைப் பற்றி குறிப்பு எதுவும் இல்லை. அதே பழைய காரியங்கள் தான்; ஆலயத்திற்குப் போவதும், ஆட்டுக் குட்டியைப் பலியிடுவதும், “மரியே வாழ்க'' என்று வழக்கம் போல் கூறுவதும், அல்லது இதைப் போல் ஏதாவது ஒன்றை திரும்பத் திரும்ப உச்சரிப்பதும் தான் நடைபெற்று வந்தது. அடுத்த ஆண்டிலும் அதேதான். மதகுருக்கள் யாவரும் தர்க்கித்தனர். 'ரபீ இன்னாரைத் தேர்வு செய்தோம். அவர் நல்ல பேரறிவாளர். அவருக்கு எகிப்தியர்களைப் பற்றி நன்கு தெரியும்'' என்றெல்லாம் பேசிக்கொண்டனர். பிரதானமான காரியம் என்னவெனில், அவர்களும் எகிப்தியரும் ஒன்றுபோலவே இருந்தனர்.

132. அதே காரியம் தான் சபைக்கு நடந்திருக்கிறது. நாம் யாவரும் மெதோடிஸ்டு, பாப்டிஸ்டு, பிரஸ்பிடேரியன் என்பவர்களாக ஆகும்படி போய்விட்டோம். ''எங்களுக்கு ஹார்ட்போர்ட் பல்கலைக்கழகப் பட்டம் இருக்கிறது'', ''எங்களுக்கு இந்த இடத்திலிருந்து பட்டம் உள்ளது. அல்லது பாப் ஜோன்ஸ்இல் கொடுத்த பட்டம்'', ''எங்களுக்கு இளங்கலைப் பட்டம் உள்ளது'', “எங்களுக்கு டி.டி.பட்டம் அல்லது எல்.எல்.டி பட்டம் உள்ளது'' என்றெல்லாம் கூறிக்கொள்ளுகிறார்கள். இவைகளெல்லாம் இருந்தும் என்ன பயன்? இதெல்லாம் ஒரு கூட்டம் அபத்தம். எகிப்தில் இருந்ததைப் போலவே இவை யாவும் உள்ளன.

133. இஸ்ரவேலர் தங்களுடைய சுய தேசத்திற்கு திரும்பி வருகிற வரையிலும் ஒருபோதும் அவர்களோடு தேவன் இடைபடவேயில்லை. நான் கூறுவதை கேளுங்கள். கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், சபையானது தனது சுய தேசமாகிய இந்த நேரத்திற்குரிய செய்திக்குள் திரும்பி வராத வரையிலும், தேவன் சபையோடு இடைபடமாட்டார். மூலமுதலானதற்கு திரும்பி வாருங்கள்! உங்களுடைய மெதோடிஸ்டு, பாப்டிஸ்டு , பிரஸ்பிடேரியன் கருத்துக்களை விட்டு அகன்றிடுங்கள்; பெந்தெகொஸ்தேயினரே, அசெம்பிளீஸ் சபையோரே, ஒருத்துவ கூட்டத்தினரே, திரித்துவ கூட்டத்தினரே, ஐந்து தத்துவக் கூட்டத்தினரே, அது எதுவாயிருந்தாலும் சரி, சர்ச் ஆஃப் காட் நசரேய சபைக்காரரே, யாத்திரைப் பரிசுத்த சபையோரே, சர்ச் ஆஃப் காட் சபையோரே, இவை யாவும் அந்திகிறிஸ்துவின் இயக்கங்களாகும், இவைகளை விட்டு அகன்றுவிடுங்கள். இது உலகைக் கலக்குகிறது என்று நான் உணருகிறேன். அவையாவும் தவறாயும், பிசாசினால் உண்டானவைகளாயும் உள்ளன. அவைகள் ஒவ்வொன்றிலும் தேவ மனிதர்கள் உள்ளனர். அவ்வியக்கங்கள் ஒவ்வொன்றிலும் தேவ ஜனங்கள் உள்ளனர். ஆனால் அந்த ஸ்தாபனங்களோ தேவனால் உண்டானவைகள் அல்லவே அல்ல. தேவன் அவைகளை ஒருபோதும் ஆசீர்வதிக்கவே மாட்டார். அவர் ஒருபோதும் அப்படிச் செய்ததில்லை.

134. இவ்வொலி நாடாவை கேட்கிற எந்தவொரு வரலாற்று ஆசிரியரையும் நான் ஒன்று கேட்டுக்கொள்கிறேன். என்னவெனில், கடந்த காலத்தில் எந்தவொரு சபையாகிலும் அது ஸ்தாபனமாக ஆகும் பொழுது, அதற்குப் பிறகு தேவன் அதை இன்னமும் புறக்கணிக்காமல் தான் இருந்தார் என்பதை நிரூபித்து எனக்கு எழுதி தெரியப்படுத்துங்கள் பார்க்கலாம். அது ஸ்தாபனமாக ஆன பிறகு தேவன் அதனோடு இடைபடவேயில்லை. லூத்தரன் சபையை, வெஸ்லியின் மேதோடிஸ்டு சபையை பெந்தெகொஸ்தேயினரை மீண்டும் அவர் எப்பொழுதாவது எழுப்பினாரா என்பதை எனக்குச் சொல்லுங்கள் பார்க்கலாம். தேவன் அப்படி ஒருபோதும் செய்யவில்லை. அந்த ஸ்தாபனமானது அங்கேயே கிடந்து புழு அரித்து அழுகிக் கெட்டுப் போய்விட்டது. தேவன் தனி நபர்களைத் தான் எடுத்து, மக்கள் அவர்களுடைய சுயதேசத்திற்கு திரும்பி வரும்படி சுட்டிக்காட்டவே பார்க்கிறார். அந்த தனிநபராகிய மனிதனோ, மிகவும் பெலவீனமாக இருந்து, பேடியாக இருந்து, ஏதோ ஒரு பட்டத்தைப் பெற்றுக்கொண்டு மீண்டும் ஒரு ஸ்தாபனத்தையே உண்டாக்கிக்கொண்டு, அதை முன்னிலும் அதிகமாக இரட்டிப்பான மடங்கு நரகத்தின் மகனாக ஆக்கிப் போடுகிறான்.



அது சரியாக முப்பதே நாட்கள் தான் ஒவ்வொரு மாதத்திற்கும். அதுவே தீர்க்கதரிசன காலண்டராகும்... அது சரியாக 483 நாட்கள்.

93. இங்கே நமக்கு தீர்க்கதரிசனத்தின் சரியான அத்தாட்சி உள்ளது. கி.மு. 445 என்பது சரியான கணக்காக உள்ளது. எழுபது வாரங்களில் சம்பவிக்கும் என்று தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டவை அனைத்தும் அப்பொழுது சம்பவிக்கவில்லை. ஆகவே அவைகள் இக்கடைசி நாட்களாகிய இப்பொழுது சம்பவிப்ப தற்காக விட்டு விடப்பட்டுள்ளது.

94. இப்பொழுது, என்னுடைய பெந்தெகொஸ்தே சகோதரரே, இப்பொழுது என்னுடைய யேகோவா சாட்சிக்காரராகிய சகோதரே, நீங்கள் இதை உணருகிறீர்களா? எங்கே அந்த 1,44,000 பேர்கள் தோன்றுகிறார்கள் என்பதை அறிவீர்களா? வெளிப்படுத்தின விசேஷத்தின் அவ்வற்புதங்களெல்லாம் எங்கே சம்பவிக்கப் போகின்றன என்பதை நீங்கள் அறிவீர்களா? நமது காலத்தில் அல்ல, யூதர்களின் காலத்தில்தான் அவை சம்பவிக்க வேண்டும். சபை ஆயத்தப்பட்டுக்கொண்டிருந்து, பிறகு போய் விடுவதைப் பற்றியே தவிர வேறு ஒன்றும் அங்கே கூறப்பட வில்லை. நிச்சயமாகவே, தேவனுடைய வல்லமையைக் கொண்டு நாம் அற்புதங்களையும், அரிய பெரிய காரியங்களையும் செய்ய முடியும். அதை நாம் அறிவோம். ஆனால் உண்மையான காரியமோ யூதருக்கென்றுதான் உள்ளது. அதாவது, உண்மையான கிரியை செய்யும் வல்லமை, அற்புதங்களை நிகழ்த்துவது அவர்களுக்குத்தான்.

95. 1,44,000 பேர்கள் அங்கே தோன்றவில்லை. அவர்கள் 3ம் அதிகாரத்தில் தோன்றுவதில்லை. அவர்கள் திருவசனத்திலே அதையெல்லாம் தாண்டி, தோன்றுகின்றனர். அவைகள் யாவும், கடைசி வாரமாகிய எழுபதாவது வாரத்தில்தான் சம்பவிக்க வேண்டியதாயிருக்கிறது. அவர்களுக்கு ஏற்கெனவே அறுபத்தி யொன்பது வாரங்கள் உண்டாயிருந்ததென்றால், அவர்கள் அவ்வாறு அக்காலத்தில் இருப்பார்கள் என்று கூறியபடியே, அவர்கள் சரியாக அக்காலத்தில் ஜீவித்தார்கள். ஆகவே அக்காலத்தில் அவர்களைப் பற்றி தேவன் கூறியபடியே ஜீவித்திருந்தார்கள். ஆகவே இன்னும் ஒருவாரம் யூதர்களுக்கு வாக்குத் தத்தம் பண்ணப்பட்டிருக்கிறது. இப்பொழுது சகோதரரே, ஆயத்தப்படுங்கள். புரிந்து கொண்டீர்களா? நாம் எவ்வளவு அருகாமையில் இருக்கிறோம் என்பதை கவனித்துக் கேளுங்கள். கடைசி வாரம் ஏழு - ஏழாவது வருடம்.

“நானும் அவ்வாறேயிருக்கிறேன்'' என்றேன் நான்.

''பிரசங்கிகளாகிய உங்களைப் பற்றியும் அதே பிரச்சனை தான், ஏனெனில் நீங்கள் அறியாதிருக்கிறதைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறீர்கள்'' என்று அவர் கூறினார்.

90. அதற்கு நான், 'நல்லது, உங்களுடைய விமரிசனத்தை நான் பாராட்டுகிறேன். ஆனால் நாங்கள் பிரசங்கிக்கிறவைகளைப் பற்றி நாங்கள் அறிந்தேயிருக்கிறோம். நான் மறுபடியும் பிறந்திருக் கிறேன் என்பதை நான் அறிவேன். நான் மரணத்தினின்று நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறேன் என்பதை நான் அறிவேன். தேவன் ஒருவர் உண்டு என்று நான் அறிவேன். ஏனெனில் நான் அவரிடம் பேசியிருக்கிறேன். அவர் என் மூலம் பேசவும், என்னோடு பேசவும், பிறரிடம் என் மூலம் பேசவும் அவர் செய்கிறார். அவர் தேவன் என்று நான் அறிவேன்'' என்று நான் பதிலுரைத்தேன். அது சரிதான். அவர் என்னிடத்தில் மிகவும் அருமையானவராயிருந்து, இறங்கி வந்து என்னோடு சேர்ந்து தன்னுடைய படத்தை எடுத்துக்கொள்ளும்படி செய்தார். அதை விஞ்ஞான உலகும் மறுத்துரைக்க முடியவில்லை. நான் வேத வாக்கியத்திலே அதைப் பற்றி எடுத்து பார்த்து, அது இந்த சபைக் காலத்தின் காரியத்தை நிறைவேற்றுவதாக சரியாக இருந்ததை நான் கண்டு கொண்டேன். ஆகவே நாம் இங்கே இந்த இடத்தில் இருக்கிறோம் என்பதை நான் அறிவேன். ஆமென்!

91. நாம் ஒரு வேளை கல்வியறிவு இல்லாதவர்களாயிருக்கலாம். நாம் மேட்டுக் குடியினராக இல்லாதிருக்கக்கூடும். நாம் பெரிய பிரமுகர்களாக இல்லாதிருக்கக்கூடும். ஆனால் நாம் தேவனை அறிந்தவர்களாயிருக்கிறோம். பரிசுத்த ஆவியினாலே நாம் அவரை அறிந்திருக்கிறோம். அது திருவசனங்களினூடே, வார்த்தையோடு வார்த்தையை ஒப்பிட்டுக் காண்பித்து, அதினாலே அது சத்தியமாயிருக்கிறது என்பதை நாம் அறிகிறோம். நாம் கடைசி நாட்களிலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

92. தீர்க்கதரிசன ஆண்டிலே ஒரு வருடத்திற்கு 360 நாட்கள் உள்ளன என்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள். எல்லாவற்றையும் உற்று நோக்குங்கள். ஸ்திரீகளுக்குள்ள இயற்கையான காரியத்தில் கூட அதைக் கொண்டு உங்களில் சிலர் அறிந்து கொள்ள முடியும். அறிந்து கொண்டீர்களா? முப்பது நாட்கள்... இயற்கையின் அமைப்பெல்லாம் அவ்வாறே அமைந்து உள்ளது என்பதை நீங்கள் கவனியுங்கள். முப்பத்தியொன்று, முப்பது, இருபத்தியெட்டு என்று இருப்பதில்லை.



135. ஆனால் எங்கோ ஓரிடத்தில், நிச்சயமாக, யேகோவா தனக்கென ஒரு மனிதனை உடையவராயிருக்கிறார். அவர் அம் மனிதன் மேல் தன் கரங்களை வைப்பார்; அவன் அந்த அவபக்தியுள்ள ஸ்தாபனங்களோடு ஒத்துப்போகாமல், மக்களை கிறிஸ்து இயேசுவாகிய கன்மலையிடம், மூலமுதலான பெந்தெகொஸ்தே அனுபவத்திற்கு, அசலான அற்புத அடையாளங்களுக்கு விசையுடன் திரும்பக் கொண்டு வருவான். அவருக்கு எங்கோ ஓரிடத்தில் யாரோ ஒரு மனிதன் இருக்கிறான். அவன் எந்தவொரு உபத்திர வத்திலும் நிலைகுலைந்து போகாதவனாயும், ஊக்கமிழக்காதவனாயும், பெலமிழந்தவனாக இல்லாமலும், வீழ்ச்சியடைந்தவனாகவும் இல்லாமல் வார்த்தையோடு நிலைத்திருக் கிறவனாகவும் இருப்பான்.

136. இஸ்ரவேல் தன் சொந்த தேசத்திற்கு திரும்பிப்போனாலொழிய அது வரையிலும் தேவன் அவர்களை ஆசீர்வதிப்பதேயில்லை. மெதோடிஸ்டு, பாப்டிஸ்டு, பிரஸ்பிடேரியன், கத்தோலிக்கனே, யாத்திரைப் பரிசுத்த சபையே, நசரேயனே, சர்ச் ஆஃப் க்ரைஸ்ட் சபையோனே, அல்லது பெந்தெகொஸ்தே ஸ்தாபனங்களே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பதேயில்லை. அந்த விதமாக தேவன் உங்களை ஆசீர்வதிக்கமாட்டார். பெந்தெகொஸ்தே நாளில் சம்பவித்தது போலவே உள்ள மூல பெந்தெகொஸ்தே அனுபவமாகிய உங்கள் சுயதேசத்திற்கு திரும்பி வாருங்கள். பெந்தெகொஸ்தே நாளிலே ஜீவனுள்ள தேவனுடைய வல்லமையானது அவ்வாயிரக்கணக்கான மக்களை மாற்றி, அவர்களுடைய இதயங்களை தேவனுடைய அக்கினியால் பற்றயெரியச் செய்தது. அவ்வக்கினி, போலியான அடையாளங்களையல்ல. ஏதோ ஒரு பொய்யானதும், மனோ வசியமானது மல்ல, ஏதோ ஒரு கொஞ்சம் பரிகாசத்துக்குரியதுமல்ல. இன்று அமெரிக்காவில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறதான யாருக்கு மிகப் பெரிய கூடாரம், யாருக்கு மிகப்பெரிய கூட்டம் வருகிறது என்று மதிக்கெட்ட போட்டி போட்டுக்கொண்டதாக அது இருந்தது. இப்படியெல்லாம் இருப்பதினால் தேவனுக்கு என்ன பயன்? தேவனுக்கு பெரிய கூட்டங்களல்ல, இருதயத்தில் உத்தமத்தைக் கொண்டவர்களாய் மக்கள் இருப்பதையே தேவன் விரும்புகிறார். இங்கு நமக்கெல்லாம் ஒரு மதிகெட்ட போட்டா போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்களே, அதைப் போலும் அல்லது. அசலான அடையாளங்கள் தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எதற்கென்றால், நம்முடைய ஸ்தாபனத்திற்கு மேலும் ஆயிரம் மக்களை கூட்டி சேர்ப்பதற்காகத்தான். இது என்னே ஒரு வெட்கக்கேடான விஷயமாயிருக்கிறது! அது வெட்கக் கேடானது. அவர்

நம்மை சத்தியத்திற்கு திரும்பி வரும் படி ஆவியானவரிடம் திரும்பி வரும்படி, ஜீவனுக்குத் திரும்பி வரும்படி கிறிஸ்துவுக்குள்ளான நெடுஞ்சாலையில் திரும்பி வரும்படி, சத்தியத்திற்கு திரும்பி வரும்படியாகவே விரும்புகிறார். நாம் போய் கொண்டிருக்கிற நமது சுய வழியில் அவர் எப்படி நம்மை ஆசீர்வதிக்க முடியும்? அவர் அவ்விதமாக நம்மை ஆசீர்வதிக்கமாட்டார்.

137. இஸ்ரவேலர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு திரும்பி வருகிற வரையிலும், தேவன் அவர்களை ஆசீர்வதிக்க வேயில்லை. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு அவர்கள் திரும்பி வந்தபோது, அற்புத அடையாளங்கள் அவர்களுக்குள் நடக்க ஆரம்பித்தன. மோசே என்ற பெயருள்ள ஒரு மனிதனை தேவன் அவர்கள் மத்தியில் அனுப்பினார். மெருகூட்டப்பட்ட வேதசாஸ்திரத்தோடு மோசே அவர்கள் மத்தியில் வந்தானா? இளங்கலைப்பட்டத்தோடு அவன் அங்கே வந்தானா? அவன் அங்கே எல்.எல்டி. பி.ஹெச்.டி பட்டங்களோடு வந்தானா? அவன் யேகோவாவின் வல்லமையோடு, "இத்தேசத்திலிருந் தும் சுய தேசத்திற்குத் திரும்புங்கள்'' என்ற ஒரு செய்தியோடும் அங்கே வந்தான். சிறைப்பட்டோரே, உங்கள் சுயதேசத்திற்கு திரும்புங்கள். ஆமென்.

138. கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகளாக யூதர்கள் தங்களுடைய சுயதேசத்திற்கு வெளியே பூமியின் நான்கு திசை களிலும் சிதறடிக்கப்பட்டவர்களாய் இருந்தனர். விபரமாகப் பார்க்க வேண்டுமென்பதற்காக நாம் எவ்வாறு இந்தச் செய்தியை வாரக்கணக்கில் நீடித்துக்கொண்டு செல்ல முடியும்! மேசியாவைப் புறக்கணித்த பொழுது ரோம சாம்ராஜ்யத்தால் எப்பொழுது இஸ்ரவேலர் சிதறடிக்கப்பட்டனர் என்பதை அவர்களுடைய வரலாற்றை திருப்பிப் பார்த்து நாம் கண்டு கொள்ளமுடியும். எவ்வாறு அவர்கள் வானத்தின் கீழே சகல ஜாதிகளுக்குள்ளும் துரத்தப்பட்டார்கள் என்பதையும் நாம் காணலாம். யாக்கோபு - இஸ்ரவேல் எவ்வாறு கோத்திரப் பிதாக்களை ஆசீர்வதித்தான் என்பதையும் கடைசி நாட்களிலே அவர்கள் அங்கே இருப்பார்கள் என்பதையும் குறித்து ஆதியாகமம் 44,45 அதிகாரங்களிலே திருப்பிப் பார்த்து, அங்கே அதைக் குறித்து காண்பிக்க முடியும். இஸ்ர வேலின் கோத்திரங்கள் ஒவ்வொன்றும் எந்தெந்த தேசத்தில் சிதறிப் போயிருப்பார்கள் என்பதைப் பற்றி முன்னுரைக்கப்பட்டதே அதைப் பற்றி சரியாக நான் உங்களுக்கு சுட்டிக்காட்ட முடியும். இன்று நாம் இங்கே இருக்கிறாம்.



நினைவிருக்கிறதா? ஏறத்தாழ ஒரு சரக்கு ஏற்றும் வண்டி நிறைய எனக்கு அனுப்பியிருந்தீர்கள். எந்தவிதத்தில் இவைகளைப் பற்றி அனுபவம் இல்லாத என்னைப் போன்றொருவன், இவைகளை வைத்துக்கொண்டு என்ன செய்ய முடியும்? கென்னி, உங்களை கர்த்தர் தான் நடத்தியிருக்கிறார் என்பதை அறிந்துகொள்ளுங்கள். காலத்தைப் பற்றிய தகவல்களை நான் அந்த கலைக் களஞ்சியத்திலிருந்து தான் பெற்றுக்கொண்டேன். நான் அவைகளை ஆராய்ந்து கொண்டிருந்தேன். பெக்கி அவைகளை தனது பள்ளிப் படிப்புக்கென உபயோகிக்கிறாள். அடித்தளத்தில் உள்ள எனது படிப்புக்கான தனிமையறையில் அவைகளை வைத்திருக்கிறேன். அங்கே நாங்கள் சென்று அவைகளை எடுத்து அதிலிருந்து கவனித்துப் படித்துப் பார்த்து, வழக்கத் திலிருந்த எல்லா காலண்டர்களையும் பற்றி எழுதி எடுத்து சரியாக கண்டு கொண்டோம். அவ்வாறு நாம் அதைப் பற்றி அறிந்துகொண்டோம்.

88. அது ஆலயத்தை திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவது முதற்கொண்டு பிரபுவாகிய மேசியா புறக்கணிக்கப்படுகிற வரையிலும் மிகவும் சரியாக அக்காலண்டரின்படி 483 ஆண்டுகள் ஆயிற்று.

89. நாமும் இங்கே அதே காலண்டரைத்தான் உபயோகித்துக் கொண்டிருக்கிறோம். தேவன் இந்த காலண்டரையே அப்போது உபயோகித்திருப்பாரானால், வேதாகமம் முழுவதிலும் அவர் அதே காலண்டரைத்தான் உபயோகித்திருக்க வேண்டும். அது சரிதானே? தேவன் மாறுவது கிடையாது. ஆகவே, ஏழு வாரங் கள் நாற்பத்தியொன்பது ஆண்டுகளாக இருக்குமானால், மீண்டும் ஏழு வாரங்கள் நாற்பத்தியொன்பது ஆண்டுகளே யாகும். ஒரு வாரம் என்பது ஏழு ஆண்டுகளாகும். புரிந்து கொண்டீர்களா? ஆகவே அது பரிபூரணமாக அதை ஆக்குகிறது. அப்போது அது சரியாக துல்லியமாக நிறைவேறியதென்றால், மீண்டும் அது அவ்வாறே துல்லிமாக நிறைவேறிடும். ஆமென். ஓ! அது என்னை மெய்சிலிர்க்கச் செய்கிறது. ஓ, நான் என்ன பேசுகிறேனோ அதைப் பற்றி அறிந்தவனாயிருக்க நான் ஆசிக்கிறேன். நான் அதை நேசிக்கிறேன். ஏனெனில்...

ஒரு சமயம் கெண்டக்கியிலுள்ள ஒரு முதிர்வயதான ஒருவர், என்னிடம், ''தாங்கள் அறிந்திருக்கிறதைப் பற்றி பேசுகிற ஒருவர் பேசுவதையே நான் கேட்க விரும்புகிறேன்'' என்றார்.

84. நம்முடைய தீர்க்கதரிசன காலண்டரானது, வேத வாக்கி யங்களிலிருந்து நாம் அதை கணக்கெடுத்துப் பார்க்கையில், அதில் ஆண்டுக்கு 360 நாட்கள்தான் உள்ளன. நமக்கு சரியாக 483 ஆண்டுகளே உள்ளன. சரியாக அப்படித்தான் 483 இங்கே நமக்கு தீர்க்கதரிசனத்தினுடைய சரியான அத்தாட்சி, சரியான சத்தியமானது இருக்கிறது. ஆலயத்தை திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்காக கட்டளை வெளிப்பட்டது முதல் அழிக்கப்படுகிறவரையிலும்.... அவர்கள் கிறிஸ்துவைப் புறக்கணித்து, அவரை கி.பி. 33-இல் கொன்றபொழுது, கிறிஸ்து கொல்லப்பட்ட பொழுது அப்போது சரியாக 483 ஆண்டுகள் ஆகிவிட்டது எருசலேமை திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்பட்டது முதல் ஏழு வாரங்கள் - அதாவது நாற்பத்தி யொன்பது ஆண்டுகள் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி சரியாக நாற்பத்தியொன்பது ஆண்டுகள் அங்கே ஆகியது. ஆலயம் திரும்ப எடுப்பித்துக் கட்டப்பட்டது முதல் மேசியா வருமட்டா கவும் 434 ஆண்டுகள் ஆயிற்று. ஆகவே 434யையும் 49யையும் கூட்டினால் 483 ஆண்டுகளாகும். மிகத் துல்லியமாக சரியாக அந்த நாளின்படியே கணக்காக அது நிறைவேறிற்று. ஆமென்! அது சரியாக இருக்கிறது.

85. பிரபுவாகிய மேசியா வருவார். புரிந்துகொண்டீர்களா? 69 -ஐ ஏழால் பெருக்கினால் சரியாக 483 ஆண்டுகள் வருகிறது. அது அவ்வாறே துல்லியமாக நிறைவேறிற்று. ஆகவே இப்பொழுது நாம், வேத வாக்கியங்கள் மிகவும் சரியாக இருக்கிறது என்பதை அறிகிறோம். அது சரியாகத்தான் இருக்கிறது. ஆனால் நீங்கள் இங்கே கவனியுங்கள், இவை யாவும்....

86 தேவன் ஜலப்பிரளய காலத்திற்கு முந்தைய உலகத்தைக் கொண்டிருந்த பொழுது, அதை அவர் தண்ணீரினால் அழித்தார். அது முதற்கொண்டு வானவியல் தேதியை அவர் மாற்றினார். பின்பு, ரோமர்களை வளரவிட்டு, அவர்கள் தங்களுடைய காலண்டரை உருவாக்கி, அது ஒன்று குறைத்து, அடுத்தது கூடுவதுமாக இருக்கும்படி அதை அமைத்துக் கொண்டு விட்டனர். நான் படித்துக் கொண்டிருந்த என்சைக்ளோபீடியோவில் கூட அப்படித்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று நான் கருதுகிறேன்.

87. இதற்கிடையில், சகோ.கென்னி காலின்ஸ் என்ற கென்னெத் காலின்ஸ் இக்கட்டிடத்தில் இக்காலையில் இப்போது இருக்கிறாரா? நீங்கள் அதிகமான எண்ணிக்கையில் அந்த கலைக் களஞ்சியங்களை எனக்கு அனுப்பியிருந்தீர்களல்லவா? உங்களுக்கு அது



139. நாம் அறிந்திருக்கிற இந்த யூதன் உண்மையான யூதனல்ல. உண்மையான யூதன் என்னப்பட்டவன், உண்மையான வைதீகமான மார்க்க நெறி பிறழாதவன் ஆவான். அவன் தன்னை உலகத்தின் காரியங்களால் அசுசிப்படுத்திக் கொள்ளாதவனும், புறப்பட்டுப்போய் மற்ற சபைகளைச் சாராதவனாகவும் இருப்பான். அப்படிப்பட்டவர்கள் தான் அங்கே திரும்பிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பாலாடைக்கட்டி (Cheese), ரொட்டி ஆகியவைகளைப் புசித்து, மலைப்பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர், பழைய நகரத்தினுள் பிரவேசிக்க அனுமதிக்கப்படவில்லை. இருமருங்கிலும் இயந்திரத் துப்பாக்கிகள் பயமுறுத்திக் கொண்டிருக்கும், ஆளில்லாத பிரதேசத்தில் இப்பக்கமாக அவர்களுக்கு ஒரு நகரம் கட்ட வேண்டியதாயிருக்கிறது. ஆனால் அவள் துளிர்விட ஆரம்பித்துவிட்டாள். ஆமென், ஆமென்! நேரமானது நெருங்கிவிட்டது.

140. அங்கே இஸ்மவேலும், ஈசாக்கும் இன்னமும் தேசத்தைக் குறித்து தகராறு பண்ணிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அத்தேசமோ இஸ்ரவேலுக்கு சொந்தமானது. நீங்கள் அந்த புதிய எருசலேமுக்குப் போக நேர்ந்தால், அவர்கள் உங்களை பழைய எருசலேமுக்கு வருவதற்கு விடமாட்டார்கள். நீங்கள் முதலில் அங்கேதான் போக வேண்டும், இஸ்மவேலின் புத்திரராகிய அவ்வரேபியர்கள் உங்களுக்கு எல்லாவற்றையும் விளக்கிக்கூறவிடவேண்டும், அப்பொழுது அவர்கள் உங்களை அந்த மறுபக்கத்திற்குள் இட்டுச் செல்வார்கள். ஆனால் பொறுத்துக்கொள்ளுங்கள்; தேவனுடைய பிள்ளைகள் அந்நகரத்தை முழுவதும் எடுத்துக் கொள்ளும் வேளையானது வருகிறது. அப்படித் தான் நடக்கப்போகிறது. எருசலேமானது திரும்பக் கட்டப்படும். அன்றாட பலி செலுத்துதல் ஏற்படுத்தப்படும். அந்த கடைசி ஏழு வாரங்களுக்கென அவர்களோடு அந்திக்கிறிஸ்து உடன்படிக்கை செய்வான். அவ்வாரத்தின் மத்தியில் அவன் உடன்படிக்கையை முறித்துப் போடுவான். கத்தோலிக்கக் கொள்கைக்கு அவர்களைத் திருப்புவான். அரு வருப்பு சகலத்தின் மேலும் அவ்விதமாக வந்து பரவுதல். அதன் பின்பு முடிவானது வரும். கவனியுங்கள்.

141. எழுபது வாரங்கள், ஆம் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகள் அவர்கள் சிதறிப்போய்விட்டனர். அவர்கள் துரத்திவிடப் பட்டிருந்தனர். பார்வோனின் இருதயமானது அவர்கள் நிமித்த மாக கடினப்படுத்தப்பட்டது போலவே அவர்கள் நிமித்தம் இப்போதும் நடக்கும்படி அவ்விதமான மக்களாக அவர்கள் இருக்கிறார்கள். அவர் ஹிட்லருடைய இருதயத்தை அவர்கள் நிமித்தம் கடினப்படுத்தினார்.

பல இலட்சக்கணக்கானவர் கொலை செய்யப்பட்டனர். மனுஷ ஆத்துமாக்களாகிய குழந்தைகள் சிறுவர்கள், பெரியவர்கள் உள்ளிட்ட 6 மில்லியன் யூதர்களை கொன்று குவித்த இந்த ஐக்மேன் என்ற குற்றவாளியைப் பாருங்கள்.

142. ருஷியாவைப் பாருங்கள், நீங்கள் அவர்களை அங்கிருந்து துரத்திவிட்டீர்கள். அவர்கள் அவர்களை எவ்விடங்களிலும் துரத்திவிட்டனர். அவர்கள் அவர்களுடைய பண ஆசையினிமித்தமாக அசட்டை பண்ணப்பட்ட ஜனமாக இருந்தனர். அவர்கள் மீண்டும் திரும்பி வந்தனர். ஆனால் அந்த சிறுபான்மையினரான அவர்கள் பாலஸ்தீனத்திற்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். ஆமென், சகோதரர்களே.

143. அவள் தன் சுயதேசத்திற்குத் திரும்பி வரத் துவங்குவதை நீங்கள் காண்கையில்... 1,44,000 பேர்கள் என்ற எண்ணிக்கை கிடைப்பதற்குப் போதுமான ஜனங்கள் அங்கே வந்து விட்டார் கள். என்ன சம்பவித்துக் கொண்டிருக்கிறது? அவர்கள் தங்கள் யோசேப்பை அறிந்து கொள்ளுவார்கள். நீங்கள் கவலைப்பட வேண்டாம். ஆம் ஐயா! அது சம்பவிப்பதற்காக அவர்கள் யாவரும் அங்கே காத்துக் கொண்டிருக்கின்றனர். அதற்குரிய சரியான அந்த வேளையானது...

144 . கடந்த ஆண்டில் தேசங்கள் அவர்களை ஒரு தேசமாக அங்கீகரித்து பிரகடனம் செய்துவிட்டனர். அது நடக்கும்போது, நாம் முடிவுக்கு சமீபமாக இருக்கிறோம். புறஜாதி சபையானது போய்விட்டிருக்கும். ஆகவே, எந்த நேரத்திலும் தேவன், "இஸ்ரவேல் என் ஜனங்களாயிருக்கிறார்கள்'' என்று கூற முடியும். அவ்வாறு ஆகும் பொழுது புறஜாதிகளின் காலம் முடிவடைந்து விடும்.

145. மத்தேயு 24ல் 'அவர்கள் மிதிப்பார்கள்'' என்று இயேசு கூறினார். (பாழாக்கும் அருவருப்பு). ''புறஜாதிகளின் காலம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப் படும்'' (லூக்.21:24). அது முடிவடையும் பொழுது, யூதர்கள் எருசலேமுக்குள் திரும்பி வந்து, ஆலயத்தையும் ஆலய வழிபாட்டையும் திரும்ப ஏற்படுத்துவார்கள். இனி அடுத்து வரும் செய்திகளில், எழுபது வாரங்கள், ஆறுவிதமான நோக்கங்கள் ஆகிய செய்திகளில் இவை யாவற்றையும் பற்றி நாம் பார்க்கலாம். இப்பொழுது, முடிக்கும் முன்னர், நான் அதை வாசிப்பேன், ஏனெனில், நாம் வீட்டுக்குப் போவதற்குரிய நேரமானது ஆகிவிட்டது. பிறகு நாம் திரும்பவும் இன்றிரவு 7 மணிக்கு வந்தாக வேண்டும்.



அங்கே தான் குழப்பமே ஏற்பட்டுள்ளது. பார்த்தீர்களா? இங்கே காலமானது 475 ஆண்டுகளைக் குறிக்கிறதாகக் கணக்கு ஏற்பட்டிருக்கையில் வேதாகமத்தின்படி அது சரியாக 483 ஆண்டுகளாயிருக்கிறது. ஆகவே அங்கே எட்டு ஆண்டுக்கால வித்தியாசம் காணப்படுகிறது.

82. தேவன் அது அவ்விதமாக தவறாகப் போகச் செய்ய முடியாது. தேவன் இத்தனை நாட்கள் பிடிக்கும் என்று கூறியிருந் தால், அது அவ்விதமாகவே சரியாக அவ்வளவு நாட்கள்தான் இருக்கும். அவர் எத்தனை என்று கூறுகிறாரோ அந்த அளவுதான் இருக்கும். ஆகவே நாம் என்ன செய்யப் போகிறோம்? இப்பொழுது கி.மு. 475 முதற்கொண்டு கி.பி. 30 முடிய, அது ஜூலியன் காலண்டர் அல்லது வானவியல் காலண்டர் கணக்காக எடுக்கப்பட்டால், அக்காலண்டர்களில் ஒவ் வொன்றும் ஆண்டுக்கு 365 1/2 நாட்கள் உள்ளவையாகும். ஆனால் அக்காலத்தை தீர்க்கதரிசன காலண்டர் கணக்குப்படி நாம் கணக்கிட்டால்....

83. இங்கே சற்று ஒரு நிமிட நேரம் நிறுத்திக்கொள்கிறேன். சந்தேகத்தின் நிழல் சிறிதும் இன்றி நீங்கள் அறிந்துகொள்ளத் தக்கதாக, நான் வெறுமனே ஒரு வசனத்தைக் கொண்டு மட்டும் உங்களோடு பேச மாட்டேன். வேத வாக்கியங்கள் முழுவதை யும் எடுத்துக்கொண்டு, அவற்றிலிருந்து ஒரு வாரமாகிய ஏழு நாட்கள் என்பது ஏழு ஆண்டுகளுக்கு சமம் என்பதை நான் வேத்திலிருந்து உங்களுக்கு நிருபித்துக் காண்பிக்க முடியும் வெளிப்படுத்தின விசேஷம் 11ம் அதிகாரம் 3ம்வசனத்தை எடுத்துக்கொண்டு அதிலிருந்து நான் உங்களுக்கு இப்பொழுது தான் காண்பித்திருக்கிறேன். அத்தீர்க்கதரிசிகள் ஆயிரத்து இருநூற்று அறுபது நாட்கள் தீர்க்கதரிசனம் உரைப்பார்கள். அதுதானே யூதர்களுக்குக் கொடுக்கப்பட்ட வாரங்களில் உள்ள கடைசி வாரத்தின் பாதி வாரமாகும். அதற்குப் பிறகு அவர்கள் வெட்டப்பட்டு, பிறகு அர்மகெதோன் துவங்குகிறது. ஆகவே காரியம் அவ்வாறிருக்கிறபடியால், அங்கே ஒரு மாதத்திற்கு சரியாக முப்பது நாட்கள் உள்ளன என்பதை மீண்டும் பார்க்கிறோம். அப்படியென்றால், ஒரு மாதத்தில் முப்பதும், ஒரு மாதத் தில் முப்பத்தியொன்றும், இன்னொரு மாதத்தில் இருபத்தியெட்டு நாட்களுமாக இருக்காது; ஒவ்வொரு மாதத்திற்கும் சரியாக முப்பது நாட்கள் வீதம்தான் இருக்கிறது.

என்பதை அதைக் கொண்டு நீங்கள் கூற முடியாது. ஆனால் யூதர்களை உற்று நோக்குங்கள். அங்கே தானே ஒரு காலத்தைக் காட்டும் காலண்டர் உள்ளது. அதை நீங்கள் புரிந்து கொண்டீர்களா? அவர்களுக்கு தேவன் சரியாக வரையறை செய்து, ஒரு நாளை, நேரத்தை, காலத்தை ஒதுக்கியிருக்கிறார். ஆனால் புறஜாதிகளுக்கு அவ்வாறு செய்யவில்லை. அவர் யூதர்களுக்கு அதைச் செய்தார். ஆகவே நாம் எங்கே இருக்கிறோம் என்பதை கண்டறிய யூதர்களைக் கவனித்துப் பார்ப்போமாக.

77. ...... இப்பொழுது இந்த ஏழு வாரங்கள் என்பது நாற்பத்தி யொன்பது ஆண்டுகளாகும். ஒரு வாரம் என்பது ஏழு வருடங் கள் ஆகும் என்பதை நாம் தெளிவாக கண்டு கொண்டுள்ளோம்.

78. நகரத்தை கட்டுவதற்கான கட்டளை வெளிப்படுவது முதற் கொண்டு மேசியா வருமட்டாகவும் (மேசியா தான் கிறிஸ்து என்பது நிச்சயமான விஷயம்) ஏழு வாரங்களும், அறுபத்தியிரண்டு வாரங்களும், ஆக அறுபத்தியொன்பது வாரங்கள் ஆகும் என்பதாக நமக்குக் கூறப்பட்டுள்ளது. கவனித்தீர்களா? அறுபத்தியொன்பதை ஏழால் பெருக்கினால், 483 ஆண்டுகள் வருகிறது. அதை நீங்கள் குறித்துக் கொண்டிருக்கிறீர்களா? அதை மீண்டும் நான் உங்களுக்கு விளக்கிட வேண்டுமானால் அதைச் செய்ய, நான் மகிழ்ச்சியுள்ளவனாயிருப்பேன்.

79. நகரத்தை திரும்ப எடுப்பித்துக் கட்டுவதற்குரிய கட்டளை வெளிப்படுவது முதற்கொண்டு, மேசியா வருமட்டாகவும், ஏழு வாரங்களும் (முதலில் ஏழு வாரங்கள் இங்கே) அறுபத்தியிரண்டு வாரங்களும் (ஏழும், அறுபத்தியிரண்டும் கூட்டினால் அறுபத்தியொன்பதாகும்) ஆக அறுபத்தியொன்பது வாரங்கள் ஆகும். அறுபத்தியொன்பதை ஏழால் பெருக்கினால் 483 வருடங்களாகின்றன. ஆகவே மேசியா வருமட்டாகவும் அங்கே 483 ஆண்டுகள் ஆகவேண்டும்.

80. இப்பொழுது இயேசுவாகிய மேசியா எருசலேம் நகரினுள் ஜெய கெம்பீரத்துடன் ஒரு வெள்ளைக் கழுதையின் மேலேறி, ஒரு குருத்தோலை ஞாயிறு அன்று, அதாவது கி.பி. 30ம் ஆண்டு ஏப்ரல் 2ம் தேதி பவனி வந்தார். ஆக 'வ கி.மு. 445 முதற் கொண்டு கி.பி.30 ஆண்டு முடிய சரியாக 475 ஆண்டுகள் ஆயிற்று.

81. ஆனால் நாம் ஏற்கெனவே பார்த்தபடி அறுபத்யொன்பது வாரங்கள் 483 ஆண்டுகளைக் குறிக்கிறது என்று இருக்கையில்...



146. முதலாவதாக... நீங்கள் இதை குறித்துக் கொள்கிறீர் களென்றால் எழுதிக்கொள்ளுங்கள். மீறுதலைத் தவிர்க்கிறதற்கும் தானியேல் 9ம் அதிகாரம் 24ம் வசனம்... மீறுதலை தவிர்க்கிறதற்கும் - (1) பாவங்களைத் தொலைக்கிறதற்கும் - (2) அக்கிரமத்தை நிவிர்த்தி பண்ணுகிறதற்கும் - (3) நித்திய நீதியை வருவிக்கிறதற்கும்- (4); தரிசனத்தையும் தீர்க்கதரிசனத்தையும் முத்திரிக்கிறதற்கும்- (5); மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம் பண்ணுகிறதற்கும் - (6), ஆகிய இவைகளைப் பற்றித் தான் இன்றிரவில் நாம் பேசப் போகிறோம். தேவன் நிறைவேற்றப் போகிறார்.

147. கொஞ்சம் பொறுங்கள், அதை நான் மீண்டும் எடுத்துக் கூறட்டும், முதலாவதாக, மீறுதலைத் தவிர்க்கிறதற்கும்; இரண்டாவதாக, பாவங்களைத் தொலைக்கிறதற்கும்; மூன்றாவதாக அக்கிரமத்தை நிவிர்த்தி பண்ணுகிறதற்கும்; நான்காவதாக, நித்திய நீதியை வருவிக்கிறதற்கும்; ஐந்தாவதாக, தரிசனத்தையும் தீர்க்கதரிசனத்தையும் முத்திரிக்கிறதற்கும்; ஆறாவதாக மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம் பண்ணுகிறதற்கும். வேதத்திலிருந்து நான் அவைகளை உங்களுக்கு படித்துக் காண்பிப்பேனாக. 24ம் வசனம்.

மீறுதலைத் தவிர்க்கிறதற்கும் - (1) பாவங்களைத் தொலைக்கிற தற்கும் - (2), அக்கிரமத்தை நிவிர்த்தி பண்ணுகிறதற்கும், - (3), நித்திய நீதியை வருவிக்கிதற்கும் - (4), தரிசனத்தையும் தீர்க்கதரிசனத்தை யும் முத்திரிக்கிறதற்கும் - (5), மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம் பண்ணுகிறதற்கும் - (6), உன் ஜனத்தின் மேலும் (அது யூதர்கள்) உன் பரிசுத்த நகரத்தின் மேலும் (இஸ்ரவேல், யூதர்கள் எருசலேம்) எழுபது வாரங்கள் செல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிறது.

148. நடப்பிக்கப்படப் போகிற மேற்கண்ட காரியங்களைப் பற்றி அவனிடத்தில் கூறவே அவன் வந்தான். இவைகளுக்குப் பின்பு முடிவு உண்டாகும்.

149. இன்றிரவில் அவைகள் என்னவென்று நாம் காணலாம்; மேலும், அவர்களுக்கு நாம் எவ்வளவு சமீபமாயிருக்கிறோம் என்பதையும் காண்போம். அடுத்த ஞாயிற்றுக் கிழமையன்று, இந்த காலங்களைப் பற்றி உறுதி செய்யும் அடிப்படையான காரியங்களைப் பற்றிப் பார்த்து, அவைகளை சரியாக பொருத்தி, நாம் எங்கே நின்று கொண்டிருக்கிறோம் என்பதைக் காண்போமாக. நான் அவரை நேசிக்கிறேன்.

150. இஸ்ரவேல் தன் சுயதேசத்திற்குத் திரும்பிக் கொண்டிருக் கிறது. இஸ்ரவேல்... நான் இதைக் கூறுவேனாக. இது ஒலிப்பதிவு செய்யப்படவில்லை என்று எண்ணுகிறேன். இப்பொழுது கவனியுங்கள். இங்கே இருக்கிற என் ஜனங்கள் முன்பாக கூறுகிறேன். நான் எப்பொழுதும் ஒரு காரியத்தைக் குறித்து விசுவாசித்திருக்கிறேன். அதன் காரணம் என்னவெனில்... நான் மரிக்கும் முன்னர் இஸ்ரவேலை கர்த்தரிடம் திருப்பும் ஊழியத்தில் எனக்கு ஒரு பங்கு உண்டாயிருக்கும் என்பதே நான் விசுவாசித்து வந்தது ஆகும். ஏனெனில் அப்பொழுது... இஸ்வேலர் சிதறடிக்கப்பட்டு ஒரு ஜாதியாயிராமல் இருந்த இரண்டாயிரம் ஆண்டுகள் காலத்தில் முதன் முதலாக அது ஒரு தேசமாக அங்கீகரிக்கப்பட்டு, பான் அமெரிக்க நாடுகளால் பிரகடனம் செய்யப்பட்டு, அந்நாடுகள் வெளியிட்ட முதல் தேசப்படம் வெளிவந்தபோது, அதே மணி நேரத்தில் கர்த்தருடைய தூதன் என்னைச் சந்தித்து, சுவிசேஷத்தோடு என்னை அனுப்பினார். அது மே 7,1946 ஆகும்.

151. இப்பொழுது, இன்னொரு காரியம் நான் அறியத்தக்கதாக இருக்கிறது; அது பிள்ளைகளின் இருதயத்தை பிதாக்களுக்குத் திருப்புவது; பிதாக்களின் இருதயத்தை பிள்ளைகளிடம் திருப்புவது என்ற செய்தியாகும். மல்கியா 4ம் அதிகாரத்தை கவனியுங்கள். 3ம் அதிகாரம் அல்ல, 4ம் அதிகாரம்.

152. இன்னொரு விஷயம்; சகோ. ஆர்கன்ப்ரைட் அவர்களுடைய இடத்தில் நாங்கள் யூதர்களைச் சந்தித்த பிறகு, என் மகன் பில்லியும், நானும், சகோதரன் எர்ன் பாக்ஸ்ட்டரும் பாலஸ்தீனாவுக்குப் பயணமானோம். அவர்கள் கூட்டங்களில் கலந்து கொண்டார்கள்... லெவி பெத்ரூஸ் அங்கே அவர்களுக்கு வேதாகமங்களை அனுப்பியிருந்தார். அவர் கூறினார். “இந்த யூதர்கள் என்னிடம் வந்து, 'நீங்கள் ஒரு கூட்டம் இஸ்ரேலியத் தலைவர்களை அழைப்பீர்களென்றால், தங்களுடைய வழிபாட்டுச் சடங்குளைக் கொண்டிருக்கிற இந்தப் புதிய ரபிமார்களையல்ல, ஆனால் உண்மையான இஸ்ரேலிய தலைவர்களை ஒன்று சேர்த்து அழைப்பீர்களென்றால்.....நாங்கள் இந்த புதிய ஏற்பாட்டை வாசித்திருக்கிறோம். மேசியா வரும்போது, சமாரிய ஸ்திரீ கூறியதைப் போல் அவர் எல்லாவற்றையும் கூறுவார். எங்களு டைய மேசியா ஒரு தீர்க்கதரிசியாயிருப்பார் என்று மோசே கூறியது எங்களுக்குத் தெரியும் என்றனர். நீங்கள் வேத வாக்கியங்களைக்கொண்டு, (இன்றிரவில் உள்ள செய்திகளில் நாம் இவற்றைப் பார்க்கலாம்)



செல்லுகையில், மறுபடியும் இஸ்ரவேல் மக்களை வந்து சேர்ந்து அவர்களை பிடித்துக்கொள்ளுகிறது.

75. புறஜாதிகளுக்கு என்று குறிப்பிட்ட காலமானது ஒதுக்கப் படவில்லை. 'புறஜாதிகளின் காலம் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசுவும் கூட அவர்களுக்கு என்று ஒரு காலத்தை ஒதுக்கிவிடவில்லை என்பதை நாம் காண்கிறோம். அதைப் பற்றி லூக்கா சுவிசேஷம் 21:24ல் பார்க்கிறோம். அவர் அங்கே, 'புறஜாதிகளின் காலம் வரையிலும் அவர்கள் எருச லேமை மிதிப்பார்கள்'' என்று கூறினார். நான் இவ்வசனத்தை எனது நினைவிலிருந்து கூறுகிறேன். நான் அதை உங்களுக்கு வேதத்திலிருந்து மேற்கோள் காட்டி வாசித்துக் காண்பிப்பேனாக; ஏனெனில் இவ்வொலி நாடாவில் இது பதிவு செய்யப் படுகிறது. எனவே நாம் அதை சரியாக அங்கே பதிவு செய்திட விரும்புகிறோம். அது சரி, என்னோடு கூட லூக்கா சுவிசேஷம் 21ம் அதிகாரம் 24ம் வசனத்தை எடுத்துக்கொள்ள நீங்கள் விரும்பினால் அவ்வசனத்திற்கு நீங்களும் திரும்புங்கள். என்னால் முடிந்த அளவு சிறப்பாக நான் அதைக் குறித்து படித்து ஆராய்ந்திருக்கிறேன். பட்டயக் கருக்கினாலே விழுவார்கள். சகல புறஜாதிகளுக் குள்ளும் சிறைப்பட்டுப்போவார்கள்.... (யாரைக் குறித்து அவர் இங்கே பேசுகிறார்? யூதர்களைப் பற்றித்தான். அது கி.பி 70 - இல் ஆலயமானது அழிக்கப்பட்டபோது நடைபெற்றதாகும்)...... சகல புறஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டுப் போவார்கள்... (இப் பொழுது, இது பாபிலோனுக்குள் சிறைப்பட்டுப் போவதைப் பற்றியோ அல்லது, ரோமாபுரிக்குள் சிறைப்பட்டுப் போவ தைப் பற்றியோ குறிப்பிடவில்லை, ஆனால் சகல தேசத்தாருக்குள்ளும் சிறைப்பட்டுப் போவார்கள் என்று கூறப்பட்டுள்ளதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். அதன்படியே இன்றைக்கு யூதர்கள் சகல புறஜாதிகளுக்குள்ளும் இருக்கிறார்கள்)... புறஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும்.

லூக்கா 21:24

76. அங்கே ஒரு வரையறை செய்யப்பட்ட நேரமானது புறஜாதியாருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அது எப்பொழுது முடியும் என்பதை ஒருவரும் அறியார். அறிந்துகொண்டீர்களா? அது ஒரு இரகசியமாக இருக்கிறது. ஆனால் யூதர்களுடைய காலமோ.... சபையைக் கொண்டு என்ன நேரம் என்பதை நம்மால் கூற முடியாது. அது பின்மாறியிருக்கிறதோ அல்லது தொடர்ந்து போய்க்கொண்டேயிருக்கிறதா, அது என்ன செய்து கொண்டிருக்கிறது

72. இப்பொழுது அங்கே ஏழு என்று இருந்தால்... பாருங்கள், அங்கே சரியாக நாற்பத்தியொன்பது நாட்கள் - நாற்பத்தியொன்பது ஆண்டுகள் ஆலயத்தைக் கட்டுவதற்கென உள்ள காலத்திற்கு இருந்தது. அதற்காக, ஏழு தீர்க்கதரிசன வாரங்கள், ஏழு வாரங்கள் இருந்தன. ஏனெனில் ஆலயத்தை திரும்ப எடுப்பித்துக் கட்டுவதற்கு ஏழு வாரங்கள் தீர்மானிக்கப் பட்டிருந்தது, அதன்படியே சரியாக நாற்பத்தியொன்பது ஆண்டுகளில் ஆலயமானது கட்டிமுடிக்கப்பட்டது. இப்பொழுது நமக்கு வாரங்கள் என்பதினுடைய அர்த்தம் கிடைத்திருக்கிறது. ஏனெனில் வேதம் கூறியது, தூதன் கூறினான்; ஆலயத்தை திரும்ப எடுப்பித்துக் கட்டி முடிக்கும் வரையிலும் ஏழு வாரங்கள் ஆகும் என்று கி.மு.538 மார்ச் 14ம் தேதி தொடங்கி சரியாக நாற்பத்தியொன்பது ஆண்டுக் காலத்தில் ஆலயமானது கட்டிமுடிக்கப்பட்டது. ஆலயமானது கட்டியெழுப்படவும், வீதிகளும் திரும்பக் கட்டப்படவும் அதற்கென சரியாக நாற்பத்தியொன்பது ஆண்டுகள் பிடித்தது. ஆகவே என்னத்தை நாம் புரிந்து கொண்டோம்? எதை நாம் புரிந்து கொண்டோம்? ஆகவே ஏழு வாரங்கள் என்றால் நாற்பத்தியொன்பது ஆண்டுகள் என்றால், அப்பொழுது, ஒரு வாரம் என்பது ஏழு ஆண்டுகளுக்கு சமம் என்று; ஏழை ஏழால் பெருக்கி நாற்பத்தியொன்பது ஆண்டுகள் வருகிறது. சரியாக அப்படித்தான் இருக்கிறது. பாருங்கள்.

73. ஆகவே, இப்பொழுது, இனிமேல் அதைப் பற்றி எந்த வித ஊகிப்பும் இருக்கவில்லை. இப்பொழுது அந்த ஒவ்வொரு வாரமும் ஏழு ஆண்டுகளைத்தான் குறிக்கும் என்பதை நாம் அறிகிறோம். அதை நீங்கள் புரிந்து கொண்டீர்களா? நாம் யாவரும் சேர்ந்து அதைக் கூறுவோம். ஒரு வாரம் என்பது ஏழு ஆண்டுகளுக்கு சமம்' இப்பொழுது நாம் அதைப் புரிந்து கொண்டோம் என்று அறிந்திருக்கிறோம். ஒரு வாரம் என்பது ஏழு ஆண்டுகளுக்கு சமம்.

74. இங்கே நாம், அந்த ஏழு வார காலத்திற்குரியதைப் பார்க்க இங்கே இருக்கிறோம். (சகோதரன் பிரான்ஹாம் அதைக் குறித்து விளக்குவதற்காக கரும்பலகையண்டையிலே பின்னோக்கிப் போகிறார் - ஆசி). ஆலயத்தை திரும்ப எடுப்பித்துக் கட்டுவதற்கு நாற்பத்தியொன்பது ஆண்டுகள் பிடித்தன. இப்பொழுது இந்த மேல் கோடு, யூதமக்களைக் குறிக்கிறது. அது குறுக்கே கடந்து செல்லுகிறது. இங்கே இது காலத்தை, நேரத்தை குறிக்கிறது. அது கடந்து செல்லுகையில், யூத ஜாதியை விட்டுவிலகிக் கடந்து சென்று புற ஜாதிகளின் நேரத்திற்குள் வருகிறது. பிறகு அது தொடர்ந்து



புறஜாதிகளின் காலம் இடையில் வரும்படியும் புறஜாதிகளுக்கு ஒப்புரவாகுதலின் காலம் உண்டாயிருக்கும்படியும், அவர்கள் குருடாக்கப்பட்டு, அவர்கள் இருதயங்கள் வெட்டுண்டு போகும்படி செய்யப்பட்டது என்பதையும், யோசேப்பின் காலத்தில் எவ்வாறு அவர்களுடைய இருதயங்கள் கடினப்படுத்தப்பட்டதோ அதே போன்று நடக்கவேண்டும் என்பதையும் நீங்கள் சுட்டிக்காட்டி பேசவேண்டும். பின்பு, எவ்வாறு நீங்கள் புறஜாதிகள் மத்தியில் நடத்தும் கூட்டங்களில் அவர்களை ஆவியானவரின் அசைவினால் பெயர் சொல்லி அழைக்கிறீர்களோ, அதைப் போலவே இவர்களையும் நீங்கள் அழைக்க வேண்டும். ஏனெனில் அவர்கள் கூறினார்கள், "இந்த இயேசுவானவர், மேசியாவாக இருப்பாரெனில், உம்முடைய வார்த்தைகள் உண்மையிருக்குமானால், அப்போது அவர் மரித்தவராயில்லை, அவர் உயிரோடிருக்கிறார். அவர் உயிரோடிருப்பாரெனில், அவர் தமது ஊழியக்காரர்களுக்குள், சீஷர்களுக்குள், வாசம் பண்ணுவேன் என்று வாக்குரைத்திருக்கிறார். அவ்வாறு ஒரு தீர்க்கதரிசிக்குரிய அடையாளத்தை செய்து காட்டினாரென்றால்; அப்பொழுது நாங்கள் அவரே மேசியா என்ற விசுவாசிப்போம். என்றார்'' எவ்வளவு பூரணமான காரியம், மிகவும் சரியாக இது இருக்கிறது. அப்பொழுது என்ன நடக்கும்? அத்தலைவர்களுக்குள், ஒரே நாளில் ஒரு தேசம் பிறந்து விடும். அவர்கள் ஒவ்வொருவரும், ''நாங்கள் அதை அறிவோம்'' என்று கூறுவார்கள். அந்த ரபீ சொன்னாரென்றால், அதுவே போதுமானது. ஒரே நாளில் ஜாதி பிறந்துவிடும். இஸ்ரவேல் என்னும் தேசம் ஒரே நாளில் பிறந்துவிடும்.

153. ஆகவே நான் எகிப்தில் உள்ள கெய்ரோவில், எனது வழிபயணத்தில் இருந்தேன், விமான நிலையத்தில் பயணிகள் உள்ளே வரும்படி விடுவிக்கும் அழைப்பு முடிய இன்னும் பதினைந்து அல்லது இருபது நிமிடங்கள்தான் மீதமிருந்தன. அவர்கள் பயணங்களுக்கான அழைப்பை விடுக்க இருந்தார்கள். அப்பொழுது நான் ஒரு இடத்தில் கருங்காலி மரத்தில் செய்யப்பட்ட யானை சிற்பம் தந்தம் பொருத்தப்பட்டு இருந்ததைப் பார்க்கச் சற்று நடந்து சென்றேன். பேப்பர் வெயிட்டாக உபயோகிப்பதற்காக என்னுடைய நண்பரான டாக்டர் சாம் அடெய்ர் அவர்களுக்கு அதை அனுப்பவிருந்தேன். நான் அதைப் பார்த்துக்கொண்டே இருந்தேன். அப்பொழுது, "இப்பொழுது உரிய வேளையல்ல, பாலஸ்தீனத்தைவிட்டு நீங்கியிரு'' என்று யாரோ கூறுவது எனக்குக் கேட்டது.

''நான் தான் இவ்வாறு எண்ணிக்கொண்டிருக்கிறேனோ'' என்று நான் நினைத்தேன். நான் புறப்பட்டுப் போனேன்.

154. "இது உரிய வேளையல்ல'' என்று யாரோ என்னிடம் கூறினார்.

155. அப்பொழுது நான் ஒரு கொட்டகையின் பின்னால் சென்று என் தலையை தேவனுக்கு நேராக உயர்த்தி, “தேவனே, நீர்தான் என்னோடு பேசிக்கொண்டிருந்தீரா?'' என்று நான் கேட்டேன்.

156. “இது உரிய வேளையல்ல, பாலஸ்தீனத்தைவிட்டு அகன்று இரு. இது அதற்குரிய வேலையல்ல' என்று கூறினார். பிறகு நான் எனது டிக்கெட்டை எடுத்து அதை மாற்றிக் கொண்டு அங்கிருந்து ரோமாபுரி வழியாக போர்ச்சுகலின் தலைநகர் லிஸ்பனுக்குச்சென்று, அங்கிருந்து அமெரிக்காவுக்குத் திரும்பி வந்துவிட்டேன்.

157. அதற்குரிய வேளையானது அப்பொழுது வந்திருக்கவில்லை. புறஜாதிகளின் அக்கிரமத்தின் பாத்திரம் இன்னும் நிரம்ப வில்லை. ஆனால் ஒருநாளிலே அது நிறைவாகிவிடும். தேவன் தீர்க்கதரிசியானவன் ஒருவனை ஒரு நாளிலே அங்கே அனுப்பி அவர்களுக்கு நிரூபித்துக் காண்பிப்பார். தேவன் அந்த நபரை சீக்கிரமாக எழுப்புவார் என்று நான் விசுவாசிக்கிறேன். அது யாராயிருந்தாலும் சரி, அது வரும் என்று நான் விசுவாசிக்கிறேன். அதற்காகத்தான் நாம் இதைப் படித்துக் கொண்டிருக்கிறோம். நாம் மிகவும் சமீபமாக வந்துவிட்டோம்.

158. யூதர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் அதே நிமிடம் புறஜாதி சபையானது எடுக்கப்பட்டிருக்கும். பிறகு இங்குள்ள புறஜாதிகள் மேல் வாதைகள் விழும், உபத்திரவகாலம் வரும்.

159. பெரிய போதகர்கள் என்று சொல்லப்படக்கூடிய மனிதர் கள் எல்லாம் சபையானது உபத்திரவ காலத்தின் வழியாகச் செல்லும், என்று இவ்வேதத்தைப் படித்துக் கொண்டே எவ்வாறு கூறுகிறார்கள்! ஆனால் வேத வாக்கியங்களிலோ அவ்வாறு கூறக்கூடிய ஒரு வசனம் கூட இல்லை. அவர்களுக்கு ஒன்று கூட இல்லை.

160. சமீபத்தில் ஒரு மனிதன் என்னிடத்தில் வந்து, ''சகோதரி மெக்ஃபெர்சன், சபையானது உபத்திரவ காலத்தின் வழியாகச் செல்லும், ஏனெனில், நாம் அக்காலத்தில் பிரகாசிக்கிற வெளிச்சங்களாக இருப்போம் என்று போதித்தார்கள்'' என்று கூறினார். அக்காலத்தில் அது இஸ்ரவேலரைத் தான் குறிக்கும், புறஜாதிகளையல்ல. புறஜாதி சபையின் காலம் ஏற்கெனவே முடிந்து



கடந்து செல்லுவதில்லை. ஆகவே ரோமனியக் காலண்டர் கூறுவது தவறாயிருக்கிறது. ஏனெனில், அதில் நாட்களை ஒன்றாக சேர்த்திட முடியாது. இங்கேதானே நான் அநேக காரியங்களை கூற முடியும். இயற்கையும் கூட ஒரு ஆண்டில் ஒவ்வொரு மாதத்திற்கும் சரியாக முப்பது நாட்கள் மாத்திரம் உண்டு என்று நமக்கு போதிக்கிறது என்பதை நாம் கண்டு கொள்கிறோம்.

70. இப்பொழுது இரண்டு தீர்க்கதரிசிகளின் நாட்களைப் பற்றிப் பார்க்கிறதற்காக நாம் வெளிப்படுத்தின விசேஷத்தை எடுத்துக் கொள்வோமாக. அவர்கள் ஆயிரத்து இருநூற்று அறுபது நாளளவும் தீர்க்கதரிசனம் சொன்னார்கள் என்பதாக வேதம் கூறுகிறது. இப்பொழுது நீங்கள் வானவியல் காலண்டரை எடுத்துக்கொண்டால், இந்த மூன்றரை ஆண்டுகளுக்கான அளவை அது நீண்ட தூரம் நிச்சயமாகவே இழந்து விட்ட நிலையில் இருக்கிறது. இன்றைக்கு நமது உபயோகத்தில் இருக்கிற ரோமனியக் காலண்டரை நாம் எடுத்துக்கொண்டால் கூட அதுவும் அந்தக் கணக்கை வந்தெட்டுவதாக இருக்க வில்லை. ஆனால் நீங்கள் தீர்க்கதரிசன காலண்டரை எடுத்துக் கொண்டால், அந்த ஆயிரத்து இருநூற்று அறுபது நாட்கணக்கில், மாதம் ஒன்றுக்கு முப்பது நாட்கள் வீதம் சரியாக கணக்கு வருகிறது, கவனித்தீர்களா?

71. நமக்கு நமது காலண்டரில், சில மாதங்களில் முப்பது நாட்கள் வீதமும், அடுத்து வருகிற மாத்தில் முப்பத்தியொரு நாட்கள் வீதமும் ஒரு மாதத்தில் இருபத்தெட்டு நாட்களுக்கு வருகின்றன. அவை யாவும் குழுப்பி விடப்பட்டிருக்கிறதை கவனியுங்கள். தேவன் இவ்வாறான குழப்பமான முன்னுக்குப் பின் முரணான வகையில் உள்ள எதையும் கொண்டவராய் இருக்கமாட்டார். ஒவ்வொரு மாதத்திற்கும் சரியாக முப்பது நாட்கள் என்ற அளவில்தான் அவர் வைத்திருக்கிறார். முப்பத்தியொன்று, பிறகு முப்பது இப்படியாக இருக்காது. புரிந்து கொண்டீர்களா? ஆனால் தேவனுடைய மகத்தான ஒழுங்கு முறைத் திட்டத்தில், சபையானது விழித்திருந்து, ஜெபித்துக் கொண்டேயிருந்து, ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் தங்களது ஆடைகள் கழுவப்பட்ட நிலையில் கொண்டிருந்து ஆயத்தமாயிருக்கச் செய்யும்படி, இப்படியாகச் செய்யப் பட்டது. ஓ, இக்கடைசி நாட்களிலே, அவர் வாக்குரைத்திருக்கிறார்... நாம் இப்பொழுது எந்த வேளையில் ஜீவித்துக் கொண்டிருக்கிறோம் என்பதைக் காண்கிறோம். இதைச் செய்வதற்கான நோக்கம், முழு முதல் நோக்கமும், இதற்காகத்தான் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

பிரகாசத்தின் பார்வையில் படாமல் ஆகிவிட்டது. நீங்கள் புரிந்துகொண்டீர்களா?. அப்படித்தான் ஏற்பட்டது என்று நான் விசுவாசிக்கிறேன்.

67. அவ்விதமான நிலையில் அது விழுந்து கிடக்கிறது. அப்படிப்பட்ட நிலை ஒரு குறிப்பிட்ட கால வேளையில் மட்டும் நீடித்தது என்பதை அது காட்டுகிறது. உங்களால் அதைக் காண முடியவில்லையா? காரியங்கள் நிலைகுலைந்து போய்விட, காரியங் கள் உதவிகரமாக இல்லாத நிலையில் போய்விடுவதை, தேவன் கொண்டிருப்பதில்லை. அப்படியே ஆகிவிட்ட ஒரு சிறிதளவு காலத்திற்குத்தான் அவ்வாறிருக்க தேவன் விடுவார். அக்காரியங் கள் அவ்வாறு நிகழ்ந்தன என்பதையும், இக்கடைசி நாட்களில், தேவன் தன் சபைக்கு இந்த இரகசியங்களையெல்லாம் வெளிப் படுத்தப்போகிறார் என்பதையும் நான் உண்மையாகவே விசு வாசிக்கிறேன். இதற்கு முன்னால் அவர் அதைச் செய்ய வில்லை. முன்காலங்களில் அவர் அதை வெளிப்படுத்தாததன் காரணம் என்னவெனில், சபையானது எப்பொழுது எந்த நேரம் வருமென்று அறியாதிருக்கிறபடியால் விழித்திருந்து எப்போதும் ஜெபித்துக் கொண்டேயிருக்கட்டும் என்பதற்காகத்தான். ஆனால் தானியேல் 12ம் அதிகாரத்தில் "ஞானவான்களே முடிவு காலத்தில் உணர்ந்து கொள்வார்கள்'' என்ற குறிப்பிடப்பட் டுள்ளது என்பதை நீங்கள் ஞாபகத்தில் கொண்டுள்ளீர்கள். அவனுக்கு அது கொடுக்கப் பட்டிருக்கிறது.

68. பரிசுத்த ஆவியினாலே உள்ள வெளிப்படுத்தலைக் கொண்டு, எந்த நாளில் நாம் ஜீவித்துக்கொண்டிருக்கிறோம் என்பதைப் பற்றி சபையானது அறிந்து கொள்ளச் செய்தவற்காக சபைக்குள் ஞானத்தை அளிக்கும் ஆவியானது வருகிறது. தானியேலிடம் காபிரியேல் வந்தது போல், பரிசுத்த ஆவியானவர் இக்கடைசி நாட்களில் இம்மகத்தான, ஆழமான இரகசியமான விஷயங்ளை வெளிப்படுத்துவதற்காக சபையினிடம் வருகிறார். இப்பொழுது நீங்கள் இதைப் புரிந்து கொண்டீர்களா?

69. பூமியானது சற்று ஒருக்களித்து நிலையில் சரிந்துபோய் விட்டபடியால், வானவியல் காலண்டரோ, அல்லது ஜூலியன் காலண்டரோ, அல்லது மேசோனிக் காலண்டரோ உபயோகத்தில் இல்லாத நிலைக்கு ஆகிவிட்டது. பள்ளிகளில் படித்ததிலிருந்து நாம் யாவரும் அதைப் பற்றி அறிந்துள்ளோம்... அது வழக்கொழிந்து போய்விட்டது. ஆகவே, அக்காலண்டர்கள் கூறுகிறபடி இப்போது, நட்சத்திரங்கள் பூமிக்கு மேலாக குறிப்பிட்ட கோட்டில் அதே நேரத்தில்



போய்விட்டிருக்கும். அவர்கள் உபத்திரவ காலத்தின் வழியாக செல்ல வேண்டியதிருக்காது. வலுசர்ப்பம் தன் வாயிலிருந்து வெள்ளத்தை ஊற்றிவிட்டு, மீதியானவர்களோடு யுத்தம் செய்யப் புறப்பட்டுப்போனது (அது 17ம் அதிகாரம்) நித்திரை செய்யும் கன்னியர்... உண்மையான சபையானது ஏற்கெனவே போய்விட்டிருக்கும். அந்தக் காலத்தில் 'அந்த கடைசி வாரத்தில்' சபையானது கலியாண விருந்துக்கு போய் விடும். அப்போது கலியாண விருந்து நடைபெற்றுக் கொண்டி ருக்கும். அப்போது தான் உபத்திரவ காலமானது துவங்கும், அப்போது வெட்டுக்கிளிகளும் உபத்திரவங்களும் சபைகள் மேல் எழுப்பும். பிறகு முடிவில் 19ம் அதிகாரத்தில் அவள் தன்னுடைய மணவாளனுடன் வருவாள் (அல்லேலூயா), இராஜாதி இராஜா, கர்த்தாதி கர்த்தாவாக, இரத்தத்தில் தோய்த்த வஸ்திரம் தரித்தவராய் வருவார், அவரோடு பரலோக சேனைகளும் வெள்ளைக்குதிரைகள் மேல் ஏறி வர, அங்கே அவள் ஆயிரமாண்டு அரசாட்சியில் தன் ஸ்தானத்தை எடுத்துக் கொள்ளவருகிறாள். ஆமென்! ஓ!

*அவர் நாமம் துதிக்கப்படுவதாக,*

*ஓ, நாமம் துதிக்கப்படுவதாக*

*கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதாக*

*அவர் நாமம் துதிக்கப்படுவதாக,*

*கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதாக*

*இயேசு தான் அந்நாமம்,*

*இயேசு தான் அந்நாமம்*

*இயேசு என்பது கர்த்தருடைய நாமம்*

*இயேசு தான் அந்நாமம்,*

*ஓ, இயேசு தான் அந்நாமம் இயேசு என்பது கர்த்தருடைய நாமமாம்*

*அவர் நாமத்தை மகிமைப்படுத்து, அவர் நாமத்தை மகிமைப்படுத்து, கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்து, நாமத்தை மகிமைப்படுத்து, ஓ, அவர் நாமத்தை மகிமைப்படுத்து, கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்து.*

161. அதை நீங்கள் எவ்வாறு செய்கிறீர்கள்? நீங்கள் அதை உங்கள் வாழ்க்கையில் மேன்மைப்படுத்துங்கள். ''அதோ அவர் கிறிஸ்துவின் ஊழியக்காரர்'' என்று அவர்கள் கூறத்தக்கதாக அப்படிப்பட்ட வாழ்க்கையை நீங்கள் வாழுங்கள். அவ்விதமாகத்தான் நீங்கள் அவர் நாமத்தை மகிமைப்படுத்த வேண்டும்.

ஓ, நீங்கள் அவரை நேசிக்கவில்லையா? இப்பொழுது நமது சிறிய பாடலைப் பாடுவோம்.

*வெகு காலத்திற்கு முன்பு ஒரு புல்லணையில்*

*மானிடரை பாவங்களிலிருந்து இரட்சிக்க*

*குழந்தை ஒன்று பிறந்தது.*

*இதை நான் உண்மையாக அறிவேன்;*

*அவரை யோவான் கடற்கரையில் கண்டான்*

*என்றென்றும் ஜீவிக்கும் ஆட்டுக்குட்டியைக் கண்டான்*

(ஏழு முத்திரைகளை உடையவராய் அவர் ஒருவரே வானத்திலும் பூமியிலும் அதை கையிலெடுக்க முடியும்)

*நான் உண்மையாக அறிந்ததென்னவென்றால்,*

*வெகுகாலம் முன்பு ஒரு புல்லணையில்*

*பாவத்திலிருந்து மானிடரை இரட்சிக்க*

*பாலகன் ஒருவர் பிறந்தார்.*

*அவரை யோவான் அக்கரையில் கண்டான்*

*என்றென்றும் ஜீவிக்கும் ஆட்டுக்குட்டியவர்*

*ஓ, கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதாக*

*ஓ, அவர் நாமம் துதிக்கப்படுவதாக*

*ஓ, அவர் நாமம் துதிக்கப்படுவதாக,*

*ஓ , கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதாக*

*அவர் நாமம் துதிக்கப்படுவதாக*

*நாமம் துதிக்கப்படுவதாக,*



பட்டயத்தைக் கையிலேந்தியவர்களாயும் இருந்தார்கள் என்பதை நம்மில் அநேகர் நினைவில் கொண்டிருக் கிறோம் (நெகே. 4:17-18). இடுக்கமான காலங்களில் அது கட்டப்படும் (தானி. 9:25).

65. இப்பொழுது, நமக்கு இரண்டு மூன்று வெவ்வேறு ஆண்டுக் குறிப்பேடுகள் (Calenders) உள்ளன. நாம் அந்தப் பழைய வானசாஸ்திர காலண்டரைப் பார்க்கிறோம். ஜூலியன் காலண்டரில் ஒரு ஆண்டுக்கு 3651/ நாட்கள் உள்ளன. அவர்கள் சார்டிஸ் இன்னும் பல்வேறு நட்சத்திரங்கள் கடந்து செல்லுவதைக் கொண்டு, அந்த வேளையைக் கொண்டு, இந்தக் காலண்டரை ஏற்படுத்தினார்கள். (ஜூலியஸ் காலண்டர் என்பது ஜூலியஸ் சீசர் என்ற ரோம அரசனால் நடைமுறைக்குக் கொண்ட வரப்பட்ட காலண்டராகும் - தமிழாக்கியோன்) நாம் இப்பொழுது நடைமுறையில் கொண்டுள்ள ரோமானியக் காலண்டரில், ஒரு ஆண்டுக்கு 365 நாட்கள் உள்ளன. ஆனால் கிறிஸ்தவ அல்லது தீர்க்கதரிசின காலண்டரில் அங்கே ஒரு ஆண்டுக்கு 360 நாட்கள் மட்டுமே உள்ளன.

66. இப்பொழுது, நீங்கள், எவ்வாறு இந்தக் குழப்பம் நேரிட்டது என்று வியக்க கூடும். இப்பொழுது, இதை நான் என்னுடைய கூற்றாகத்தான் நான் கூற முடியும். ஜலப்பிரளய காலத்தின் அழிவின் முன்பு, யோபின் நாட்களிலும், அவர்கள் அப்போதெல்லாம், நட்சத்திரங்களைக் கொண்டே காலக் கணக்கை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள். அந்தக் காலத்திற்கு முன்பாக உலகமானது நேராக நிமிர்ந்திருந்தது. பின்பு மனிதனு டைய பாவத்தின் காரணமாக உலகமானது ஜலப்பிரவாகம் பெருக்கெடுத்து பொங்கி வழிந்தோடியதால், சற்று ஒருக் களித்து, சரிந்த நிலையில் ஆகியது. ஆகவேதான் நமக்கு பெரிதான துருவப் பனிப்பிரதேசங்கள் உள்ளன. புவியின் மேல் பாகத்திலும் கீழ்ப்பாகத்திலும் பனியினால் நிறைந்துள்ளது. நாம் அதை அறிவோம். புவியானது நிமிர்ந்த நிலையில் இருக்க வில்லை. அது சற்றே சரிந்த நிலையில் உள்ளது. அது அதை சந்திரன், நட்சத்திரங்கள் இருந்த இடத்திலிருந்து குலுக்கி உதறிக்கொட்டி தூர அகற்றிவிட்டு. அவைகள் அருகாமையில் இருந்து புவியை நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தன. பிறகு அவைகள் உரிய இடத்தைவிட்டு இடம் பெயர்ந்து போய் விட்டன. அதனால் அதைக் கொண்டு இனிமேல் காலத்தைக் கணக்கிட இயலாமற்போயிற்று. ஏனெனில் பூமியானது ஏறு மாறான சரிசம நிலையற்ற விதமாய் சரிந்துபோய்விட்ட நிலையில் ஆகிவிட்டது தான் காரணம். எனவே அந்நட்சத்திரங்களின் நிலைக்கு ஏற்றவாறு அது அமையாமல் போய்விட்டபடியினால், அது நட்சத்திரங்களின்

அவ்வாரங்கள் மூன்று காலங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. அதைக் குறித்து நாம் தானியேலின் 9-ம் அதிகாரத்தில் காண்கிறோம். மூன்று காலங்கள். முதலாவதாக ஒரு ஏழு வாரகாலம்; பிறகு அறுபத்திரண்டு வாரங்கள், பிறகு ஒரு வாரகாலம். அவைகள் மூன்று வெவ்வேறு காலங்களாக பிரிக்கப்பட்டுள்ளன.

62. இப்பொழுது நான் இக்கரும்பலைகையில் அவ்வாறு பிரித்துக் காண்பித்துள்ளேன். முதலாவது காலம், இரண்டாவது காலம்; பரிசுத்த ஆவியினாலே சுவிசேஷத்திலிருந்து நான் அறிந்து கொண்டுள்ளது என்னவெனில், கடைசி காலத்தில் தேவன் மீண்டும் யூதரிடம் திரும்புகிறார்.

63. சுவிசேஷங்கள் யாவற்றினாலும், பவுலும் ஏனையோரும் போதித்ததைக் கொண்டும், தேவன் யூதர்களிடம் மீண்டும் திரும்பி வருவார் என்பதை நாம் அறிவோம். நல்லது, அப்படி யானால், அவர் யூதரிடம் திரும்பப் போகிறார் என்றால், அதை எவ்வாறு தானியேலின் காலத்தோடு நாம் பொருத்த இயலும்? இக்கடைசி காலத்தோடு தான் சம்மந்தப்படுத்தி பார்க்க வேண்டும். அதாவது புறஜாதி சபையானது எடுக்கப்பட்டுப் போய்விட்ட பிறகுதான். ஏனெனில், தேவன் இஸ்ரவேலோடு ஒரு தேசமாகவும், நம்மோடு தனி நபர்களாகவும் இடைபடுகிறார்.

64. இப்பொழுது நாம் தொடர்ந்து பார்த்துக்கொண்டே போகையில், நான் இங்கே எழுதி வைத்துள்ளவைகளிலிருந்து உங்களுக்கு சிலவற்றைப் படிக்க விரும்புகிறேன். எருசலேமை திரும்ப எடுப்பித்துக் கட்டுவதற்கான கட்டளை வெளிப்பட்டது, மார்ச் மாதம் 14ம் தேதியாகும். உங்களில் யாராவது அதைக் குறித்துக் கொள்ள விரும்பினால், அப்படியே செய்யுங்கள்; அது எபிரேய மாதமாகிய நிசான் என்பதாகும். நிசானுக்குச் சரியான மாதம் மார்ச் ஆகும். கி.மு 445-இல் மார்ச் 14இல் அதற்கான கட்டளை பிறப்பிக்கப்பட்டது. ஆலயத்தை திரும்ப எடுப்பித்துக் கட்டுவிப்பதற்கான கட்டளை அப்போதுதான் பிறப்பிக்கப் பட்டது. நீங்கள் வேத வாக்கியங்களை வாசித்திருக்கிறப் படியால், அதைப் புரிந்து கொண்டுள்ளீர்கள். ஆலயத்தையும் நகரத்தையும் திரும்ப எடுப்பித்துக் கட்டி முடிப்பதற்கு அதற்கு நாற்பத்தியொன்பது ஆண்டுகள் பிடித்தது. இங்கே வேதம் கூறுகிறபடி, தானியேல் கூறுகிறான். அல்லது தானியேலிடம் தூதன் கூறுகிறதாவது; இடுக்கமான காலங்களில் அலங்கங்கள் கட்டப்படும் என்று. அவர்கள் கட்டுகையில், ஒரு கையில் சாந்துக்கலவையும், மற்றொரு கையில் எதிரியைக் கவனித்துக் கொள்தவற்காக ஒரு



*கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதாக.*

162. நான் தொழுதுகொள்ள விரும்புகிறேன். நீங்கள் விரும்புகிறீர்களா? நாம் சபைக்கு ஒரு பிரசங்கத்தை மட்டும் கேட்க வரவில்லை. அது ஆராதனையில் ஒரு பாகமாக இருக்கிறது. ஆனால் நாம் சபைக்கு தொழுதுகொள்ளவே வருகிறோம். ஆவியிலும் சத்தியத்திலும் தொழுதுகொள்ளவே வருகிறோம். நீங்கள் சத்தியத்தை கேட்டிருக்கிறீர்கள். அது வார்த்தையாயிருக்கிறது. தொழுதுகொள்வது என்பது நீங்கள் உங்களையே அவருக்கு வெளியரங்கமாய் தெரியப்படுத்துவது ஆகும்.

ஓ, நான் அந்தக் கலிலேய மனிதனை நேசிக்கிறேன். அதன் இராகத்தை சற்று மீட்டி தாருங்கள். டெட்டி, அது உங்களுக்குத் தெரியுமா? நான் இப்பொழுது மறந்துவிட்டேன். நாம் முயற்சிப்போம்.

ஓ, நான் அந்தக் கலிலேய மனிதனை கலிலேயனை நேசிக்கிறேன். அவர் எனக்கு ஏராளம் செய்திருக்கிறார்.

என்பாவங்கள் அனைத்தையும் மன்னித்தார் எனக்குள் பரிசுத்த ஆவியை வைத்தார் ஓ, நான் நேசிக்கிறேன், அந்த கலிலேய மனிதனை நேசிக்கிறேன். ஆலயத்தில் ஜெபிக்க ஆயக்காரன் ஒருவன் சென்றான் 'கர்த்தாவே என் மேல் இரக்கமாயிரும்'' என்று அவன் கதறினான். அவனது எல்லாப் பாவமும் மன்னிக்கப்பட்டது. ஆழ்ந்த சமாதானம் அவன் உள்ளத்தில் பதிந்தது. "வந்து பாருங்கள் கலிலேயனாகிய இம்மனிதனை'' என்றான். அவர் எனக்கு ஏராளம் செய்திருக்கிறார், என் எல்லா பாவத்தையும் மன்னித்தார் என்னுள்ளில் பரிசுத்த ஆவியை ஈந்தார் நான் நேசிக்கிறேன்,

ஓ, அக்கலிலேயனாகிய அம்மனிதனை.மூடவனை நடக்கச் செய்தது, ஊமையன் பேசிடச் செய்தது, அன்போடு கடலில் பேசப்பட்ட அவ்வல்லமையே குருடரின் கண்கள் திறக்கப்பட்டன, அது கலிலேயனாகிய அம்மனிதனின் வல்லமையால் மாத்திரம் நடக்கும் என்பதை நான் அறிவேன், கலிலேயனாகிய அம்மனிதனை, அக்கலிலேயனை நான் நேசிக்கிறேன், அவர் எனக்குச் செய்தது அதிகம், என் பாவமெல்லாவற்றையும் அவர் மன்னித்தார் என்னுள்ளில் பரிசுத்தாவி ஈந்தார். ஓ, நான் நேசிக்கிறேன், கலிலேயனாகிய அம்மனிதனை நான் நேசிக்கிறேன். இதைக் கேளுங்கள். கிணற்றண்டையில் நின்ற பெண்ணின் பாவம் அனைத்தையும் அவர் கூறினார்

அவளுக்கு ஐந்து புருஷர்கள் உண்டு என்பதையும் அவ்வேளையில் கூறினார் (அதைச் செய்தது அவரே) அவளது ஒவ்வொரு பாவமும் அவளுக்கு மன்னிக்கப்பட்டது. அப்பொழுது அவள், ''வந்து பாருங்கள் கலிலேயனாகிய

இம்மனிதனை கலிலேயனாகிய அம்மனிதனை, அக்கலிலேயனை ஓ நான் நேசிக்கிறேன். அவர் எனக்குச் செய்தது எராளம், என் பாவமனைத்தையும் அவர் மன்னித்தார் என்னுள்ளில் பரிசுத்தாவியும் ஈந்தார் ஓ, நான் நேசிக்கிறேன், நான் கலிலேயனாகிய அம்மனிதனை நேசிக்கிறேன்.

நான் அவரை நேசிக்கிறேன். நீங்கள் நேசிக்கிறீர்களா? என் முழு இருதயத்தோடும்; நீங்கள் அவ்வாறு செய்கிறீர்களா? அவர் அற்புதமானவராயிருக்கிறாரல்லவா?

அற்புதம், அற்புதம் இயேசு எனக்கு (அவர் எப்படியிருக்கிறார்?) ஆலோசனைக் கர்த்தராம் வல்ல தேவனாம், பாவம் சாபம் யாவும் நீக்கி என்னை இரட்சித்தார், அற்புதம் என் இயேசுவுக்கு ஸ்தோத்திரம், நம் தலைகளைத் தாழ்த்தி அதைப் பற்றி சிந்திப்போம்: நான் முன்பு காணாமற்போனேன்; ஆனால் இப்போது நான் கண்டுபிடிக்கப்பட்டேன், ஆக்கினைத் தீர்ப்பு எனக்கில்லை (தேசங்கள் உடைகின்றன அதைப்பற்றி கவலையில்லை) முழு விடுதலையும் முழு இரட்சிப்பும் இயேசு தந்தாரே பாவம், இலச்சையினின்றும் என்னை இரட்சிக்கிறார் என் மீட்பர் அற்புதமானவரே, அவர் நாமத்திற்கே ஸ்தோத்திரம். அற்புதம், அற்புதம் இயேசு எனக்கு, ஆலோசனைக் கர்த்தராம் வல்ல மீட்பராம் பாவம் சாபம் யாவும் நீக்கி என்னை இரட்சித்தார். அற்புதம் என் இயேசுவுக்கு ஸ்தோத்திரம் ஓ, அதைப்பற்றி சிந்தித்துப் பாருங்கள் காணாமற்போன என்னை தேடிக் கண்டுபிடித்தார் ஆக்கினையினின்றும் விடுதலையானேன் இயேசு விடுதலையும், பூரண இரட்சிப்பும் ஈந்தாரே பாவம், வெட்கம், இவற்றினின்று என்னை (அதிலிருந்து தப்பிக்க) இரட்சித்து காக்கிறாரே (அவர் என்ன செய்கிறார்!) அற்புதம் என் மீட்பர், அவர் நாமத்திற்கே துதியுண்டாவதாக இப்பொழுது ஒருமித்து.... அற்புதம், அற்புதம் இயேசு எனக்கு, ஆலோசனைக் கர்த்தராம் வல்ல மீட்பராம் பாவம் சாபம் யாவும் நீக்கி என்னை இரட்சித்தார். அற்புதம் என் இயேசுவுக்கு ஸ்தோத்திரம்.



பகட்டாரவாரமுள்ள மேட்டுக் குடியினர் உள்ளே வரத்துவங்கினர். பிறகு அவர்கள் முழுவதும் ஒன்று படுத்தி, முழுவதும் புதியதானதொரு சபையை அதிலிருந்து ஏற்படுத்தி நிறுவினர். அந்த சிறிய சபையோ சுட்டெரிக்கப் பட்டும், கல்லெறியுண்டும், சிங்கங்களுக்கு இரையாக்கப் பட்டும் இன்னும் இப்படிப்பட்ட சகல தொல்லைக்குள் ஆளாக்கப்பட்டனர்.

59. சீர்த்திருத்தலின் காலத்தின் போது லூத்தர் வந்தார், அங்கே இன்னும் கூடுதலான வெளிச்சம் உண்டாயிற்று என்பதை நீங்கள் காணலாம். வெஸ்லியின் நாட்களிலே, இன்னும் அதைவிட கூடுதலான வெளிச்சமானது கொண்டுவரப்பட்டது. ஆனால் இக்கடைசி சபைக் காலத்திலே, இங்கே, நிக்கொலாய் மதஸ்தருடைய போதகத்தால் நிரம்பி சபைக் காலத்திலே இக்காலத்தில் தான் நாம் இருக்கிறோம். அது நிக்கொலாய் அல்ல, லவோதிக்கேயாவாக இருக்கிறது. இதின் காலத்தில் தான் நாம் வாழ்கிறோம். அங்கே அமைதியான வெளிச்சம் இல்லை என்பதை கவனியுங்கள்.

60. அங்கேயுள்ள அதைப் பற்றி வரைதலைக் கண்ட ஒருவர், ''சகோதரன் பிரான்ஹாமே, உமக்குத் தலைகுனிவு இது, ஏனெனில் இந்தக் காலம் மகத்தான பிரகாசிக்கப்படுதலின் காலமாக இருக்கிறதே'' என்றார்.

அதற்கு மறுமொழியாக, நான், "அது புடைத்து சலிக்கப்பட்டால், இந்த அளவுக்குக் கூடத் தேறாது'' என்று கூறினேன். 'ஆவியால் பிறந்த, இருதயத்தில் உண்மையும் சுத்தமுள்ளவர்களை மட்டும் சலித்து எடுத்தால் மிகவும் கொஞ்சம்தான் தேறும்" என்றேன். எல்லா சபைக் காலங்களிலும் இந்த சபைக் காலத்தில் மட்டும்தான் கிறிஸ்து தம்முடைய சொந்த சபையை விட்டே புறம்பாக்கப்பட்டிருக்கிறார். நாம் பெரிதான அறிக்கையை உடையவர்களாயிருக்கிறோம். ஆனால் நாம் எதைக் குறித்துப்பேசிக் கொண்டிருக்கிறோமோ அதை நாம் சுதந்தரித்துக் கொண்டவர்களாய் இருக்கிறோமா? கிறிஸ்து உண்மையிலேயே சபையில் இருக்கிறாரா? அது தானே மிகவும் சிறுபான்மையானதாக இருக்கும்.

61. இப்பொழுது, தானியேலின் எழுபது வாரங்களைப்பற்றிய முக்கியக் கூறுகளை மட்டும் நாம் பார்ப்போமாக. மீண்டும் அதைப் பற்றி திரும்ப நான் ஒருவேளை இங்கே கூறக்கூடும். சுவிசேஷ ஊழியக்காரர்களே, நான் கூறுபவைகளோடு நீங்கள் ஒத்துக்கொள்ளாதிருந்தால், அதைப் பற்றி பரவாயில்லை.

கொள்ளும்படியாக விளக்கப்பட்டுள்ளது. உங்களுக்கு இயலுகிறதா? இது மிகவும் சிறியதாக எழுதப்பட்டுள்ளதால், பின்னால் அமர்ந்திருக்கிற உங்களுக்கு சரியாக காண இயலவில்லை என்று நான் கருதுகிறேன். அது பெக்கி வரைந்ததாகும். அந்த படமானது... அதைவிட மோசமான படம் ஒன்று வரைந்திருந்தாள், அது நேபுகாத்நேச்சாரின் சொப்பனத்தில் வந்த அந்த சிலையின் உருவமாகும். பெக்கி வரைந்தபடியால் அது மனிதனைப் போல் தோற்றமளிப்பதைவிட ஒரு பெண்ணைப் போல்தான் தோற்றமளிக்கிறது. ஆனால் எப்படியிருந்த போதிலும் நமக்குத் தேவையான தகவலை அளிக்கக் கூடியதாக அது இருக்கிறது.

57. அம்மக்களின் மேல் எழுபது வாரங்கள் செல்லும்படி தீர்மானிக்கப்பட்டது என்பதை, வேதத்தை நாம் வாசித்தால் அறிந்துகொள்ளலாம். சபைக்கும் அதற்கும் எந்த சம்மந்தமுமேயில்லை. இவ்வெழுபது வாரங்களுக்கும் சபைக்கும் சம்மந்தமேயில்லை. நீங்கள் இங்கேயுள்ள இவ்வரைப்படத்தை கவனித்துப் பார்த்தீர்களானால், சபைக் காலத்தை நீங்கள் காணலாம். இங்கே நாம் அதை வரைந்திருக்றோம். நாம் சபைக் காலங்களைப் பற்றி படித்துக்கொண்டிருக்கையில், ஜியார்ஜியா விலிருந்து உள்ள ஒரு சகோதரன் தான் நமக்கென இவ்வரைப் படத்தை வரைந்து கொடுத்தார். இது எதைக் குறிக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள இயலும் என்பதைப் பற்றி நான் நிச்சயமுள்ளவனாயிருக்கிறேன்.

58. இவ்வரைப் படத்தில் வெள்ளையான இப்பகுதி, அது முழுவதும் அப்போஸ்தல ஊழியமாயிருந்தது என்பதை எடுத்துக் காட்டுகிறதாயிருக்கிறது. அதன் பிறகு இரண்டாவது சபைக் காலத்தில், அவர்கள் நிக்கொலாய் மதஸ்தருடைய கிரியைகளை கொண்டவர்களாய் இருந்தனர். அது அப்பொழுது இன்னும் ஒரு உபதேசமாக மாறவில்லை. மூன்றாவது சபைக் காலத்தில், அது ஒரு உபதேசமாக மாறியது. நான்காவது சபைக் காலத்தில் அது ஸ்தாபனமாக ஆகியது. அதுதானே ரோம போப்பு மார்க்கமாக ஆகியது. அந் நான்காவ தான சபைக் காலம்தான் இருண்ட காலங்களாக விளங்கியது. அங்கே காணப்படுகிற இரண்டு பகுதி யாவும் நிக்கொலாய் மதஸ்தருடைய போதகம் அல்லது ரோமானியக் கொள்கை என் பதைக் குறித்து எடுத்துக்காட்டுகிறது. அதிலுள்ள வெண்மைப் பாகமானது பரிசுத்த ஆவியை, உண்மையான சபையைக் குறிக்கிறது. பவுலின் காலத்தில் துவங்கியது போல, அவ்வப் போஸ்தல சபையாவும், பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டிருந்தது. அதன்பிறகு,



ஓ, நான் இயேசுவை மிகவும் நேசிக்கிறேன் (மகிமை) ஓ, நான் இயேசுவை மிகவும் நேசிக்கிறேன் (உங்கள் கரங்களை உயர்த்திப் பாடுங்கள்... நான் அவருக்காக காத்திருக்கிறேன்)

அவர் என்னில் முந்தி அன்பு கூர்ந்ததால் ஓ, நான் இயேசுவை மிகவும் நேசிக்கிறேன். இப்பொழுது நமது கரங்களை உயர்த்தின வண்ணமாக, நாம் உண்மையாகவே உளமாறக் கூறுவோமானால் நான் அவரை விட்டு விலகமாட்டேன் நான் அவரை விட்டு விலகமாட்டேன் நான் அவரை விட்டு விலகமாட்டேன்

ஏனெனில் அவர் என்னில் முந்தி அவர் அன்பு கூர்ந்தார்.

162. நீங்கள் அவரை நேசிக்கிறீர்களா? அப்பாடியாயின் நீங்கள் ஒருவரிலொருவர் அன்பு கூறவேண்டும். காண்கிறவர்களில் நீங்கள் அன்பு கூற இயலாவிடில் நீங்கள் கண்டிராத அவரை எவ்வாறு நேசிப்பீர்கள்? ஒருவர் மற்றவருடைய கரத்தை பற்றியவாறே பாடுவோமாக:

163. *நான் இயேசுவை மிகவும் நேசிக்கிறேன்,*

*ஓ, நான் இயேசுவை மிகவும் நேசிக்கிறேன்*

*அவர் என்னில் முந்தி அன்பு கூர்ந்ததால்*

*ஓ, நான் இயேசுவை மிகவும் நேசிக்கிறேன்.*

*நான் அவரை விட்டு விலகமாட்டேன்*

*நான் அவரை விட்டு விலகமாட்டேன்*

*அவர் என்னில் முந்தி அன்பு கூர்ந்ததால்,*

*நான் அவரை விட்டு விலகமாட்டேன்*

164. சற்று எண்ணிப் பாருங்கள், அவர் இந்த பெரிய வெளிப்பாட்டை நாம் அறியத்தக்கதாக செய்தார். நாம் அவரை நேசிக்கிறதில்லையா? அவர் அற்புதமானவராக இல்லையா? "இதோ, உலகத்தின் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்'' என்று கூறி நம்மை கைவிடாத நம்முடைய கர்த்தராகிய இயேசுவைப் பற்றி நாம் எவ்வளவாய் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்!

தானியேலின் எழுபது வாரங்களைப் பற்றிய செய்தியில் நாம் களிகூர்ந்தோமா? ஓ, நாம் அவரை நேசிக்கவில்லையா? அது எவ்வாறுள்ளது?

கல்வாரியின் ஆட்டுக்குட்டியானவரே, தெய்வீக இரட்சகரே என் விசுவாசம் உம்மை நோக்குகிறது நான் ஜெபிக்கும் போது செவிகொடும் என் பாவமனைத்தையும் அறவே நீக்கிடும் ஓ, இன்றிலிருந்து நான் உம்முடையவனாய் இருப்பேனாக. வாழ்வின் இருளான திகைப்பு என்னைச் சூழ்கையில் என் வழிகாட்டியாக நீர் இரும் (கர்த்தாவே, நீர் வழி நடத்தும்) ஓ இருள் நீங்கிப்போக கட்டளையிடும் வருத்தங்கள் பயங்களை துடைத்தருளும் உம்மைவிட்டு விலகாமல் இருக்க பார்த்துக் கொள்ளும்

(சகோ. பிரான்ஹாம் பாடலை இசைக்க ஆரம்பிக்கிறார் - ஆசி)

*இருதயம் சோர்ந்து போகையில் பெலம் ஈந்தருளும்*

*என் வைராக்கியம் என்னை தூண்டுகிறது*

*இன்றே இருள் அகலச் செய்யும்*

*என் பயங்களையெல்லாம் துடைத்தருளும்*

*இந்நாளிலிருந்து நான் உம்முடையவனாய் இருக்கட்டும்.*

165. ஓ, இயேசுவே, ஏதோ ஒன்றை நாங்கள் நெருங்கிக் கொண்டிருக்கிறதை காண்கிறோம். தீர்க்கதரிசியாகிய ஏசாயா அதைக் குறித்துப் பேசியிருக்கிறான். எரேமியா அதைக் குறித்து உரைத்திருக்கிறான்; தானியேல் பின்னால் திரும்பிப் பார்த்து அவர்கள் கூறியவைகளைப் பார்த்தான். அவைகள் அவனது இருதயத்தை அசைக்கும்படியாக இருந்தன. அவன் பரலோ கத்திற்கு நேராக தன் முகத்தை திருப்பினான். அவன் இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து உபவாசித்தான். மக்களை எச்சரிக்க தக்கதாக அவன் தேவனிடத்திலிருந்து அவர் பேசக் கேட்க விரும்பினான்.

166. கர்த்தாவே, புஸ்தகங்களின் வாயிலாக, உமது புஸ்தகம் ஏசாயாவின் புஸ்தகம், எரேமியாவின் புஸ்தகம், யாக்கோபின் புஸ்தகம், யோவானின் புஸ்தகம், லூக்காவான புஸ்தகம், மாற்கின் புஸ்தகம், மத்தேயுவின் புஸ்தகம், வெளிப்படுத்தின விசேஷப் புஸ்தகம் ஆகிய உம்முடைய புஸ்தகங்களையெல்லாம் நாங்கள் பார்த்து, நாங்கள் முடிவுக்கு சமீபமாயிருக்கிறோம் என்பதை நாங்கள் அறிந்து கொண்டோம். ஆகவே கர்த்தாவே, நாங்களும், எங்கள் முகங்களை ஜெபத்திலும், வேண்டுதலிலும், பரலோகத்திற்கு நேராக்கி, நாங்கள் எங்கே ஜீவித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை கண்டு கொள்ளும்படியாக செய்கிறோம். விடியற்கால வெளிச்சம் பரவுகிறதை நாங்கள் காணத் துவங்குகிறோம். கர்த்தாவே, நாங்கள்



இருக்கிறவர்களாக இருக்கும். நீங்கள் போட விரும்புகிற எந்த வகையான தீர்க்க தரிசன வாரத்திலும் கூட அது காலம் முடிவுற்றதாக ஆகிவிடும். அது ஏற்கெனவே காலநிலை முடிவுற்றதாக இருக்கிறது. ஆனால் அவரோ யூதர்களிடம் தான் பேசிக்கொண்டிருக்கிறார். ஆகவே யூதர்கள்தான் தேவனுடைய காலம் காட்டும் கடிகாரமாக இருக்கிறார்கள்.

54. “நடுநிசிக்கு இன்னும் மூன்று நிமிடங்கள் உள்ளன' என்ற திரைப்படத்தை சர்வதேச பூரண சுவிசேஷ வியாபாரிகளின் சங்கத்தின் உதவித் தலைவராக உள்ள கலிபோர்னியாவைச் சேர்ந்த சகோ. ஆர்கான்ப்ரைட் சமீபத்தில் என்னுடைய வீட்டுக்கு கொண்டு வந்தார் என்பது உங்களுக்கு நினைவிருக்கும். அதுதானே ஒரு விஞ்ஞான ஆராய்ச்சியின் பேரில் எடுக்கப்பட்ட திரைப்படமாகும். எருசலேமுக்குள் அந்த யூதர்கள் திரும்பி வந்ததை நான் கண்டபோது, நான் கூடாரத்திற்கு வந்து சேர்ந்து, “எனக்கு மறுகுணப்படுதல் உண்டானதுபோல் உணருகிறேன்'' என்று நான் கூறினேன். "அந்த யூதர்கள் திரும்பி வருதைக் காணும்போது...'' என்று நான் கூறினது உங்களில் அநேகருக்கு நினைவிருக்கும். இயேசு மத்தேயு 24-ம் அதிகாரத்தில், ''அத்தி மரம் துளிர்விடுவதை நீங்கள் காணும்போது எதை எதிர்பார்க்க வேண்டும் என்று உங்களுக்கு தெரியுமே?” என்றார். கவனித்தீர்களா? யூதர்கள் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

55. இப்பொழுது இங்கே நான் சில வியாக்கியனங்களை எழுதி வைத்திருக்கிறேன். அவைகளுக்குள் செல்ல நான் விரும்பு கிறேன். அதற்காக என்னுடைய நேரத்தை நான் எடுத்துக் கொள்ளுகையில், நீங்கள் கூட அவைகளை எழுதி எடுத்துக் கொள்ளலாம். இவையாவும் எப்பொழுது சம்பவிக்கிற தென்றால்... இவைகள்... இப்பொழுது நாம்... இப்பொழுது நாம் இருக்கிறதான வேளையிலே... இவையாவும் சம்பவிக்கிறது... அது யூதருக்குரியது, சபைக்கும் அதற்கும் கொஞ்சமும் சம்மந்தமேயில்லை. வெளிப்படுத்தின விசேஷம் 3-ம் அதிகாரத் திற்கு பிறகு தொடங்கி, 19-ம் அதிகாரம் முடிய சபைக்கு சம்மந்தமுள்ளது ஒன்றும் இல்லை. நீங்கள் அதை பொருத்தமுள்ளதாக ஆக்க முடியாது. அது அங்கே உள்ளதில்லை.

56. இதை நான் எவ்வாறு கண்டு கொண்டேன் என்பதை விளக்கிட விரும்புகிறேன். இதைக் குறித்து நான் இப்பொழுது இங்கே இக்கரும்பலகையில் கால அளவுகளைக் குறித்து வரைந்து காண்பித்துள்ளதை உங்களில் அநேகர் காண்கிறீர்கள். அது எவ்வாறு கால வேளைகளில் வருகிறது என்பதை நீங்கள் புரிந்து

நான் நன்றியுள்ளவனாயிருக்கிறேன். அதே போல், டாக்டர் லார்கின் என்பாருடைய கருத்துகளுக்காக நான் நன்றி யுள்ளவனாயிருக்கிறேன். அவைகளை வாசித்ததில், சரியாகத் தோன்றுகிற இடங்களை நான் காணும்படியாக அது விளக்கியது. நான் விவரிக்கவேண்டுமென விரும்பியவைகளைக் குறித்த கருத்துக்களைப் பெறுவதற்கு, காலம் என்றால் என்னவென்பதை கண்டு கொள்ள, நான் காலத்தைக் குறித்த கலைக் களஞ்சியத்தைத்தான் ஆராய்ந்தேன்.

52. காலங்களும், காலமும், அரைக் காலமும் செல்லும் என்று சொல்லப்பட்டதை நாம் காண்கிறோம். ஒரு காலம் என்பது என்ன? ஒரு வாரம் என்பது என்ன? அநேகம் அநேகமாண்டுகளுக்கு முன்பாக அதாவது 3,430 வருடங்களுக்கு முன்பாக தேவன் யூதர்களோடு இடைபட ஆரம்பித்தார். தானியேலின் இக்குறிப்பிட்ட காலமானது கிறிஸ்துவுக்கு முன் கி.மு.538ம் ஆண்டாக இருந்தது. அப்பொழுதுதான், காலங்களும், காலமும், அரைக் காலமும் என்பதைப் பற்றியும், இந்த எழுபது வாரங்களைப் பற்றியும் அவன் பேசியிருக்கிறான். எங்கே அந்த எழுபது வாரங்கள் அவனை எடுத்துச் செல்லும் என்பதைக் கவனியுங்கள். அவன் பாபிலோனில் அந்த எழுபது வார காலத்தினுள்தான் இருந்தான், ஆயினும் தேவன், அவனுடைய ஜனங்களின் மேல் அவ்வளவு காலம்தான் தீர்மானிக்கப் பட்டுள்ளது என்று அவனிடம் கூறினார்.

53. இப்பொழுது இங்குள்ள என்னுடைய சபையானது கடந்த ஆண்டுகள் முழுவதிலும், நான் எப்பொழுதும் உங்களிடம், ''வாரத்தின் எந்த நாள் என்பதை அறிய வேண்டுமானால் காலண்டரை பாருங்கள், ஆனால் நாம் வாழும்காலத்தைப் பற்றி அறிய வேண்டுமானால் அந்த யூதர்களைக் கவனியுங்கள்'' என்று கூறியுள்ளதை அறிவீர்கள். அது மாத்திரமே காலத்தைக் காட்டும் கடிகாரம். தேவன் புறஜாதிகளுக்கு எந்த ஒரு குறப்பிட்ட காலத்தையும் ஒதுக்கவில்லை. அங்கே குறிப்பிட்ட ஒரு காலமானது கொடுக்கப்படவில்லை. அங்கேதான் அநேக மாபெரும் எழுத்தாளர்கள் யூதருக்கும் புறஜாதியாருக்கும் இது பொருந்தும் என்று போட்டு குழப்பி விட்டார்கள். ஏனெனில் அவர் ''உன் ஜனங்கள்'' என்று கூறினார். ஆனால் அவர் தானியேலிடம் தான் பேசிக் கொண்டிருந்தார். சபையினிடத்தில் அல்ல. தானியேலின் ஜனங்களாகிய யூதர்களைக் குறித்துதான் அவர் பேசினார். அவர் சபையினிடத்திற்கு அவைகளை பேசினாரென்றால், அப்போது நீங்கள் அது தொடர்பற்று அறுந்து போவதைத்தான் காண்பீர்கள். கிறிஸ்துவின் வருகைக்கு முன்னால் மிகவும் பின்னால்



உம்மிடத்தில் வருகிறோம். இப்பொழுது எங்களுடைய விசுவாசம் உம்மை நோக்கிப்பார்க்கிறது. பாவத்தையும், பாரமான யாவற்றையும் தள்ளிவிட்டு, எங்களை சுற்றி நெருங்கி நிற்கிற அவிசுவாசம் அனைத்தையும் தள்ளிவிட்டு, எங்களுடைய பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கி நாங்கள் தொடருகிறோம். எங்களுடைய காலமானது வரையறுக்கப்பட்டது என்பதை நாங்கள் அறிந்தேயிருக்கிறோம்.

167. இங்கிருக்கிற மக்களை ஆசீர்வதியும், கர்த்தாவே... அவர்கள் உம்மை நேசிக்கிறார்கள். அவர்கள் உம்முடையவர்களாயிருக் கிறார்கள். அவர்கள் வெளியே வந்திருக்கின்றனர். நீரே வெளிப்படுத்துதலை அருளுகிறவராயிருக்கிறீர். நாங்கள் உமக்காக காத்திருக்கையில் நீரே எங்களுக்கு இவைகளை அளித்தருளுமாறு ஜெபிக்கிறோம்.

168. கர்த்தாவே, மதிய வேளையில் நன்கு ஆராய்ச்சி செய்ய எங்களுக்கு உதவியருளும். புரிந்து கொள்ளுதலை எங்களுக்குத் தாரும். இன்றிரவில் எங்களை புத்துணர்ச்சியோடு இங்கே கொண்டு வாரும், கர்த்தாவே. இன்று மதியத்திலே, காபிரியேலின் விஜயத்தின் ஆறுவிதமான நோக்கத்தைப் பற்றி நான் ஆராய்கையில், நீர் என்னை அபிஷேகித்தருளும். காபிரியேல் வந்து ஆறுவிதமான அர்த்தத்தை கொடுக்கிறானென்றால் கர்த்தாவே, நாங்கள் அதை கண்டிப்பாக அறிந்து கொள்ள வேண்டும். நாங்கள் புஸ்தகங்களைக்கொண்டு ஆராய்ந்து பார்க்கிறோம். அதினாலே நாங்கள் சமீபமாயிருக்கிறோம் என்பதை நாங்கள் அறிகிறோம். ஆகவே. இன்றிரவில் நீர் அதை எங்களுக்கு வெளிப்படுத்தியருளும்.

169. அடுத்த ஞாயிறன்று, கர்த்தாவே, ஓ தேவனே, அந்த நாட்களை சரியாகப் பொருத்தியருளும், அது எப்படியென்று எனக்குத் தெரியாது. ஆனால் நீரே எங்களுக்கு சரியான வேளையைப் பற்றி அறிய அதற்குள் எங்களை கொண்டு வர முடியும். பிதாவே அதை எங்களுக்கு அளித்தருளும். நாங்கள் உம்மையே நோக்கிக் கொண்டிருக்கிறோம். நாங்கள் ஒருவரையொருவர் நேசிக்கிறோம்; உம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் எங்கள் சகல பாவங்களினின்றும் எங்களை கழுவியிருக்கிறது. இப்பொழுது நாங்கள் உம்மையே நோக்கிக் கொண்டிருக்கிறோம். பிதாவே, நாங்கள் உம்மில் காத்திருக்கையில் எங்களுக்கு உதவியருளும், எங்கள் ஆண்டவராகிய இயேசுவின் மூலமாக.

இரண்டாம் அத்தியாயம்

# தானியேலை காபிரியேல் சந்தித்ததன் ஆறுவிதமான நோக்கங்கள்

## THE SIXFOLD PURPOSE OF GABRIEL'S VISIT TO DANIEL

1. ...இக்கூட்டத்தில் இன்று காலையில் பதினாறு வயதுள்ள நம்முடைய பெண் பிள்ளைகள் வந்திருந்தார்கள். அவர்களைப் பார்க்க எனக்கு மிகவும் வியப்பாயிருந்தது. அவர்கள் சபைக்கு வந்திருக்கிறார்கள். அந்த வயதுள்ள இளம் பெண்களைப் பற்றி உங்களுக்குத் தெரியும். அவர்கள் அழகாக இருக்க வேண்டுமென விரும்புகிறார்கள். அவர்கள் தலைமுடியெல்லாம் தலையின் மேல் சுருள் சுருளாக சுருட்டிவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் பிரசங்கிக்கையில் அவர்களைக் கவனித்தேன். உலர்ந்து போன சுருள் முடி முகத்தில் வந்து விழ அதை அவர்கள் முகத்திலிருந்து பின்னால் தள்ளிவிட்டு கொண்டேயிருந்தார்கள்.

2. சகோதரி டௌனிங்கின் மகளை நான் கவனித்தேன். சகோ. காலின்ஸ் - ன் மகள். அவள் பெயர் என்ன? பெட்டி - அழகுள்ள நமது குழந்தைகளை நான் கண்ட போது நான் எனக்குள்ளேயே நகைத்துக் கொண்டேன். அவர்கள் சரியான வயதை எட்டியிருக்கிறார்கள்.

பிரியமான பிள்ளைகளே, எப்படியாயினும் நீங்கள் என் பார்வைக்கு அழகாவே இருக்கிறீர்கள்; உங்கள் உள்ளங்கள் ஆசீர்வதிக்கப்படுவதாக. அழகு என்பது என்னவெனில், அது அழகான ஆவியாயிருக்கிறது. அந்த ஆவி வரும்போது, கூட்டங்களில் அதற்குரிய லட்சணத்தோடே அமர்ந்திருந்து, சுவிசேஷத்திற்கு செவிகொடுக்கச் செய்யும். அப்படிப்பட்ட நடத்தைதான் ஒரு பெண்ணை



தரிசனத்தையும் தீர்க்கதரிசினத்தையும் முத்திரிக்கிறதற்கும், மகாபரிசுத்தமுள்ளவரை அபிஷேகம் பண்ணுவதற்கும்.

47. கடந்த ஞாயிறு காலையில், தானியேல், அவனுக்கிருந்த அந்த சூழ்நிலையில், ஜெபித்துக்கொண்டிருந்தான் என்பதைப் பற்றி பார்த்தோம். கடந்த ஞாயிறு மாலையில், மக்கள் வீடுகளுக்குச் செல்லும்போது படிக்கத்தக்கதாக வேதவாக்கியங் களைக் கொடுத்தோம். நீங்கள் அவைகளை வாசித்தீர்களா? நீங்கள் அதை விரும்புகிறீர்களா? அது அற்புதமானது!

48. இப்பொழுது இந்த ஆறுவித நோக்கங்களுள் ஆறாவது நோக்கமாகிய, “மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம் பண்ணுவது'' என்பதில், மகா பரிசுத்தமுள்ளவர் என்பது எப்பொழுதும் சபையையே, கூடாரத்தையே குறிக்கும் என்பதை நாம் கண்டு கொண்டோம். கடைசியாக செய்யப்பட வேண்டிய காரியமானது மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம் பண்ணுதலாகும். அதுவே ஆயிரமாண்டு அரசாட்சியின் கூடாரமாகும். அங்கே தான் அவர் ஆயிரம் ஆண்டு வாசம் பண்ணுவார். நாம் அதில் வாசம் பண்ணுவோம்.

49. இப்பொழுது, இன்றைக்கு, நாம் “எழுபது வாரங்கள் எது?'' என்பதைக் குறித்துப் பார்க்க அணுகிக் கொண்டிருக்கிறோம். இந்த எழுபது வாரங்கள் என்பது மிகவும் முக்கியமான பாகமாகும்.

50. வேதவாக்கியங்கள் பொய்யுரைக்க முடியாது என்பதை நாம் அறிவோம். அவைகள் உண்மையாகத்தான் இருக்க வேண் டும். தானியேலிடம் காபிரியேல் தூதன் வந்து, யூதர்களுக்கு இன்னும் எழுபது வாரங்கள் மட்டுமே தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கூறினால், நாம் வாரத்திற்கு ஏழு நாட்கள் என்ற அர்த்தத்தில் மட்டுமே எடுத்துக்கொள்வோம். ஆனால் தீர்க்கதரிசனமோ அந்தவிதமாக அர்த்தம் தொனிக்காது. அவைகள் எப்பொழுது உவமானமாகவே சொல்லப்பட்டுள்ளன.

51. ஆகவே, காலங்கள் முழுவதிலும், அங்கே நூற்றுக் கணக் கான பேரறிஞர்கள், திறமைசாலிகள் இருந்திருந்தார்கள்; அவர்கள் இந்த எழுபது வாரங்களானது என்ன என்பதைப் பற்றி விளக்கிட முயன்றிருப்பார்கள் என்பதைப் பற்றி சந்தேகமேயில்லை. அப்படிப்பட்டவர்கள் எழுதின அதைப் பற்றியதான அநேக வியாக்கியானங்களை நான் படித்திருக்கிறேன். அட்வென்டிஸ்ட் சபையின் திருவாளர் ஸ்மித்துக்கு அவருடைய கருத்துக் களுக்காக

சமீபமாயிருக்கிறது என்பதைக் கண்டுபிடிப்பதற்காக அவன் தேவனைத் தேடினான். நமது பயணத்தின் முடிவில் இருக்கிறோம் என்பதை நாம் கண்டு கொள்ளும்போது, இரட்டலும் சாம்பலிலும் உட்காருவதினால், நமக்கு நீதியுண்டாக வில்லை. ஆனால் லௌகீக காரியங்களை நம்மைவிட்டு தூக்கி யெறிந்துவிட்டு, இந்த ஜீவனத்தின் விசாரங்களையும் அகற்றி விட்டு, ஆண்டின் எந்த நாளில் நாம் ஜீவித்துக் கொண்டிருக்கிறோம் என்பதைக் குறித்து கண்டு பிடிக்க நாம் தேவனைத் தேடுவதே நமக்கு ஏற்றதாயிருக்கிறது. ஏனெனில் நாம் முடிவுக் காலத்தில் இருக்கிறோம் என்பதைக் காண்கிறோம். சபையானது உபவாசித்து ஜெபித்து ஆயத்தமாயிருக்கும்படியாக, நான் தானே இந்த செய்தியைக் கூறுவதற்காக உள்ள நன்முயற்சியை என்மேல் சுமத்திக்கொண்டுள்ளேன். இதை எவ்வாறு விளக்குவது என்பது எனக்கு தெரியாமல் இருந்ததால், "இந்த தானியேலின் எழுபது வாரங்களைப் பற்றி என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை'' என்று கூறிக்கொண்டு அதனால், ஒவ்வொரு தடவையும் இதைவிட்டு விலகிக் கடந்து சென்று விட்டிருக்கிறேன். எனவேதான் நான் இதை விளக்குதவற்காக என்மேல் பொறுப்பெடுத்துக்கொண்டுள்ளேன். கர்த்தருடைய உதவியாலும், அவருடைய கிருபையாலும், நான் அதைச் செய்ய முடியும் என்றும், கர்த்தருடைய வருகைக்கு நாம் எவ்வளவு சமீபமாயிருகிறோம் என்பதை உங்களுக்கு காண்பிக்கும்படியாக இயலும் என்றும் நான் விசுவாசிக்கிறேன்.

45. இப்பொழுது தானியேலுக்கு இன்னும் இரண்டு ஆண்டு கள் மாத்திரமே மீதியாக இருந்தன. பிறகு நாம் காண்பதென்னவெனில், அவன் ஜெபத்தில் இருந்து கொண்டிருக்கையில், காபிரியேல் தூதன் அவனிடம் விரைந்து வந்து, அவனுக்கு, எப்பொழுது அவனுடைய ஜனங்கள் சிறையிருப்பை விட்டு புறப்பட்டுப் போகப்போகிறார்கள் என்பதைப் பற்றி மட்டுமல்லாமல், அவனுடைய ஜனங்களுக்கென்று என்னவெல்லாம் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதைப் பற்றியும், இன்னும் அவனுடைய ஜனங்களுக்கு நடக்கப் போகிறவைக ளெல்லாவற்றையும் பற்றி விவரித்தான். 'யூதர்களுக்கு இன்னும் எழுபது வாரங்கள் விடப்பட்டிருக்கிறது'' என்று அவன் கூறினான்.

46. பிறகு நாம் அவனது விஜயத்திற்கு ஆறுவிதமான நோக்கங்கள் உண்டாயிருந்தன என்று காண்கிறோம். அவையாவன: மீறுதலைக் தவிர்க்கிறதற்கும், பாவங்களைத் தொலைக்கிறதற்கும், அக்கிரமத்தை நிவிர்த்தி பண்ணுகிறதற்கும், நித்திய நீதியை வருவிக்கிறதற்கும்,



அழகுள்ளவளாக ஆக்குகிறது. திருமணம் செய்துகொள்ள வேண்டுமென இருக்கும் உரிய வயதை அடைந்துள்ள எந்தவொரு வாலிபனும் அதே விதமாகத்தான் சிந்திக்கிறான். (நன்றி ஐயா, அது நல்லதாயிருக்கிறது). சிலர் நான் கூறுவதை ஒத்துக் கொள்வார்கள். அது சரிதான். அது சத்தியமாயிருக்கிறது என்று நான் விசுவாசிக்கிறேன்.

3. அது வினோதமாயிருக்கவில்லையா? நான் என் வேதாகமத்தைத் திறந்தபோது, நேரடியாக தானியேல் 9-ம் அதிகாரம் எனக்குக் கிடைத்தது. தங்களுடைய உள் சட்டையில் பொத்தல் இருந்தால் மேல் கோட்டை கழற்ற வேண்டாம் என்று நான் யாவரிடமும் கூறுவதுண்டு. ஆனால் நான் இப்போது அணிந்திருப்பதில் இல்லையென நம்புகிறேன். ஆனால் நிச்சயமாகவே பொத்தல் உள்ள சட்டையணிந்த சமயம் எனக்கு உண்டாயிருந்தது. அப்பொழுது என்னால் கோட்டை கழற்றவே முடியாது. இப்போது நான் அணிந்துள்ளதில் பொத்தல் இல்லை என்று கருதுகிறேன்.

இன்று காலையில் எனக்காகவும் இங்கு கூடியுள்ளோருக்காகவும் இங்கே பிரசன்னம் கொண்டுள்ள பரிசுத்த ஆவியைப் போற்றுகிறோம். இங்கே ஒவ்வொருவரும் வந்திருந்து ஐக்கியங் கொண்டுள்ளமைக்காக, அதை நாம் மெச்சுகிறோம். சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுவது எத்தனை இனிமையானது, எத்தனை நன்மையானது, எத்தனை சுகமானது!

அது ஆரோனின் சிரசின் மேல் ஊற்றப்பட்டு, அவன் தாடியில் வடிகிறதும், அவனுடைய அங்கிகளின் மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கும் ஒப்பாயிருக்கிறது.

4. 'ப்ளு போர்' என்ற உணவு விடுதிக்கு இன்று உணவருந்த சென்றேன். அங்கே நான் யாரைக் கண்டேன் என்று நினைக்கிறீர்கள்? அங்கே சகோ. பில் - ஐயும், சகோதரி டௌ அவர்களையும். அங்கே மிகவும் உயர்தரமான பொறித்த கோழிக்கறியை சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அப்படிப்பட்டவைகளை நான் இதுவரையிலும் பார்த்ததேயில்லை. அதை மிகவும் ஆர்வமாக புசித்த ஒரு அருமையான வேளை அவர்களுக்கு உண்டாயிருந்தது. உணவு விடுதியில் மாடிக்குச் சென்ற சபையின் மக்களில் அநேகரை அங்கே சந்தித்தேன். அவர்கள் என்னுடைய மத்திய உணவுக்கான கட்டணத்தை செலுத்த விரும்பினர். அது மிகவும் அருமையான விஷயம்; நான் அதை மெச்சுகிறேன்.

நான் வீட்டிற்கு வந்தபொழுது, அங்கே பில்லி ஒரு பெட்டியை நிறைய தக்காளிப் பழங்களைக் கொண்டு வந்தான். யாரோ ஒருவர் குளிர்ச்சியான பிரதேசமாகிய ஜியார்ஜியாவிலிருந்து எனக்காக அவைகளைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அங்கே இந்த சமயத்தில் மிகவும் குளர்ச்சியாக இருக்கும் என்று என்னிடம் கூறினார்கள்.

5. இன்று மதியம் நான் நேர்முகப் பேட்டிகளை முடித்து விட்டு ஒன்றரை மணி நேரத்திற்கு முன்பாக சபைக்கு பக்கமாக வந்து கொண்டிருந்தபொழுது, அங்கே வெளியிலே ஒரு இளைஞனை நான் சந்தித்தேன். அவன் ஒரு இளம் வாலிபன் ''உஷ்ணமாயிருக்கிறது'' என்று நான் கூறினேன். அவன் அதற்கு ''அது நிச்சயம் உஷ்ணமாகத்தான் இருக்கிறது" என்று அவன் கூறினான்.

அவன் ஜியார்ஜியாவிலிருந்து வந்திருக்கிறவன் என்பதை நான் அவனுடைய பேச்சின் மூலம் அறிந்து கொண்டேன் ஏனெனில் அவன் “Sho is not down in Georgia” என்றான் (அதாவது என்று “Sure is hot” என்று கூறுவதற்குப் பதிலாக ஜார்ஜியாவில் உள்ளவர்களின் பேச்சுவழக்கின்படி “Sho” என்று கூறுகிறான் - தமிழாக்கியோன்). ஜியார்ஜியாவிலும் உஷ்ணமாகத்தான் இருக்கிறது என்று அவன் கூறுகிறான்.

நல்லது இதைவிட மிகவும் அதிக வெப்பமான இடத்திற்கு போகாதபடி தப்பிக் கொள்வதற்காகத்தான் நாம் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். அந்த நோக்கத்தோடுதான் நாம் இங்கே இருக்கிறோம்.

6. உங்களெல்லாருடைய தயவுக்காக நண்பர்களே, மிகவும் நன்றி கூறுகிறேன். நீங்களில்லாமல் நான் என்ன செய்ய முடியும்? நீங்களில்லாமல் நான் என்னதான் செய்துவிட முடியும்? என்னை நேசிக்கிறதற்கும் ஒருவரும் இல்லாமற் போகுமானால், செய்திக்கு செவி கொடுப்பதற்கு எவருமே இல்லாமற் போகுமானால், என்னுடைய செய்தியெல்லாம் வீணாய் போய்விடுமே. நான் தொலைபேசிக் கம்பங்களுக்கும், மரங்களுக்கும் பிரசங்கிக்க முடியாது. அவைகள் அதைப் புரிந்து கொள்ளமாட்டா. ஆகவே வந்து செவி கொடுக்கத் தக்கதாக உங்களைப் போல மக்களாக இருக்கவேண்டும். இவ்விதமாக உஷ்ணமான இடத்தில் நீங்கள் வந்து அமர்ந்திருக்கும் பொழுது... என்னுடைய மனைவி இன்று காலையில், தான் சுட்டெரிக்கப்பட்டு விடுவது போல் பின்னால் இருந்ததாகக் கூறினாள். மக்கள், அதிலும் சில சமங்களில் வியாதிப்பட்ட மக்கள், அவ்விதமான கூட்டங்களில்



விரும்புகிறேன். இங்கு நாம் நாள் முழுவதும் தங்கியிருக்க நேர்ந்தாலும், தங்கியிருங்கள். இப்பொழுது, அதை நாம் அறிந்து கொள்ள விரும்புகிறோம். அது சத்தியமாயிருக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ள விரும்புகிறோம். நீங்கள் மாத்திரம் அதைக் கண்டு கொள்வீர்களெனில் .....

42. இதற்குப் பிறகு, நான் இந்த வரைபடத்தை இங்கே தொங்கிவிட்டு விட்டுப் போகப் போகிறேன். நீங்கள் பிற்பாடு அதைப் பார்த்து வரைந்து கொள்ளலாம். அதற்காக நீங்கள் இன்று மதியத்திலே எப்பொழுதும் வேண்டுமானாலும் இங்கே வந்து, இவ்வரைபடத்தை வரைந்து கொள்ளலாம். அது உங்களுக்கு புரிந்துகொள்வதற்கு உதவி செய்யும். அக்காரணத்தினால்தான், நீங்கள் புரிந்துகொள்ளும் படியாகத்தான், அதை நான் அங்கேயே வைத்துவிடுகிறேன்.

43. நாம் காரியத்தின் அடிப்படையைப் பெற்றுக்கொள்ளும் படி ஏற்கெனவே பார்த்தவைகளை சற்று திம்பிப் பார்ப்போமாக. இப்பொழுது அங்கே... தானியேல் தன் ஜனங்களைப் பற்றி அக்கறையுள்ளவனாயிருந்தான், ஏனெனில் அவன் எரேமியா தீர்க்கதரிசியின் புத்தகத்தை வாசித்து, அவர்கள் எழுபது வருடங்கள் சிறையிருப்பில் இருப்பார்கள் என்று எரேமியா கூறியிருந்ததைப் பற்றி அறிந்து உணர்ந்து கொண்டான். அவர்கள் ஏற்கெனவே அறுபத்தெட்டு ஆண்டுகள் சிறையிருப்புக் காலத்தை கழித்துவிட்டனர் என்பதை அவன் பார்த்தான். ஆகவே நேரமானது நெருங்கிவிட்டது என்பதை அறிந்தான். ஆகவே அவன் எல்லா வேலைகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு அவனது அன்றாடப் பணிகளிலிருந்து நீங்கினவனாக இருந்து, தன் முகத்தை தேவனுக்கு நேராக்கி, இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து, எப்பொழுது அந்த வேளையானது இருக்கும் என்ப தைப் பற்றி அறிந்து கொள்ளும்படியாக உபவாசத்திலும் ஜெபத்திலும் உட்கார்ந்தான். நான் முன்பே கூறியவண்ணமாக பிறகு நாம் காண்பதென்னவெனில்... (இந்த மின் விசிறி சற்று கூடுதலாக வேகத்தில் சுழலுகிறது, அதினால் என் தொண்டை கரகரப்பாகிறது... நன்றி சகோதரனே).

44. தானியேல் தன் ஜனங்களுக்காக இந்தத் தகவலைப் பெற வேண்டுமென விரும்பினான் என்பதை நாம் கண்டு கொண்டோம். தானியேல் தனக்கு முன்னர் தோன்றிய தீர்க்கதரிசிகளின் புத்தகங்களைப் படித்ததின் பேரில், தான் முடிவுக்கு சமீபமாக வந்துவிட்டதன் உணர்வை அடைந்திருப்பான் என்று நான் எண்ணுகிறேன். ஆகவே முடிவுக்கு, நேரமானது இன்னும் எவ்வளவு

(இருபத்தைந்தாம் வசனம்) இப்போதும் நீ அறிந்து உணர்ந்து கொள்ள வேண்டியது என்னவென்றால்... (கடந்த

ஞாயிறன்று நாம் "மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம் பண்ணுகிறதற்கும்'' என்கிற விஷயத்தை பற்றித்தான் முடிவாக பிரசங்கித்து முடித்தோம். இங்கேதான் நாம் இன்று காலையில் 25ம் வசனத்திலிருந்து துவக்குகிறோம்). இப்போதும் நீ அறிந்து உணர்ந்து கொள்ள வேண்டியது என்னவென்றால்; எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவது முதல்... (''அது என்னுடைய பரிசுத்த நகரம்'' என்பதாக இருக்கிறது. பார்த்தீர்களா?)... பிரபுவாகிய மேசியா வருமட்டும் ஏழு வாரமும், அறுபத்திரண்டு வாரமும் செல்லும்; அவைகளில் வீதிகளும் அலங்கங்களும் மறுபடியும் கட்டப்படும்; ஆனாலும் இடுக்கமான காலங்களில் இப்படியாகும்.

அந்த அறுபத்திரண்டு வாரங்களுக்குப் பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார்; ஆனாலும் தமக்காக அல்ல; நகரத்தையும் பரிசுத்த ஸ்தலத்தையும் வரப்போகிற பிரபுவின் ஜனங்கள் அழித்துப் போடுவார்கள்; அதின் முடிவு ஜலப்பிரவாகம் போல இருக்கும். முடிவு பரியந்தம் யுத்தமும் நாசமும் உண்டாக நியமிக்கப்பட்டது. (தமிழ் வேதாகமத்தில் ''முடிவு பரியந்தம் யுத்தமும் நாசமும் உண்டாக...'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் ஆங்கில வேதாகமத்திலோ, 'யுத்தத்தின் முடிவு வரையிலும் நாசங்கள் உண்டாக நியமிக்கப்பட்டது'' என்று கூறப்பட்டுள்ளது - தமிழாக்கியோன்)

அவர்... (இப்போது ஞாபகத்தில் கொள்ளுங்கள்; அதுதான் யுத்தத்தின் முடிவாகும். அதைப் பற்றி இங்கே கரும் பலகையில் வரையப்பட்டுள்ளது. இப்பொழுது இன்னொரு விஷயத்தைக் குறித்து நாம் ஆரம்பிக்கிறோம்). அவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி .... அந்தவாரம் பாதி சென்ற போது பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார்; அருவருப்பான செட்டைகளோடே பாழாக்குகிறவன் வந்து இறங்குவான்..... (அவ்வளவுதான்!).... நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன் மேல் தீருமட்டும் சொரியும் என்றான்.

தானி 9:24-27

41. ஓ, என்னே ஒரு பாடம் இது! ''மக்கள் இதை உண்மை யிலேயே புரிந்து கொள்கிறார்களா என்பதைப் பற்றி நான் வியந்து கொண்டிருக்கிறேன்'' என்று என் மனைவியிடம் அன்றொரு நாள் நான் கூறினேன். நீங்கள் இதைப் புரிந்துகொள்ள வேண்டுமென நான்



உட்கார்ந்திருப்பதைப் பார்க்கும் போது, மகிமையில் தேவன் தாமே உங்களுக்கு ஒரு அழகான வீட்டைக் கொடுக்க வேண்டுமென்பதே என்னுடைய ஜெபமாயிருக்கிறது. அவர் அதைச் செய்வார் என்று உறுதியாய் நம்புகிறேன்.

7. இப்பொழுது நாம் பார்ப்போமாக. எனது கோட்டை இங்கே யாரோ எடுத்து வைத்துவிட்டார்கள். இன்றிரவில் நான் சிறிது வாசிக்க வேண்டியதிருக்கிறது. இச்செய்தியின் முதல் பாகத்தை எத்தனை பேர் உணர்ந்து மகிழ்ந்தீர்கள்? இவ்வளவு அதிகமாக உஷ்ணமாக இருந்திருக்காவிடில், இந்த வாரம் முழுவதும் தொடர்ந்து வெளிப்படுத்தின விசேஷப் புஸ்தகத்தைக் குறித்து நாம் ஆராய்ந்து கொண்டேயிருந்திருக்கலாம். நான் அதை நேசிக்கிறேன். நான் அதிலேயே வாழ்கிறேன். இந்த வாரத்தில் எனக்காக ஜெபியுங்கள், ஏனெனில், அடுத்த ஞாயிற்றுக்கிழமை, கர்த்தருக்குச் சித்தமானால், அந்த வாரங்களைப் பற்றிய விஷயங்களை சரியாக அதனுடைய இடத்தில் ஒன்றாக பொருத்தி வைக்க வேண்டும். அதுவோ எனக்கு சற்றும் ஒன்று கூட தெரியாத காரியமாயிருக்கிறது. ஆகவே கர்த்தர் அதற்குரிய பதிலை எனக்குக் கொடுக்கும்படி நான் கர்த்தர் பேரில் நம்பிக்கை கொண்டிருக்கப் போகிறேன்.

வெவ்வேறு மனிதர்கள் அதைப் பற்றி எழுதியுள்ளவைகளை நான் படித்திருக்கிறேன். டாக்டர் ஸ்கோ பீஃல்ட் என்ற பேரறிஞர் எழுதியுள்ள அடிக்குறிப்புக்களையும் நான் படித்திருக்கிறேன். அவருடைய அநேக அடிக்குறிப்புகளோடு நான் ஒத்த கருத்தை நிச்சயமாகவே கொண்டிருக்க முடியவில்லை. ஏனெனில் அது சரியான சித்திரத்தை உருவாக்குவதாக இருக்க வேண்டும். என்னால் அவைகளில் அப்படிக் காண முடியவில்லை.

8. அது ஒரு சித்திரமானது பல கோணல்மாணலாக வெட்டப்பட்டு, அதை திரும்ப ஒவ்வொரு துண்டுகளையும் சரியாக அதனதன் இடத்தில் வைத்து ஒன்று சேர்த்து அந்த சித்திரத்தை சரியாக மறுபடியும் கொண்டு வரும்படி செய்யும் புதிரைப் போல் (Jigsaw Puzzle) இருக்கிறது. நீங்கள் அவைகளை ஒன்று சேர்க்கும் போது முதலில், "ஓ, இது இங்கே இருக்க வேண்டும்...'' என்று கூறுகிறீர்கள்.

''இல்லை, அது அங்கேதான் இருக்கவேண்டும்'' என்று கூறுகிறீர்கள்.

ஆகவே நீங்கள் அதை ஒன்று சேர்ப்பதற்காக இருக்கையில், அதைச் செய்வதற்காக அதற்கான மாதிரியை நீங்கள் உற்று நோக்க

வேண்டும். அப்படி நீங்கள் செய்யாவிடில் உங்களுடைய காட்சியானது யாவும் குழப்பமாக கலந்து போய்விடும்.

அழகான ஒரு கிராமாந்தரக் காட்சியின் சித்திரம் ஒன்று உங்களிடம் இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அங்கேயுள்ள ஒரு மரத்தின் மேல் ஒரு பசு மாடு புல் மேய்கிறதாகத் தோன்றும் ஒரு காட்சி அச்சித்திரத்தில் காணப்பட்டால், அது எப்படியிருக்கும்? அந்தக் காட்சி பொருத்தமற்றதாக இருக்கும். ஏனெனில் ஒரு பசு மாடானது ஒரு மரத்தின் மேல் நின்று கொண்டு புல் மேயாது.

ஆகவே அதே விதமாகத்தான் வேத வாக்கியங்களிலும், பரிசுத்த ஆவியானவர் அவைகளை ஒன்று சேர்க்காமல் இருந்தால், மீட்பைப் பற்றிய திட்டத்தின் அந்த மகத்தான சித்திரமானது சரியாக கிடைக்காது. அதுதான் நமக்குத் தேவை. சத்தியமே நமக்குத் தேவையாயிருக்கிறது. சத்தியத்தை நாம் அறிகிறவரையிலும், நாம் அதை அப்படியே விட்டுவிடுவோமாக. தேவன் நமக்கு சத்தியத்தை கொடுக்கும் பொழுது, நல்லது அப்பொழுது நான் அதைப் பற்றிப் பேசுவேன்.

9. இங்கே சபையில் துவக்க கால முதல் இருந்து வந்த சகோதரன் ராய் ஸ்லாட்டர், இன்னும் சில ஆதிகாலத்து சகோதரர்கள் இங்கே உண்டு. இங்கே இக்கூடாரத்தில் என்னுடைய ஊழியத்தின் முதல் மூன்று அல்லது நான்கு ஆண்டுக் காலக் கட்டத்தில், நான் நரகத்தைப் பற்றிய பொருளின் பேரில் பிரசங்கிக்கவே மாட்டேன். ஏனெனில், அது ஒரு எரிகிற இடமா அல்லது வெறும் ஒரு கல்லறைதானா? என்பதைப் பற்றி என்னால் சரியாக புரிந்துகொள்ள முடியவில்லை. வசனத்தில் கல்லறை என்று வருகிற இடத்தில் வாசிக்கும் ஒவ்வொரு தடவையும் அவ்வார்த்தைக்கு உள்ள அர்த்தம் பாதாளம் (Hades) என்பதை நான் அகராதியின் மூலம் பார்த்துக் கொள்வேன். பாதாளம் என்ற வார்த்தைக்கு கல்லறை என்று அர்த்தமாம். ஆகவே நான் அதைப் பற்றி சரியாக அறியாதபடியினால், நாம் என்ன பேசுகிறோம் என்பதைப் பற்றி சரியாக அறிகிற வரையிலும் அதைப்பற்றி பேசாமல் விட்டுவிட்டேன். அதைப் பற்றி கண்டபோது நான் நரகத்தைக் குறித்துப் பேசினேன். எனவே நான் உண்மையாகவே நரகத்தைப் பற்றிய முழுக் காட்சியையும் நானே கண்டு, அது எங்கேயிருக்கிறது என்பதையும் அறிந்த பிறகு தான்… ஒரு ஊழியக்காரன் தன்னுடைய சபைக்கு என்ன பிரசங்கிறானோ அதற்கு அவன் பொறுப்பாளியாயிருக்கிறான் என்று நான் கூற எண்ணுகிறேன். ஏனெனில் அம்மக்கள் அவன் கூறுவதை அப்படியே பற்றிப்பிடித்துக் கொள்ளப் போகிறார்களே, ஆகவே,



ஒத்துக்கொள்கிறதில்லை. அவர்கள் ஏதோ ஒரு மகத்தான, வல்லமையான காரியம் சம்பவிக்கவேண்டுமென எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். "என்னுடைய சகோதரர்களே, நீங்கள் மிகவும் கவனமாக செவிகொடுப்பீர்களானால், அந்த மகத்தான வல்லமையான காரியமானது ஏற்கெனவே நடந்து முடிந்துவிட்டது என்பதைக் கண்டு கொள்வீர்கள். இயேசு திரும்பி வருவதற்கு ஆயத்தமாயிருக்கிறார்.

39. வெளிப்படுத்தின விசேஷம் 3-ம் அதிகாரத்திலேயே சபையானது பூமியைவிட்டு கிளம்பிப் போய் விடுகிறது. கடைசியாக அந்தக் காலத்திற்குரிய செய்தியாளனைத் தவிர அங்கே அதற்கு மேல் வேறொன்றும் கூறப்படவில்லை. அதற்குப் பிறகு, 19-ம் அதிகாரத்தில் அவர் மணவாட்டியோடு மீண்டும் வருகிறவரையிலும் உள்ள காலத்தில் யூதர்களைப்பற்றிய விஷயத்தைத்தான் அங்கே நாம் காண்கிறோம். 6-ம் அதிகாரத் திலிருந்து 19-ம் அதிகாரம் முடிய யாவுமே, யூதர்களுக்கு சம்மந்த முள்ளதாகத்தான் இருக்கிறது. அங்கேதான் இந்த முத்திரை களின் போது, முன்பு யேகோவா சாட்சிக்காரராயிருந்த சகோ. வுட் அவரது குடும்பத்தினர் யாவரும் இன்று காலையில் அந்தக் காரியத்தை, அதாவது 1,44,000 பேர்களுக்கும் புறஜாதிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லையென்றும், அவர்கள் யூதர்களாவர் என்பதையும் சரியாக புரிந்து கொள்ள வேண்டுமென விரும்புகிறேன். புரிந்துகொண்டீர்களா? அவர்கள் இன்று பூமியிலிருக் கின்ற இரகசியமாயிருக்கிற கிறிஸ்துவின் சரீரமாகிய சபையல்ல; மணவாட்டியே அந்த இரகசியமான சரீரமாயிருக்கிறாள். பரிசுத்த ஆவியினாலே நாம் அந்த இரகசியமான சரீரத்தினுள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கிறோம்.

40. நாம் ஏற்கெனவே படித்துக்கொண்டிருந்த தானியேலின் புஸ்தகத்தில் இருந்து மீண்டும் நாம் வாசிப்போமாக, ஏனெனில் அது அவருடைய வார்த்தையாக இருக்கிறது. தானியேலின் புஸ்தகம் 9ம் அதிகாரம் 24ம் வசனம்:

மீறுதலைத் தவிர்க்கிறதற்கும், பாவங்களைத் தொலைக்கிறதற்கும், அக்கிரமத்தை நிவிர்த்தி பண்ணுகிறதற்கும், நித்திய நீதியை வருவிக்கிறதற்கும் தரிசனத்தையும் தீர்க்கதரிசனத்தையும் முத்தரிக்கிறதற்கும், மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம் பண்ணுகிறதற்கும், உன் ஜனத்தின் மேலும், உன் பரிசுத்த நகரத்தின் மேலும் எழுபது வாரங்கள் செல்லும்படி குறிக்கப் பட்டிருக்கிறது.

உங்களுக்குக் கேட்கிறதா?'' என்று கேட்டேன். அப்பொழுது அவர் தன் தலையை சிறிதளவு அசைத்தார். தன் தாடையையும் அசைத்தார். நான் அவருக்காக ஜெபித்து, அவர் தன்னுடைய பாவங்களை தேவனுக்கு முன்பாக அறிக்கையிடும் படி செய்தேன். நான் அவருக்கு ஞானஸ்நானம் கொடுக்க விரும்பினேன்; அத்தை ஹாட்டியும் அவர் ஞானஸ்நானம் பண்ணப்பட விரும்பினார்கள்.

35. பிறகு நான் ஹாலுக்குச் சென்று, அங்கே சுற்று வட்டாரத் தில் வாழ்ந்து வந்த ஒரு இளம்பெண்ணை சந்திக்கச் சென்றேன். அவர்கள் அவளை மனநோய் மருத்துவ நிலையத்திற்கு அனுப்பு வதற்காக இருந்தார்கள். கர்த்தர் அப்பெண்மணிக்கு ஒரு பெரிய காரியத்தைச் செய்தார். அதினால் அவள் தன் வீட்டுக்குத் திரும்பி வந்தாள்.

பிறகு, சாலையிலே, கருப்பு நிறத்தவரான ஒரு சகோதரியைச் சந்தித்தேன். அவள், "நீங்கள் சகோதரன் பிரான்ஹாம் அல்லவா? என்றாள்.

''நான்தான்'' என்றேன் நான்.

''உங்களுக்கு என்னை நினைவிருக்கிறதா? நான்தான் திருமதி. ட்ரை" என்று கூறினாள்.

36. நான், 'ஆம், ஞாபகமிருக்கிறது என்று எண்ணுகிறேன். பீட்டரையையும் மற்றோரையும், ஆம் உங்களையும் ஞாபகமிருக்கிறது'' என்றேன். அவள் அறையினுள் எட்டிப் பார்த்தாள். அவள் ஏன் அதைக் கூறினாள் என்று நான் வியந்து கொண்டிருந்தேன். அங்கே அங்கிள் ஆண்டி தன் வியாதிப் படுகையில் இருந்து குணமடைந்து எழுந்திருந்தார். அவர் தன் கை கால்களை எவரையுமேபோல் இயல்பாக அசைத்துக் கொண்டிருந்தார்; அந்த வியாதிப்படுக்கையை விட்டு நீங்கியிருந்து, அங்கிருந்து போய்விட அவர் விரும்பினார். இப்பொழுது அவரும் அவருடைய மனைவியும், கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வரப்போகிறார்கள்.

37. ஆகவே நான் எதற்காக அந்த விஷயத்தைக் கூறினேன் என்றால், நாம் நினைப்பதைவிட நேரமானது பிந்திவிட்டது. இந்த 'தானியேலின் எழுபது வாரங்கள்' செய்தியானது அதை நாம் புரிந்து கொள்ளத்தக்கதாக செய்யும் என்று நான் விசுவாசிக்கிறேன்.

38. இந்த ஒலிநாடாவில் நான் ஏற்கெனவே கூறியுள்ளபடி, நம்முடைய அநேக பெந்தெகொஸ்தே சகோதரர்கள், இதனை



அப்படியானால், அவர்கள் தவறானதைப் பற்றிப் பிடித்துக் கொள்ளும்படி நான் செய்தால், அத்தவறான உபதேசமானது நிலை நிற்காமல் போகும் வேளை வரும்போது அதைப் பற்றிப் பிடித்து கொள்வதினால் என்ன பயன்? கர்த்தர் சில காலத்திற்கு முன்னால் எனக்கு அத்தரிசனத்தைக் காண்பித்ததில், அங்கே இருக்கிற அந்த இலட்சக்கணக்கானோரில் ஒருவர் என்னிடம், ''நீர் பிரசங்கித்த சுவிசேஷத்தின்படியே நீர் முதலாவதாக நியாயந்தீர்க்கப்படுவீர்" என்று கூறினார்.

"பவுலும் ஏனையோரும் பிரசங்கித்த அதே சுவிசேஷத்தையே நானும் பிரசங்கித்திருக்கிறேன்'' என்று நான் கூறினேன்.

அப்பொழுது, அந்த இலட்சக்கணக்கானோர், ''நாங்கள் அதின் பேரில் தான் இளைப்பாறிக் கொண்டிருக்கிறோம்'' என்று ஆர்ப்பரித்தார்கள் அப்படித்தான் அது இருக்கிறது.

10. ஆகவே நான் தொடர்ந்து இன்றிரவு பிரசங்கிக்க விரும்புகிறேன். எனவே அதிக நேரம் நாம் இங்கே தாமதிக்க வேண்டியதில்லை. இப்பொழுது நான் இன்று காலையிலே பேசியவைகளை நீங்கள் மறந்துவிட வேண்டாம். இங்கே என்னி டம் சிறு குறிப்புகள் உள்ளன. இன்று காலையில், சிறையிருப்பில் தானியேலைப் பற்றியும், எதிர்வரும் காலத்தைக் குறித்து அவனுக்கு காபிரியேல் அறிவுறுத்தியவைகளைப் பற்றியும் நான் பிரசங்கித்தேன். எதிர்வரும் காலத்தைப் பற்றியதான அறிவுரைகள் தான் இன்று காலையில் நாம் பெற்றுக் கொண்டோம்.

இன்றிரவில் நாம், "காபிரியேல் தானியேலைச் சந்தித்ததன் ஆறு விதமான நோக்கங்கள்'' என்ற தலைப்பின் பேரில் பேச போகிறோம். கர்த்தருக்கு சித்தமானால், அடுத்த ஞாயிற்றுக் கிழமை எழுபது வாரங்களை அவைகளுக்குரிய கால அடிப்படையில் பொருத்தியும், நாம் எங்கே நின்று கொண்டிருக்கிறோம் என்பதைப் பற்றியும் பிரசங்கிக்கப் போகிறேன். அதைக் குறித்து நாம் கண்டுகொண்டு, சரியானபடி உறுதியான முறையில் அதை பார்க்க முடிந்துவிட்டால், நாம் இப்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கிற காலத்தினைப் பற்றி திட்டவட்டமாக கண்டு கொள்ள இயலும்.

அவர் எப்பொழுது வருவோர் என்பதைப் பற்றி நாம் இப்பொழுது அறியோம். ஒருவரும் அதை அறியமாட்டார்கள். இயேசுவே அதை அறியமாட்டார். அவருக்கே தெரியாது என்று அவர் கூறினார். பிதாவுக்கு மாத்திரமே அது தெரியும் என்று கூறினார். தூதர்களும்

அதை அறியமாட்டார்கள் என்று கூறினார். அவர் எப்பொழுது வருவார் என்பதை நம்மில் ஒருவரும் அறியமாட்டோம். ஆனால், நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற காலத்தைக் குறித்தும் நாம் இன்னும் எவ்வளவு சமீபமாயிருக்கிறோம் என்பதையும் குறித்தும் அறிந்து கூற முடியும்.

11. இப்பொழுது நாம் சிறிது திருப்பிப் பார்ப்போம். ஏனெனில் பையன்கள் இவைகளை ஒலிநாடாவில் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். பதிவு செய்யும் இயந்திரங்கள் பின்னால் உள்ள அறையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஒலிநாடாக்கள் எவ்விடங்களுக்கும் அனுப்பப்படுகின்றன.

இன்று காலையிலுள்ள பாடத்தில், 4-ம், 5-ம் அதிகாரங்களை நாம் பின்னால் திரும்பிப் பார்த்துவிட்டு, பிறகு நாம் தானியேலின் புஸ்தகத்தின் 9-ம் அதிகாரத்திலிருந்து துவங்கினோம். இப்பொழுது, இன்றிரவில், அந்த 9-ம் அதிகாரத்திலிருந்து தொடர்ந்து பார்க்கப் போகிறோம். அதை நாம் அணுகு முன்னர், நாம் சற்று நேரம் நம் தலைகளை வணங்கி, திருவசனத்தின் ஆக்கியோனிடம் பேசுவோமாக.

12. எங்கள் கிருபையுள்ள தேவனே, எங்கள் இருதயத்தின் அந்தரங்க நோக்கத்தை நீர் அறிந்திருக்கிறீர். நாங்கள் எதற்காக இங்கே இருக்கிறோம் என்பதையும் நீர் அறிந்திருக்கிறீர். இன்றுள்ள பிற்பகலில், சற்று ஓய்வெடுத்துக் கொள்வதற்கு இது ஒரு அருமையான இடமாக இருக்கிறது என்று எண்ணிக்கொண்டு நாங்கள் இன்றிரவில் இங்கே வந்திருக்கவில்லை என்பதையும் நீர் அறிந்திருக்கிறீர். இங்கே ஒரு நபர் கூட அந்தவிதமான நோக்கங் கொண்டிருக்கவில்லை என்பதை நான் நம்புகிறேன். பிதாவே, ஏற்கெனவே இன்றிரவில் நாங்கள் இங்கே மிக தீவிரமான உண்மையுடனும், உத்தமத்துடனும் வந்திருந்து, கர்த்தர் உரைப்பது என்னவென்றால் என்பதை அறிய ஆவலோடிருக்கிறோம்.

கர்த்தாவே, நாங்கள் உம்மை நேசிக்கிறோம், உமது திருவசனத்தை நேசிக்கிறோம். எங்கள் தலைக்கு மேல் உள்ள இந்த காங்கரீட் கூரையும், காங்கரீட் பிளாக்குகளினாலும் ஆன இந்த இடத்தை நீர் எங்களுக்கு தந்திருக்கிறீர், நாங்கள் இந்த இடத்திற்காக உமக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். இவ்வானத்திற்கப்பால் ஒரு வீடு உண்டாயிருக்கிறது என்றும், அவ்வீட்டிற்குப் போவதற்காகாக நாங்கள் பயணப்பட்டு இருக்கிறோம் என்பதையும் நாங்கள் விசுவாசிக்கிறோம். இவ்விதமான சிலாக்கியத்தைக் கூட எங்கள் முற்பிதாக்கள் பெற்றிருக்கவில்லை என்பதையும் நாங்கள் எண்ணிப்



உறவினர் ஆண்டி ஹெர்மன் என்ற பெயருள்ளவர் இருக்கிறார் என்று கூறினாள். நான் போய் அவரைப் பார்த்தேன். அவருக்கு மிக அதிகமாக மயக்க மருந்து கொடுத்திருந்ததால், அவர் ஆழ்ந்த நித்திரையிலிருந்தார், எனவே என்னால் அவருடன் பேச முடியவில்லை. அடுத்த நாள் காலையில் .. நான் அவரிடம் பேச இயலுகிற வரையிலும் அவரை உயிரோடு வைத்திருக்கும்படி நான் தேவனிடம் வேண்டினேன். 'அட்,'' அவர் ஒரு நல்ல மனிதர், ஆனால் அவர் ஒரு கிறிஸ்தவர் அல்ல. அவர் எனது அங்கிள் அல்ல, ஆனால் எனது உறவினள் ஒருத்தியை அவர் விவாகம் செய்திருந்தார்.

அப்பொழுது அங்கே நின்று கொண்டிருந்த ஹாட்டி அத்தை அவர்கள், "பில்லி, இவர் தன்னுடைய இந்த எண்பது வருட வாழ்க்கை முழுவதும் தேவனை சேவிக்கவேயில்லை. சிலவாரங்களுக்கு முன்பாக வீட்டில் உட்கார்ந்து கொண் டிருந்து...'' அவர் எண்பது வயதுள்ளவர். இயல்பாகவே அவர் அதிகமான உடல் உழைப்புச் செய்வதில்லை.

அவர் அந்த அம்மாளை அழைத்து, ''ஹாட்டி, உனக்கு ஒரு காரியம் தெரியுமா? சில நிமிடங்களுக்கு முன்பாக கிறிஸ்து எனக்கு முன்பாக வந்தார்'' என்றார்.

அவள் அவரை நோக்கிப் பார்த்து, "என்ன விஷயம்'' என்று கேட்டாள்.

அவர் கூறினார், "இல்லை அவர் இங்கே எனக்கு நேர் முன்பாக நின்று, ஒரு காரியத்தை என்னிடம் அவர் கூறினார்.''

''அவர் என்ன கூறினார்'' என்று கேட்டாள்.

"நீர் நினைக்கிறதைவிட நேரம் பிந்திவிட்டது'' என்று.

33. அப்போதிலிருந்து சில வாரங்களுக்குப் பிறகு, இரண்டு மூன்று வாரங்களுக்குப் பின்பு அவருக்கு 'ஸ்ட்ரோக்'' ஏற்பட்டு, பக்கவாதம் வந்து. மருத்துவமனையில் மரிக்கிற நிலையில் கிடந்தார். அத்தை ஹாட்டியிடம், "நீர் என்னையோ அல்லது வேறு யாரையுமோ, இப்பொழுது அவர் வந்தெட்டி யிருக்கும் இந்த நிலையில், அவரது இருதயத்தை சரியான நிலைக்கு உட்படுத்துவதற்காக, அழைக்காமலிருந்ததற்காக நீங்கள் வெட்கப்படவேண்டும்'' என்று நான் கூறினேன்.

34. அடுத்த நாள் காலையில் நான் கர்த்தரிடம் வேண்டினேன்: அப்பொழுது நான்... அவரால் என்னோடு பேச முடியவில்லை. எனவே நான் அவரிடம், ''அங்கிள் ஆண்டி அவர்களே, நான் பேசுவது

ஆவியால் ஊக்குவிக்கப்பட்டிருக்கும்படி செய்து, தானியேல் தீர்க்கதரிசிக்கு கொடுத்தவராகிய மகத்தான போதகரே, இன்று காலையிலே ஆவியின் ஏவுதலை அனுப்பும் படியாக நாங்கள் ஜெபிக்கிறோம். இந்தக் கடைசி காலம் வரையிலும் அப்புத்தகமானது மறைத்து வைக்கப்பட்டிருக்கும் என்று அவர் கூறினார். இந்தக் கடைசி நாட்களில்தான் அவைகளை புரிந்துகொள்ளும்படி திறந்து கொடுக்கப்படும் என்றும், வார்த்தையானது எங்களை ஆண்டு கொள்ளத்தக்கதாகவும் வெளிச்சம் உண்டாகத்தக்கதாக எங்கள் இருதயத்தில் எளிய முறையில் பதித்து வைக்கப்படும் விசுவாசம் உண்டாயிருக்கும் என்றும், அது எங்கள் ஜீவியங்களில், தான் விரும்பிய பிரகாரம் செய்யும்படி நீதியின் விருட் சங்களை முளைப்பிக்கும் என்றும் கூறியிருக்கிறீர். தேவனிலே உள்ள எங்களது விசுவாசமானது இன்று காலையிலே, அதை எங்களுக்கு கிடைக்கச் செய்யட்டும். எங்களையே நாங்கள் பிரதிஷ்டை செய்தவண்ணமாக நாங்கள் இப்பொழுது தாழ்மையுடன் உமக்கென்று காத்திருக்கிறோம், இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, ஆமென்.

30. இப்பொழுது நாங்கள் இந்தக் காலை வேளைக்காகவும் மீண்டும் தேவனுடைய நித்திய வார்த்தையின் இப்பக்கங்களை திறப்பதற்குக் கிடைத்த இந்த மகத்தான தருணத்திற்காகவும் நாங்கள் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்.

31. இப்பொழுது, நான் இதை விளக்கி கூறும்படி என்மேல் பொறுப்பு சுமத்திக்கொண்டுள்ளதற்கு காரணம் என்ன வெனில்... இப்போது சற்று காலத்திற்கு முன்புதான் நாம் வெளிப்படுத்தின விசேஷத்தில் ஏழு சபைக் காலங்களைப் பற்றி ஆராய்ந்து பார்த்துக்கொண்டிருந்தோம். வெளிபடுத்தின விசேஷம் 3-ம் அதிகாரத்தின் முடிவில் சபையானது பூமியிலிருந்து மகிமைக்குள் எடுத்துக்கொள்ளப்படுகிறது. வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்ட சில விஷயங்கள் இப்போது நடைபெற வேண்டுமென்று மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவைகள் சபைக் காலங்களுக்கு சம்மந்தமில்லாதவைகளாகும். நான் இதைப்பற்றி அவர்களுக்கு விளக்கிப் புரிய வைக்க முயன்று கொண்டிருக்கிறேன். நீங்கள் நினைக்கிறதைவிட அதிகமாக முடிவுவேளைக்கு சமீப மாயிருக்கிறோம்.

32. சில நாட்களுக்கு முன்பாக ஒரு நாள் இரவில், பில்லி.. அல்லது எனது மருமகள் நடுநிசியில் என்னை தொலைபேசியில் கூப்பிட்டு, மருத்துவமனையில் மரித்துக்கொண்டிருக்கிற நிலையில் எனது



பார்க்கிறோம். ஆகவே, நாங்கள் எதையாவதைப் பற்றி உம்மிடம் புகார் செய்யக் கூட வெட்கப்படுகிறோம், கர்த்தாவே.

இப்பொழுதும், பிதாவே, நீர் எங்களுக்கு இன்றிரவில் வேத வாக்கியத்தைத் திறந்து கொடுக்கும்படி வேண்டிக் கொள்கிறோம். இன்றிரவில் இந்த பாதையிலே நாங்கள் கடந்து செல்லுகையில், நீர் எங்கள் ஒவ்வொருவரும் பக்கத்திலுமாக கடந்து நடந்து வருவீராக. எருசலேமிருந்து எம்மாவூருக்குப் போய் கொண்டிருந்தவர்களோடு நீர் பேசியதைப் போல் நீர் எங்களிடம் பேசியருளும். அதனால் நாங்கள் இன்றிரவில் இவ்வாராதனை முடிவடைந்த பிறகு, நாங்கள் தத்தமது வீடுகளுக்குத் திரும்பிச் செல்லுகையில், "அவர் தமது வசனத்திலிருந்து நம்மோடு பேசியபோது நமது இருதயங்கள் கொழுந்துவிட்டு எரியவில்லையா?" என்று கூறும்படி செய்யும்.

வேதம் வாசித்தலை ஆசீர்வதித்தருளும், என்னுடைய பெலவீனமான முயற்சிகளை ஆசீர்வதியும், கர்த்தாவே, சரியானவைகளை பேசி என் வாயைத் திறந்தருளும், தவறானவைகளை உச்சரிக்கக் கூடாதபடி என் வாயை மூடியருளும். உமக்கே மகிமையை எடுத்துக் கொள்ளும், உமது ஜனங்கள் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் வேளையை அறிந்து கொள்ளவும், கர்த்தராகிய இயேசுவின் அதி சீக்கிர வருகையைக் குறித்தும் காணும்படி செய்து, உமது ஜனங்களில் நீர் மகிமைப்படுவீராக. இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே கேட்கிறோம் ஆமென்.

13. இப்பொழுது, சற்று நேரம்பின்னால் திரும்பிப் பார்க்கத் தக்கதாக, தானியேல் சிறையிருப்பில் அறுபத்தெட்டு ஆண்டுக் காலம் இருந்துவிட்டான் என்று பார்த்தோம். அதைக் குறித்து எண்ணிப்பாருங்கள். இன்று காலையில் கூறப்பட்டவைகளை கேட்டிராதவர்கள், பென்சில், பேப்பர்களோடு உள்ளவர்கள், இவைகளை இன்றிரவில் குறித்துக் கொள்ளுங்கள். கி.பி. 606 முதல் 538 முடிய (கி.மு. என்று இந்த இடத்தில் இருக்க வேண்டும். வாய் தவறுதலாக இந்த இடத்தில் கி.பி. என்று கூறிவிடுகிறார் - தமிழாக்கியோன்). 538 முதல் 606 முடிய அறுபத்தெட்டு ஆண்டுக் காலமாகும் இக்கால முழுவதிலும் தானியேல் சிறைப்பிடிக்கப்பட்டவனாக போவதற்கு அவனுக்கு எந்தவொரு சபையும் இல்லாத நிலையில், கேட்க அவனுக்கு எந்த பிரசங்கமும் இல்லை என்ற இவ்விதமான நிலையில் இருந்து வந்தான். ஆனால் அவனிடம் அவனுக்கு முன்னால் தோன்றிய ஒரு தீர்க்கதரிசி தீர்க்கதரிசனமாக முன்னுரைத்தவைகளைப் பற்றி எழுதியுள்ள

புஸ்தகங்களும், தோற்சுருள்களும் இருந்தன. அதுதான் எரேமியாவாகும்.

14. இப்பொழுது அவன் இந்த வேதவாக்கியங்களை படித்து ஆராய்ந்து கொண்டிருக்கையில், அவர்களுக்கென குறிக்கப்பட்டு இருந்த எழுபது ஆண்டுகளின் காலம் வேகமாக முடியப் போகிறதாயிருக்கிறது என்பதைப் பார்த்தான். எரேமியா தீர்க்கதரிசி தீர்க்கதரிசனமாக உரைத்த ஒவ்வொரு வார்த்தையையும் தானியேல் பயபக்தியுடன் விசுவாசித்தான். இன்றிரவில் இப்பாடத்தை கேட்டுக் கொண்டிருக்கும் இந்த என் ஜனங்களைக் கேட்கிறேன், நாம் நமது தீர்க்கதரிசிகளை விசுவாசிக்க வேண்டுமா? ஆம், ஐயா! ஏனெனில் கர்த்தருடைய வார்த்தையானது தீர்க்கதரிசிகளிடத்தில் தான் வந்தது. அவர்களுக்கு ''கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்" என்பதாக இருந்தது. மற்றொரு உண்மையான தீர்க்கதரிசி கூறுபவைகளோடு ஒரு உண்மையான தீர்க்கதரிசி முரண்பட்டிருக்கவே மாட்டான். வார்த்தை கூறாதவைகளை, வார்த்தையில் கூறப்பட்டிராததை அவர்கள் செய்யவே மாட்டார்கள். அதுதான் அவர்களை ஒரு தீர்க்கதரிசியாக ஆக்குகிறது. அவர்களுக்கு வார்த்தை வரும்பொழுது, என்ன சம்பவிக்க வேண்டுமோ அதை அவர்கள் முன்னுரைப்பார்கள். தாங்கள் எதையாவது தவறானதை கூறிவிடக் கூடாதே என்றும், அதினால் அது வழிதப்பிச் செல்லச் செய்துவிடக் கூடுமே என்றும் அறிந்து உள்ளத்தில் பய உணர்வோடு, தாங்கள் ஒருக்காலும் அப்படிபட்ட காரியத்தை செய்ய விரும்புவதே கிடையாது. கர்த்தர் உரைப்பது என்னவென்றால் என்று கூறும் முன்னர், கர்த்தருடைய வார்த்தையைத் தான் நாம் பெற்றிருக்கிறோம் என்ற முழு நிச்சயத்தை உடையவர்களாக இருக்கவே நாம் விரும்புகிறோம். அது தேவனுடைய சிங்காசனத்தில் இருந்து நேரடியாக புறப்பட்டு வரக்கூடிய முழுமையான, நேரடியான செய்தியாக இருக்கவேண்டும். அப்படி இல்லையெனில் நாம் அதைப் பற்றிப் பேசவே கூடாது.

15. இப்பொழுது, நாம் வேத வாக்கியங்களை ஆராய்கையில், தானியேல் சிறையிருப்பில் அறுபத்தெட்டு ஆண்டுகள் இருந்துவிட்டபடியினால் இன்னும் இரண்டு ஆண்டுகள் தான் மீதமாயிருக்கிறது என்றும், காலமானது வேகமாக கடந்துவிட்டது என்றும், தேவன் தன் ஜனங்களை அவர்களுடைய சுய தேசத்திற்கு திரும்பக் கொண்டு செல்லப் போகிறார் என்பதையும் அவன் கண்டான் என்றும் பார்த்தோம். ஜெபத்தில் இருந்தபொழுது, பரலோகத்திலிருந்து பலமுள்ள தூதனொருவன் இறங்கி வந்தான்



இரக்கமாயிரும்'' என்று மாத்திரம் கூறுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. இந்த ஒலிநாடாவைக் கேட்ப வர்களே, நீங்கள் இதைக் கேட்கையில், தேவன் உங்களது வேண்டுதலை அருளிச் செய்வாராக.

27. எங்கள் பரமபிதாவே, நாங்கள் நன்றியுள்ள ஜனங்களாக இருக்கிறோம், ஆயினும், தகுதியற்றவர்களாயிருக்கிறோம். ஆனால் நாங்கள் இன்று காலையிலே உமது கிருபாசனத்தை அணுகுகிறோம். ஏனெனில் நாங்கள் வரும்படி அழைக்கப்பட்டுள்ளோம். 'என் நாமத்தினால் பிதாவை நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அதை நான் செய்வேன்'' என்று இயேசு கூறினார். இப்பொழுது அது சத்தியமாயிருக்கிறதென்று நாங்கள் அறிகிறோம்.

28. இங்கே கூடியுள்ள இச்சபையிலும் இவ்வொலி நாடாக்கள் போகும் எப்பிரதேசத்திலும், இதற்கு செவி கொடுக்கிற பல்லாயிரக்கணக்கான மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்கள் உண்டாயிருக்கக்கூடும். பிதாவே, நாங்கள் மறுபடியும் பிறக்கும் பொழுது, எங்களுடைய ஆவியானது உன்னததிலிருந்து பிறந்ததாக இருக்கும். அது தேவனின் ஆவியாகிய பரிசுத்த ஆவியாக எங்கள் மேல் இருக்கும். எங்கள் மேல் இருக்கும் அந்தப் பரிசுத்த ஆவியானவர் சர்வ வல்லமையுள்ளவராயிருந்து நாங்கள் நடை பெறவேண்டுமென வாஞ்சிக்கும் எதையும் செய்யக்கூடியவராக இருக்கிறார் என்பதை நாங்கள் உணருகிறோம். பரம பிதாவே, தேவனுடைய இராஜ்யத்தின் மகிமைக்காக, இந்த எல்லா ஜெப விண்ணப்பங்களும், வாஞ்சைகளும் இன்று காலையில் எங்களுக்கு அருளப்படத்தக்கதாகவும், எங்களுடைய வியாதிகள், பெலவீனங்களிலிருந்து நாங்கள் விடுவிக்கப்பட்டு குணமடையவும், எங்கள் முழுப் பெலத்தோடு எங்கள் தேவனை சேவிக்கத்தக்கதாகவும், அந்த ஆவியான வருக்கு எங்களது விசுவாசத்தை நீர் விடுவிக்க வேண்டுமென்று நாங்கள் உம்மை வேண்டிக் கொள்கிறோம்.

29. இன்றைக்கு, நாங்கள் அறிந்து கொள்ளும்படி எங்கள் செவி களைத் திறந்தருளும். இந்த மகத்தான கேள்வியை மக்கள் மத்தியில் கொண்டு வந்து அதைக் குறித்து அவர்கள் மனதில் தெளிவாக்குவதற்காக நான் எடுத்துக்கொண்டுள்ள பெரு முயற்சியில்... கர்த்தாவே, நான் இதை இங்கே காகிதத்தில் எழுதி வைத்தும், இக்கரும்பலகையில் அதைக் குறித்த வரைப்படத்தை வரைந்தும் வைத்துள்ளேன். ஆனால் நான் அதைக் குறித்து விவரித்துக் கூறுவதற்கு பாத்திரமானவன் அல்ல. இந்த வார்த்தையை எழுதி, அது

வெளிப்படுத்தின விசேஷம் வரையிலும் உள்ளவைகளோடு சரியாக சம்மந்தப்படுத்திக் காட்டுவீர்களா?

23. சர்பத்தின் வித்தைக் குறித்தோவெனில் அதுதான் மக்களைக் கொன்று விடுகிறது. அநேக மக்கள் அதை விசுவாசிப்பதில்லை. ஆனால் நீங்கள் ஆதியாகமத்தில் வாசித்தால் சர்ப்பத்திற்கு வித்து உண்டு என்று வேதம் கூறுகிறது. 'சர்ப்பத்தின் வித்துக்கும் ஸ்திரீயின் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்'' என்று கூறுகிறது. ஆகவே சர்ப்பத்திற்கு ஒரு வித்து உண்டாயிருந்திருக்கிறது. சர்ப்பத்தின் வித்து ஆவிக்குரியதாக இருந்தது என்று சொன்னால், அப்போது, இயேசு ஒரு மனிதனாக இருக்கவில்லை என்றாகி விடும், ஆகவே ஸ்திரீயின் வித்தும் ஆவிக்குரிய பிரகாரமாகாத்தான் இருந்தது என்றாகிவிடும். அவர்கள் இருவருக்குமே வித்துக்கள் உண்டு. அந்த பகையானது இன்னமும் இருக்கத் தான் செய்கிறது. சர்ப்பத்திற்கு ஒரு வித்து உண்டாயிருந்தது. நீங்கள் உங்களது வேதாகமத்தை எடுத்துக்கொண்டு தேவனுக்கு முன்பாக பயபக்தியுடன் முழங்கால் படியிடுவீர்களானால், அப்போது தேவன் நிச்சயமாக அதை உங்களுக்கு வெளிப் படுத்துவார் என்று நான் விசுவாசிக்கிறேன்.

24. நீங்கள் அதைப் புரிந்து கொள்ளவில்லையென்றால், கடிதத்தின் மூலமோ அல்லது நேர்முகப் பேட்டியின் மூலமோ அல்லது வேறெந்த வகையில் உங்களுக்கு என்னால் உதவ முடியுமோ, அவ்வாறு உங்களுக்கு சிறப்பாக உதவிட நான் எந்த வேளையிலும் உங்களுக்குக் கிடைக்கக் கூடியவனாக இருக்கிறேன். நிச்சயமாகவே அது ஒரு மனிதனை இரட்சிப்பதுமில்லை, அல்லது ஒரு மனிதனை ஆக்கினைக்குள்ளாக்கு வதுமில்லை என்பதை நாம் உணருகிறோம்; ஆனால் மக்கள் காண வேண்டு மென்பதற்காக நாம் மிகவும் பிரயாசப்படும் அந்த விஷயத்தின் பேரில் அது வெளிச்சத்தைக் கொண்டு வருகிறது. அது வெளிச்சத்தைத்தான் கொண்டு வருகிறது.

25. இங்கு காணும் வகையில் உள்ள சபையாக கூடியுள்ள வர்களே, நான் இதை ஒலிநாடாக்கள் நிமித்தமாகக் கூறுகிறேன். அதைப் புரிந்து கொண்டீர்களா? இந்த ஒலிநாடாக்கள் எவ்விடங்களுக்கும் செல்லுகிறது.

26. இத்திருவசனத்தின் ஆக்கியோனை நாம் அணுகும் முன்னர், சற்று நாம் நமது தலைகளை வணங்குவோமாக. இங்கே சபையில் உள்ளவர்களில் எத்தனை பேர்கள் தேவையுள்ளவர்களாயிருக் கிறீர்கள்? "ஓ, தேவனே, நான் தேவையுள்ளவனாயிருக்கிறேன், என்மேல்



என்பதையும் நாம் கண்டோம். அவனுடைய பெயர் இன்னதென்று யாராவது கூற முடியுமா? (சபையினர் ''காபிரியேல்'' என்று பதிலளிக்கின்றனர் - ஆசி). காபிரியேல் அவன் யூத சபைக்கு உரிய தூதனாயிருக்கிறான். எத்தனை பேருக்கு அது தெரியும்? எங்கும் காபிரியேல் தான் என்பதைப் பார்க்கிறோம். காபிரியேல் தான் யூத சபைக்குரிய செய்தியாளனாக இருக்கிறான். அவன் மரியாளிடத்தில் வந்தான், சகரியாவினிடத்தில் வந்தான். எப்பொழுதும் அது காபிரியேல் தான். பரலோகத்தின் மிகப்பெரிய தூதர்களில் அவனும் ஒருவன்.

16. அவன் நமது சகோதரனாகிய தானியேலுக்கு தேவனிடத்திலிருந்து “ஓ, தானியேலே நீ மிகவும் பிரியமானவன்” என்ற அப்படிப்பட்ட அற்புதமான வாழ்த்துதலை கொண்டு வந்தான். அல்லவா? தேவன் உங்களை நேசித்தார் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கத் தக்கதாக அது உங்களை ஆக்காதா? நான் பெரிதான அளவில் நேசிக்கப்படவில்லையெனில், ஒரு சிறிதாவது நாம் நேசிக்கப்பட வேண்டுமே என்று நான் விரும்புவேனே, நீங்கள் அவ்வாறு எண்ணவில்லையா? எப்பொழுதாவது அவர் என்னைக் குறித்து நினைக்கிறார். அவர் எனக்காக அக்கறை கொண்டிருக்கிறார் என்பதை நான் எண்ணிப் பார்த்தால், அதற்காக நான் ஆர்ப்பரிக்க விரும்புவேன். அவர் நமக்காக அக்கறை கொண்டிருக்கிறார் என்பதற்கான உறுதியான வாக்குறுதி நமக்கு உண்டாயிருக்கிறது. ஏனெனில் நாம் இன்னும் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமது ஸ்தானத்தில் மரித்தார், சகோதரனே. நாம் தேவனுக்கு அந்நியர்களாயிருக்கையில், தேவன் நம்மை இப்பொழுது தமக்கு அருகாமையில் நாம் வரும்படி செய்து, நமக்கு நமது இரட்சிப்பின் அச்சாரமாகிய பரிசுத்த ஆவியை தந்திருக்கிறார். அதின் பேரில் உள்ள விசுவாசமானது. இவ்வுலகத்தின் காரியங்களுக்கு மேலாக நம்மை உயர்த்துகிறது, அதற்கு மேலாக நாம் தாண்டிச் சென்றுவி டுகிறோம். அது மகிமையானதாக இருக்கிறதல்லவா? அது சரி.

17. ஜெபத்தில் இருக்கையில், காபிரியேல் வந்து, அவனிடம், அவர்கள் தங்கள் சுய தேசத்திற்குப் திரும்பிப் போவதற்கு இன்னும் இரண்டு ஆண்டுகள் இருக்கிறது என்பதைப் பற்றி மட்டுமல்லாமல், அந்த மக்களின் முடிவு காலம் வரைக்குமுள்ள விஷயத்தையும் பற்றி அவனுக்கு கூறினான். அதைப் பற்றி எண்ணிப் பாருங்கள். இப்புவியில் அவர்கள் கடந்து செல்லப்போகிற யாத்திரையின் இறுதிவரையிலும் உள்ள முழுக்காலத்தையும் காபிரியேல் தானியேலுக்கு விவரித்தான்.

இம்மகத்தான காரியங்களை தானியேலுக்குக் கூறும்படியாகத்தான் அனுப்பட்டதாக அவன் கூறினான். அந்த தீர்க்கதரிசி எப்படியாய் உணர்ந்திருப்பான்! முடிவு காலம் வரையிலும் அவனுடைய ஜனங்களின் மேல் எழுபது வாரங்கள் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என்பதை அவன் எடுத்துக் கூறினான். எல்லாம் முடிகிறதான அப்பொழுதுதான் முடிவுகாலமாக இருக்கிறது. சகலவற்றின் முடிவு. எல்லாவற்றின் முடிவும் வருகிற அம்முடிவுகாலம் வரையிலும் எழுபது வாரங்கள் உள்ளன என்று அவன் கூறினான்.

சிலர் மாதங்கள் என்று எடுத்துக் கொள்கிறார்கள், சிலர் நாட்கள் என்று எடுத்துக் கொள்கிறார்கள். சிலர்... அவைகள் வாரங்கள் என்று கூறப்பட்டுள்ளன. சுமாராக இரண்டேகால் வருடங்கள்... அல்லது ஒன்றேகால் வருடங்கள் ஆகும். பாருங்கள், அங்கே தான் நாம் உண்மையானவற்றைக் கண்டு கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

18. "எழுபது வாரங்கள் உன்னுடைய ஜனங்கள் மேல் செல்லும்படி குறிக்கப்பட்டுள்ளது'' என்று கூறப்பட்டது. எந்த நோக்கத்திற்காக? எதற்காக? யாருடைய ஜனங்களின் மேல். என்னத்திற்காக? எதற்காக யாருடைய ஜனங்களின் மேல் தீர்மானிக்கப்பட்டது? யூதர்களாகிய தானியேலின் ஜனங்களின் மேல். என்ன பரிசுத்த நகரம். இப்பொழுதும் சபையோரே, தானியேலின் பரிசுத்த நகரம் எது? (சபையோர் "எருசலேம்'' என்று பதிலளிக்கின்றனர் - ஆசி). எருசலேம்.

இப்பொழுது, இன்றிரவில், எருசலேம் எங்கேயுள்ளது அதை கட்டியெழுப்பியது யார்? என்பதைப் பார்க்கப் போகிறோம். அதைப் பற்றி நீங்கள் எப்பொழுதாவது சிந்தித்ததுண்டா? யார் எருசலேமைக் கட்டியெழுப்பினார்கள்? எப்பொழுது அது ஸ்தாபிக்கப்பட்டது? சற்று நேரத்திற்குப் பிறகு நாம் அதைப் பார்க்கப் போகிறோம். எருசலேமை கட்டியெழுப்பியது யார்? அது ஒரு மூலையில் மறைத்து வைக்கப்பட்டுள்ள ஒரு சிறு காரியமாகும். ஆனால் நிச்சயமாக அது அதை கூறுகிறது. ஆம் ஐயா! எருசலேமை நிறுவியது யார்? எப்பொழுது அது நிறுவப்பட்டது? நல்லது? அது தானியேலின் பரிசுத்த நகரம்.

19. கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக சாபக்கேடாக இருந்து வந்த அந்த நகரமானது இப்பொழுது மீண்டும் கட்டி எழுப்பப்பட்டு, ஸ்தாபிக்கப்பட்டு, ஆதியில் இருந்ததைப் போலவே ஆலய வழிபாடும் அங்கே ஏற்படுத்தப்படும் என்பதை நாம் அறிகிறோம். அது சரிதான். எருசலேமில் அவ்விதமாக நடக்கும். அங்கே ஆதியில் இருந்ததைப்



போகையில் உங்களுக்கு அதை விவரிப்பதற்காகவே அவ்வாறு செய்யப்பட்டுள்ளது.

20. இந்த "தானியேலின் எழுபது வாரங்கள்'' ஒரு பெரிய பாடமாக உள்ளது. இந்த வாரம் முடிவில் ஏறத்தாழ இரண்டு பகல்களும் இரண்டு இரவுகளும் நான் அதைப் பற்றி ஆராய்ந்து கொண்டேயிருந்து, சத்தியமானதை உரைப்பதற்குரிய சரியான வார்த்தைகளைக் கண்டு கொள்வதற்காக ஈடுப்பட்டிருந்தேன். அவைதானே வேதாகமம் முழுவதோடும் ஒத்திருக்கவேண்டும். ஏதோ ஒரு சிறிய வேத வாக்கியத்தைக் கொண்டு அதை நீங்கள் எடுத்துக்கொள்ள முடியாது. அந்த அளவில் மட்டும் அதைப் புரிந்து கொண்டு, "இதைத்தான் இது கூறுகிறது" என்று கூறிட முடியாது. அதன் பிறகு, திரும்பி வந்து, "ஆனால் இங்கே இதைக் கூறுகிறது. இதற்கு முரணாக இருக்கிறது" என்றும் கூற முடியாது. அவ்வாறு அது இருக்க முடியாது. எல்லா சமயத்திலும், ஒரே விதமானதைக் தான் அது கூறிட வேண்டும். அவ்வாறு இல்லாவிடில் நீங்கள் தவறாயிருப்பீர்கள். அவ்விதமாகத் தான் அதைக்குறித்து போதித்திட நான் முயன்றிருக்கிறேன்.

21. இப்படியிருக்க, ஒலி நாடாக்களைக் குறித்துக் கூறிட விரும்புகிறேன். உலகத்தின் பல்வேறு பாகங்களிலுள்ள எனது சகோதரரர்களின் குறை கூறுதல்கள், என்னுடைய செய்தி ஒலி நாடாக்களைக் குறித்து மிகப் பெரிய அளவில் உள்ளது. தேவனுடைய கிருபையினாலே நாம் உலகத்தோற்றத்திற்கு முன்னரே முன் குறிக்கப்பட்டிருக்கிறோம் என்று நான் விசுவாசித்து அதை உபதேசிக்கும் வகையைக் குறித்துத் தான் அக்குறை கூறுதல்கள் உள்ளன.

22. என்னுடைய பெந்தெகொஸ்தே சகோதரர்களே, உங்களு டைய அபிப்பிராயங்கள் நற்கிரியைகளினால் இரட்சிப்படைதல் என்ற கொள்கையைச் சார்ந்ததாக (legalist) இருக்கிறது என்று நான் அறிவேன். நான் கூறுபவைகள் உங்களுடைய அபிப்பிராயங்களை குலைப்பதாக உள்ளது என்பதை நான் அறிவேன். ஆனால் ஒரு கிறிஸ்தவ சகோதரன் என்ற முறையில், உங்களு டைய முழங்கால்களில் உங்கள் வேதாகமங்களோடு தேவனுக்கு முன்பாக நின்று, அதைப் பற்றி உங்களுக்கு விளக்கிக் கூறிடுமாறு தேவனை நோக்கிக் கேட்க நீங்கள் கரிசனை கொள்ள மாட்டீர்களா? நீங்கள் அதைச் செய்வீர்களா? நற்கிரியைகளினால் இரட்சிப்படைதல் என்ற உங்களுடைய கொள்கையை எடுத்துக் கொண்டு ஆதியாகமம் முதல்

சபைக்கு, பல்வேறு இடங்களிலிருந்து வந்திருக்கிறார்கள் என்பதை பாருங்கள்

17. சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்பாக, ஒரு நகர வட்டகைக்கு அப்பால், அந்த ஏழாவது வீதியிலே, அந்தக் காலை யிலே நான் மூலைக்கல்லை வைத்ததை எண்ணிப் பாருங்கள். நான் அப்போது திருமணமாகாத இளைஞனாயிருந்தேன். மக்கள் எல்லாவிடங் களிலுமிருந்து வந்து இங்கே நெருக்கியடித்துக் கொண்டு அமர்ந்திருக்கிறதாக நான் ஒரு தரிசனத்திலே கண்டேன். நான் பிரசங்க பீடத்திற்கு பின்னால் நின்று கொண்டு மிகவும் மகிழ்ச்சியுற்ற மனிதனாக அப்போது இருந்தேன். அப்போது தான் அவர் என்னிடம், ஆனால் இது உன்னுடைய கூடாரமல்ல'' என்று கூறினார். ஆகாயங்களுக்கு கீழாக அவர் என்னை அமரப்பண்ணினார். வேதாகமத்தின் தாளிலே எழுதப் பட்டு அம்மூலைக்கல்லில் வைக்கப்பட்டிருக்கிற மீதமுள்ள காரியங்களை நீங்கள் அறிவீர்கள்.

18. உங்களுக்கு நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். "நல்லது, நான் உங்களுக்கு நன்றியுள்ளவனாக இருக்கிறேன்'' என்று கூறுவது மிகவும் குறைவுள்ளதாகத்தான் இருக்கிறது. ஆனால் நான் உங்களுக்காக ஜெபிக்கிறேன். நான் உங்களை நம்புகிறேன். தேவனைப் பற்றி உங்களுக்கு இருக்கும் அனுபவங்களை நான் விசுவாசிக்கிறேன். ஒரு புருஷனோ அல்லது ஒரு ஸ்திரீயோ தாங்கள் என்னவிதமான துணிகளை அணிந்திருக்கிறார்கள் என்பதைக் காண்பிப்பதற்காக நூற்றுக்கணக்கான மைல்கள் தூரம் பிரயாணம் செய்து இங்கு வந்திருக்கிறார்கள் என்று நான் நினைக்கவில்லை. அவர்கள் அவ்வாறு செய்வார்கள் என்று நான் நினைக்கவில்லை. இல்லை, தங்களை மற்றவர்கள் பார்க்கவேண்டு மென்பதற்கான நோக்கங்கொண்டு அவர்கள் இங்கே வரவில்லை. அவர்கள் இங்கே வருகிறார்கள், ஏனெனில் அவர்கள் ஆழமான உண்மையுடன், தங்களுடைய ஆத்தும இரட்சிப்புக் காகவே இங்கு வருகிறார்கள். என்னுடைய ஜெபம் என்ன வெனில்; "தேவனே, எனக்கு உதவி செய்யும். அவர்களுடைய உத்தமத்தில் பாதியளவாவது எனக்கு இருக்க உதவி செய்யும், அதைக் கொண்டு நான் அவர்களுக்கு என் முழு இருதயத்தோடு என்னை நோக்கியவாறு ஊழியம் செய்திடட்டும்'' என்பதே.

19. இன்று காலையில் நீங்கள் காண்கிறதான இச்செய்தியைப் பற்றி இங்கே கரும்பலகையில் வரையப்பட்டுள்ளது. நான் என்ன பிரசங்கிக்கப் போகிறேனோ அதைப் பற்றி பேசிக் கொண்டே



போலவே, அன்றாட பலியானது மீண்டும் ஏற்படுத்தப்பட்டு, அது செலுத்தப்படும். இன்றிரவில் அவைகளைப் பற்றிய அநேக காரியங்களை நாம் பார்க்கப் போகிறோம்.

20. இவைகளைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கும் நண்பர்களே, நீங்கள் அறிய வேண்டியது என்னவெனில், வாரங்கள் கணக்கில் உள்ள போதித்தலை நான் செய்யப் போகிறதில்லை; ஆனால் அவைகளைப் பற்றி சற்று தொட்டு பேசப் போகிறேன். ஆனால் பின்னால் சீதோஷ்ண நிலை சற்று குளிர்ச்சியடைந்த பிறகு, நாம் அந்த ஏழு முத்திரைகள், ஏழு கோப கலசங்கள், ஏழு எக்காளங்கள் ஆகியவைகளைப் பற்றி நாம் படிக்கும் போகும் போது, அப்பொழுது நான் முன் சொன்னவைகளைப் பற்றி திரும்பிப் பார்த்து, "தானியேலின் எழுபது வாரங்களைப் பற்றி உங்களுக்கு நினைவிருக்கிறதா? சபைக் காலமானது முடிந்து சபை மேலே எடுக்கப்பட்டபொழுது என்ன சம்பவித்தது என்பது உங்களுக்கு நினைவிருக்கிறதா?'' என்று கேட்டு முன் சொன்னவைகளை நினைவுக்கு கொண்டு வருவேன். எழுபதாவது வாரமானது, சபையானது மேலே எடுக்கப்பட்டதிலிருந்து ஆரம்பித்து, அது திரும்ப வருகிற வரையிலும் உள்ள காலத்தைக் கொண்டதாக இருக்கிறது. அந்த காலத்தைத்தான் அது உள்ளடக்கியதாக இருக்கிறது. தானியேலின் முழு எழுபது வாரங்களையும் அல்ல. அதன் ஒரு பாகத்தைத்தான்.

21. ''எழுபது வாரங்கள் தீர்மானிக்கப்பட்டுள்ளது'' என்ன நடக்கப் போகிறது என்பதை கூறுவதான ஆறு விதமான நோக்கங்கொண்டதாக காபிரியேலின் விஜயமானது இருந்தது. அவனது வருகைக்கு ஆறு விதமான நோக்கங்கள் இருந்தன. இன்று காலையில் நாம் எடுத்துக் கொண்ட வேத வாக்கியத்தை மீண்டும் எடுத்துக் கொள்ளப் போகிறதில்லை. அங்கே ஆறுவிதமான நோக்கங்கள் இருந்தன. இங்கே நாம் இருக்கிறோம் ஆறு விதமான நோக்கங்கள் இருந்தன என்பதை நாம் கண்டோம். அவற்றில் ஒன்று... நாம் இப்பொழுது தானியேலின் புஸ்தகம் 9-ம் அதிகாரம் 24-ம் வசனத்தை எடுத்துக் கொள்வோம்.

''...உன் ஜனத்தின் மேலும், உன் பரிசுத்த நகரத்தின் மேலும்

எனவே இந்த எழுபது வாரங்கள் - இதை நீங்கள் காணத் தவற வேண்டாம் - அந்தக் காலத்திலிருந்து, யூதர்களுடைய முடிவு காலம் வரையிலும் எருசலேமின் முடிவு வரைக்கிலும் கூட அது வெளிப்படுத்துகிறதாயிருக்கிறது - அப்பொழுது புதிய நகரமொன்று

கட்டப்படும். மிகவும் ஆழமான விஷயத்திற்குள் நாம் இன்றிரவில் செல்லுகிறோம் என்று நான் நம்புகிறேன் மீறுதலைத் தவிர்க்கிறதற்கும்... எழுபது வாரங்கள் சொல்லும்படி குறிக்கப்பட்டு இருக்கிறது. இப்பொழுது, நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் - இந்த அளவு காலம் தான் இஸ்ரவேலர் இப்பூமியில் செய்ய வேண்டிய யாத்திரையாகும். அவர்களுக்கு எழுபது வாரங்கள் மட்டும்தான் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவ்வளவு காலம் தான் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

22. இப்பொழுது அவன் அவனிடம் என்ன கூறினான்? அவன் இன்னும் எவ்வளவு காலம் செல்லும் என்பதைக் குறித்து கண்டு பிடிக்க அவன் முயன்று கொண்டிருந்தான். (தானியேல் அவ்வாறு செய்தான் - தமிழாக்கியோன்). "நாங்கள் கடைசி காலத்தில் இருந்து கொண்டிருக்கிறோம் என்பதை நான் அறிகிறேன், கர்த்தாவே'' என்று அவன் ஜெபித்தான்.

(இப்பொழுது நாம் இருக்கிறது போல்).

இங்கு கூடி வந்திருக்கிறவர்களில் எத்தனை பேர்கள் நாம் கடைசி நாட்களில் இருந்து கொண்டிருக்கிறோம் என்பதை விசுவாசிக்கிறீர்களோ, அவர்கள் யாவரும் "ஆமென்'' என்று சொல்லுங்கள். (சபையோர் "ஆமென்" என்று கூறுகிறார்கள் - ஆசி). உங்களுக்கு நன்றி. நாம் முடிவுக்காலத்தில் இருக்கிறோம். நாம் இப்பொழுது, தேவனுடைய உதவியைக் கொண்டு, இன்னும் எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதைக் குறித்து கண்டுபிடிக்க முயன்று கொண்டிருக்கிறோம். என்ன நாளில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்? எனவே தான் நாம் பின்னால் திரும்பிச் சென்று இந்தத் தீர்க்கதரிசிகளின் புஸ்தகங்களை எடுத்துக்கொண்டு, நாம் எங்கே இருக்கிறோம் என்பதை கண்டு கொள்ள முயன்று கொண்டிருக்கிறோம். அதை தானியேலும் செய்தான். அவன் தன் முகத்தை தேவனுக்கு நேராகத் திருப்பினான்.

23. இன்று எத்தனை பேர்கள் தானியேல் 9-ம் அதிகாரத்தை வாசித்தீர்களா? உங்கள் கரங்களை உயர்த்திக் காண்பியுங்கள். நல்லது அவனுடைய ஜெபத்தைப் பாருங்கள், அவன் எவ்வாறு தன்னுடைய பாவ அறிக்கையையும் தன் ஜனங்களுடைய சார்பில் தானே அவர்களுடைய பாவ அறிக்கையையும் செய்தான் என்பதைப் பாருங்கள். தாங்கள் எப்பொழுது திரும்பிச் செல்ல வேண்டியதாய் இருக்கும் என்பதைக் குறித்து திட்டவட்டமாக கண்டுகொள்ள அவன்



வந்திருக்கிறார்கள். தொலைவிலுள்ள தெற்கு கரோலினாவிலிருந்து வந்த ஒரு பெண்மணியை சற்று நேரத்திற்கு முன்புதான் சந்தித்தேன்.

14. இப்பொழுது, சிக்காகோவிலிருந்து இன்னும் வெவ்வேறு இடங்களிலிருந்தும் வந்திருக்கிறதான மக்களை ஒவ்வொருவராக நான் இங்கே பார்த்துக்கொண்டே வந்தேன். அவர்கள் யாவரும் இந்த ஒரு ஆராதனையில் கலந்து கொள்வதற்காகவே, நூற்றுக் கணக்கான மைல் தூரத்திலிருந்து கார்களில் பிராயணம் செய்து வந்திருக்கிறார்கள். இங்கே இவ்வளவு தூரம் வந்து அந்த செய்தியைக் கேட்பதற்கென்றே அவர்கள் தங்கள் பிள்ளைகளுக் கென்று உள்ள பணத்தை மேசையிலிருந்து எடுத்துச் செல வழித்துக் கொண்டு இங்கே அவர்கள் வந்து சேருகிறார்கள். இங்கு வரும்போதோ, அவர்களுக்கு அமருவதற்கு இருக்கைகள் இல்லை, குளிர்சாதன வசதி பொருத்தப்படாத அறைதான் உள்ளது, அதில் அவர்கள் நின்று கொண்டிருக்க வேண்டியதாயுள்ளது. வியர்வையைத் துடைத்துக்கொண்டு நின்று கொண்டிருக்க வேண்டியதாய் அவர்களுக்கு இருக்கிறது. இந்நாட்களில் ஒன்றில் அமைதியான இந்த வான வெளிக்கப்பால் அவர்கள் போகத்தக்கதான ஒரு ஸ்தலம் அவர்களுக்கு இருக்கவில்லையென்று நீங்கள் என்னிடம் கூறக் கூடுமோ? அவர்கள் உண்மையுள்ளவர்கள். அம்மக்கள் தசமபாகம் செலுத்துவார்கள். அவர்கள் இவ்வளவு தூரம் வருகிறது மாத்திரமல்ல, அவர்கள் எனக்கு தசம பாகங்களும் காணிக்கைகளும், கர்த்தருடைய ஆலயத்தினுள் கொண்டு வந்து, எது நீதியாயிருக்கிறதோ அதை செய்ய முயன்று கொண்டிருக்கிறார்கள். அவ்வித மான உத்தமமான மக்களை தேவன் அபரிமிதமாக ஆசீர்வதிப்பராக. தேவனுடைய இரக்கமும் கிருபையும் அவர்களோடு இருப்பதாக.

15. என்னுடைய நண்பர் சார்லீகாக்ஸ் அவர்களையும், இன்னும் தெற்கு கென்டக்கியிலிருந்து வரும் ஏனையோரையும் நான் காண்கிறேன். நீங்கள் எங்கு பார்த்தாலும், வெவ்வேறு இடங் களிலிருந்து மக்கள் வந்திருக்கிறதை நீங்கள் காணலாம்.

16. இதோ இங்கே ஒரு இளைஞர் அமர்ந்திருக்கிறார். அவரது பெயரைக் கூற எனக்கு இயலவில்லை. நான் அவரை சிக்காகோவில் சந்தித்தேன். ஆனால் நீங்கள் இங்கிருந்து வெகு தூரத்திலுள்ள ஊரில் இருக்கும் ஒரு வேதாகம பள்ளியிலிருந்து வந்திருக்கிறீர்களல்லவா? மிஸெசரியில் உள்ள ஸ்ப்ரிங்ஃபீல்ட் என்ற ஊரில் உள்ள அசெம்ப்ளி ஆப் காட் வேதாகமப் பள்ளிலிருந்து, ஆம் நல்லது, இந்த சிறிய பழைய

10. அதற்கு நான், ''லியோ, ஒரு மனிதனும் இங்கே வர முடியாது. தேவன் தான் ஒரு மனிதனை இங்கே கொண்டு வர வேண்டியதாயிருக்கிறது. நீங்கள் இங்கு வரக்கூடாது. நீங்கள் கீழே இறங்கிப்போய், இதைச் சத்தியம் என்று கண்டு கொண்ட தன் பிறகு, கீழே இருக்கிற மக்களுக்கு அதைப் பற்றி சாட்சியாக, அது சாத்தியமாயிருக்கிறது என்று கூறவேண்டும்'' என்று நான் கூறினேன்.

11. சகோதரன் லியோ, எவ்வளவு காலத்திற்கு முன்பாக அது ஏற்பட்டது? அநேக ஆண்டுகளுக்கு முன்பாக அல்லவா? அநேக ஆண்டுகள். அது முதற்கொண்டு, அவர் அந்த ஊழியமானது தேவனிடத்திலிருந்து வந்ததாகும் என்று மக்களுக்கு சாட்சியாகக் கூறிக்கொண்டிருக்கிறதில் அவர் உண்மையுள்ளவராக இருந்து கொண்டிருக்கிறார். அது என்னிடத்திலிருந்து வந்ததாக இருக்க நான் விரும்பவில்லை. அது என்னிடத் திலிருந்து உண்டானதாக இருக்குமானால், அப்பொழுது, அது நன்றாக இருக்காது, ஏனெனில் ஒரு மனிதனில் நன்மை யாதொன்றும் இல்லை என்பதைக் கவனித்தீர்களா? அது தேவனிடத்திலிருந்து வந்ததாக இருக்கவேண்டும்.

12. இப்பொழுது நான் சுற்றிலும் பார்த்தபொழுது... நேற்று மதியம் நான் எனது நண்பரான சகோதரன் வெஸ்ட் அவர்க ளோடு கைகுலுக்கினேன். இதுவரையிலும் அவரை நான் இக்கட்டிடத்தில் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆம், இதோ நான் இக்காலையில் அவரை இப்பொழுது காண்கிறேன். எவ்வளவு தொலைவிலிருந்து மக்கள் இங்கு பிரயாணம் செய்து வருகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? மிகத் தொலைவிலுள்ள அலபாமாவிலிருந்து ஞாயிறு ஆராதனைக்காக நீண்ட பிரயாணம் செய்து இங்கே வருகிறார்கள்.

13. சகோதரன் வெல்ஷ் ஈவான்ஸ் அவர்களை கடந்த ஞாயிற்றுக் கிழமை இங்கே காணத் தவறினேன். இன்றைக்கு அவர் இங்கே வந்திருக்கிறார் என்று யாரோ கூறினார்கள். அவர்களெல்லாம் ஜியார்ஜியாவிலுள்ள டிஃப்டன் என்ற இடத்திலிருந்து காரில் பிரயாணம் செய்து இங்கே வருகிறவர்களாய் இருக்கிறார்கள். அந்த சகோதரனின் கூட்டாளிகளெல்லாரும்கூட இங்கே அமர்ந்திருக்கிறார்கள். அநேகர்... சகோதரன் பாமர் ஜியார்ஜியாவிலுள்ள மேகானிலிருந்து வந்திருக்கிறார். சகோதரி அங்ரன், இன்னும் ஏனையோர் பின்னால் உட்கார்ந்திருக்கிறார்கள். டென்னஸிலுள்ள மெம்ஃபிஸ் என்ற இடத்திலிருந்து வந்திருக்கிறார்கள். இப்பொழுது நீங்கள் சிந்தித்து பாருங்கள்... ஏனையோர் வேறு பல இடங்களிலிருந்து



விரும்பினான். ஏனெனில் அவன் தன் ஜனங்கள் திரும்பிப் போவதற்கு ஆயத்தப்படுத்த வேண்டுமென அவன் விரும்பினான். எப்பொழுது நாம் உன்னதத்திற்குப் போகப் போகிறோம் என்பதைக் கண்டு கொள்வதற்காகாவே நான் முயன்று கொண்டிருக்கிறேன். அதனால் ஜனங்கள் மேலே போவதற்கு அவர்களை ஆயத்தப்படச் செய்வதற்காகத்தான். நாம் ஆயத்தமாயுள்ளோமா? ''கர்த்தாவே, என்ன நேரத்தில் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்'' என்பதை கண்டுபிடிப்பதற்காக நாம் நம்முடைய முகங்களை ஜெபங்களிலும், வேண்டுதல்களிலும் தேவனை நோக்கித் திருப்பியிருக்கிறோம்.

24 .நாம் பல்வேறு காரியங்கள் சம்பவித்துக் கொண்டிருக்கிறதை கண்டிருக்கிறோம். உலகமானது மிகவும் ஒழுங்கற்று சர்வ குழப்பான நிலையில் காணப்படுகிறது. நேரமானது நெருங்கிவிட்டது என்று நாம் காண்கிறோம். சுவற்றிலே ஒரு கையுறுப்பு தோன்றியுள்ளது. தேவன் முன்னுரைத்த யாவுமே... இப்பொழுதே இன்னொரு யுத்தம் வரப்போகிறது என்று நமது ஜனாதிபதி கூறுகிறதை நாம் கேட்கிறோம். யுத்தம் என்று அறிவிக்கப்பட்ட சில மணி நேரங்களுக்குள் உலக நாடுகள் எரிமலை வெடித்து, அதிலிருந்து சிதறும் சாம்பலைப் போல் ஆகிவிடும் என்று முன்னுரைக்கப்படுகிறது. நாம் அதைப் பெற்றிருக்கிறோம் என்பதை நாம் அறிவோம். ஆகவே, அது சம்பவிக்கிறதற்கு முன்பாக, சபையானது இங்கிருந்து போய்விட வேண்டும் என்பதையும் அறிந்திருக்கிறோம். ஆகவே, கர்த்தாவே நாங்கள் எந்த வேளையில் இருந்து கொண்டிருக்கிறோம்? எனவே அக்காரணத்தினால் தான் அவர் நமக்கு அதைத் தெரியப்படுத்துவார் என்று நான் விசுவாசிக்கிறேன். அதைக் கண்டுபிடிப்பதற்காக நாம் நமது முகங்களை திருப்பியிருக்கிறோம். இப்பொழுது முதலாவதாக

“மீறுதலைத் தவிர்க்கிறதற்கும், பாவங்களைத் தொலைக்கிறதற்கும், அக்கிரமத்தை நிவிர்த்தி பண்ணுகிறதற்கும், நித்திய நீதியை வருவிக்கிறதற்கும், தரிசனத்தையும் தீர்க்கதரிசனத்தையும் முத்திரிக்கிறதற்கும், மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம் பண்ணுகிறதற்கும், உன் ஜனத்தின் மேலும் உன் பரிசுத்த நகரத்தின் மேலும் எழுபது வாரங்கள் செல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிறது.''

தானி.9:24

அந்த ஆறுவிதமான நோக்கங்களோடு தான் காபிரியேலின் விஜயம் உண்டாயிருந்தது. இப்பொழுது நாம் முதலாவதாக அந்த நோக்கத்தை பார்க்க துவங்குவோமாக. அதை நீங்கள் பென்சில்

வைத்திருந்தீர்களானால் குறித்துக் கொள்ளுங்கள். மீறுதலைத் தவிர்க்கிறதற்கு - அதுதான் முதலாவதான காரியமாகும்.

25. தேவனுக்கு விரோதமாக மீறுதலைச் செய்த இஸ்ரவேலின் மீறுதலைத் தவிர்க்கிறதற்கு என்றால், யாக்கோபிலிருந்து அவபக்தியை நீக்குவதாக அது இருக்கும். இப்பொழுது நாம் இதைப் பற்றி தெரிந்து கொள்ளுவதற்காக ரோமருக்கு எழுதிய நிருபம் 11-ம் அதிகாரத்தை எடுத்துக் கொண்டு, 21-ம் வசனத்திலிருந்து ஆரம்பிப்போம். இப்பொழுது நாம் எதைப் பார்க்கப் போகிறோம்? மீறுதலைத் தவிர்க்கிறதற்கும் என்கிற விஷயத்தைக் குறித்து ரோமர் 11:21. சுபாவக் கிளைகளைத் தேவன் தப்பவிடாதிருக்க.... (இது யார் இஸ்ரவேலர்)... உன்னையும் தப்பவிடமாட்டார்...

நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் சென்று இந்த 11-ம் அதிகாரம் முழுவதையும் வாசிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். நான் இதை வாசிக்கிறேன். இந்த 11-ம் அதிகாரத்தைக் குறித்துக் கொண்டு படியுங்கள்

...உன்னையும் தப்பவிட மாட்டார் என்று எச்சரிக்கையாயிரு.

ஆகையால், தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்; விழுந்தவர்களிடத்தில் கண்டிப்பையும், உன்னிடத்தில் தயவையும் காண்பித்தார்; அந்தத் தயவிலே நிலைத்திருப்பாயானால் உனக்குத் தயவு கிடைக்கும்; நிலைத்திராவிட்டால் நீயும் வெட்டுண்டு போவாய்.

அன்றியும், அவர்கள் அவிசுவாசத்திலே நிலைத்திராதிருந்தால் அவர்களும் ஒட்ட வைக்கப்படுவார்கள்; அவர்களை மறுபடியும் ஒட்ட வைக்கிறதற்குத் தேவன் வல்லவராயிருக்கிறாரே. (புறஜாதிகள் வெட்டப்பட்டு, இஸ்ரவேலர் மீண்டும் ஒட்ட வைக்கப்படப்போகிற ஒரு காலமானது உண்டாயிருக்கும் என்று இவ்வசனம் கூறுகிறது - பார்த்தீர்களா?).

சுபாவத்தின்படி காட்டொலிவ மரத்திலிருந்து நீ வெட்டப்பட்டு, (புறஜாதிகள்) சுபாவத்திற்கு விரோதமாய் நல்ல ஒலிவமரத்திலே ஒட்ட வைக்கப்பட்டிருந்தால்... (நாம் சுபாவத்திற்கு விரோதமானவர்கள், அந்நியர்கள், இரக்கம் பெற்றிராதவர்கள் தேவனற்றவர்கள், நம்பிக்கையற்றவர்கள்; தேவனோ தம்முடைய இரக்கத்தினாலே நமக்கு ஒரு வாய்ப்பை அருளினார், நீதியைப் பெற்று இஸ்ரவேலரையோ அவர்களுடைய மீறுதல்களினிமித்தம் வெட்டிப்போட்டு, புறம்பாக்கிப் போட்டார்; காட்டொலிவ மரத்தை



6. இன்று காலையில் இங்கே கூடி வந்திருக்கிற இந்த அருமை மக்களையும், இவ்வொலி நாடாக்களைக் கேட்பவர்களையும் நாங்கள் பாராட்டுகிறோம். செய்யப்பட்டவைகளெல்லாம் தேவனுடைய இராஜ்யத்திற்கென்றே உள்ளவைகளாகும். உலகம் பூராவிலும் அருமையான அநேகம் நண்பர்கள் எனக்கு உண்டு. அவர்களை நான் மிகவும் மெச்சுகிறேன். அவர்களோடு நான் நித்தியத்தை கழிக்க முடியும் என்று நான் விசுவாசிக்கிறேன். எந்தவிதத்திலும் அந்த மக்களை வஞ்சிக்க வேண்டும் என்பது என் இருயத்தில் துளிக்கூட கிடையாது. ஆனால் அவர்களுக்கு என்னவெல்லாம் என்னால் உதவ முடியுமோ அவைகளை நிறைவேற்றுவதே எனது எண்ணம்.

7. தேவனுடைய ஜனங்களை நடத்துவதற்கு உள்ள ஞானத்தை தரும்படி சாலொமோன் ஜெபித்தது போல்தான் என் உள்ளத்திலும் நான் உணருகிறேன். அதுவே என்னுடைய உத்தமமான ஜெபமாகும்.

8. ஊழியத்தில் இங்கே என் கூட்டாளிகளாயிருக்கிற சகோதரர் கள், சகோ. மெர்ஸியர், சகோ. ராய் பார்டர்ஸ், சகோதரன் நெவில் என் குமாரன் பில்லி பால்; ஜீன் இங்கே எங்கோ இருக்கிறார், டெடி இன்னும் ஏனைய சகோதரர்கள், எனக்கு உதவியாக இருக்கும்படி வருகின்ற அவர்களையெல்லாம் நான் மெச்சுகிறேன்.

9. சகோதரன் லியோவுக்கு சமீபத்தில் உண்டாயிருந்த தரிசனத்தைப் பற்றி - அதை அவர் ஒரு சொப்பனம் என்று அழைத்தார்எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு இராத்திரியிலே நாங்கள் முதன்முதலாக சந்தித்தபொழுது - அவர் ஆகாயத்தில் மிக உயரத்திலே, ஒரு பெரிய கூர் நுனிக்கோபுரம் இருப்பதை பார்த்தாராம். நான் அதன் மேல் எங்கோ நின்றுகொண்டு பிரசங் கித்துக்கொண்டிருக்கிறேனாம். அதெல்லாம் என்ன என்பதை காண்பதற்காக அவர் அங்கே ஏறினாராம். அந்த கூர்நுனிக் கோபுரத்தின் சிகரத்தின் மேல் வந்தடைந்தபோது அங்கே தொலைவில் ஒரு தாம்பளத்தைப் போன்று, வெள்ளியைப் போல் பிரகாசிக்கும் ஒளியானது காணப்பட்டது என்று அவர் கூறினார். நான் அங்கே நின்று ஜனங்களுக்கு பிரசங்கித்துக்கொண்டிருந்ததாக அவருக்கு அதில் காணப்பட்டதாம். அப்பொழுது அவர் எனது கவனத்தைக் கவர்ந்ததினால் நான் அவரது பக்கமாக திரும்பினேனாம். அவர் என்னிடம் “நீர் அங்கே எவ்வாறு போய் சேந்தீர்கள்?'' என்று கேட்டார். ''நான் அங்கே எவ்வாறு வந்தடைய முடியும்?'' என்றும் கேட்டிருக்கிறார் அந்தச் சொப்பனத்தில்.

இவ்வுபதேசங்களில் சிலவற்றோடு நீங்கள் மனம் ஒவ்வாமல் இருக்கக் கூடும். ஆனால் சகோதரரே, நான் உங்களுக்கு கூற விரும்புவது என்னவென்றால், நீங்கள் இதைக் காண்கிறவிதமாக அதை எனக்கு நீங்கள் விளக்கிக் கூறலாம், ஒருவேளை அது நான் விசுவாசிப்பதிலும் முரண்பட்டதாக இருந்தாலும், நீங்கள் கூறுபவைகளுக்கு நான் செவி கொடுக்க மகிழ்ச்சியாயிருப்பேன்.

4. அகில உலகிலும் காணப்படும் கிறிஸ்துவின் சபைக்கு பக்திவிருத்தி உண்டாகுதலுக்காக என்ற என் இருதயத்திலுள்ள நோக்கத்தின்படியேதான் இச்செய்திகளை நான் தேவனுடைய வார்த்தையிலிருந்து கொண்டு வருகிறேன். நாம் கடைசி காலத் தில் வாழ்கிறோம் என்று நான் நிச்சயமாகவே நம்புகிறேன். இதை நான் விளக்கிக் கூறுவதற்காக நான் எடுத்துள்ள இந்த நன் முயற்சியில், நான் விசுவாசிப்பவைகளை யார் மேலும், எந்த வகையிலாகிலும் திணிக்க வேண்டும் என்ற நோக்கம் எனக்குக் கிடையாது, அதைப் பற்றி குற்றமுள்ளவனாக நான் இருக்க வில்லை என்பதை நான் அறிவேன்.

5. அநேக சமயங்களில் மக்கள் ஒலி நாடாக்களின் வாயிலாக செய்திகளைக் கேட்டுவிட்டு, "நான் அந்த விஷயத்தோடு முரண் பட்டிருக்கிறேன். அவருக்கு வேத வாக்கியம் தெரியவில்லை'' என்றெல்லாம் கூறுகின்றனர். நல்லது, அது ஒருவேளை, உண்மையாயிருக்கலாம். அது உண்மையல்ல என்று நான் கூறமாட்டேன்; ஆனால் எனக்கோ, நான் அதைப் பற்றி ஆராய்ந்து படிக்கிறேன். யாருடைய வார்த்தைகளையும் நான் எடுத்துக் கொள்ளாமல் இருந்தாலும், மற்றவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதைக் குறித்துப் படித்து, அவர்கள் கூறியவைகளைப் பற்றி மெச்சுகிறேன். எவராவது ஏதாவது கூறினால், அதை நான் மெச்சுவேன். ஆனால் பிறகு நான் அதை தேவனிடத்தில் எடுத்துச் சென்று, ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரையிலும் அவ்விஷயம் வேதத்தோடு பொருந்தி இருக்கிறது என்பதை நான் விளக்கிக் கூற முடியும் என்கிற வரையிலும் நான் அங்கே காத்திருப்பேன். அப்பொழுது நான் அது சரியானதாக இருப்பதற்கு எங்கோ அருகாமையில் உள்ளது என்று நான் அறிவேன். உங்களுக்கு சரியென்று இருக்கக்கூடும். அவைகளில் அங்கே தான் என்னைப் பொருத்தமட்டில், அது சரியான கோட்டை விட்டு - விலகி இருப்பதாக இருக்கும். நீங்கள் தவறாக இருப்பதாக கருதுபவைகளில், அது என்னைப் பொருத்தமட்டில் வழி விலகாமல் இருப்பதாக இருக்கும். இவ்வாறு எதிரும் புதிருமாக இருப்பதுண்டு.



சுபாவத்திற்கு விரோதமாக சுபாவக் கிளையில் ஒட்ட வைத்தார்)...சுபாவக் கிளைகளாகிய அவர்கள் தங்கள் சுய ஒலிவமரத்திலே ஒட்டவைக்கப்படுவது அதிக நிச்சயமல்லவா?

ரோமர் 11: 21

நல்லது, நாம் தொடர்ந்து வாசிப்போமாக.

மேலும், சகோதரரே, நீங்கள் உங்களையே புத்திமான்களென்று எண்ணாதபடிக்கு ஒரு இரகசியத்தை நீங்கள் அறிய வேண்டுமென்றிருக்கிறேன்; அதென்னவெனில், புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும் வரைக்கும் இஸ்ரவேலரில் ஒரு பங்குக்கு கடினமான மனதுண்டாயிருக்கும்.

26. புறஜாதியாருடைய காலத்தை தேவன் முடித்து வைக்கிற வரையிலும், இஸ்ரவேலர் குருடாக்கப்பட்டிருப்பார்கள். அவர்கள் பாவத்திற்குள் சென்று, தேவனுக்கு விரோதமாக மீறுதல்களுக்குள் சென்றார்கள், ஏனெனில் தேவன், நாம் ஒட்ட வைக்கப்படுவதற்காக அவர்கள் கண்களை குருடாக்கினார். அதை நீங்கள் புரிந்து கொண்டீர்களா? இப்பொழுது 26-ம் வசனம்:

''இந்தப் பிரகாரம் இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்..."

உங்களுக்காகவும் எனக்காகவுமே தேவன் அவர்களை குருடாக்கினார். அவர்களை தேவன் குருடாக்கினபடியால் அவர்களால் காணமுடியாது. இஸ்ரவேலர் அனைவரும், உண்மையான இஸ்ரவேலர் அனைவரும், இரட்சிக்கப்படுவார்கள். தூதன் என்ன கூறினான்? மகிமை? "இஸ்ரவேலரின் மீறுதல்களை தவிர்க்கிறதற்காக. இஸ்ரவேலரின் மீறுதல்கள் தீர்க்கப்படப் போகிற வேளையானது வரப்போகிறது என்பதை உனக்குக் கூறவே நான் வந்தேன்" என்று கூறினான். தேவன் காட்டொலிவக்கிளைகள் வெட்டியெறிந்துவிட்டு அந்த இடத்தில் சுய ஒலிவ கிளைகளை மீண்டும் ஒட்டவைப்பார்.

ஓ! சில சமயங்களில் அந்த பரிதாபமான நிர்ப்பாக்கியத்திற்குரிய, தாங்கள் எங்கே போகிறோம் என்பதையே அறியாதபடி வெட்டிப் புறம்பாக்கப்பட்ட அந்த மக்களை காண்கையில், என் உள்ளத்தை அது குலுக்குகிறது. நான் இரட்சிக்கப்படும்படியாக தேவன் அவ்வாறு அவர்களுக்குச் செய்தார். அவர்கள் கண்களை அவர்களுடைய சொந்த மேசியாவிடமிருந்து குருடாக்கினார்; அவர் சத்தத்தைக் கேட்கக் கூடாதபடி அவர்களுடைய காதுகளை அடைத்தார்; அவருடைய அற்புதங்களை அவர்கள் கண்ணோக்கிப் பார்த்தனர்; அவர் செய்த

அற்புதங்களை அவர்கள் ஏறெடுத்துப் பார்த்தும், அவர் செய்தவைகளையெல்லாம் பார்த்தும் கூட, இவ்வாறாயிற்று.

27. மத்தேயு 12-ம் அதிகாரம் அல்லது 8-ம் அதிகாரம் அல்லது 12-ம் அதிகாரம் என்று நினைக்கிறேன், அதில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. ''அவர் இத்தனை அற்புதங்களை அவர்களுக்கு முன்பாகச் செய்திருந்தும், அவர்கள் அவரை விசுவாசிக்கவில்லை'' (இவ்வசனம் யோவான் 12:37-இல் உள்ளது - தமிழாக்கியோன்). "ஏனெனில் தேவன் அவர்கள் கண்களினால் காணாமலும் இருதயத்தினால் உணராமலும் குணப்படாமலும் இருக்கும் படிக்கும்... அவர்கள் கண்களை அவர் குருடாக்கி அவர்கள் இருதயத்தைக் கடினமாக்கினார்'' என்று கூறியுள்ளார். (யோவான் 12:40). ஆனால், நமக்கு ஒரு தருணம் கிடைக்கத் தக்கதாக, அவர் தன் சொந்தப் பிள்ளைகளின் கண்களுக்கு நேராக திரையிட்டுவிட்டார்; மேசையிலிருந்து தன் சொந்தப் பிள்ளைகளைப் புறம்பாக்கி போட்டார்; ஆவியில் நலிந்து போகுதலையே தேவன் அவர்களுக்குக் கொடுத்தார்; அதினால் நமக்கு ஜீவனைக் கொடுத்து, நாம் பிழைத்திருக்கும்படி செய்தார். மீண்டும் 26-ம் வசனம்:

இந்தப் பிரகாரம் இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து அவபக்தியை யாக்கோபை விட்டு விலக்குவார்கள் என்றும்:

ரோமர் 11:26.

ஆம் இந்நாட்களில் ஒன்றில் அவர் சீயோன் மலைக்கு வருவார். ஒலிவ மலையின் மேல் வருகையில் அவர்கள் அவரை அடையாளம் கண்டுகொள்ளுவார்கள். இஸ்ரவேலரெல்லாரும் அது அவர்தான் என்று அடையாளம் கண்டுகொள்வார்கள். அப்பொழுது புறஜாதியாரின் காலம் முடிவடைந்து விட்டிருக்கும். ஒட்ட வைக்கப்பட்ட அந்த கிளைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட கனிகளை தேவன் எடுத்துக் கொள்வார், அந்த காட்டொலிவக் கிளைகளையோ தேவன் வெட்டிப் போடுவார்.

28. இதற்கு முன்னால் உள்ள வசனங்களை நீங்கள் வாசித்தீர்களானால் அங்கே... வேரானது பரிசுத்தமாயிருந்தால், "கிளைகளும் பரிசுத்தமாயிருக்கும்'' (ரோமர் 11:16). அப்பரிசுத்த வேரிலிருந்து வரும் கனியையும், பரிசுத்த கனியாகத்தான் புறப்பட்டு வரும். அந்த வேரானது இயேசு கிறிஸ்துவாயிருந்தால் - அவர் தாமே தாவீதின் வேரும் சந்ததியுமாயிருக்கிறார் - அவரிலிருந்து அந்த

மூன்றாம் அத்தியாயம்

# தானியேலின் எழுபது வாரங்கள்

# THE SEVENTY WEEKS OF DANIEL

1. காலை வணக்கம், நண்பர்களே. இந்த மகத்தான செய்தியாகிய தானியேலின் எழுபதாவது வாரத்தைப் பற்றி விளக்குவதற்காக எடுத்துக்கொண்ட ஊக்கமான பெருமுயற்சியைத் தொடருவதற்காக இன்று காலையில் மீண்டும் இக்கூடாரத்தில் திரும்பி வருதலானது ஒரு சிலாக்கியமாகும்... இந்த உஷ்ணமான பகல் வேளையிலே அநேகர் கூடி வந்திருக் கிறதைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். ஆயினும், அமருவதற்கு இட வசதியை அளிக்க எங்களால் இயலாமற் போனது குறித்து நாங்கள் வருந்துகிறோம். இவ்வாறு மக்கள் இடமில்லாமல் நெரித்துக் கொண்டு இருப்பதும், சுற்றிலும் நின்று கொண்டிருப்பதை பார்க்கும்போது நம்மால் ஒன்றும் செய்யக் கூடாத அளவுக்கு மிகவும் இக்கட்டாக இருக்கிறது. நீங்கள் பெற்றிருக்க வேண்டிய அளவுக்குக் கூட சௌகரியமாக இல்லாத நிலையிலே, புரிந்து கொள்வதற்கு இச்சூழ்நிலை கடினமாக இருக்கிறது. ஆனால் எங்களால் முடிந்த அளவு யாவற்றையும் விரைவிலேயே செய்வோம்.

2. இன்றைக்கு நான் உங்களை சிறிது கூடுதலான நேரம் இங்கே இருக்க வைத்துவிடுவேனென்றால், அதற்காக நீங்கள் மன்னித் துக்கொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன். ஏனெனில் இந்த செய்தியை நன்கு மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டிய வேளை இதுவே. இச்செய்தியை திட்டவட்டமாக நாம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக, இதை நாம் மூன்று பிரிவாக பிரித்து ஒழுங்குபடுத்தினோம்.

3. இங்கே காணக்கூடியதாக இருக்கிற இந்த சபையார், இச்செய்திகள் பதிவு செய்யப்பட்டு, அவ்வொலி நாடாக்கள் உலகம் பூராவிலும் அனுப்பப்படுகின்றன என்பதை அறிவீர்கள். இவ்வொலி நாடாவைப் போட்டுக் கேட்பவர்களுக்கு நான் ஒன்று கூறிட விரும்புகிறேன்; என்னவெனில், நீங்கள் இருந்தாலும் சரி, நான் கூறும்

*துயர், பகை வாட்டும் குழந்தையே,*

*அதுதான் இன்ப சுகம் தந்திடும் எடுத்துப் போ*

*எங்கு போயினும், விலையிலா நாமமது,*

*எத்தனை இனியது*

*(விலையேறப் பெற்ற நாமமது)*

*பூவின் நம்பிக்கை, பரத்தின் ஆனந்தம்*

*விலையிலா நாமமது,*

*(விலையேறப் பெற்ற நாமம்)*

*ஓ, எத்தனை இனிமையானது அது.*

*பூவின் நம்பிக்கை, பரத்தின் ஆனந்தம்*

இப்பொழுது, நான் இவ்வாரதனையை மேய்ப்பனாகிய சகோதரன் நெவில் அவர்களிடம் கொடுக்கிறேன். அவர் முடிவான வார்த்தைகளை அல்லது என்ன சொல்லுவாரோ அதைப் பேசுவோம்



ஜீவனானது யூத சந்ததியின் மூலம் வருகிறதாயிருந்தால், அது அவர்களிலிருந்து வெட்டப்பட்டது. நாம் காணும்படியாய் அவர்கள் கண்கள் குருடாக்கப்பட்டன. நமது ஜீவியங்கள் அவ்வாசீர்வதிக்கப்பட்ட கிளையைப் போலவே இருக்கவேண்டும். ஓ ஆம், சகோதரனே! அது சரிதான்.

29. நாம் காண்பதற்காக வாய்ப்பைப் பெறும்படியாகவும், நமக்கு ஒரு தருணம் கிடைக்கும்படியாகவும், தேவன் அந்த நோக்கத்திற்காகவே அவர்களை வெட்டிப்போட்டு, அவர்களுடைய கண்களை குருடாக்கிப் போட்டார். ஆனால் நாமோ, நம்மைப் பெரிதாக நினைத்துக் கொண்டு நடந்து திரிகிறோம். அதை நீங்கள் எவ்வாறு செய்கிறீர்கள் என்பதைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்று பவுல் அவர்களுக்குக் கூறுகிறான். ''சுபாவக் கிளைகளை தேவன் தப்பவிடாதிருக்க... காட்டொலிவக் கிளையின் மேல் எவ்வாறு இனிமேலும் இரக்கமாயிருப்பார்? அது ஏற்கெனவே...'' எனவே, நாம் சுற்றித்திரிந்து, ''நான் ப்ரெஸ்பிட்டேரியன், நான் மெத்தோடிஸ்ட், நான் பாப்டிஸ்ட், நான் பெந்தெகொஸ்தேக்காரன்'' என்றெல்லாம் பெருமையடித்துக் கொண்டுதிரிகிறோம். தேவனுக்கு அவைகள் ஒன்றுமில்லை. நீங்கள் பரிசுத்த ஆவியினாலே மறுபடியும் பிறக்கவேண்டும், அதுதான் வேரிலிருந்து வருகிறதாயிருக்கிறது. ஆனால் அவர் வருகிறார்...

இப்பொழுது நினைவில் கொள்ளுங்கள், அவர் புறஜாதிகளை குறித்து பேசவில்லை. நான் இதை அங்குமிங்குமாக அலசி நான் இவைகளைப் பேசினேன், ஏனெனில் புறஜாதியாருக்கு வாய்ப்பு எங்கேயுள்ளது என்பதை நீங்கள் காணத் தக்கதாகத்தான். ஆனால் அவர் மீறுதலுக்கு முடிவுண்டாகும் படியாக வருகிறார்.

30. இப்பொழுது நாம் தானியேலுக்கு திரும்பிச் சென்று அங்கே 24-ம் வசனத்தில் காணலாம்...

''மீறுதலைத் தவிர்க்கிறதற்கும்...'' எதைத் தவிர்க்கிறதற்கும்? இஸ்ரவேலுடைய மீறுதலைத் தவிர்க்கிறதற்குத் தான். மீறுதல் என்பது என்ன? ஒன்றுக்கு எதிராக ஒன்றைச் செய்வது தான். எனக்கு எதிராக மீறுதல் என்பது எனக்கு ஒரு தவறிழைப்பதுதான். உங்களுக்கெதிராக மீறுதல் என்றால், உங்களுக்கு எதிராக தவறிழைப்பதுதான். எனவே, இஸ்ரவேல் தேவனுக்கு எதிராக தவறிழைத்தது. இந்த எழுபதாவது வாரத்தில் என்ன சம்பவிக்கப் போகிறது? இஸ்ரவேலின் மீறுதலை தேவன் தவிர்க்கப் போகிறார். ''மீறுதலைத் தவிர்த்தல் என்றால்

யாக்கோபிலிருந்து அவபக்தியை நீக்குவதாயிருக்கும். அப்பொழுது இஸ்ரவேலரெல்லாரும் மறுபடியும் பிறந்திருப்பார்கள். அவர்கள் யாவரும் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வார்கள்.

31. இரண்டாவதாக: உங்களுடைய காகிதத்திலே இதை எழுதி வைத்துக் கொள்ளுங்கள். அந்த விஷயத்தின் பேரில் நாம் அதிக நேரம் தங்கியிருக்கலாம். ஆனால் நான் அதின் பேரில் பிரசங்கம் நிகழ்த்த விரும்பவில்லை. நீங்கள் அதை மிகவும் நெருக்கமாகப் பெற்றுக் கொள்ளும்படியாக நான் பேச விரும்புகிறேன். நாம் இந்த ஏழு முத்திரைகளைப் பார்க்கப் போகும் போது, அப்பொழுது, சபைக் காலம் பூராவிலும் பார்த்து, முத்திரைகள், வாதைகள் இவற்றின் வழியாகப் பார்த்துக் கொண்டே வந்து, நாம் எங்கே நின்று கொண்டிருக்கிறோம் என்பதையும் அறிந்து கொள்வோம்.

இரண்டாவது: பாவத்தைத் தொலைக்கிறதற்கும். இப்பொழுது அதை மீண்டும் தானியேலில் வாசிப்போம். "மீறுதலைத் தவிர்க்கிறதற்கும், பாவத்தைத் தொலைக்கிறதற்கும் அவரது வருகையின் இரண்டாவது நோக்கம். முதலாவதாக இஸ்ரவேலுடைய மீறுதலைத் தவிர்க்கிறதற்கும், பிறகு பாவத்தைத் தொலைக்கிறதற்கு இஸ்ரவேல் எங்கே பாவம் செய்தது? அவர்கள் எங்கே தங்களுடைய முக்கியமான பாவத்தைச் செய்தார்கள்? எங்கே அவர்கள் தேவனை விட்டு தங்களையே புறம்பாக்கிக் கொண்டனர்?

32. இப்பொழுது கவனமாகக் கேளுங்கள். நாம் இப்பொழுது மத்தேயு எழுதிய சுவிசேஷம் 24-ம் அதிகாரத்திற்கு திருப்புவோம். இங்கே தான் இஸ்ரவேலானது தன்னுடைய மிக மோசமான தவறை இழைத்தது. இங்கே தான் அது தன்னுடைய கடைசியான பாவத்தைச் செய்தது. அவள் இன்றைக்கு இருக்கக் கூடிய நிலைக்கு அதுவே காரணமாகும். மத்தேயு எழுதிய சுவிசேஷம் 27-ம் அதிகாரம் 25-ம் வசனம். 21-ம் வசனத்திலிருந்து துவக்குவோம்.

தேசாதிபதி ஜனங்களை நோக்கி: அவ்விருவரில் எவனை நான் உங்களுக்கு விடுதலையாக்க வேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர்கள் பாரபாசை என்றார்கள்.

அப்படியானால் கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான்... அதற்கு அவர்கள் பரபாசை என்றார்கள் (அவ்வாறு கூறியது இஸ்ரவேலர் என்பது உங்களுக்கு நினைவிலிருக்கட்டும்).



*பூவின் நம்பிக்கை, பரத்தின் ஆனந்தம்*

*விலையிலா நாமமது,*

*எத்தனை இனியது பூவின் நம்பிக்கை,*

*பரத்தின் ஆனந்தம்*

அடுத்த ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கர்த்தருக்கு சித்தமானால் சரியான நேரத்திற்கு வர நாம் முயற்சிப்போம். அதை மறந்துவிட வேண்டாம். வியாதியஸ்தருக்காக ஜெபிப்பதற்காக. அடுத்த ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு.

*இயேசுவின் நாமத்தில் அவர் பாதத்தில் வீழ்ந்து*

*அவரை வணங்கி பணிந்து கொள்,*

*நம் யாத்திரை முடிகையில் பரத்திலே*

*அவரை நாம் இராஜாதி இராஜாவாக*

*முடிசூட்டுவோமே விலையிலா நாமமது,*

*எத்தனை இனியது*

*(ஓ எவ்வளவு இனிமையானது)*

*பூவின் நம்பிக்கை, பரத்தின் ஆனந்தம்*

*அது விலையிலா நாமமது,*

*எத்தனை இனிமையது*

*(விலையில்லா நாமமது)*

*பூவின் நம்பிக்கை, பரத்தின் ஆனந்தம் அது.*

*இந்த வரிகளைக் கவனியுங்கள்:*

*இயேசுவின் நாமத்தில் அவரைப் பணிந்திடுவீர்*

*அதுவே கண்ணிகளுக்கெதிரான கேடயமாம்*

*சோதனைகள் உன்னைச் சூழ்கையில்*

*அப்பரிசுத்த நாமத்தை ஜெபத்தில் உச்சரிப்பாய்*

*(அதுவே போதுமானது)*

*இயேசுவின் நாமத்தை எடுத்துப் போ உடன்,*

*அவ்வழகிய பரம் நகரம் போக நான் ஆயத்தமாயுள்ளேன்*

*(அது இப்பொழுது எவ்வாறு இருக்கிறது)*

*கர்த்தர் அதை தன் மக்களுக்காக ஆயத்தம் செய்தாரே*

*அங்கே வெள்ளை சிங்காசனத்தைச் சுற்றி நின்று*

*மீட்கப்பட்டோர் யாவரும் மகிமையாய்ப் பாடுவர்*

*சில வேளை, என் பரம வீடாம் பரலோகம் போக ஏங்கித் தவிக்கிறேன்*

*அங்கே நான் மகிமையை நோக்குகைகயில்*

*அது என்னே ஒரு மகிழ்ச்சியானதாய் இருக்கும்*

*அப்போது நான் என் இரட்சகரைக் காண்பேனே*

*அப்பொண்ணான நகரத்திலே.*

*அதை நீங்கள் விரும்பவில்லையா?*

*அவ்வழகிய பரம நகரம் போக நான் ஆயத்தமாயுள்ளேன்*

*கர்த்தர் அதை தன் மக்களுக்காக ஆயத்தம் செய்தாரே*

*அங்கே காலந்தோறும் மீட்கப்பட்டோர்*

*வெண் சிங்காசனத்தைச் சுற்றி நின்று மகிமையாய்ப் பாடுவர்*

*பரலோகம் பரம வீடு போக நான் ஏங்கித் தவிக்கிறேன்*

*அங்கே நான் காணும் ஆனந்தம் எத்தனை*

*ஒரு மகிழ்ச்சியானதாய் அது இருக்கும்*

*அப்போது நான் என் இரட்சகரைக் காண்பேனே*

*அப்பொன்னான நகரத்திலே.*

*நீங்கள் அவரை நேசிக்கிறீர்களா? அப்படியானால்...*

*இயேசுவின் நாமத்தை எடுத்துப்போ உடன்,*

*துயர், பகை வாட்டும் குழந்தையே,*

*அதுதான் இன்ப சுகம் தந்திடும் எடுத்துப் போ*

*எங்கு போயினும், விலையிலா நாமமது,*

*எத்தனை இனியது*

*(விலையேறப் பெற்ற நாமமது)*



பிலாத்து அவர்களை நோக்கி: அப்படியானால் கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்யவேண்டும்? என்று கேட்டான். (அவர்கள் கூறப் போவதை கவனித்துக் கேளுங்கள்) அவனைச் சிலுவையில் அறைய வேண்டும் என்று எல்லோரும் சொன்னார்கள்...

இப்பொழுது உங்களுக்கு நினைவிருக்கட்டும்; அவர் அவர்களுடைய மேசியாவாகும். அவர் வரப் போதாக தானியேல் கூறியிருந்தான். இன்று காலையிலுள்ள பாடத்தில் அவர் தமக்காக, அல்ல, அவர் எந்தத் தவறும் செய்யாததற்காக கொலை செய்யப்படுவார் என்று கூறப்பட்டது நினைவிலிருக்கட்டும்... அவனைச் சிலுவையில் அறைய வேண்டும்...

தேசாதிபதியோ: ஏன் என்ன பொல்லாப்புச் செய்தான் என்றான். அதற்கு அவர்கள்; அவனைச் சிலுவையில் அறைய வேண்டும் என்று அதிகமதிகமாய்க் கூக்குரலிட்டுச் சொன்னார்கள்.

கலகம் அதிகமாகிறதேயல்லாமல் தன் பிரயத்தனத்தினாலே பிரயோஜனமில்லையென்று பிலாத்து கண்டு, தண்ணீரை அள்ளி ஜனங்களுக்கு முன்பாகக் கைகளை கழுவி; இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்றான்.

மத். 27: 21-24

கவனியுங்கள்! இங்கே தான் அவர்களுடைய குற்றம் இருக்கிறது. இங்கேதான் அவர்களுடைய பாவம் இருக்கிறது.

அதற்கு ஜனங்களெல்லாரும்; இவனுடைய இரத்தப் பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக என்று சொன்னார்கள்.

மத். 27:25.

33. அங்கே தான் அந்தக் காரியத்தை அவர்கள் செய்தார்கள். அவர்களுடைய பாவத்தை அவர் தொலைத்துக் கொண்டிருந்தார். நாம் உள்ளே வருவதற்காக வேண்டி அவர்களுடைய கண்களை அவரே குருடாக்கினபடியால், அவர்களை மன்னிப்பதைத் தவிர அவரால் வேறு என்ன செய்ய முடியும்? அவருடைய சொந்த பிள்ளைகளே அவரது இரத்தத்தை சிந்துவதற்காக கூக்குரலிட்டதாக அது இருந்தது. அவர்கள் குருடாக்கப்பட்டார்கள். அவர்கள் குருடாக்கப்பட்டிருந்தார்கள் என்பது அவருக்குத் தெரியும். அக்காரணத்தினால்தான் அவர் அவர்களுடைய மன்னிப்பை அவர்களுக்காக வேண்டினார். "பிதாவே, இவர்களுக்கு

மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்" (லூக்கா 23:34). அவர்கள் குருடாயிருந்தனர். நமது நிமித்தமாகவே அவர்கள் குருடாக்கப்பட்டனர். அவர்களுடைய அவிசுவாசத்தினாலே அவர்கள் இவ்வாறு செய்தனர். ஆனால் அவர்கள் அவரை மீண்டும் காண்கையில்... ஆமென்!

34. பாவத்தை முடிவு கட்டுவதற்காக. பாவம் என்பது என்ன? அது அவிசுவாசமாகும். அவர்தான் மேசியா என்பதை அவர்கள் விசுவாசிக்கவில்லை. அவர் மேசியா என்று அவர்களால் கண்டு கொள்ள முடியவில்லை. ஆயினும் மேசியா வந்தால் என்னென்ன அடையாளத்தை எல்லாம் செய்வார் என்று கூறப்பட்டதோ அதையெல்லாம் அவர் அப்படியே செய்தார். ஆனால் அவர்களால் அதைப் பார்க்க இயலவில்லை. அவர்கள் குருடாயிருந்தனர்.

ஆகவே, மக்கள், ''தெய்வீக சுகமளித்தலை நான் விசுவாசிக்கமாட்டேன். என்னால் அதைக் காண முடியவில்லை. பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை என்னால் நம்ப முடியவில்லை'' என்றெல்லாம் கூறினார்களென்றால், அவர்கள் பேரில் நீங்கள் கோபப்பட வேண்டாம். அவர்கள் குருடாயிருக்கிறார்கள். ''அவரது வருகையைப் பற்றிய இந்தச் செய்தியை என்னால் கண்டுகொள்ள முடியவில்லை. பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் குறித்து என்னால் கண்டுகொள்ள முடியவில்லை; இந்த சர்ப்பத்தின் வித்து உபதேசத்தை என்னால் நம்ப முடியவில்லை இந்தக் காரியத்தை என்னால் காண முடியவில்லை'' என்றெல்லாம் மக்கள் கூறுகிறார்கள். அவர்கள் குருடராயிருந்து, அதை அறியாமல் இருக்கிறார்கள். அவர்களுக்காக ஜெபியுங்கள்.

35. அவர்களுடைய அவிசுவாசத்திலே... ஆனால் அவர் மீண்டும் வருகையில் அவர்கள் அவரைக் காணும் போது, அது அவர்களுடைய அவிசுவாசத்திற்கு ஒரு முடிவு கட்டிவிடும். ஓ, என்னே! நாம் ஆதியாகமம் 45-ம் அதிகாரத்திற்கு திருப்புவோம். அங்கே முன்னடையாளமான காரியத்தை நாம் காணலாம். நான் இங்கே சிலவற்றை எழுதி வைத்துள்ளேன்... அது ஆதியாகமம் 45-ம் அதிகாரம். குறிப்பு எடுத்துக் கொண்டிருக்கிறவர்களே, அதை குறித்துக் கொள்ளுங்கள். ஓ, எவ்வளவாய் நான் இந்தப் பழைய சுவிசேஷத்தை நேசிக்கிறேன்! இப்பொழுது நாம் எங்கே இருக்கிறோம் என்பதை அறிந்திருக்கிறோம்.



அவ்விதமான காரியங்கள் நமக்கு வரவேண்டியதாயுள்ளது, சிநேகிதரே, நல்ல உணவை உண்ணவும், அருமையான மோட்டார் வாகனத்தை ஓட்டிச் செல்லவும், இன்னும் என்னவெல்லாம் நல்லதும் அருமையுமானவைகளாக உள்ளனவோ, அவைகளைப் பெற்றிருக்கவும் விரும்பாதோர் யாரும் இல்லை. அதற்காக நான் உங்களை குற்றப்படுத்தவில்லை. அவையெல்லாம் சரிதான். நீங்கள் அதைப் பெற்றிருக்க தேவனும் விரும்புகிறார். ஆனால்...

*இவ்வுலகின் மாயமான செல்வங்களை*

*இச்சியாதீர் அவைகள் விரைவில் கெட்டுப் போகுமே*

*நித்தியமானவைகளின் மேல் உங்கள்*

*நம்பிக்கையை வளர்ப்பீர்*

*அவைகள் ஒரு போதும் ஒழிந்து போவதில்லை.*

நாம் இப்பொழுது பாடும் போது நம் கரங்களை உயர்த்து வோமாக.

95 .நாம் நிற்கையில், சுற்றிலும் திரும்பி, யாருடனாவது கைகுலுக்குங்கள். இன்னும் சற்று நேரத்திற்கு நாம் இவ்வாராதனையைத் தொடரப் போகிறோம். ஆனால் அப்பாடலின் இன்னொரு சரணத்தை நாம் பாடுகையில், சுற்றிலும் திரும்பி நின்று கைகுலுக்குவோமாக.

தேவனின் மாறாக் கரத்தைப் பற்றிக் கொள்வீர் (தாயே, அதைச் செய்யுங்கள், தந்தையே அதைச் செய்யுங்கள்) தேவனின் மாறாத கரத்தைப் பற்றிக் கொள்வீர் (பிள்ளைகளே அதைச் செய்யுங்கள், சகோதரர்களே அதைச் செய்யுங்கள், அதைச் செய்யுங்கள் சகோதரர்களே) நித்தியமானவைகளின் பேரில் உங்கள் நம்பிக்கையை கட்டுவீர் தேவனின் மாறாத கரத்தைப் பற்றிக் கொள்வீர்.

96. அவர் நிமித்தமாக நீங்கள் மகிழ்ச்சியாயிருக்கவில்லையா? அப்படியானால் 'ஆமென்' என்று கூறுங்கள். (சபையோர் ''ஆமென்" என்று மாறுத்தரம் சொல்லுகிறார்கள்) அவரை நேசிக்கிறவர்கள் யாவரும் ''கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று கூறக்கடவர்கள். (சபையார் யாவரும் ''கர்த்தருக்கு ஸ்தோத்திரம்'' என்று கூறுகிறார்கள்). நாற்சதுரமான அந்தப் பரம நகரத்திற்குப் போகப் போகிறோம் என்று விசுவாசிக்க கூடியவர்கள் யாவரும் உங்கள் கரங்களை உயர்த்துங்கள். (உங்கள் பாடல் பாடுதலோடு, உயர்த்தியவாறே இருங்கள்).

விடாதீர்கள்'' என படுக்கையில் படுத்துக் கொண்டு அம்மனிதன் கதறி அலறினான். ''அதோ அங்கே நிற்கிறது. உம்மால் காண முடியவில்லையா? அது என் பின்னால் வந்து கொண்டிருக்கிறது'' என்று கதறினான். அவன் தேவனை வெகு காலமாக தள்ளிவிட்டான். அவனிடம் தானியத்தால் நிரம்பிய பெரிய களஞ்சியங்களும், வைக்கோலும், அருமையான பந்தயக் குதிரைகளும் இருந்தன. அதற்கு ஒரு வருடத்திற்கு முன்பாக அவன் தேவனை நேரடியாகவே சபித்தும், இக்கூடாரத்திற்கு வந்து கொண்டிருந்ததற்காக தன் மனைவியை கன்னத்தில் அறையவும் செய்திருந்தான். என்ன நடந்தது என்று உங்களுக்குத் தெரியுமா? மின்னல் அவனது களஞ்சித்தை அடித்தது. வைகோலெல்லாம் எரிந்து போய்விட்டது. அவனது குதிரைகள் அப்பொழுது கொல்லப்பட்டுவிட்டன. தன் மேலிருந்து பிசாசுகளோடு அவன் போராடிக் கொண்டிருந்தான். அவன் அசுத்த ஆவிகளின் ஆதிக்கத்தில் வசியப்பட்டு அதனால் மரித்துப் போனான்.

94. வயதான என் நண்பரொருவர் - அவர் இப்பொழுது அக்கரையில் நின்று கொண்டிருக்கிறார் (மகிமை!) - அவர் தன் வாழ்வின் இறுதிக்கட்டத்தில் வந்தபோது, ''தந்தையே, நீர் புறப்பட்டுவிட்டீரா?" என்று நான் கேட்டேன்.

''அதுதான், பில்லி'' என்றார் அவர்.

"அது எவ்வாறிருக்கிறது?'' என்று நான் கேட்டேன்.

''எல்லாம் நல்லபடியாகத்தான் இருக்கிறது'' என்றார். "என் படுக்கையருகில் பிள்ளைகளையெல்லாம் கொண்டு வாருங்கள்'' என்றார். பெலவீனமான தன் கரங்களை அவரது பிள்ளைகள் ஒவ்வொருவர் மேலும் வைத்து அவர்களை ஆசீர்வதித்தார். தன் இரண்டு மகன்களிடமும், ''என் கரங்களை யோசுவாவும் காலேபும் செய்தது போல் உயர்த்திப் பிடியுங்கள்'' என்று கூறினார். அவர் என்ன கூறப் போகிறாரோ என்று நாங்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். அவர் கூறினார்.

*இன்ப நாள், இன்ப நாள்,*

*என் பாவம் தீர்ந்து போன நாள்*

*பேரன்பர் என்னை இரட்சித்தார்*

*சீராக்கி இன்பம் நல்கினார்*



கட்டிடத்தின் பின்னால் உள்ளவர்களே, நான் பேசுவது உங்கள் காதுகளில் விழுகிறதா? நான் பேசுவது உங்கள் காதுகளில் விழுகிறது என்றால் உங்கள் கரங்களை உயர்த்திக் காண்பியுங்கள். இந்த அமைப்பை நான் சற்று நெருக்கமாகக் கொண்டிருக்கிறேன். (ஒலி பெருக்கி அமைப்பைப் பற்றிக் கூறுகிறார் தமிழாக்கியோன்).

36. வேத வாக்கியத்தின் இந்த ஒரு பாகத்தை நாம் வாசிக்கப் போகிறோம். வேதாகமம் இல்லாதவர்கள் இதற்கு செவி கொடுக்கும்படி கேட்கிறேன். வேதாகமத்தை வைத்திருக்கிறவர்கள் ஆதியாகமத்தை எடுத்துக் கொள்ளுங்கள். முதலில் நாம் 44-ம் அதிகாரத்திலிருந்து துவக்குவோம். 27-ம் வசனத்திலிருந்து துவக்குவோம்.

யோசேப்பு தான் கிறிஸ்துவுக்கு பரிபூரணமான முன்னடையாளமானவனாக இருக்கிறான். அதை நாம் அறிவோம். எத்தனை பேர்கள் அதை அறிவீர்கள்? அவன் எதனால் தன் சகோதர்களால் பகைப்பட்டான்? ஏனெனில் அவன் ஆவிக்குரியவனாயிருந்து, தரிசனங்களைக் கண்டு, சொப்பனங்களை வியாக்கியானம் செய்தான். அவன் தன் சகோதரர்களுக்குள்ளே ஒரு ஆவிக்குரிய மனிதனாயிருந்தான். அதனால் அவர்கள் அவனைப் பகைத்தார்கள். அவனது தகப்பன் அவனை நேசித்தார். அதைப் போலவே இயேசுவும் சடங்காச்சார மத ஸ்தாபனங்களால் பகைக்கப்பட்டார், ஆனால் பிதாவாகிய தேவனால் நேசிக்கப்பட்டார். அவர்கள் அவரை ஏன் பகைத்தார்கள்? ஏனெனில் அவர் ஆவிக்குரியவராயிருந்த படியினால்தான்.

37. அவர்கள் அவனை குறி சொல்லுகிறவன், ஒரு பிசாசு என்று அழைத்தார்கள். யோசேப்பின் சகோதரனொருவன் என்ன சொன்னான் என்பது உங்களுக்கு நினைவிருக்கிறதா? "இதோ சொப்பனக்காரன் வருகிறான்" என்றான். பார்த்தீர்களா? அதே காரியம் தான். யூதாஸ் இயேசுவை என்ன கிரயத்திற்கு விற்றானோ, ஏறத்தாழ அதே கிரயத்திற்குத்தான் யோசேப்பும் அவர்களால் விற்கப்பட்டான். முப்பது வெள்ளிக் காசுகளுக்கு. அவனை ஒரு குழியில் தூக்கிப் போட்டுவிட்டு, தங்கள் தகப்பனிடம் சென்று, அவனை ஏதோ ஒன்று பட்சித்துப் போட்டுவிட்டது; அவன் மரித்துவிட்டான் என்று கூறினார்கள். ஆனால் அவனோ குழியிலிருந்து தூக்கியெடுக்கப்பட்டான். கிறிஸ்துவும் ஒரு குழியில் போடப்பட்டு, அங்கிருந்து தூக்கியெடுக்கப்பட்டார். அங்கிருந்து அவன் இப்பூமியிலேயே மிக உயர்ந்த ஸ்தானத்திற்கு உயர்த்தப்பட்டான். ஆமென். யோசேப்பு பார்வோனின் வலது

பாரிசத்திற்கு உயர்த்தப்பட்டான். இயேசுவும் தேவனுடைய வலது பாரிசத்திற்கு உயர்த்தப்பட்டார். அவர் உயர்த்தப்படுவதற்கு முன்பாக, இயேசு தாம் உயர்த்தப்படுவதற்கு முன்பாக, சோதனையின் வழியாகச் சென்றார்.

38. மகத்தான சுவிசேஷகராகிய பில்லிசண்டே தான் இவ்வாறு கூறினார் என்று நம்புகிறேன். (வில்லியம் ஆஷ்லேய் சண்டே என்பவர்தான் இவ்வாறு பில்லி சண்டே என்று அழைக்கப்பட்டார். 1863 முதல் 1936 முடிய. இவர் ஒரு அமெரிக்கர், ஒரு சுவிசேஷகர் - தமிழாக்கியோன்) "இயேசு சிலுவையில்றையப்பட்டிருக்கிற அந்நாளிலே, ஒவ்வொரு மரத்திலும் இலட்சக்கணக்கான தூதர்கள் அமர்ந்திருந்தனராம். "சற்றே உமது கரத்தை விடுவித்துக் கொண்டு, எங்களை நோக்கிக்சுட்டிக் காட்டும், நாங்கள் இங்குள்ள இக்காட்சியையே மாற்றியமைத்துவிடுகிறோம் என்றனராம்'' என்று அவர் கூறினார். ஆனால் அவரால் அவ்வாறு செய்ய முடியவில்லை.

"மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத்தான் இரட்சித்துக் கொள்ள திராணியில்லை'' என்று காய்பா கூறினான். தான் அவரை அவதூறு செய்வதாக அவனுக்குத் தெரியவில்லை. அவர் தன்னைத்தானே இரட்சித்துக் கொண்டிருப்பாரேயானால், மற்றவர்களை அவரால் இரட்சிக்க இயலாமல் போய்விட்டிருக்கும். எனவே மற்றவர்களை இரட்சிப்பதற்காக அவர் தன்னைத்தானே ஒப்புக் கொடுத்தார். அவர்கள் அதைப் பற்றி மிகவும் குருடாயிருந்தார்கள். இப்பொழுது அவர்கள்...

39 .யோசேப்பு, தான் உயர்த்தப்படுவதற்கு முன்பாக, அவன் சோதனைக்குள்ளானான். அவன் நிரபராதியாயிருந்தும் சிறையில் அடைக்கப்பட்டான் என்பதை நினைவு கூருங்கள்.

எகிப்திய தேசத்தின் அதிபதியான போத்திபார் என்பவன் எங்கோ வெளியூருக்குப் போய்விட்டான். அவனுக்கு ஒரு அழகிய மனைவி இருந்தாள். அவனது மனைவி யோசேப்பை வீட்டுக்குள் வந்து பார்க்கத் தக்கதான ஒரு வேலையை அவனுக்குக் கொடுத்தாள். அந்த நேரத்தில் பார்த்து, யோசேப்பு தவறான காரியத்தை செய்யும்படி செய்ய முயற்சித்தாள். அவனோ தேவனுக்கு உண்மையாயிருந்தான். நான் உங்களுக்கு கூறுகிறேன், அவர்கள் எப்பொழுதும்...

40. ஸ்திரீகளே, நான் எப்பொழுதும் உங்களைக் குறித்து சப்தமிட்டுக் கடிந்து கொள்வதுண்டு. இப்பொழுது இன்னும் ஒரு நிமிட நேரத்தில் உங்கள் சார்பாகப் பேசப் போகிறேன். ஸ்திரீயானவள் எப்பொழுதும்



91. போர்ட் ஃபுல்ட்டன் என்ற இடத்தில் மரித்துக் கொண்டிருந்த ஒரு மனிதனின் அருகில் நான் நின்றிருந்தேன். அவனது படுக்கையண்டையிலே என்னை வரும்படி அழைத்தார்கள். அதற்கு முன்பாக ஓர் இரவில் இங்கேயுள்ள பீடத்தண்டையிலே நான் அவரோடு ஜெபித்துக் கொண்டிருக்கையிலே, அவர் ஒரு ஸ்திரீயின் மேல் கையைப் போட்டவராக நின்றிருந்தார். ''அந்தப் பெண்மணி மீதிருந்து உமது கையை எடும்'' என்று நான் கூறினேன்.

''நான் அவளை தேவனிடம் நடத்திக் கொண்டிருக்கிறேன்'' என்று அவர் பதிலளித்தார்.

''உம்முடைய கரத்தை அவள் மேல் போட்டுக்கொண்டு அதைச் செய்ய முடியாது'' என்று நான் கூறினேன். ''அவ்விதமான அபத்தங்களை நான் விசுவாசிக்கவில்லை'' என்று நான் கூறினேன். அவருக்கு கோபம் வந்தது; அவர் கதவை காலால் ஓங்கி மிதித்து தள்ளிவிட்டு வெளியேறினார். அதற்கு சற்று நேரத்திற்குப் பிறகு அவர் மரித்துக் கொண்டிருந்தார். நான் அவ்வேளையில் அவரண்டையிலே சென்றேன். அவர் என் முகத்தைப் பார்த்து, "எனக்காக ஜெபிக்க வேண்டாம். சகோதரன் பிரான்ஹாமே, நான் கெட்டுப் போனேன். நான் காணாமற் போய்விட்டேன்'' என்று கூறினார். ''நான் ஆதாயப்படுத்திய தையெல்லாம் இழந்துவிட்டேன்'' என்று கூறினார்.

92. இங்கிருந்து அருகில் அந்த மூலையில் உள்ள ஒரு இடத்தில் நான் மரித்துக் கொண்டிருந்த ஒரு மனிதனால் அவனது படுக்கண்டையிலே அழைக்கப்பட்டு அங்கே நின்றிருந்தேன். ''நான் எப்பொழுதும் இன்னின்ன காரியத்தை விரும்பினவனாக இருந்தேன். ஆனால் நான் கர்த்தரை சேவிக்கவில்லை. அநேக சமயங்களில் பீடத்தண்டையில் போக விரும்பாமல் நான் இருந்துவிட்டேன். சகோ. பிரான்ஹாம் அவர்களே, நான் செய்த கிரியைகளை விட்டு நீங்கியிருக்கும் என் மகளாவது கர்த்தருக்கென்று ஏதாவது செய்ய தேவன் அவளுக்கு உதவும்படி நீங்கள் அவளுக்காக ஜெபியுங்கள்" என்று கூறினார்.

''அவ்வாறு செய்ய இயலாது. சகோதரனே, நீர் செய்ய இருந்த காரியங்களெல்லாம் இழந்து போகப்பட்டுவிட்டனவே'' என்றேன் நான்.

93. இன்னொரு மனிதண்டையில் நான் உட்கார்ந்திருந்தேன். அவன் இருபத்து நான்கு மணி நேரமாக பிசாசுகளோடு போராடிக் கொண்டிருந்தான். தன்னைச் சுற்றிலும் தன் படுக்கையண்டையிலே பிசாசுகள் நின்று கொண்டிருப்பதாகவும் தன் கழுத்தை சங்கிலியால் பிணைந்திருப்பதாகவும் கூறினான். ''அவைகளை என்னை நெருங்க

ஆகவில்லை. அதற்குள் என்னை ஒரு மருத்துவமனைக்கு வந்து பார்க்கும்படி அழைப்புவிடுத்தார்கள். இருபத்திரண்டு வயது மதிக்கதக்க அவ்வழகான ஸ்திரீ, ''அந்தப் பிரசங்கியாரை கூப்பிடுங்கள்'' என்று கதறினாள். அவள் கத்தோலிக்க மார்க்கத்தை பின்பற்றியவள்.

நான் அங்கே உள்ளே நுழைந்த போது, அங்கிருந்து ஒரு வயதான பெண்மணி, "சகோ. பிரான்ஹாம் நீங்கள் தாமதித்து வந்திருக்கிறீர்கள். ஐந்து நிமிடங்களுக்கு முன்பாக அவள் மரித்துப் போய்விட்டாள்'' என்று கூறினார்கள்.

''நான் அவளைப் பார்க்கலாமா?'' என்று கேட்டேன்.

''அவள் உம்மைத் தேடி கதறினாள், அவள் கடைசியாக கூறியது, ''அந்தப் பிரசங்கியார், சகோ. பிரான்ஹாமை அழையுங்கள்'' என்பது தான்.

அவளுடைய கணவன் அங்கே அலறிக் கொண்டிருந்தான். ''அவளுக்காக ஒரு ஜெபத்தைச் சொல்லும், அவளுக்காக ஒரு ஜெபத்தைச் சொல்லும்'' என்றான்.

"இப்பொழுது மிகவும் பிந்திவிட்டது'' என்று நான் கூறினேன். அவளை மூடியிருந்த போர்வையை விலக்கிப் பார்த்தேன். பெரிய பழுப்பு நிறக் கண்களை உடையவளாய் அவ்அழகான பெண்ணாக இருந்தாள். முகத்தில் தவிட்டு நிறமுள்ள புள்ளிகள் உண்டாயிருந்தன; அவளது முடி செம்பொன் நிறத்தில் இருந்தது. அவள் மிகவும் அழகுள்ளவளாய் இருந்தாள். அவளுக்கு முதலில் உண்டாயிருந்த அந்த தவிட்டு நிறப் புள்ளிகள் பெரிய பருக்களைப் போல் முகத்தில் பருத்து நின்று வேதனையுண்டாக்கி, அதனால் அவள் மிகவும் அவதிப்பட்டிருக்கிறாள், இறப்பதற்கு முன்னால், அவளது கண்கள், கண் குழியிலிருந்து வெளியே பிதுங்கி வீங்கிய நிலையில் இருந்தது. மரித்துக் கொண்டிருக்கும் எந்த ஒரு நபருக்கும் குடலும், சிறுநீரகமும் சற்று நேரம் வேளை செய்து கொண்டிருப்பது உண்டு, அவ்வாறே அவளுக்கும் இயங்கிக் கொண்டிருந்தன. அவளது வாய் திறந்திருந்தது. அவளது இமைகள் பாதி திறந்திருந்தது, அதினால் பழுப்பு நிறக்கண்கள் சற்று வெளியே தெரிந்து கொண்டிருந்தது. அதை ஒருபோதும் என்னால் மறக்க முடியாது. அந்தப் பாட்டு என் நினைவுக்கு வந்தது.

''இவ்வுலகின் வீணான செல்வங்களை இச்சியாதீர்"



ஒரு பெலவீன பாத்திரமாய் இருக்கிறாள். ஒரு கெட்ட ஸ்திரீ இருக்காமல் இருக்கும் போது, அப்போது ஒரு கெட்ட மனிதனும் இருக்கமாட்டான் என்பதை நான் அறிவேன். ஆனால் அதை அறிந்திருக்கிற மனிதனே, நீ ஒரு தேவனுடைய குமாரன் என்பதை அறிந்திருக்கிறாய், அப்படியிருந்தும், ஸ்திரீயின் பெலவீனத்தை சாதகமாக எடுத்துக் கொண்டால், அதற்காக நீ தலைகுனிய வேண்டும். அவள் என்ன செய்கிறாள் என்பது காரியமல்ல, அவள் ஒரு பெலவீன பாண்டம். நீ அதை அறிவாய். ஸ்திரீக்குரிய இலட்சணத்தோடு அவள் நடந்து கொள்ளாவிடில், அவள் கையைப் பிடித்து அவளை சகோதரியாகப் பாவித்து, அவளோடு பேசு. நீ ஒரு தேவகுமாரனாயிருக்கிறாய். அவர்களுக்கு நீ பொல்லாங்கான காரியங்களைச் செய்ய வேண்டாம். யோசேப்பைப் பாருங்கள்; அவன் உனக்கு ஒரு மாதிரியாக இருக்கிறான்.

41. அத்தேசத்திலேயே மிகவும் உயர்ந்த ஸ்தானத்தில் இருந்த அந்த கனம் பொருந்திய ஸ்திரீயாகிய போத்திபாரின் அவ்வழகிய மனைவியானவள், அவனை கெஞ்சினாள், அவனைத் தூண்டினாள், அவனோ விலகிபோனான். அவள் அவனைப் பிடித்திழுத்து, தன்னோடு தழுவிக் கொள்ளும்படி செய்ய முயற்சித்தாள்; அவனோ அவளிடத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டான். அவள் பிடியிலிருந்து வலுவாக அவன் தன்னை இழுத்துக் கொண்ட போது, அவனது மேலாடை கூட அவனை நழுவிவிடும் அளவுக்கு ஆகிவிட்டது; இப்படியாக அவன் அவளை விட்டு விலகி ஓடிப்போனான். ஆம் ஐயா அவள் கணவன் வந்தபோது, அவனிடம், அவன் அவளை கெடுக்க வந்ததாகவும், தன்னுடைய மேலாடையைக் கூட தன்னிடத்தில் விட்டுவிட்டு ஓடிப் போனான் என்றும் அவர்கள் பொய் கூறினார்கள். அதனால் அவன் சிறைசாலைக்கு போகும்படி நேர்ந்தது. ஆனால் அவர்கள் அவனை எங்கு போட்டிருந்த போதிலும் தேவன் அவனோடு அச்சிறைச்சாலையில் இருந்தார். அவன் அந்த செழிப்பின் குமாரனுக்கு முன்னடையாளமாயிருந்தான்.

யோசேப்பு செய்த யாவும் விருத்தியடைந்தது. அதனால் தான் ஆயிர வருட அரசாட்சிக்கு இயேசு திரும்ப வரும்பொழுது, ரோஜாவைப் போல் பாலைவனங்கள் சோலைவனமாகும். அவர் செய்யும் யாவும் விருத்தியடைந்து செழிப்படையும். அவர் தான் செழிப்பின் குமாரனாவார். யோசப்பை நீங்கள் எங்கு போட்டாலும், அது ஆசீர்வதிக்கப்பட்டதாயிருந்தது. இயேசு எங்கெல்லாம் இருக்கிறாரோ,

அதெல்லாம் ஆசீர்வதிக்கப்படும். ஆகவே நீங்கள் அவரை உங்கள் இருதயத்தில் பெற்றுக்கொண்டு, ஆசீர்வதிக்கப்படுங்கள்.

42. ஆகவே, யோசேப்பு ஒரு சிறைச்சாலையில் போடப்பட்டான் என்பதை நாம் கண்டோம். அச்சிறைசாலையில் இரு நபர்கள் இருந்தனர். அவர்களில் ஒருவன் கெட்டுப்போனான். மற்றொருவனோ இரட்சிக்கப்பட்டான். சிலுவையில் இயேசு பாடுபட்டபொழுது, ஒரு கள்ளன் கெட்டுப்போனான். மற்றவனோ இரட்சிக்கப்பட்டான்.

அவர் உயர்த்தப்பட்டபொழுது, தேவனுடைய வலது பாரிசத்திற்கு போனார். யோசேப்பு உயர்த்தப்பட்ட பொழுது, பார்வோனின் வலது பாரிசத்திற்கு உயர்த்தப்பட்டான். யோசேப்பினிடம் பேசி அனுமதிபெறாமல் ஒருவனும் இனி பார்வோனிடம் பேச முடியாது என்ற நிலைமை இருந்தது. யோசேப்பு அரன்மனையைவிட்டு புறப்பட்டு பவனி வந்தபொழுது, (ஓ, என்னே) எக்காளங்கள் முழங்கின; அவனுக்கு முன்னால் மனிதர்கள் முன்னோடிச் சென்று, ''யோசேப்பு வருகிறார். உங்கள் முழங்கால்களை முடக்குங்கள்'' என்று கூறினர். ஆமென்! அவ்வாறே இயேசு உன்னதமானவருடைய வலது பாரிசத்திலிருந்து புறப்பட்டு வரும்பொழுது, எக்காளங்கள் முழங்கிடும் எல்லா முழங்கால்களும் அவருக்கு முன்பாக முடங்கும். ''இயேசு வருகிறார்" என்று எல்லா நாவுகளும் அறிக்கையிடும். நிச்சயமாக நடக்கும்!

அவன் தன்னுடைய சகோதரரால் புறக்கணிக்கப்பட்ட போது, அவன் என்ன செய்தான் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவன் ஒரு புறஜாதி மனைவியை பெற்றுக் கொண்டான். அவன் ஒரு எகிப்திய மனைவியை உடையவனாயிருந்தான். அதே போல் இயேசுவும் யூதராகிய தமது சகோதரரிடத்திலிருந்து புறம்பாக்கப்பட்டபோது, அவர் ஒரு புறஜாதி மணவாட்டியை மணந்து கொண்டார். ஆனால் இப்பொழுதோ, அநேக ஆண்டுகளுக்குப் பிறகு, பிள்ளைகள் பிறந்த பிறகு - எப்பிராயீம், மனாசே - அவனுக்கு இப்பொழுது ஒரு குடும்பம் உண்டாயிருந்தது.

43. பிறகு, ஒரு நாளிலே அவனது சகோதரர்கள் அவனைப் பார்க்க வருகிறார்கள். கவனியுங்கள்! நடந்த அந்த வரலாற்றை நாம் அறிவோம். எவ்வாறு அந்தச் சிறிய பொருளை அவர்கள் உடைமைகளோடு போட்டுவிட்டு, அவர்களுடைய பாஷையில் பேசத் தெரியாதவனைப்போல் அவன் நடித்தான் என்பதை நாம் அறிவோம். அவன் தானே ஒரு எபிரெயனாக இருந்த போதிலும், அவர்களோடு



(இப்பொழுது உம் கரத்தை நீட்டி அவர் கரத்தைப் பற்றிக் கொள்ளமாட்டீரா?)

*நித்தியமானவைகளில் உம் நம்பிக்கையைக் கட்டுவீர்*

*தேவனின் மாறாக் கரத்தைப் பற்றிக் கொள்வீர்*

*இவ்வுலக யாத்திரை முடிகையில்*

*(ஏதாவது ஒரு நாளிலே அது முடியும்)*

*தேவனுக்கு நீர் உண்மையாயிருந்தால் மகிமையில்*

*நமக்கு அழகும், பிரசாகமுமான வீடுண்டே*

*ஆனந்த பரவசமாக்கப்பட்ட நமது ஆத்துமா*

*அதைக் காணுமே!*

*(நீர் ஏன் அதை செய்யக்கூடாது?)*

*தேவனின் மாறாக் கரத்தைப் பற்றிக் கொள்வீர்*

*தேவனின் மாறாக் கரத்தைப் பற்றிக் கொள்வீர்*

*நித்தியமானவைகளில் உம் நம்பிக்கையைக் கட்டி*

*தேவனின் மாறாக்கரத்தைப் பற்றிக் கொள்வீர்*

89. ஏறத்தாழ எனது முப்பத்தியொரு வருட ஊழிய காலத்தில், அநேகக் சாட்சிகளை நான் கண்டிருக்கிறேன். வேதனையான சாட்சிகளைக் கண்டிருக்கிறேன். மகிமையான காட்சிகளையும் கண்டிருக்கிறேன். தெருக்களில் பசியோடு அலைகிற குழந்தைகளையும், ஒரு துண்டு ரொட்டிக்காக பிச்சையெடுக்கும் தாய்மார்களையும் குறித்து வருந்தத்தக்க காட்சிகளை நான் என் வாழ்க்கையில் எந்த அளவுக்கு கண்டேனோ, அதை விட வருந்தத்தக்க காட்சியாக மனிதன், தான் தேவனுடைய புத்திரனாக வேண்டும் என்று விரும்பிய போதிலும், தேவனை அறியாமல் மரித்துக் கொண்டிருக்கும் காட்சிதான் வாழக்கையிலேயே நான் கண்ட மிக மிக வருத்தம் தரும் காட்சியாகும்.

90. இந்த சபையின் கட்டிடத்தின் முகப்பில், ஒருநாள் ஒரு ஸ்திரீயானவள் நின்று கொண்டு, ''இந்த ஆள் (சகோ. பிரான்ஹாமை அந்த ஸ்திரீ குறிப்பிடுகிறாள் - தமிழாக்கியோன்) கொண்டிருக்கிற மார்க்கத்தை, என் வீட்டுப் பசுமாடு கூட பின்பற்ற நான் விடமாட்டேன்'' என்று என்னைப் பார்த்துப் பரிகசித்து கூறினாள். ஒரு மணி நேரம் கூட

*அவைகள் ஒருபோதும் ஒழிந்து போகாது.*

*தேவனின் மாறாக் கரத்தைக் பற்றிக் கொள்வீர்*

*தேவனின் மாறாக் கரத்தைப் பற்றிக் கொள்வீர்*

*நித்தியமானவைகளில் உம் நம்பிக்கையைக் கட்டி*

*தேவனின் மாறாக் கரத்தைப் பற்றிக் கொள்வீர்*

நாம் தலைகள் வணங்கும் போது, நீங்கள் இதுவரையிலும் ஒருக்காலும் அவருடைய கரத்தை பற்றிக் கொள்ளாது இருப்பவராய் இருப்பீரானால், இப்பொழுதாகிலும் அதைச் செய்ய வரமாட்டீரா*?*

*தேவனின் மாறாக் கரத்தைக் பற்றிக் கொள்வீர்*

*தேவனின் மாறாக் கரத்தைப் பற்றிக் கொள்வீர்*

*நித்தியமானவைகளில் உம் நம்பிக்கையைக் கட்டி*

*தேவனின் மாறாக் கரத்தைப் பற்றிக் கொள்வீர்*

88.வாலிபப் பெண்களே, நீங்கள் இப்பொழுது அழகான இனிமையான பெண்களாக இருக்கிறீர்கள். உங்களுடைய தலைமுடி அழகாயுள்ளது; உங்கள் கன்னங்கள் ரோஜா மலர்களைப் போல் உள்ளது; ஆனால் நாளைய தினம் என்று ஒன்று உள்ளது; அப்போது அவைகள் வாடிப்போகும். அடுத்த வாரத்தில் இந்த அழகான சிவப்புக் கன்னங்களை பூச்சி தின்று கொண்டிருக்காது என்று எப்படி நமக்குத் தெரியும்?

வாலிப சகோதரனே, நீ பெலமுள்ளவனாக இருக்கிறாய், பெரிய பெலமுள்ள தசைகள் உனக்கு உண்டு. உனக்கு பெரிய எதிர்பார்ப்புகள் உள்ளன. ஆனால் கொஞ்சக் காலத்திலே, நாளைக்கே, அவ்வழகான சுருள் முடிகளெல்லாம் விழுந்துவிடும். மீதமிருப்போ நரைத்துவிடும். அப்பெரிய நிமிர்ந்த தோள்கள் எல்லாம் கூனிவிடும், கைகளில் உள்ள மாமிசத்தையோ பூச்சி தின்று கொண்டிருக்கும். அவைகள் உன்னை மண்ணுக்கு மண்ணாக ஆக்கிவிடும்.

*நித்தியமானவைகளில் உம் நம்பிக்கையைக் கட்டுவீர்*

*அவைகள் ஒருபோதும் ஒழிந்து போவதில்லை*

*தேவனின் மாறாக் கரத்தைப் பற்றிக் கொள்வீர்*

*தேவனின் மாறாக் கரத்தைப் பற்றிக் கொள்வீர்*



பேசுவதற்காக எபிரெய மொழி தெரிந்த ஒரு மொழிபெயர்ப்பாளனை வைத்துக் கொண்டுதான் பேசினான். அவர்களுடைய சகோதரன் அவர்களிடம் வந்தான். அவன் இன்னான் என்று அவர்கள் அறிந்து கொள்ளவில்லை. அவன் ஒரு வல்லமையுள்ள அதிபதியாயிருந்தான். இப்பொழுதும் கூட கிறிஸ்துவானவர் யூதர்களைச் சந்திக்கிறார். அவர்களுடைய பிணியாளிகளைச் சொஸ்தமாக்குகிறார்; இருந்த போதிலும் இன்னமும் அவர்கள் அந்த மேசியா யார் என்பதை அறியவில்லை.

44-ம் அதிகாரம் 27-ம் வசனத்தில் துவக்குவோம் (ஆதியாகமம்).

''அப்பொழுது உம்முடைய அடியானாகிய என் தகப்பனார். என் மனைவி எனக்கு இரண்டு பிள்ளைகளைப் பெற்றாள்;

அவர்களில் ஒருவன் என்னிடத்திலிருந்து போய்விட்டான். (அவன் தான் யோசேப்பு, அவனிடத்தில் தான் அவர்கள் பேசிக் கொண்டு இருக்கின்றனர்)... அவன் பீறுண்டு போயிருப்பான் என்றிருந்தேன்; இதுவரைக்கும் அவனைக் காணாதிருக்கிறேன், இதெல்லாம் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

நீங்கள் இவனையும் என்னை விட்டுப் பிரிந்து அழைத்து போகுமிடத்தில் இவனுக்கு மோசம் நேரிட்டால், என் நரைமயிரை வியாகுலத்தோடே பாதாளத்தில் இறங்கப் பண்ணுவீர்கள் என்றார்.

ஆதி. 44: 27-29.

44. அவனுடைய இளைய சகோதரனாகிய சின்ன பென்யமீனை அவர்கள் விட்டுவிட்டு வந்திருக்கிறார்கள். பென்மீன்யாருக்கு முன்னடையாளமாயிருக்கிறான் என்பது உங்களுக்குத் தெரியுமா? இப்பொழுது கூடி வந்து கொண்டிருக்கிற இந்த புதிய கூட்டமான உண்மையான அசல் யூதர்கள் தான் அந்த 1,44,000 பேர்களை உருவாக்கப் போகிறார்கள். எழும்பி வந்து கொண்டிருக்கிற அந்த ஜாதியார்தான் அவர்கள். இந்த வால் ஸ்ட்ரீட்டில் உள்ள கோணலும் மாறுபாடுமான இந்த மக்கள் அல்ல அவர்கள், இல்லை, இல்லை. அவர்கள் அதிக அளவுக்கு அழிவுக்கு என்று உள்ளவர்கள். (அமெரிக்காவின் நியூயார்க் நகரத்தில் மன்ஹாட்டன் பகுதியில் உள்ள ஒரு தெரு தான் இந்த வால் ஸ்ட்ரீட் ஆகும். அமெரிக்கா பொருளாதாரத்தின் முதுகெலும்பாய் விளங்கும் நிதி நிறுவனங்கள், பங்குச் சந்தை இங்கே தான் உள்ளது. இதில் தந்திரமிக்க யூதர்கள்தான் ஆதிக்கம் செலுத்துகிறார்கள் - தமிழாக்கியோன்) அவர்கள் யூதர்கள்

அல்ல, அவர்கள் யூதர்களே அல்ல. உண்மையான யூதர்கள் தான் அந்த சின்ன பென்யமீனாக இருந்து, இயேசு கிறிஸ்துவைப் பற்றி கேள்விப்பட்டிராதவர்களாய் இருந்து இப்பொழுது எழும்பி வந்து கொண்டிருக்கிறார்கள்.

45. ''ஆகையால் இளையவனை விட்டு, நான் என் தகப்பனாகிய உமது அடியானிடத்துக்குப் போனால், அவருடைய ஜீவன் இவனுடைய ஜீவனோடே ஒன்றாய் இணைக்கப்பட்டிருக்கிறபடியினால்''

ஆதி. 44:30.

தேவனுடைய சொந்த ஜீவன் இஸ்ரவேலோடு இணைக்கப்பட்டு உள்ளது. அவர் அந்த ஜனத்தை விவாகம் செய்து கொண்டுள்ளார். கர்த்தருக்குச் சித்தமானால், இன்னும் சில நிமிடங்களுக்குள், நாம் அதைப் பற்றிப் பார்க்கப் போகிறோம். அவர் இஸ்ரவேலரை மணந்து கொண்டிருக்கிறார். எவ்வாறு நான் திருமதி பிரான்ஹாமாகிய என் மனைவியோடு இணைக்கப்பட்டிருக்கிறேனோ, நீங்கள் உங்கள் மனைவியோடு இணைக்கப்பட்டிருக்கிறீர்களோ, அவ்வண்ணமாகவே, அந்த ஜனத்தோடு தேவனுடைய ஜீவனும் பிணைக்கப்பட்டு உள்ளது. அதனோடு உங்கள் ஜீவன் பிணைக்கப்பட்டுள்ளது. தேவன் இஸ்ரவேலரோடு விவாகம் செய்து கொண்டுள்ளார். அது எவ்வாறிருந்தது? "என் ஜீவனானது அந்தப் பிள்ளையின் ஜீவனோடே ஒன்றாய் இணைந்திருக்கிறது'' என்று யாக்கோபு கூறினானே, அதைப்போல.

''அவர் இளையவன் வரவில்லை என்று அறிந்த மாத்திரத்தில் இறந்துபோவார். (யோசேப்பு இந்த இளைஞனை தன் வசம் வைத்துக் கொள்ளப்போகிறான், அந்த வரலாற்றை நாம் அறிவோம்)... இப்படி உமது அடியாராகிய நாங்கள் உமது அடியானாகிய எங்கள் தகப்பனுடைய நரைமயிரை வியாகுலத்துடனே பாதாளத்தில் இறங்கப் பண்ணுவோம். (ரூபன் இப்போது ஏறெடுக்கும் வேண்டுகோளை கேளுங்கள்)

இந்த இளையவனுக்காக உமது அடியானாகிய நான் என் தகப்பனுக்கு உத்தரவாதி; அன்றியும், நான் இவனை உம்மிடத்துக்குக் கொண்டு வராவிட்டால், நான் எந்நாளும் உமக்கு முன்பாகக் குற்றவாளியிருப்பேன் என்று அவருக்குச் சொல்லியிருக்கிறேன்.

இப்படியிருக்க, இளையவன் தன் சகோதரரோடே கூடப் போகவிடும்படி மன்றாடுகிறேன்... (ஓ என்னே! தன் சகோதரனாகிய



*ஒருக்காலும் ஒழிந்து போகாத*

*நித்தியமானவைகளின் பேரில்*

*உங்கள் நம்பிக்கையைக் கட்டுவீர்*

*காலமானது விரைவான மாற்றங்களை கொண்டது.*

*பூமியில் யாவும் மாயை, அசையாதவைகள்*

*நிலைக்குமே நித்தியமானவைகளில்*

*உங்கள் நம்பிக்கையை கட்டுவீர்*

*தேவனுடைய மாறாத கரத்தை பற்றிக் கொள்வீர்*

*தேவனின் மாறாக் கரத்தைக் பற்றிக் கொள்வீர்*

*தேவனின் மாறாக் கரத்தைப் பற்றிக் கொள்வீர்*

*நித்தியமானவைகளில் உம் நம்பிக்கையைக் கட்டி*

*தேவனின் மாறாக் கரத்தைப் பற்றிக் கொள்வீர்*

*கேளுங்கள்!*

*நாம் யாத்திரை முடியும்போது*

*(அப்பொழுது அது முடிந்துவிட்டது என்பதை அவர் நமக்குத் தெரியப்படுத்துவார்)*

*நாம் தேவனுக்கு உண்மையாயிருந்தால்*

*மகிமையில் நமக்கு அழகும் பிரகாசமுமான பரம வீடு உண்டே*

*(அந்த அபிஷேகிக்கப்பட்ட நகரம்)*

*ஆனந்த பரவசமாக்கப்பட்ட நமது ஆத்துமா*

*அதைக் காணுமே தேவனின் மாறாக் கரத்தைப் பற்றிக் கொள்வீர்*

*தேவனின் மாறாக் கரத்தைக் பற்றிக் கொள்வீர்*

*நித்தியமானவைகளில் உம் நம்பிக்கையைக் கட்டி*

*தேவனின் மாறாக் கரத்தைப் பற்றிக் கொள்வீர்*

*இவ்வுலகின் வீணான செல்வங்கள் விரைவில் அழியுமே,*

*அவற்றின்மேல் இச்சை வைக்காதீர்*

*நித்தியமானவைகளிலே உம் நம்பிக்கையைக் கட்டுவீர்*

சபிப்பார்கள்; இன்னும் வானத்திலிருந்து அக்கினியை வரவழைத்தல் போன்றவைகளையெல்லாம் அவர்கள் செய்வார்கள். நீங்கள் சற்று பொறுத்திருங்கள். நாம் கற்றுக் கொள்வதற்காக இங்கே ஏராளமான விஷயங்கள் வைக்கப்பட்டு இருந்து கொண்டிருக்கிறது.

87. ஓ, அவர் எவ்வளவு மகத்தான தேவனானவர் என்னே ஒரு இரக்கமுள்ள பிதா அவர்! சிநேகிதரே, உங்களுடைய மேய்ப்பன் என்ற முறையில் நான் இதைக் கூறுவேனாக. நீங்கள் எப்படிப்பட்ட சிலாக்கியங்களுக்குள்ளாக வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் உணரவேயில்லை. நீங்கள் உணரவேயில்லை.அநேக மகத்தான மனிதர்கள், அநேக பரிசுத்தவான்கள், ஆயிரக்கணக்கான பரிசுத்த மனிதர்கள், கடந்து போன அநேக ஆண்டுக் காலங்களில் மரித்துப்போய்விட்டனர். ஆவியால் நிரப்பட்ட அம்மனிதர்கள் நீங்கள் வாழ்கிற நாட்களைக் காண வேண்டுமென மிகவும் விரும்பியிருந்தார்கள். நீங்களும் நானும் அதைப் பயன்படுத்திக் கொள்வோமாக.

இன்னும் எதை நாம் எதிர் நோக்கி இருக்க வேண்டியதிருக்கிறது? இதற்குப் பிறகு நம்மால் என்ன செய்ய முடியும்? நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்? என்ன சம்பவிக்கப் போகிறது. நாம் ஒரு இடத்திற்குப் போக வேண்டியவர்களாக இருக்கிறோம். இங்கே நிரந்தரமாக நீங்கள் தங்கியிருக்க முடியாது. உங்களுடைய புல்லை நீங்கள் அறுக்கக்கூடும். அடுத்த வாரம் மீண்டும் புல்லையறுக்க வேண்டியது உள்ளது. அந்த நேரத்திற்கு இரு தடவைகள். நீங்கள் உங்கள் குழந்தைகளை வளர்க்கலாம். அவர்களுக்கு மதிய உணவு அளிக்கிறீர்கள். மீண்டும் இரவு உணவு வேளையில் அவர்களுக்கு பசி வந்துவிடுகிறது. இரவு உணவு அவர்களுக்குப் போஷிக்கிறீர்கள். மறு படியும் அடுத்த நாள் காலையில் அவர்களுக்கு மீண்டும் பசி வந்துவிடுகிறது. ஒரு ஜோடு பாதரட்சைகள் அவர்களுக்கு வாங்குகிறீர்கள்; என்னை போல்அவர்களுக்கு இருக்குமானால், இரண்டு மூன்று மாதங்களுக்குள் இன்னொரு ஜோடு செருப்புகள் வாங்குகிறீர்கள். ஒன்றிரண்டு மாதங்களில் மீண்டும் புதிய ஆடைகளை அவர்களுக்கு நீங்கள் வாங்க வேண்டியதாகிவிடுகிறது. ஒன்றும் நீடித்து இங்கே இருப்பதில்லை. ஒன்றும் நிரந்தரமானதாக இருக்கவில்லை. நிலைத்திருப்பது இங்கே ஒன்றுமில்லை.

*விரைவில் கெட்டுப்போகும் இவ்வுலகின்*

*மாயையான ஐசுவரியங்களை இச்சியாதீர்*



யோசேப்புக்கு முன்பாகத் தான் அவன் நின்று கொண்டிருக்கிறான். இவன் தான் யோசேப்பு, ஆயினும் அவனோ அவனை அறிந்து கொள்ளவில்லை. ஓ, ஆயிரவருட அரசாட்சி ஆரம்பிக்கிற வரையிலும் காத்திருங்கள், சகோதரனே)...

உம்முடைய அடியானாகிய நான் இளையவனுக்குப் பதிலாக இங்கே என் ஆண்டவனுக்கு... (அவன் கூறுவதைக் கேளுங்கள், அவனை ''ஆண்ட வனே" என்று அறிக்கையிடுகிறான்)... அடிமையாயிருக்கிறேன்.

இளையவனை விட்டு, எப்படி என் தகப்பனிடத்துக்குப் போவேன்? போனால் என் தகப்பனுக்கு நேரிடும் தீங்கை நான் எப்படிக் காண்பேன் என்றான்.

ஆதி. 44:31-34

46 .அவன் அங்கே தன் ஜீவனையே ஒப்புக்கொடுத்து மன்றாடுகிறான். எப்படியாய் அந்த யூதர்கள் தங்கள் கைகளை விரித்த வண்ணமாய் அங்கே நிற்கப் போகிறார்கள் கவனியுங்கள். இப்பொழுது 45-ம் வசனத்தை கவனியுங்கள். (45ம் அதிகாரம் என்று இருக்க வேண்டும் - தமிழாக்கியோன்) கவனமாக செவி கொடுங்கள், இதைக் காணத் தவறவேண்டாம்.

அப்பொழுது யோசேப்பு தன் அருகே நின்ற எல்லாருக்கும் முன்பாகத் தன்னை அடக்கிக் கொண்டிருக்கக்கூடாமல்.... (சகோதரனே, அந்த வேளையில் தான் பாவமானது தீர்க்கப்படப் போகிறது. அவிசுவாசமானது சிதறிப் போகப் போகிறது)... யாவரையும் என்னை விட்டு வெளியே போகப் பண்ணுங்கள் என்று கட்டளையிட்டான். யோசேப்பு தன் சகோதரருக்கு தன்னை வெளிப்படுத்து கையில், ஒருவரும் அவன் அருகில் நிற்கவில்லை.

ஆதி. 45:1

அது என்னவாயிருக்கிறது? அவனுடைய சொந்த மனைவி கூட அரண்மனைக்குத் திரும்பிப் போய்விட்டடாள். ஓ, இயேசு தம்மை தெரியப்படுத்தப் பண்ண திரும்பி வரும் போது, அவ்வேளையில் மணவாட்டியானவள் மகிமையில் இருப்பாள். அதைப் பற்றி இங்கே நாம் பார்க்கப் போகிறோம்.

47. அவன் சத்தமிட்டு அழுதான்...(யோசேப்பினால் அடக்கிக் கொள்ள அதற்கு மேலும் முடியவில்லை; அவன் கதறி அழுதான்)... அதை

எகிப்தியர் கேட்டார்கள். பார்வோனின் வீட்டாரும் கேட்டார்கள். (அரண்மனையின் உள்ளே இருந்த யாவரும் யோசேப்பு அழுததைக் கேட்டார்கள்).

ஆதி. 45:2

அந்த சம்பவம்தானே, கிறிஸ்துவானவர் யூதர்களைச் சந்திக்கப் போகிற விஷயத்திற்கு எடுத்துகாட்டாய் இருக்கிறது. நமக்கு ஒரு தருணம் கிடைக்கத் தக்கதாகத் தான் அவர்கள் குருடாக்கப்பட்டார்கள் என்பதை அவர் அறிவார். ஆனால் அவர்களிடத்துக்கு அவர் மீண்டும் வரும் போது, இஸ்ரவேலின் பாவம் தீர்ந்து போகும்.

''யோசேப்பு தன் சகோதரரைப் பார்த்து: நானே யோசேப்பு... (இயேசு என்ன கூறுவார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? ''நீங்கள் சிலுவையில் அறைந்த மேசியா நான் தான்" என்று கூறுவார்) என் தகப்பனார் இன்னும் உயிரோடே இருக்கிறாரா என்றான். அவனுடைய சகோதரர் அவனுக்கு முன்பாக கலக்கமுற்றிருந்ததினாலே அவனுக்கு உத்தரம் சொல்லக் கூடாமல் இருந்தார்கள்''.

ஆதி. 45:3

48. ஓ, ஒரு நிமிட நேரம் நாம் சற்று இங்கே நிறுத்தியாக வேண்டும். சகரியா 12-ம் அதிகாரத்திற்கு நாம் திருப்புவோமாக. என்னோடு கூட சகரியா 12-ம் அதிகாரத்திற்கு திருப்புங்கள். ஒரு வேளை நான் சற்றுக் கூடுதலாக நேரம் எடுத்துக் கொண்டு பிரசங்கத்தில் துவங்கிவிடுகிறேன் போல் இருக்கிறது. அவ்வாறு செய்யமாட்டேன் என்று நான் நம்புகிறேன். நீங்கள் இதை மிகவும் நன்றாக அறிந்துகொள்ள வேண்டுமே என்று நான் விரும்புகிறேன்.

சகரியா: 12-ம் அதிகாரம் எடுத்துக் கொள்வோமாக. அவர் தன் சகோதரருக்கு முன்பாக நிற்கும் போது, என்ன கூறப் போகிறார் என்பதை நாம் காண்போமாக. சகரியா 12-ம் அதிகாரம் 10-ம் வசனம் (இப்போது பாவத்தை தொலைக்கப் போகுதல் நடக்கிறது)

49. அவர் இங்கே மீதியாயுள்ளவர்களைப் பற்றியே பேசுகிறதைக் கவனியுங்கள். எருசலேம் முற்றுகையிடப்படுதல், மிருகம், சேனைகள், அதைக் கைப்பற்றுதல் ஆகியவைகள் அங்கே விவரிக்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் முடிவு காலத்துக்கு அடுத்ததாக இருக்கிறது. இது ஏறத்தாழ ஆயிர வருட அரசாட்சிக்கு சமீபமான வேளையாயிருக்கிறது. இவை நடக்கும் போது ஆயிர வருட அரசாட்சியானது துவங்க ஆயத்தமாயிருக்கும்.



எடுத்துக் கொள்வோம்). அவர்கள் இரண்டு அபிஷேகிக்கப்பட்ட தீர்க்கதரிசிகளாவர். அவர்கள் இருவரும் எலியாவும் மோசேயும் தான் என்றும் நான் கருதுகிறேன். அவர்கள் யாவரும் ஒருங்கிணைந்து கொண்ட பிறகு, ரோமாபுரியானது இஸ்ரவேலோடு உள்ள உடன் படிக்கையை எழுபதாவது வாரத்தின் மத்தியிலே முறித்துப் போட்டதை அவர்கள் (இரு தீர்க்கதரிசிகள் - தமிழாக்கியோன்) காணும் போது, அப்பொழுது அவர்கள் மகா சாபங்களைக் கொண்டு வருவார்கள். உடன்படிக்கை முறித்தலானது வல்லமையை சிதறடிக்கும் அருவருப்பை உண்டாக்கும். புறஜாதியில் மீதியாயிருக்கும் நித்திரை செய்யும் கன்னியர் இருக்கும் பொழுது, பெரிய வெள்ளம் உண்டாகும். ரோமாபுரியாகிய வலுசர்ப்பம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும், மீதியாயிருக்கும் ஸ்திரீயின் வித்தோடு தன் வாயிலிருந்து நதி போன்ற வெள்ளத்தை ஊற்றிவிட்டு, யுத்தம் பண்ணப்போகும்.

86. அனைத்து சபைகளின் சமஷ்டி அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டு, அது அவர்கள் யாவரையும் ஒருங்கிணைத்து, யூதர்களையும் இந்த சபைகளின் சங்கத்தினுள், சமஷ்டிக்குள், கொண்டு வருவார்கள். அவர்களை அவர்களுடைய ஆலயத் தொழுகைக்கு வரும்படி செய்து, வேதத்திலிருந்து கர்த்தர் உரைப்பது என்னவென்றால் என்பதை மீண்டும் ஏற்படுத்துவார்கள். அவர்களுக்கு அவர்களுடைய சொந்த சபை உண்டாயிருக்கும்.

இப்பொழுது அவர்கள் என்னவாயிருக்கிறார்கள்? இப்பொழுது நான் புதியதாக தெரிந்து கொண்டேன். அவர்கள் இப்பொழுது ஒரு தேசமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். அது சரிதானே? ஆனால் இன்னமும் அவர்களுக்கு ஆலயத்தொழுகை ஏற்படவில்லை. அவர்கள் ஆலயத் தொழுகையை ஏற்படுத்திக் கொள்ளும் போது, சபையானது இங்கிருந்து போய்விட்டிருக்கும். தேவன் அப்பொழுது யூதர்களோடு ஒரு தேசமாக இடைபட்டுக் கொண்டிருப்பார். பிறகு அவர்கள் இந்த சமஷ்டி அமைப்புக்குள் கொண்டுவரப்படுகையில், ரோமாபுரியானது எழுபதாவது வாரத்தில் மீதி பாதியில் அந்த மூன்றரை வருஷத்தில் அவர்களோடு உள்ள உடன்படிக்கையை முறித்துப்போடும். பின்பு பாழாக்கும் அருவருப்பை முடிவு பரியந்தமும் அவன் பரப்பிக் கொண்டேயிருப்பான். அப்பொழுது அவன் ப்ராடெஸ்டெண்டுகள், யூதர் ஆகிய இரு சாராரையுமே உபத்திரவப்படுத்துவான்; அவ்வேளையிலே இரண்டு தீர்க்கதரிசிகள் எழும்பி அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லி வரும் நாட்களிலே பூமியிலே மழை பெய்யாதபடி பூமியை

83. கர்த்தருக்குச் சித்தமானால், அடுத்த ஞாயிற்றுக் கிழமை, அவர் எனக்கு உதவி செய்வாரானால், அந்த ஏழு நாட்களும் ஒவ்வொன்றும் சரியாக எந்த இடத்தில் எப்பொழுது சம்பவித்தன என்பதைப் பற்றியும் சரியாக எந்த இடத்தில் எப்பொழுது சம்பவித்தன என்பதைப் பற்றியும், இன்றைக்கு நான் போதித்தது போல் இவைகளைக் கொண்டு வந்து, அவ்வெழுபது வாரங்களை யூதர்களின் வாசஸ்தலத்தில் ஸ்தாபித்து, நாம் இப்பொழுது இக்கடைசி காலத்தில் எங்கே ஜீவித்துக் கொண்டிருக்கிறோம் என்பதையெல்லாம் கர்த்தருக்கு சித்தமானால், உங்களுக்கு அளிக்க நான் விரும்புகிறேன்.

84. நீங்கள் அவரை நேசிக்கிறீர்களா? பரலோகத்தில் இழக்க உங்களுக்கு சக்தியிருக்கிறதா? நாம் கடைசி காலத்தில் இருக்கிறோம். அவர் எதைச் செய்ய வரப்போகிறார்? முதலாவதாக என்ன நடைபெறும்? இயேசு பூமிக்குத் திரும்ப வருவதற்கு முன்னர் முதலாவதாக நடைபெறும் காரியம் என்னவாயிருக்கும்? சபைக்கு என்ன நடக்கும்? அது எடுக்கப்பட்டுவிடும். இயேசு பூமிக்குத் திரும்பி வந்து, கல்லறைகளிண்டையிலே சுற்றித் திரிந்து, அப்பா, அம்மாக்களோடு கை குலுக்கிவிட்டு, நம் யாவரோடும் பேசிக் கொண்டிருந்து விட்டு, மேலே ஏறிப் போய்விடுவாரா? இல்லை. அது எப்படியிருக்கும் "கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது; கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம் (2 தெசலோனிக்கேயர் 5-ம் அதிகாரம்) இந்த இடத்தில் (1 தெசலோனிக்கேயர் 4-ம் அதிகாரம் என்று தான் இருக்கவேண்டும் - தமிழாக்கியோன்)... ''கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை..." (1 தெச 4:15). தேவ எக்காளம் தொனிக்கும். ''...அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்" (1 தெச 4:16). "பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர் கொண்டுபோக... அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு (1 தெச. 4:17) விடுவோம்." ..."ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப் பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்'' (1.கொரி.15:51). அந்த வேளையிலே... அவ்வேளை தான் சபைக் காலத்தை முடிவுக்குக் கொண்டு வருகிறது.

பிறகு, இங்கே கீழே பூமியிலே தேவன் யூதர்களோடு இடைபட ஆரம்பிக்கிறார்.

85. அப்பொழுது அங்கே இரு தீர்க்கதரிசிகள் இருப்பார்கள். (11-ம் அதிகாரத்தில் (வெளி. 11-ம் அதிகாரம் - தமிழாக்கியோன்) அதை நாம்



''நான் தாவீது குடும்பத்தாரின் மேலும் எருசலேம் குடிகளின் மேலும்... (என்ன?)... கிருபையின் ஆவியையும் (ஆமென் ஆச்சரியமான கிருபை!). எருசலேமின் குடிகளின் மேலும்... (அது தானியேலின் பரிசுத்த நகரமாகும்)... கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன். அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்த்து, ஒருவன் தன் ஓரே பேறானவனுக்காகப் புலம்புகிறது போல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறது போல எனக்காக மனங்கசந்து தூக்கிப்பார்கள்.

சக. 12:10

50. செவிகொடுங்கள்! யோசேப்பு செய்தது போல அவரும் அவர்களுக்கு தன்னைத் தெரியப்படுத்திக் கொண்டு நிற்கையில் என்னே ஒரு புலம்பலாக அவ்வேளை இருக்கப் போகிறது!

அந்நாளிலே மெசிதோன் பட்டணத்துக்குப் பள்ளத்தாக்கின் ஊராகிய ஆதாத்ரிம்மோனின் (என்னால் அப்பெயரை உச்சரிக்க இயலவில்லை)... புலம்பலைப்போல எருசலேமின் புலம்பல் பெரிதாயிருக்கும்.

தேசம் புலம்பிக் கொண்டிருக்கும்: ஒவ்வொரு வம்சமும் தனித்தனியாக புலம்பும்; தாவீது குடும்பத்தார் தனியேயும், அவர்கள் ஸ்திரீகள் தனியேயும், நாத்தான் குடும்பத்தார் தனியேயும், அவர்கள் ஸ்திரீகள் தனியேயும்.

லேவி குடும்பத்தார் தனியேயும், அவர்கள் ஸ்திரீகள் தனியேயும், சீமேயி குடும்பத்தார் தனியேயும், அவர்கள் ஸ்திரீகள் தனியேயும்.

மற்றுமுண்டான சகல குடும்பங்களிலும் ஒவ்வொரு குடும்பத்தின் மனுஷர் தனித்தனியேயும், அவர்களுடைய ஸ்திரீகள் தனித்தனியேயும் புலம்புவார்கள்.

சக. 12:11-14

அவர்கள் அந்த இராத்திரியிலே சிலுவையிலறைந்த தங்களுடைய அதே விலையேறப்பேற்ற யோசேப்பின் முன்னால் நின்று அவரைக் கண்டு கொள்ளும்போது அவர்கள் மிகவும் வெட்கமடைந்து தலைகுனிவார்கள் (இயேசுவைத்தான் யோசேப்பு என்று குறிப்பிட்டுள்ளார் - தமிழாக்கியோன்) ''இந்த வடுக்கள் உமக்கு எங்கே ஏற்பட்டது?'' (சகரியா 13:6) என்று அவர்கள் அவரிடம் கேட்டு பெரிதாகப்

புலம்புவார்கள். அவர்கள், "அவரிடம் எங்கே இக்காயங்கள் உமக்கு ஏற்பட்டன?'' என்று கேட்பார்கள்.

''என் சிநேகிதரின் வீட்டிலே'' என்பார் அவர். நான் கூறியதை நீங்கள் புரிந்து கொண்டீர்களா? அவிசுவாசமாகிய பாவத்திற்கு முடிவு கட்டுதல், அதற்காகத்தான் அவர் வருகிறார்.

51. இந்த எழுபதாவது வாரத்தில் தான் பாவத்தை தொலைக்கிறதற்கு அவர் வருகிறார். இப்பொழுது புரிந்து கொண்டீர்களா? முதலாவதாக என்ன? மீறுதலைத் தவிர்க்கிறதற்கும், பாவத்தைத் தொலைக்கிறதற்கும்.

மூன்றாவதாக அக்கிரமத்தை நிவிர்த்தி பண்ணுகிறதற்கும். குறிப்பெடுத்துக் கொள்ளுகிறவர்கள் அதை குறித்துக் கொள்ளுங்கள். என்னிடத்தில் இங்கே இன்னும் வேறு ஆறு வேத வாக்கியங்கள் உள்ளன. ஆனால் நான் அவைகளை விட்டு விடுகிறேன். ஏனெனில் உஷ்ணமாயிருக்கிறது. அதிகமான நேரத்தை நான் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. எவ்வளவு அதிகமாக எடுத்துக் கொள்ள வேண்டுமோ அவ்வளவையும் எடுத்துக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் மிக அதிகமான நேரத்திற்கு உங்களை இங்கே தங்க வைக்க நான் விரும்பவில்லை.

52. அக்கிரமத்தை நிவிர்த்தி பண்ணுகிறதற்கு. அக்கிரமம் என்பது குற்றம் புரிதல் ஆகும். அவர்கள் சிலுவையில் செய்தது போல. அவர் நிவிர்த்தி செய்தார், ஆனால் அது அவர்களுக்கு பொருந்தாது. ஏன்? ஏனெனில் அவர்கள் குருடாக்கப்பட்டவர்கள், அதினால் அவர்களால் காணமுடியாது. அவர்கள் ஏன் குருடாக்கப்பட்டார்கள்? "நல்லது, ஒரு வேளை இன்றைக்கு நான் குருடாயிருக்கிறபடியினால்'' என்று நீங்கள் கூறலாம். நீங்கள் வேண்டுமென்றே குருடாயிருக்கிறீர்கள். ஆனால் அவர்களோ, தேவன் அவர்களை குருடாக்கினபடியால் குருடாயிருந்தனர். ஆனால் நீங்களோ குருடாயிருக்கிறீர்கள். உங்களுக்கு ஒப்புரவாகுதல், நிவிர்த்தியாக்கிக் கொள்ளுதல் கிடையாது. ''நானே அவர் என்று விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்" என்று இயேசு கூறினார். (யோவான் 8:24). அது சரிதான்.

53. இப்பொழுது நாம் மீண்டும் சகரியாவுக்குப் போவோம். 13-ம் அதிகாரம். இங்கே செவி கொடுப்போமாக. நிவிர்த்தி செய்தல். இதற்குச் செவி கொடுப்பதற்காக சிலரை நான் பார்த்துக்



(மகிமை! இதோ அவர் வருகிறார்)

புறஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது; இருப்புக் கோலால் அவர்களை அரசாளுவார்; அவர் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய உக்கிர கோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார்.

ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா என்னும் நாமம் அவருடைய வஸ்திரத்தின் மேலும், அவருடைய தொடையின் மேலும் எழுதப்பட்டிருந்தது.

வெளி 19:1-16

81. அது என்ன? அவருடைய ஜனங்கள் இப்பொழுது அவரை இராஜதி இராஜாவாக, கர்த்தாதி கர்த்தாவாக முடி சூட்டியிருக்கிறார்கள். அவர் தன் சபையோடு ஜீவித்து, ஆயிரமாண்டு அரசாட்சியில் ஆளுவதற்காக, தேவ பிரசன்னத்தினாலே அபிஷேகம் பண்ணப்பட்ட தமது பரிசுத்த ஆலயத்திற்கு திரும்பி வருகிறார். ஆமென்! மகத்துவமுள்ள இராஜாவோடு, அவரது பக்கத்திலே தன்னுடைய ஸ்தானத்தை எடுத்துக் கொண்டவளாய், அந்தப் புதிய ராஜரிக அபிஷேகிக்கப்பட்ட ஆலயமானது தோன்றுகிறாள்.

இப்பொழுது வெளிப்படுத்தின விசேஷம் 6:1 முதல் வெளிப்படுத்தின விசேஷம் 19:21 முடிய உள்ளவைகளில் பொதிந்து இருக்கும் ஆறுவிதமான நோக்கங்கள் நிறைவேறிவிட்டன. செவி கொடுங்கள்!

82. இப்பொழுது முடிவாக, ஏழு முத்திரைகள், ஏழு எக்காளங்கள், ஏழு வாதைகள், மூன்று ஆபத்துக்கள், சூரியனில் நிற்கிற ஸ்திரீ, சிவப்பான வலு சர்ப்பம் ஆகியவைகள் இந்தக் காலங்களுக்குள், மகா உபத்திரவ காலத்தின் வேளையில் வருகின்றன. இதை மறக்க வேண்டாம். இவைகள் யாவும் இந்த காலத்தில் சம்பவிக்கின்றன. ஆனால் இதோ இங்கேதான் இந்த ஆறுவிதமான நோக்கங்களுக்காக அவன் வருகிறான். அதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? கர்த்தரை நேசிக்கிறவர்களுக்கு என்னே ஒரு மகிமையான வேளையானது வைத்து வைக்கப்பட்டிருக்கிறது. நான் உங்களுக்குக் கூறுவது என்னவென்றால், நண்பர்களே! நீங்கள் இதை இழந்து போவது உங்களால் தாங்கிக் கொள்ள முடியாததாகும். நீங்கள் என்ன செய்த போதிலும், அதை இழந்துபோகவே கூடாது. அதைப் பற்றி உறுதியாயிருங்கள்.

(இதோ அவள் இங்கே வருகிறாள். மணவாட்டியும் மணவாளனும் வருகிறார்கள்)

சுத்தமும் பிரகாசமுமான மெல்லியவஸ்திரம் தரித்துக் கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது; அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே.

பின்னும், அவன் என்னை நோக்கி: ஆட்டுக் குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள்; என்றெழுது என்றான். மேலும் இவைகள் தேவனுடைய சத்தியமான வசனங்கள் என்று என்னுடனே சொன்னான்.

அப்பொழுது அவனை வணங்கும்படி அவனுடைய பாதத்தில் விழுந்தேன். அவன் என்னை நோக்கி: இப்படி செய்யாதபடிக்குப் பார்; உன்னோடும் இயேசுவைக் குறித்துச் சாட்சியிட்ட உன் சகோதரரோடு கூட நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத் தொழுதுகொள். இயேசுவைப் பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது என்றான்.

பின்பு, பரலோகம் திறந்திருக்கக் கண்டேன்; இதோ, ஒரு வெள்ளைக் குதிரை… (ஓ, என்னே!)… காணப்பட்டது. அதின் மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சந்தியமுள்ளவரென்னப்பட்டவர்; அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம் பண்ணுகிறார்.

அவருடைய கண்கள் அக்கினி ஜுவாலையைப் போலிருந்தன, அவருடைய சிரசின் மேல் அநேக கிரீடங்கள் இருந்தன. (எப்படியாக அவர் கிரீடம் சூட்டப்பட்டார்? இராஜாதி இராஜாவாக) அவருக்கேயன்றி வேறொருவருக்குத் தெரியாத ஒரு நாமும் எழுதியிருந்தது.

இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தை தரிந்திருந்தார்; அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே.

("ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது; அந்த வார்த்தை தேவனாயிருந்தது; அந்த வார்த்தை மாம்சமாகி… நமக்குள்ளே வாசம் பண்ணினார்…'') (யோவான் 1:1, 14 அவர் யார்? - இயேசு) அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே.

பரலோகத்திலுள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரந் தரித்தவர்களாய், வெள்ளைக் குதிரைகளின் மேல் ஏறி, அவருக்குப் பின் சென்றார்கள்.



கொண்டிருந்தேன். ஆனால் ஒரு வேளை… கர்த்தர் எப்படியாவது அதை நிறைவேற்றுவார். ''அந்நாளிலே…''

டாக்டர் ஸ்கோபீல்ட் தன்னுடைய அடிக்குறிப்பில் (Foot notes), இல்லை, பாராவின் தலைப்பில் "மீதியுள்ளவர்கள் - மனந்திரும்பிய மீதியாயிருப்பவர்கள் - சிலுவைக்கு நேராக சுட்டிக் காட்டப்படுகிறார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

அக்கிரமத்தை நிவிர்த்தி பண்ணுகிறதற்கு… அக்கிரமம் என்பது ஒரு குற்றமாகும், அதை நீங்கள் செய்யக் கூடாது என்று நன்கு தெரிந்திருந்தும், அதை செய்வதாகும்

''என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவி கொடார்"

(சங். 66:18).

54. இப்பொழுது நாம் சகரியா 13-ம் அதிகாரம் 1-ம் வசனத்திலிருந்து துவக்குவோம்.

அந்நாளிலே பாவத்தையும் அழுக்கையும் நீக்க, தாவீதின் குடும்பத்தாருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் திறக்கப்பட்ட ஒரு ஊற்று உண்டாயிருக்கும்.

சக.13:1.

அங்கே திறக்கப்பட்ட வீடொன்று உண்டாயிருக்கும். தொடர்ந்து படித்துக் கொண்டே செல்லுங்கள். நாம் தொடர்ந்து வாசித்துக் கொண்டே செல்லலாம். அதை நீங்கள் குறித்துக் கொள்ளும்படி நான் விரும்புகிறேன். ஏனெனில் நீங்கள் அதை படிப்பீர்கள். ஆனால் இப்பொழுது, இங்கே நான் 6-ம் வசனத்திலிருந்து ஆரம்பித்து 10-ம் வசனம் முடிய வாசிக்கும்படியாக நான் குறித்து வைத்துள்ளேன். நல்லது, இப்பொழுது நாம் 9-ம் வசனம் முடிய வாசிப்போமாக.

அப்பொழுது ஒருவன் அவனை நோக்கி: உன் கைகளில் இருக்கிற இந்த வடுக்கள் ஏதென்று கேட்டால், என் சிநேகிதரின் வீட்டிலே காணப்பட்டதினால் உண்டானவைகள் என்பான்.

பட்டயமே, என் மேய்ப்பன் மேலும் என் தோழனாகிய புருஷன் மேலும் எழும்பு என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; மேய்ப்பனை வெட்டு, அப்பொழுது ஆடுகள் சிதறிப்போகும்; ஆனாலும் என் கரத்தைச் சிறுவர் மேல் திரும்ப வைப்பேன்.

சக. 13:6-7.

55. அவ்வேத வாக்கியத்தை இயேசுவும் மேற்கோள்காட்டினார்: ''மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும்'' (மத் 26:31). ஆனால் கவனியுங்கள், அடுத்த பாராவை. அவர் அதுவரையிலும் மட்டும் மேற்கோள் காட்டினார். ஆனால் அவ்வசனத்தின் அடுத்த வாக்கியம் என்ன கூறுகிறது என்பதைக் கவனியுங்கள். ஆனாலும் என் கரத்தைச் சிறுவர் மேல் திரும்பவைப்பேன்'' (சக.13:7). அது என்ன? அதுதான் அந்த பென்யமீனாகிய அக்கூட்டம் இப்பொழுது எழும்பி வருதலாகும். “என் கரத்தைச் சிறுவர் மேல் திரும்ப வைப்பேன்.

மேய்ப்பனை வெட்டுவேன்... இஸ்ரவேல், முந்தைய இஸ்ரவேல் மேய்ப்பனை வெட்டியது, அதனால் ஆடுகள் உலகம் பூராவிலும் சிதறடிக்கப்பட்டனர். ஆனால் தேவனோ “நான் கடைசி நாட்களிலே என்னுடைய கரத்தை சிறுவர் மேல் வைத்து அவர்களை திரும்பக் கொண்டு வருவேன்'' என்கிறார். எப்பொழுது? அக்கிரமம் நிவிர்த்தி செய்யப்படும் போது அது நடக்கும். இஸ்ரவேலர் ஒவ்வொருவரும் இரட்சிக்கப்படுவார்கள்.

56. ஏசாயா 66-ம் அதிகாரத்தை எடுத்துக் கொள்வோம். ஏசாயா 66-ம் அதிகாரம். அங்கே சற்று நேரம் வாசித்து இஸ்ரவேலர் இரட்சிக்கப்படுதலைக் குறித்து தேவன் என்ன கூறுகிறார் என்பதைக் காண்போமாக. இஸ்ரவேலை இரட்சிப்பதற்கு இன்னும் எவ்வளவு காலம் ஆகும் என்பதைக் குறித்து தேவன் என்ன சொல்லுகிறார் என்பதைக் காண்போமாக. ஏசாயா 66-ம் அதிகாரம் 8-ம் வசனத்தில் அது எவ்வளவு சீக்கிரமாக வருகிறது என்பதைக் கவனியுங்கள். முழுவதையும் வாசிக்க நீங்கள் விரும்பினால், அப்படியே செய்து கொள்ளுங்கள்.

இப்படிப்பட்டவைகளைக் கேள்விப்பட்டது யார்? இப்படிப்பட்டவைகளைக் கண்டது யார்? ஒரு தேசத்துக்கு ஒரே நாளில் பிள்ளைப்பேறு வருமோ?... சீயோனோவெனில், ஒருமிக்க வேதனைப்பட்டும், தன் குமாரரைப் பெற்றும் இருக்கிறது.

ஏசா. 66:8

சீயோனானவள், அது அவர்களுடைய மேசியாதான் என்பதைக் கண்டு கொண்ட உடனேயே, ஒரே நாளில் அவள் மறுபடியும் பிறந்து விடுவாள். பாவங்களுக்காகவும், அக்கிரமத்திற்காகவும், அசுத்தத்திற்காகவும்



வாதைகளுக்குப் பிறகு, சாத்தான் கீழே தள்ளப்பட்ட பிறகு, ஆயிர வருஷ அரசாட்சி அமைந்த பிறகு, கவனியுங்கள்)

இவைகளுக்குப் பின்பு, பரலோகத்தில் திரளான ஜனக்கூட்டம் இடுகிற ஆரவாரத்தைக் கேட்டேன். அவர்கள் அல்லேலூயா, இரட்சணியமும் மகிமையும் கனமும் வல்லமையும் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியது; அவருடைய நியாயத் தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள்.

தன் வேசித் தனத்தினால் பூமியைக் கெடுத்த மகா வேசிக்கு அவர் நியாயத்தீர்ப்புக் கொடுத்து, தம்முடைய ஊழியக்காரரின் இரத்தத்திற்காக அவளிடத்தில் பழிவாங்கினாரே என்றார்கள்.

மறுபடியும் அவர்கள்: அல்லேலூயா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள். அவளுடைய புகை என்றென்றைக்கும்... (அதுதான் அந்த பழைய வேசியான சபையாகும்). எழும்புகிறது என்றார்கள்.

இருபத்து நான்கு மூப்பர்களும், நான்கு ஜீவன்களும் வணக்கமாய் விழுந்து: ஆமென், அல்லேலூயா, என்று சொல்லி சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் தேவனைத் தொழுது கொண்டார்கள்.

மேலும், நமது தேவனுடைய ஊழியக்காரரே, அவருக்குப் பயப்படுகிற சிறியோரும் பெரியோருமானவர்களே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள் என்று ஒரு சத்தம் சிங்காசனத்திலிருந்து பிறந்தது.

அப்பொழுது திரளான ஜனங்கள் இடும் ஆரவாரம் போலவும் (சபையே செவி கொடு, இதோ இங்கே தான் நீங்கள் வருகிறீர்கள். 3-ம் அதிகாரத்தில் அவள் எடுக்கப்பட்ட பிறகு, இங்கே மீண்டும் வருகிறாள்). (6-ம் வசனம்) அப்பொழுது திரளான ஜனங்கள் இடும் ஆரவாரம் போலவும், பெருவெள்ள இரைச்சல் போலவும், பலத்த இடிமுழக்கம் போலவும், ஒரு சத்தமுண்டாகி; அல்லேலூயா, சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம் பண்ணுகிறார்

(அல்லேலூயா, கவனியுங்கள், இப்பொழுது தான் ஆட்டுக் குட்டியானவரின் கலியாணம் வருகிறது. இதோ அவள் இங்கே தான் வருகிறாள்).

நாம் சந்தோஷபட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதி செலுத்தக் கடவோம். ஆட்டுக் குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன்.

வாக்கின் கோலால் அடித்து, தமது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரைச் சங்கரிப்பார்.

நீதி அவருக்கு அரைக்கட்டும், சத்தியம் அவருக்கு இடைக் கச்சையுமாயிருக்கும்.

அப்பொழுது ஓனாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும், புலி வெள்ளாட்டுக் குட்டியோடே. (அது ஒரு வெள்ளாடு) படுத்துக் கொள்ளும்; கன்றுக்குட்டியும், பால சிங்கமும், காளை ஒருமித்திருக்கும், ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான்.

பசுவும் கரடியும் கூடி மேயும், அவைகளின் குட்டிகள் ஒருமித்துப் படுத்துக் கொள்ளும்; சிங்கம் மாட்டைப் போல் வைக்கோல் தின்னும்.

பால் குடிக்குங் குழந்தை விரியன் பாம்பு வளையின் மேல் விளையாடும். பால் மறந்த பிள்ளை கட்டுவிரியன் புற்றிலே தன் கையை வைக்கும்.

என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமில்லை; கேடு செய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்.

ஏசா. 11:1-9

இதெல்லாம் புதிய எருசலேமில் நடக்கப் போகிறவைகளாகும். கிளை என்பது தாவீதின் கிளையைக் குறிக்கும். அவர் தானே கிளையும் சந்ததியாயுமிருக்கிறார்.

80. இதற்குப் பிறகு மணவாட்டி தோன்றுகிறாள். எழுபது வாரங்களுக்குப் பிறகு, மணவாட்டி வெளிப்படுத்தின விசேஷம் 19-ம் அதிகாரத்தில் 1 முதல் 16 முடிய உள்ள வசனங்களில் தோன்றுகிறாள். அவள் மகத்துவமுள்ள இராஜாவாகிய தன் மணவாளனோடு வந்து சேருகிறாள். அவைகளெல்லாவற்றையும் நாம் பார்க்கப் போகிறோமோ இல்லையோ, எனக்குத் தெரியவில்லை. அந்த அளவுக்கு நமக்கு இருக்கிறது... எப்படியாயினும் இதன் ஒரு பாகத்தையாவது வாசிப்போமாக. இதற்குப் பிறகு இங்கு தான் மணவாட்டி வருகிறாள். ஆயிரவருஷ அரசாட்சி ஆரம்பித்த பிறகு, கிறிஸ்து மணவாட்டியோடு திரும்ப வருகிறார். 19-ம் அதிகாரம் 1 முதல் 16-ம் வசனம் முடிய. இவைகளுக்குப் பின்பு... (உபத்திரவ காலத்திற்குப் பிறகு, ஆபத்துக்களுக்குப் பிறகு, முத்திரைகளுக்குப் பிறகு,



பிராயச்சித்தம் செய்து நிவிர்த்தி செய்யப்படும். ஓ, என்னே! பொல்லாங்கானதை குற்றமானதை அவர்கள் செய்தார்கள். அவர்களுடைய அக்கிரமம் நிவிர்த்தி செய்யப்படுதல் அவர்களுக்குக் கிடைக்கும்.

57. நான்காவது: ''நித்திய நீதியை வருவிக்கிறதற்கும் அது தான் நான்காவதான நோக்கமாகும். அதற்காகத்தான் அவர் வந்தார். அவர் எதற்காக வருகிறார்? நித்திய நீதியை வருவிக்கிறதற்காக; பாவத்தைத் தொலைக்கிறதற்காக; நிவிர்த்தி செய்ய. நித்திய நீதியை வருவிக்கிறதற்கு. இஸ்ரவேலரின் மீறுதலானது ஒரு முடிவுக்கு வருகையில், இஸ்ரவேலரின் மீறுதல்.

இதை நீங்கள் பிடித்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். ஏனெனில், நாம் அந்த ஸ்திரீயையும், கீழே தள்ளப்பட்ட வலு சர்ப்பத்தையும் குறித்து பார்க்கப் போகும்போது, இதே வேத வாக்கியத்தை நாம் திரும்பவும் பார்க்க வேண்டியதாயிருக்கும். இதை உறுதியாகக் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். இஸ்ரவேலரின் மீறுதலானது ஒரு முடிவுக்கு வரும் போது, அவர்கள் மேலும், நம் மேலும் குற்றஞ்சாட்டுகிறவனாகிய சாத்தானாவன், பாதாளத்தில் தள்ளியடைக்கப்பட்டு, அதின் மேல் முத்திரை போடப்பட்டது. (வெளி. 20:2). அப்பொழுது என்ன. நித்திய நீதியை வருவிக்கிறது என்று சொன்னால், முடிவில்லாத ஒன்றாக அது இருக்கிறது. அநீதி தொலைக்கப்படுவதினால் தான் இதெல்லாம் நடக்கிறது.

58. வெளிப்படுத்தின விசேஷம் 20-ம் அதிகாரம் 13-ம் வசனத்தை எடுத்துக் கொள்வோம். ஒரு நிமிட நேரம் சற்று இதை வாசிப்போமாக. வெளிப்படுத்தின விசேஷம் 20 அதிகாரம் 13-ம் வசனம். மன்னிக்கவும், அது வெளிப்படுத்தின விசேஷம் 20-ம் அதிகாரம் 1 முதல் 3-ம் வசனம் முடிய . இரண்டுக்கும் நடுவில் போடப்பட்டிருந்த அக்கோட்டை நான் கவனிக்கவில்லை. வியர்வை என் கண்களில் வந்து மறைத்துவிட்டபடியினால் அப்படி ஆகியது.

ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும் பெரிய சங்கிலியையும் தன் கையிலே பிடித்துக்கொண்டு வானத்திலிருந்து இறங்கி வரக்கண்டேன்.

பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவும் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும் வரைக்கும் அது

ஜனங்களையே மோசம் போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின் மேல் முத்திரை போட்டான்.

அதற்குப் பின்பு அது கொஞ்சக்காலம் விடுதலையாக வேண்டும்.

வெளி. 20:1-3

நித்திய நீதியை வருவித்தல். சாத்தான் அப்பொழுது பாதாளக் குழியில் தள்ளப்படுகிறான். அவர் அதைச் செய்யும் போது, மக்களை வஞ்சித்த பிசாசானவனை முத்திரையிட்டுவிடுகிறார்.

59. இப்பொழுது நாம் ஆபகூக் இரண்டாம் அதிகாரத்தை எடுத்துக் கொள்வோம். இப்பொழுது நாம், அந்த பழைய பாம்பாகிய வலுசர்ப்பம் ஏன் முத்திரையிடப்பட்டான் என்றும், அது ஏன் அவ்வாறு செய்யப்பட்டது என்றும், அவன் முத்திரையிடப்பட்ட உடனேயே என்ன நடந்தது என்பதைப் பற்றிப் பார்க்கப் போகிறோம். நான் இதை விரும்புகிறேன். நீங்கள் விரும்புகிறீர்களா? அது நம்மை ஒரு விஷயத்தைப் பற்றி அறிவுக்குள் கொண்டு வருகிறது. ஆபகூக் 2-ம் அதிகாரம் 14-ம் வசனம் என்று நான் நினைக்கிறேன். அதை நான் வாசிக்க விரும்புகிறேன். இது நடக்கும் பொழுது, கவனியுங்கள்!

''சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல, பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்.''

ஆப. 2:14

அதனுடைய அர்த்தம் என்னவெனில், சத்துருவானவன் அடைக்கப்பட்டபொழுது, பாவமானது முடிவுக்குக் கொண்டு வரப்படும் போது நித்திய நீதியானது வருவிக்கப்படும் பொழுது சாத்தானானவன் பாதாளக் குழியில் தள்ளியடைக்கப்பட்டு, முத்திரையிடப்பட்டு இருக்கும் போது, சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல் பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும் ஆமென்! தேவனுக்கு மகிமையுண்டாவதாக! சகோதரனே, அது வரப்போகிறது. அது வரப் போகிறது. அப்பொழுது ஸ்திரீகள் யாவரும் எல்லா நற்குணமும் பொருந்தியமாது சிரோன்மணிகளாய் இருப்பார்கள். மனிதனானவன் எல்லாப் பண்பும் நிறைந்த ஒழுக்க சீலராக இருப்பான் ஆமென்.

*கர்த்தரை அறியும் அறிவினால் பூமியும்,*

*சமுத்திரமும், வானமும் நிறையப்போகிறது*



போல என் ஜனத்தின் நாட்களிருக்கும்; நான் தெரிந்து கொண்டவர்கள் தங்கள் கைகளின் கிரியைகளை நெடுநாளாய் அனுபவிப்பார்கள்.

அவர்கள் விருதாவாக உழைப்பதில்லை; அவர்கள் துன்பமுண்டாகப் பிள்ளைகளைப் பெறுவதுமில்லை; அவர்களும், அவர்களோடே கூட அவர்கள் சந்தானமும் கர்த்தராலே ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததியாயிருப்பார்கள்.

அப்பொழுது அவர்கள் கூப்பிடுகிறதற்கு முன்னே... (கேருபீன்களின் பின்னால் உள்ள அம் மகிமையான அபிஷேகம் அது)... நான் மறு உத்தரவு கொடுப்பேன்; அவர்கள் பேசும் போதே நான் கேட்பேன்.

ஓனாயும் ஆட்டுக்குட்டியும் ஒருமித்து மேயும். சிங்கம் மாட்டைப் போல் வைக்கோலைத் தின்னும்; புழுதி சர்ப்பத்துக்கு இரையாகும்; என் பரிசுத்த பர்வதமெங்கும். அவைகள் தீங்கு செய்வதுமில்லை. கேடுண்டாகுவதுமில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார். (இதை நீங்கள் இழக்கக்கூடுமா? இல்லை).

ஏசா.65:17-25

79. சற்று பின்னால் திரும்பி செல்லுவோம், அங்கே ஏசாயா 11-ம் அதிகாரத்தில் 1 முதல் 9 முடிய உள்ள வசனங்களில் அதே காரியத்தையே பேசுகிறான். கடைசி நாட்களிலே பெண்கள் நடந்து கொள்ளும் முறையைக் குறித்து அவன் கண்ட பிறகு, மீண்டும் அவன் அங்கே ஒரு தரிசனத்தைக் காண்கிறான். இப்பொழுது ஏசாயா 11:1-9.

ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி... (அவர் யார்? கிறிஸ்து)... அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும்.

ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர் மேல் தங்கியிருப்பார்.

கர்த்தருக்குப் பயப்படுதல் அவருக்கு உகந்த வாசனையாயிருக்கும்; அவர் தமது கண் கண்டபடி நியாயந்தீர்க்காமலும்,தமது காது கேட்டபடி தீர்ப்புச் செய்யாமலும்,

நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து, யதார்த்தத்தின்படி பூமியுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்பு செய்து, பூமியைத் தமது

உஷ்ணமாயிருக்கலாம், ஆனாலும் நாம் தொடர்ந்து முன்னேறிக் கொண்டேசெல்லுவோம்.

ஏசாயா 65-ம் அதிகாரம், அந்தக் காலத்தில் என்ன நடக்கும் என்பதைக் குறித்துக் கூறுகிறதாயிருக்கிறது. பாவியான நண்பனே, இதை இழக்கக் கூடுமோ என்பதை சிந்தித்து உம்மை அதைக் குறித்து கேள்வி கேட்டுக்கொள்ளக் கடவீர். ஏசாயா 65 அதிகாரம் 17-ம் வசனத்திலிருந்து ஆரம்பிப்போமாக. யாவரும் இப்பொழுது கவனமாய் செவி கொடுங்கள். இச்சம்பவம் ஆயிரவருஷ அரசாட்சியின்போது மகா பரிசுத்தமுள்ளது அபிஷேகம் பண்ணப்படும்போது உள்ளதாகும்.

இதோ, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன்; முந்தினவைகள் இனி நினைக்கப்படுவதுமில்லை. மனதிலே தோன்றுவதுமில்லை

நான் சிருஷ்டிக்கிறதினாலே நீங்கள் என்றென்றைக்கும் மகிழ்ந்து களி கூர்ந்திருங்கள்; இதோ எருசலேமைக் களி கூருதலாகவும், அதின் ஜனத்தை மகிழ்ச்சியாகவும் சிருஷ்டிக்கிறேன்.

(அது புதிய எருசலேமாகும். அபிஷேகமானது என்ன? கர்த்தருடைய மகிழ்ச்சியே அது).

நான் எருசலேமின் மேல் களிகூர்ந்து... (இராஜா ராஜரீக மகத்துவமுள்ள நித்திய சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார், நித்தியமான ஜனங்கள், நித்திய சந்தோஷத்தோடு நித்திய நகரத்தினில் வாசமாயிருக்கின்றனர்)... நான் எருசலேமின் மேல் களிகூர்ந்து, என் ஜனத்தின் மேல் மகிழ்ச்சியாயிருப்பேன்; அழுகையின் சத்தமும் கூக்குரலின் சத்தமும் அதில் இனிக் கேட்கப்படுவதில்லை.

அங்கே இனி அற்ப ஆயுசுள்ள பாலகனும், தன் நாட்கள் பூரணமாகாத கிழவனும் உண்டாயிரார்கள்; நாறு வயது சென்று மரிக்கிறவனும் வாலிபனென்று எண்ணப்படுவான், நரறு வயதுள்ளவனாகிய பாவியோ சபிக்கப்படுவான்.

வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருப்பார்கள், திராட்சத் தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியைப் புசிப்பார்கள்.

அவர்கள் கட்டுகிறதும், வேறொருவர் குடியிருக்கிறதும்... (அதாவது நீங்கள் மரித்து, உங்கள் மகன் உங்கள் ஸ்தானத்தை எடுத்துக் கொள்ளுதல்)... அவர்கள் நாட்டுகிறதும், வேறொருவர் கனி புசிக்கிறதுமாயிருப்பதில்லை; ஏனெனில் விருட்சத்தின் நாட்களைப்



*அவ்விடுதலையின் நன்நாளுக்காக*

*என் உள்ளம் ஏங்கித் தவிர்க்கிறது.*

*அப்போது நமது இயேசு*

*பூமிக்குத் திருப்பி வந்திடுவாரே,*

(ஆமென்!)

அது சரி, அப்பொழுது, ஆயிரவருஷ அரசாட்சி துவங்கிடும். ஆயிர வருஷ அரசாட்சியின்போது அந்நகரம் கட்டப்படும். நான்காவது. இங்கே நான் இன்னும் ஆறு வேத வசனங்களை குறித்து வைத்திருக்கிறேன். ஆனால் நாம் விரைவாக செல்லுவோம். நாம் திரும்ப இவைகளைப் பார்க்கப்போகும் போது, இந்த ஏனைய வேதவாக்கியங்களை எடுத்துக் கொள்வோம். உங்களுக்குப் பொதுவான ஒரு கருத்து ஏற்படுவதற்காகத்தான் நான் இப்பொழுது இவைகளை உங்களுக்கு கூறகிறேன்.

60. ஐந்தாவது தரிசனத்தையும் தீர்க்கதரிசனத்தையும் முத்தரிக்கிறதற்கும் தூதன் தரிசனத்தையும் தீர்க்கதரிசனத்தையும் முத்தரிக்கிறதற்கும் வருகிறான். (இவ்வொலி நாடாவின் ஒரு பாகம் காணவில்லை - ஆசி). ஓ , மன்னித்துக் கொள்ளுங்கள். நான் அந்த அர்த்தத்தில் கூறவில்லை. என்னை மன்னியுங்கள். நான் அவ்விதமான கருத்தில் கூறவில்லை. நிச்சயமாக இல்லை. அபிஷேகத்தின் கீழாக இல்லாத ஒரு மனிதன் இவ்வாறு கூறினான். ''யூத சபைக்கென்று மாத்திரமே தரிசனங்களும் தீர்க்கதரிசனங்களும் எப்பொழுதும் அனுமதிக்கப்பட்டன. தானியேலின் காலத்திலிருந்து தானியேல் வந்தபொழுது அவனுக்குப் பிறகு இனிமேல் தரிசனங்களோ, அல்லது இனிமேல் தீர்க்கதரிசனங்களோ அவர்களுக்கு இருக்காது என்பதுதான் அதன் அர்த்தம். இன்றைக்கு தரிசனங்கள், தீர்க்கதரிசனங்கள் கிடைத்தன என்று மக்கள் சொல்லுவதெல்லாம், யாவும் பிசாசினுடையதாகும். தரிசனங்கள், தீர்க்கதரிசனங்கள் என்பதெல்லாம் ஒன்றும் கிடையாது" இவ்வாறு அந்த மனிதன் கூறினான். சகோதரனே, தானியேலுக்குப் பிறகு டஜன் கணக்கில் தீர்க்கதரிசிகள் வந்தனர். யோவான் ஸ்நானன் வந்தான்; இயேசு கிறிஸ்து வந்தார்; புதிய ஏற்பாட்டுக்கென்று தீர்க்கதரிசிகள் உண்டாயிருந்தனர். தரிசனங்கள் உண்டாயிருந்தன; தூதர்கள் உண்டாயிருந்தனர். உலகில் ஒரு மனிதன் எங்ஙனம் அவ்வாறு கூறமுடியும்! ஆனால் பாருங்கள், இவைகளெல்லாம் ஜனங்கள் மேல் எதையோ திணிக்கத் தக்கதாக சுயநல நோக்கங்கொண்ட

செயலாகும். அந்த விதமான ஒரு சபைப் போதகத்தை உண்டாக்குவதற்கென்று உள்ள நோக்கமாகும்; மக்களுக்கு நிஜம் போன்று தோன்றத் தக்கதாகச் செய்யப்படும் ஒரு அற்பமான காரியமாகும். மக்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்காவிடில் அவர்கள் அதினால் வஞ்சிக்கப்பட்டவிடுவார்கள்.

61. எனவே, ஏதாவது ஒரு மனிதன் கூறிய கூற்றுக்களை நாம் ஏற்றுக் கொள்ளாமலிருப்போமாக. அதை நிரூபிக்க வேத வாக்கியம் ஒன்றும் இல்லை. அதை நான் எவ்வாறு ஏற்றுக்கொள்வேன்? நல்லது, முத்திரையிடுதல் என்றால் உண்மையிலயே அதன் அர்த்தம் என்னவென்று பார்ப்போம். கவனியுங்கள்! அவர் தரிசனத்தையும் தீர்க்கதரிசனத்தையும் முத்திரையிடவே வருகிறார்.

நாம் ஏற்கெனவே பார்த்த தானியேலின் புஸ்தகத்திற்கு மறுபடியும் போவோம். தானியேலின் புஸ்தகத்தில் அதைப் பற்றி என்ன கூறப்பட்டுள்ளது என்பதை நாம் காண்போம். தானியேலின் புஸ்தகம் 12-ம் அதிகாரத்தை எடுத்துக் கொள்ளுவோம். நாம் இப்பொழுது முதலாம் வசனத்திலிருந்து நான்காம் வசனம் முடிய வாசிப்போம். நீங்கள் வீடுகளுக்குச் செல்லும்போது 1-ம் வசனத்திலிருந்து முழுவதையும் வாசிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான். (இப்பொழுது இது கடைசி காலத்தில் நடக்கப்போகிற காரியமாகும்)... யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்கால மட்டும் உண்டாயிராத ஆபத்துக் காலம் வரும்...

இது முதல் குதிரையின் மேல் ஏறிப்போகிற அந்திக் கிறிஸ்து முதலாம் முத்திரையின் கீழாகப்போகும் போது உள்ளதாகும். தீத்து தளபதி எருசலேமின் மதில்களை இடித்து அழித்துப் போட்டபோது உள்ளதல்ல அது. அது ஒரேயொரு இடத்தில்தான். வரப் போகிற அதிபதியாக அந்திக் கிறிஸ்துவை , அவன் வரும்போது கவனியுங்கள் அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள்.

அல்லேலூயா! உன் ஜனங்களாகிய இஸ்ரவேலர் ஒரு புஸ்தகத்தில் எழுதப்பட்டிருப்பார்கள்.



தேசத்திலே பெருகிப் பலுகுகிற அந்நாட்களிலே, அவர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியென்று இனிச் சொல்வதில்லை; அது அவர்கள் மனதில் எழும்புவதுமில்லை; அது அவர்கள் நினைவில் வருவதும் இல்லை; அது இனிச் செப்பனிடப்படுவதும் இல்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அக்காலத்தில் எருசலேமைக் கர்த்தருடைய சிங்காசனம் என்பார்கள்... (ஏனெனில் அவர் அங்கே வாசமாயிருப்பார், பார்த்தீர்களா?) சகல ஜாதியாரும் எருசலேமில் விளங்கிய கர்த்தருடைய நாமத்தினிமித்தம் அதனிடமாகச் சேர்வார்கள்; (அல்லேலூயா) அவர்கள் இனித் தங்கள் பொல்லாத இருதயத்தின் இச்சையின்படி நடவார்கள்.

77. அந்நகரமானது அபிஷேகம் பண்ணப்படும்போது அவ்வாறிருக்கும். அது புதிய எருசலேம் அபிஷேகம் பண்ணப்படும் போது அவ்வாறிருக்கும். அந்நகரத்திலுள்ள சகல ஜாதியாரும்... வெளிப்படுத்தின விசேஷம் 22-ம் அதிகாரம் கூறுகிறது. அந்நகரத்தின் வாசல்கள் இரவிலும் அடைக்கப்படுவதில்லை, ஏனெனில் அங்கே இரவே இருக்காது. பூமியின் இராஜாக்கள் யாவரும் தங்கள் கனத்தையும் மகிமையையும் நகரத்தினுள் கொண்டு வாருங்கள். அதின் மதில்கள் வச்சிரகல்லாலும் பதுமராகத்தாலும் இன்னும் இவ்விதமான பன்னிரண்டு இரத்தினக் கற்களாலும் செய்யப்பட்டிருக்கும். பன்னிரண்டு வாசல்களும் பன்னிரண்டு முத்துகளாயிருக்கும் அங்கே அவர்களுக்கு விளக்குத் தேவையில்லை. அங்கே இனிமேல் சூரிய வெளிச்சம் இருக்காது; ஏனெனில் நகரத்தின் மத்தியில் ஆட்டுக்குட்டியானவரே அவர்களுக்கு வெளிச்சமாயிருப்பார். அவர் தான் ஜனங்களை நித்திய ஜீவனுக்குள் வழிநடத்துவார். அந்நதியின் இருகரையிலும், இக்கரையில் ஒன்றும், அக்கரையில் ஒன்றுமாக இரண்டு மரங்கள் இருக்கும். அவைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைவதற்காக உள்ளவைகளாகும். அதுதான் அந்த அபிஷேகம் பண்ணப்பட்ட அப்பரிசுத்த நகரமாகும். அது தேவனிடத்திலிருந்து பரலோகத்தை விட்டு பூமிக்கு இறங்கி வருகிறதாயிருக்கும்.

78. அந்தக் காலத்தில் என்ன சம்பவிக்கும் என்பதைக் குறித்து நாம் இப்பொழுது பார்ப்போமாக. ஓ, நீங்கள் அதை நேசிக்கிறீர்களா? சற்று ஒரு நிமிட நேரம் ஏசாயா 65-ம் அதிகாரத்தை எடுத்துக் கொள்வோம். இவ்வாறு இடையிடையே குறிப்பிட்டு மேற்சொல்லிக் கொண்டு போவது நல்லதாயிருக்கிறது. ஒருவேளை சற்று

எரேமியா 12-ம் அதிகாரம், மன்னியுங்கள், எரேமியா 3-ம் அதிகாரம், இங்கே நான் குறித்து வைத்துள்ளேன். படித்துக் கொண்டு இருக்கும் போது பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு இடமாக என்னை எடுத்துக்கொண்டே சென்றார். அப்பொழுது நான் என்னால் முடிந்த அளவு நன்றாக இவைகளை குறித்துக் கொண்டேன். எரேமியா 3:12-18. நாம் அதை வாசிப்போமாக.

நீ போய் வடதிசையை நோக்கிக் கூறவேண்டிய வார்த்தைகள்; என்னவென்றால் சீர் கெட்ட இஸ்ரவேலே திரும்பு என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உங்கள் மேல் என் கோபத்தை இறங்கப் பண்ணுவதில்லை; நான் கிருபையுள்ளவரென்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் என்றைக்கும் கோபம் வைக்கமாட்டேன்.

நீயோ, உன் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணி , பச்சையான சகல மரத்தின் கீழும்... (அதைத்தான், கிழக்கிலும், மேற்கிலும் இன்னும் உள்ள சகல தேசத்திலும் செய்திருக்கிறார்கள்). அந்நியரோடே சோரமார்க்கமாய் நடந்து, உன் அக்கிரமத்தையும், என் சத்தத்துக்குச் செவிகொடாமற் போனதையும் ஒத்துக்கொள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சீர்கெட்ட பிள்ளைகளே திரும்புங்கள்... (இதைக் கவனியுங்கள்... என்று கர்த்தர்; நான் உங்கள் நாயகர்; (ஆங்கிலத்தில் ''நான் உங்களுக்கு விவாகம் செய்யப்பட்டுள்ளேன்'' என்று உள்ளது - தமிழாக்கியோன்)... (விவாகம் செய்யப்பட்டு)... (அவர்களுடைய கண்கள் குருடாக்கபட்டது, ஏனெனில், நான் புறஜாதிகளுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கிறேன், ஆனால் நான் உங்களை விவாகம் செய்து கொண்டபடியினால், நீங்கள் திரும்புங்கள்)... நான் உங்களை ஊரில் ஒருவனும் வம்சத்தில் இரண்டு பேருமாகத் தெரிந்து... (யூதர்கள் என்று உங்களை அழைத்துக் கொள்கிறவர்கள் எல்லாம் அதில் பிரவேசித்து விடமாட்டார்கள். ஆனால் அந்த தெரிந்து கொள்ளப்பட்ட கூட்டம் மாத்திரமே உள்ளே பிரவேசிப்பார்கள். அவர்கள் தான் யோசேப்புக்கு முன்னால் நிற்கப் போகும் அந்த சின்ன பென்யமீனராவார்கள். அந்த கூட்டமான மக்கள், ஒவ்வொரு தேசத்திலும் இருந்தும், ஒவ்வொரு நகரத்திலிருந்தும், ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் தெரிந்து எடுக்கப்பட்டவர்கள் ஆவர்)... உங்களைச் சீயோனுக்கு அழைத்துக் கொண்டு வந்து,

உங்களுக்கு என் இருதயத்துக்கு ஏற்ற மேய்ப்பர்களைக் கொடுப்பேன். அவர்கள் உங்களை அறிவோடும் புத்தியோடும் மேய்ப்பார்கள்.



பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்.

தானி 12:1-2

62. எருசலேமின் மதில்களை தீத்து (ரோமத் தளபதியாகிய தீத்து - தமிழாக்கியோன்) தரைமட்டமாக்கினபோது இது எப்படி நடக்க முடியும்? அது எவ்வாறு இருக்க முடியும்? அவ்வாறு இருக்க முடியாது. கடைசி காலத்தில் உள்ள உயிர்தெழுதலின் சமயத்தில் நடக்கப் போகிற காரியத்தைத் தான் அவன் இங்கே கூறுகிறான். அது சரிதானே?

ஞானவான்கள் ஆகாய மண்டலத்தின் ஒளியைப் போலவும் அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்.

தானி. 12:3.

இங்கே கவனமாய் செவிகொடுங்கள்!இங்கே தான் உண்மையான முத்திரையிடப்படுதல் இருக்கிறது.

தானியேலாகிய நீயோவென்றால்,முடிவு காலம் மட்டும் இந்த வார்த்தைகளைப் புதைபொருளாக வைத்து வைத்து, இந்தப் புஸ்தகத்தை முத்திரைபோடு...

தானி.12:4

63. அது என்ன? ஓ, அல்லேலூயா! இங்கு கூடி வந்திருக்கிறவர்களே, நீங்கள் அதை பார்க்கிறீர்களா? இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்பாடு, அவரது வல்லமை, அவரது வருகை, கடைசி காலம் ஆகியவைகளைப் பற்றிய விஷயங்களெல்லாம் இக்காலம் வரையிலும் முத்திரையிடப்பட்டுள்ளது. அதற்காகத் தான் அவர் வருகிறார். அது மேதாவிகளின் கண்களுக்கு மறைக்கப்பட்டுள்ளது. அதனால்தான் அவர்கள் இந்த "முத்திரையிடப் படுதல்" என்கிற இவ்விஷயத்தை அக்காலத்தில் உள்ள அத்தீர்க்கதரிசிகளுக்கு சம்மந்தப்படுத்திப் பேசுகிறார்கள். இப்படி அவர்கள் செய்வது ஆச்சரியமல்லவே. அவ்வுபதேசம் வலுவில்லாதது, நிலைநிற்க முடியாதது (தரிசனங்களையும், தீர்க்கதரிசனத்தை முத்திரிக்கிறதற்கும் என்று சொல்லப்பட்ட வசனத்தை, சிலர் உபதேசிக்கையில், தானியேலோடு எல்லாத் தீர்க்கதரிசனமும், தரிசனமும் முத்தரிக்கப்பட்டுவிட்டதால்,

இனிமேல் தீர்க்கதரிசனமோ, தரிசனமோ தானியேலுக்குப் பிறகு இருக்காது என்று போதிக்கின்றனர் அது தவறு என்பதை மேலே சகோ. பிரான்ஹாம் நிருபிக்கிறார் - தமிழாக்கியோன்). ஆனால் இந்தத் தரிசனமோ இதுவரைக்கிலும் மறைவாக இருக்கும்படியாக முத்திரையிடப்பட்டு வைக்கப்பட்டிருக்கிறது; அங்கே தான் என்னுடைய விசுவாசத்தை வைத்து தேவன் அந்த எழுபது வாரங்களைக் குறித்து வெளிப்படுத்துவார் என்று இருக்கிறேன். ஆமென் "முடிவு காலம் மட்டும் புதைபொருளாக வைத்து வைத்து, இந்தப் புஸ்தகத்தை முத்திரைபோடு'' என்று அவர் கூறினார். "இவ்வார்த்தைகளை புதைபொருளாக வைத்து வைத்து, முடிவு காலம் மட்டும் இருக்கும்படி முத்திரைபோடு'' என்று கூறப்பட்டது.

64. அவன் என்ன செய்தான்? தரிசனத்தையும் தீர்க்கதரிசனத்தையும் முத்தரிப்பதற்காக! இவைகளைப் பற்றியெல்லாம் தானியேல் தீர்க்கதரிசனம் உரைத்தான். அவன் அதை ஒரு தரிசனத்திலே கண்டான்; தூதன் தரிசனத்தை முத்திரையிடுவதற்காகாவும், தீர்க்கதரிசனத்தை முத்திரையிடுவதற்காகவும் இறங்கி வந்தான். அவர்களால் அதை படிக்க முடியும். ஆனால் புரிந்து கொள்ள முடியாது - முடிவு காலம் மட்டும் அப்படியிருக்கும். முடிவு காலம் - முடிவு காலம் என்பது என்ன? எழுபதாவது வாரத்தின் முடிவு வேளை; அப்போது அதிபதியாக அந்திகிறிஸ்து வெளிப்படுவான்; இவ்வேளையில் அவன் தன்னை தேவனாக ஆக்கிக்கொள்ளுவான். இக்காலம்மட்டும் இது முத்திரையிடப்பட்டுளது என்பதை நாம் எவ்வாறு அறிவோம்? தானியேலின் புஸ்தகம் கடைசி அதிகாரத்தில், தானியேல் இதைச் செய்தான்.

65. சகோதரி சிம்ப்சன் இன்று மதியம் என்னிடம், ''சகோதரன் பிரான்ஹாம், நான் தானியேலின் புஸ்தகம் முழுவதையும் வாசித்தேன். நான் வாசிக்க ஆரம்பிக்கையில் எனக்கு எப்படி ஒன்றுமே தெரியாததாக இருந்ததோ, அதேவிதமாகத்தான் அப்புஸ்தகம் முழுவதும் நான் வாசித்து தீர்ந்தபோதும், எனக்கு ஒன்றுமே புரியாததாக அதில் இருந்தது" என்று கூறினார்கள். இதோ இங்கே அது இருக்கிறது. சகோதரி சிம்ப்சன் அவர்களே, இன்றிரவில் நீங்கள் இங்கே இருப்பீர்களானால், அதோ அங்கே அவர்கள் அமர்ந்திருக்கிறார்கள் என்று நான் காண்கிறேன். நான் வாகனத்தில் உட்கார்ந்திருக்கையில் அதற்கு எந்த பதிலும் அளிக்காமல் பேசாமலிருந்தேன். ஏனெனில் நான் அதைப் பற்றி பேசப் போகிறோமோ என்று எண்ணினேன். ஆனால் அந்நதியண்டையிலே தானியேல் கண்ட தரிசனமானது முடிவு காலம்



74. செருபாபேல் தன் ஆலயத்தைக் கட்டின பிறகு அதைப் பிரதிஷ்டை செய்தான். அது திரும்பவும் அபிஷேகம் பண்ணப் படவில்லை; ஏனெனில் அது ஏற்கெனவே அபிஷேகிக்கப்பட்டுவிட்டது. அது அழித்து தரைமட்டமாக்கப்பட்டு, பிறகு மீண்டும் எழுப்பி கட்டப்பட்டது அதற்கு அழிவு வந்தது. பிறகு மீண்டும் கட்டியெழுப்பட்டது. எனவே அதற்கு மேற்கொண்டு மறுபடியும் அபிஷேகம் பண்ணப்படுதல் செய்யப்படவில்லை. ஒரு தடவை அபிஷேகம் பண்ணப்பட்டதானது, கடைசி வரையிலும் அது செல்லும்படியாகத் தக்கதாக இருக்கிறது. இந்த காலம் வரையிலும் அது தொடர்ந்து இருந்து கொண்டேயிருக்கிறது. ஆனால் தேவன் ஆயிரவருஷ அரசாட்சிக்குரிய கூடாரத்தை ஸ்தாபிக்கும் பொழுது, மகா பரிசுத்தமுள்ளதை அபிஷேகம் பண்ணுவார். பரிசுத்தமுள்ளதை அல்ல, மகா பரிசுத்தமுள்ளதை அபிஷேகம் பண்ணுவார்.

ஆனால் இராஜாவானவர் தனது சிங்காசனத்தை ஆயிரமாண்டுகளுக்கு எடுத்துக் கொள்ளும் பொழுது... மகிமை! அவள் - மகா பரிசுத்தமானது அபிஷேகம் பண்ணப்படுதல் தான் கடைசியாக இருக்கும்.

75. அக்கூடாரமானது எழுப்படும்போது, உயிர்தெழுதல் நடந்திருக்கும், யூதர்கள் திரும்பியிருப்பார்கள் கிறிஸ்துவும் மணவாட்டியும் வந்திருப்பார்கள். 1,44,000 யூதர்கள் முத்திரையிடப்பட்டிருப்பார்கள். ஆயிரவருஷ அரசாட்சி ஆரம்பித்திருக்கும். மகா பரிசுத்தஸ்தலமானது அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கும். அது மகா பரிசுத்த ஸ்தலமாகும் - மகாபரிசுத்தமானது. மகா பரிசுத்த ஸ்தலம் என்னப்படுவது கேரூபீன்கள் மத்தியிலே தேவன் வாசம் பண்ணத்தக்க பரிசுத்த வாசஸ்தலமாக இருக்கிறது. இத்தடவை கிறிஸ்து தன்மேல் அபிஷேகத்தோடு மகா பரிசுத்த ஸ்தலத்தினுள்ளே தங்கியிருப்பார். அப்பொழுது அவர்களுக்கு சூரிய வெளிச்சம் தேவையாயிருக்காது. ஏனெனில் நகரத்தின் மத்தியில் வீற்றிருக்கும் ஆட்டிக்குட்டியானவரே அவர்களுக்கு ஒளியாயிருப்பார். அந்நகரத்திலே சூரியன் அஸ்தமிப்பதில்லை. அவ்வாறு வயதான அங்கிள் ஜிம் அவர்களும் கூறுவது வழக்கம். ஒரு போதும் அது அஸ்தமிக்காது, ஏனெனில் அபிஷேகம் பண்ணப்பட்ட கிறிஸ்துவே அதற்கு ஒளியாயிருப்பார். இராஜாவானவர் வந்து, ஆயிரமாண்டுகள் அரசாளுவதற்காக சிங்காசனத்தை எடுத்துக் கொள்ளுவார்.

76. எரேமியா 3:12-18-ஐ வாசிப்போமாக... எரேமியா 18-ம் அதிகாரம்... நான் கருதுகிறேன். ஆம்! இல்லை, மன்னித்துக் கொள்ளுங்கள்,

அபிஷேக தைலத்திலே கொஞ்சம் ஆரோனுடைய சிரசின்மேல் வார்த்து, அவனைப் பரிசுத்தப்படுத்தும்படி அபிஷேகம் பண்ணினான்.

லேவி.8:10-12.

வனாந்திரத்திலே, அவர்கள் யாத்திரையிலே இருக்கும் போது, இஸ்ரவேலின் ஆராதனைக்குரிய வாசஸ்தலமாகிய கூடாரத்தை மோசே சுத்திகரித்தான் அல்லது அபிஷேகித்தான். அது அபிஷேகம் பண்ணப்பட்டது.

73. இப்பொழுது, நாளாகமத்தின் இரண்டாவது புஸ்தகத்திலே அந்தப் பிரதிஷ்டையைக் குறித்துக் காண்போம். அப்பொழுது, பரிசுத்த ஆவியானவர் கூடாரத்திலே தனது சிங்காசனத்தை எடுத்துக் கொண்டபொழுது, என்ன நடந்தது என்பதைக் கவனியுங்கள். 2 நாளாகமம், 5-ம் அதிகாரம் 13-ம் வசனத்திலிருந்து ஆரம்பிப்போம். 2நாளாகமம், 5-ம் அதிகாரம் 13-ம் வசனத்திலிருந்து

அவர்கள் ஒருமிக்கப் பூரிகைகளை ஊதி, ஏக சத்தமாய்க் கர்த்தரைத் துதித்து ஸ்தோத்தரித்துப் பாடினார்கள்; ஆசாரியர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்படுகையிலும், பாடகர் பூரிகைகள் தாளங்கள் கீதவாத்தியங்களுடைய சத்தத்தைக் தொனிக்கப்பண்ணி, கர்த்தர் நல்லவர் அவர் கிருபை என்றுமுள்ளது என்று அவரை ஸ்தோத்திரிக்கையிலும், கர்த்தருடைய வீடாகிய தேவாலயம் மேகத்தினால் நிறையப்பட்டது.

அந்த மேகத்தினிமித்தம் ஆசாரியர் ஊழியஞ்செய்து நிற்கக் கூடாமற் போயிற்று, கர்த்தருடைய மகிமை தேவனுடைய ஆலயத்தை நிரப்பிற்று.

நாளா. 5:13-14

அபிஷேகம் பண்ணப்படும் பரிசுத்த ஸ்தலத்திற்குள் தேவன் உட்பிரவேசித்தார். மக்கள் வந்து அவரைத் தொழுகொள்ளும்படியாக அது அவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. ஆகவே, பரிசுத்த ஸ்தலத்தை அல்ல, மகா பரிசுத்தமுள்ள ஸ்தலத்தை அபிஷேகம் பண்ணுதல் என்றால்; புதிய எருசலேம் தான் மகாபரிசுத்த ஸ்தலம் என்று நாம் காண்கிறோம். தேவனிடத்திலிருந்து பரலோகத்தை விட்டு இறங்கும் புதிய எருசலேமின் மேல் அவ்வபிஷேகமானது தங்கியிருக்கும். தன் மணவாளனுக்காக அலங்கரிக்கட்டு ஆயத்தம் பண்ணப்பட்ட ஒரு மணவாட்டியைப் போல் இருக்கும் அவ்வபிஷேகம் அவர்கள் மேல் இருக்கும்.



மட்டும் புதைபொருளாக இருக்கும்படி முத்திரையிடப்பட்டது. இன்னும் மேலே தொடர்ந்து போய் அதை நான் வாசிப்பேனாக.

தானியேலாகிய நீயோவென்றால், முடிவுகாலமட்டும் இந்த வார்த்தைகளைப் புதைபொருளாக வைத்து வைத்து, இந்தப் புஸ்தகத்தை முத்திரை போடு; அப்பொழுது அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம் என்றான்.

அப்பொழுது, தானியேலாகிய நான் ஆற்றுக்கு இக்கரையில் ஒருவனும், ஆற்றுக்கு அக்கரையில் ஒருவனுமாகிய வேறே இரண்டு பேர் நிற்கக் கண்டேன்.

சணல் வஸ்திரம் தரித்தவரும், ஆற்றின் தண்ணீர்களின் மேல் நிற்கிறவருமாகிய புருஷனை ஒருவன் நோக்கி: இந்த ஆச்சரியமானவைகளின் முடிவு வர எவ்வளவு காலம் செல்லும் என்று கேட்டான் (இப்பொழுது கேளுங்கள்).

அப்பொழுது சணல் வஸ்திரம் தரித்தவரும் ஆற்றின் தண்ணீர்களின் மேல் நிற்கிறவருமாகிய புருஷன் தம்முடைய வலது கரத்தையும் தம்முடைய இடது கரத்தையும் வானத்துக்கு நேராக ஏறெடுத்து, ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லும் என்றும்...

இப்பொழுது நாம் மிகவும் சரியாக பெற்றுக் கொள்கிறோம் தானியேலின் எழுபது வாரங்களைப் பற்றி ஆராய்கையில், அது எப்படி வெளியாகப் போகிறது என்பதை கவனியுங்கள். அப்போது தான் இரகசியமானது வெளிப்படுத்த படபோகிறது அவன்...

(அவன் என்ற படர்க்கையில் உள்ள பிரதி பெயர்ச் சொல் இது. இது அந்திக் கிறிஸ்துவைக் குறிக்கும்) அவன் பரிசுத்த ஜனங்களின் வல்லமையை சிதறடித்தல் முடிவு பெறும் போதே... (அவன் வாரத்தின் மத்தியில் தன் உடன்படிக்கையை முறித்துப்போடும் போது இவ்வாறு செய்வான்)... இவையெல்லாம் நிறைவேறித்தீருமென்று என்றென் றைக்கும் ஜீவித்திருக்கிறவர் பேரில் ஆணையிடக் கேட்டேன்" (ஆங்கில வேதாகமத்தில் "அவன் பரிசுத்த ஜனங்களின் வல்லமையை சிதறடித்துத் தீரும் போது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அது தமிழ் வேதாகமத்திலோ பரிசுத்த ஜனங்களின் வல்லமையை சிதறடித்தல் முடிவு பெறும் போதே" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ''அவன்'' என்று வார்த்தையே தமிழில் இல்லை - தமிழாக்கியோன்).

நான் அதைக் கேட்டும், அதில் பொருளை அறியவில்லை; ஆகையால்: என் ஆண்டவனே, இவைகளின் முடிவு என்னமாயிருக்கும் என்று கேட்டேன்.

அதற்கு அவன் தானியேலே, போகலாம்; இந்த வார்த்தைகள்... ("முடிவு காலம்" என்று சபையார் கூறுகிறார்கள் - ஆசி) ஓ, நீங்கள் அதை மறக்க வேண்டாம்)... முடிவு காலம் மட்டும் புதை பொருளாக வைக்கப்பட்டும் முத்திரிக்கப்பட்டும் இருக்கும்.

அநேகர் சுத்தமும் வெண்மையுமாக்கப்பட்டு, புடமிடப்பட்டவர்களாய் விளங்குவார்கள்; துன்மார்க்கரோ துன்மார்க்கமாய் நடப்பார்கள்; துன்மார்க்கரில் ஒருவனும் உணரான். ஞானவான்களோ உணர்ந்து கொள்ளுங்கள்.

தானி. 12:4-10.

66 .கடைசி சபைக்காலத்தில் வரும் கடைசி கால செய்தியானது அதை வெளிப்படுத்தும். மகிமை! அதோ பார்த்தீர்களா? ஓ, என்னே! அதைப் பற்றி எண்ணுகையில் என்னை அது அசைக்கிறது. அந்த இரகசியங்களைப் பற்றி லௌகீக சபையானது கண்களை மூடிக் கொண்டு காணாதது போல் இருந்து கொண்டு, "அது அபத்தம்'' என்று கூறுகிறது. இயேசு கிறிஸ்துவைப் பற்றி இரகசியமானது என்னவெனில், அவர் தேவத்துவத்தில் மூன்றாம் ஆள் அல்ல, இரண்டாம் ஆள் அல்ல, மூன்றாம் ஆள் அல்ல, ஆனால் தேவன் என்ற நபரே, ஆளே அவர் தான். ஏனைய இரகசியங்கள் யாவுமே வெளிப்படுத்தப்படும். ஏனெனில் கடைசி கால சந்ததியினருக்கு இவைகள் யாவும் வெளிப்படுத்தப்படும் என்று அப்புஸ்தகத்தில் எழுதி வைக்கப்பட்டுள்ளது. யூதர்களால் எவ்வாறு இயேசுதான்; மேசியா என்பதை காண இயலாமல் இருக்கிறதோ, அதே போலவே வேதக் கல்லூரிகளாலும், வேத ஆராய்ச்சி பள்ளிக் கூடங்களாலும், ஸ்தாபனங்களாலும் அதைக் காண இயலாமல் இருக்கிறது. உங்களுக்கு பைத்தியம் பிடித்திருக்கிறது என்று அவர்கள் எண்ணுகிறது ஒன்றும் ஆச்சரியமல்ல. நீங்கள் மூடத்தனமா யிருக்கிறீர்கள் என்று அவர்கள் நினைப்பது ஒன்றும் வினோதமானதல்ல. அவர்களுடன் நீங்கள் கொக்கரிக்காமல் இருப்பதை அவர்களால் புரிந்து கொள்ள முடியாமல் இருப்பது ஒன்றும் ஆச்சரியமல்லவே. ஏனெனில், அதன் பின்னால், ஒரு வல்லமையும், தரிசனமும் உள்ளது; ஒரு தேவனுடைய வார்த்தையும் வெளிப்படுத்தபட்டு, அதினால் சபையானது பரம வீட்டிற்கு எடுத்துக்



நதியண்டையிலே நான் கண்டிருந்த தரிசனத்தைப் போலும் இருந்தது; நான் முகங்குப்புற விழுந்தேன்.

கர்த்தருடைய மகிமை கீழ்திசைக்கு எதிராக வாசல் வழியாய் ஆலயத்துக்குள் பிரவேசித்தது.

அப்பொழுது ஆவி என்னை எடுத்து, உட்பிரகாரத்திலே கொண்டு போய்விட்டது; இதோ கர்த்தருடைய மகிமை ஆலயத்தை நிரப்பிற்று.

அவர் ஆலயத்திலிருந்து என்னோடே பேசுகிறதைக் கேட்டேன்; அந்தப் புருஷன் என்னண்டையிலே நின்றிருந்தார்.

எசே. 43:1-6

71. அபிஷேகம் பண்ணுதல் - ஆயிர வருஷ அரசாட்சிக்காக அவ்வாலயத்தை அபிஷேகம் பண்ணுவித்தல். லேவியராகமத்தில் கவனியுங்கள். அது லேவியராகமத்திலே பிரதிஷ்டை செய்யப்பட்டது என்பதைக் கவனியுங்கள். நாம் இப்பொழுது லேவியராகமத்திற்குத் திரும்பிப் போவோமோனால், அங்கே மோசே ஆலயத்தை எவ்வாறு அபிஷேகித்தான் என்பதைக் காண்கிறோம். இதைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது, நாம் லேவியராகமத்திற்குத் திரும்பிப் போவோமாக. அதற்கு மட்டும் போதுமான நேரம் நமக்கு இருக்கிறது. மோசே ஆலயத்தை அபிஷேகம் பண்ணியதை பற்றி நாம் லேவியராகமத்தில் காண்போமாக. லேவியராகமம் 8-ம் அதிகாரம்.

திருவசனங்களை திருவசனங்களோடு ஒப்பிட்டுப் பார்க்குதலை நான் நேசிக்கிறேன். நீங்கள் அவ்வாறு நேசிக்கிறீர்களா? அப்படிச் செய்தால்தான் நாம் எதைத் தேடிக் கொண்டிருக்கிறோம் என்பதையும் குறித்து ஒரு சரியான புலப்படுதல் நமக்கு உண்டாகும். இப்பொழுது, நாம் இங்குமங்குமாக இதன் பேரில் வேத வாக்கியங்களை உபயோகிக்கிறோம் என்பதை எவரும் உணர்ந்து கொள்ள முடியும்.

72. லேவியராகமம் 8-ம்அதிகாரம். நான் இங்கே 10-ம் வசனத்தை குறித்து வைத்துள்ளேன். லேவியராகமம் 8-ம் அதிகாரம் 10-வசனம்.

பின்பு மோசே, அபிஷேக தைலத்தை எடுத்து வாசஸ்தலத்தையும், அதிலுள்ள யாவற்றையும் அபிஷேகம் பண்ணி, பரிசுத்தப்படுத்தி,

அதில் கொஞ்சம் எடுத்து, பலிபீடத்தின் மேல் ஏழுதரம் தெளித்து, பலிபீடத்தையும் அதின் சகல பணி முட்டுகளையும் தொட்டியையும் அதின் பாதத்தையும் பரிசுத்தப்படுத்தும்படிக்கு அபிஷேகம் பண்ணி,

உபயோகிக்கப்படப் போகிற அக்கூடாரம் தான் அதுவாயிருக்கும். (இப்பொழுது செவி கொடுங்கள், அதை நான் ஏன் எடுத்துக் கொண்டேன் என்பதைக் காணுங்கள்). இக்கூடாரமானது எசேக்கியேல் 43-ம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. எசேக்கியேல் 43: 1-6 வசனங்கள்.

நான் எசேக்கியேலுக்குத் திரும்பிச் சென்று, ஆயிர வருஷ அரசாட்சியிலே எவ்வாறு அவர்கள் அபிஷேகம் பண்ணுவார்கள் என்பதை சித்தரிக்கிறார் என்பதை நான் கண்டு கொள்வோமாக. எசேக்கியேல் 43 அதிகாரத்தில் நாம் சிறிது வாசித்து, ஆயிர வருஷ அரசாட்சியில் அபிஷேகம் பண்ணுவதை, அவர் எப்படிச் செய்யப் போகிறார் என்பதை நாம் காண்போமாக. எசேக்கியேல் 43-ம் அதிகாரம் 1ம் வசனத்திலிருந்து 6-ம் வசனம் முடிய, நீங்கள் வீட்டுக்குத் திரும்பிப் போன பிறகு, அது முழுவதையும் நீங்கள் வாசித்துக் கொள்ளலாம். குறித்துக் கொள்கிறவர்கள் எசேக்கியேல் 43 என்று குறித்துக் கொள்ளுங்கள்.

பின்பு...

70. இப்பொழுது கவனியுங்கள். ஆயிர வருஷ அரசாட்சிலே கட்டப்படப்போகிற ஆலயத்தைப் பற்றி விவரக் குறிப்பு இது வேதத்தை அறிந்திருக்கிற எவருக்கும் எசேக்கியல் 40-ம் அதிகாரத்திலிருந்து 44-ம் அதிகாரம் முடிய உள்ள விஷயங்கள் பூமியில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கிற ஆயிர வருஷ அரசாட்சி ஆலயத்தைப் பற்றியதேயல்லாமல் வேறு ஒன்றும் அல்ல என்பதை அறிவர். எவரும் அறிவர் அல்லவா? அப்பொழுது கர்த்தருடைய மகிமையானது அதை நிரப்பும். இப்பொழுது 43-ம் அதிகாரத்தில் 1 முதல் 6 முடிய வசனங்களில் உள்ள ஆலயத்தைப் பற்றி விவரக் குறிப்பை நாம் பார்க்கப் போகிறோம்.

பின்பு அவர் என்னைக் கீழ்த் திசைக்கு எதிர் வாசலாகிய வாசலுக்கு அழைத்துக் கொண்டு போனார்.

இதோ, இஸ்ரவேலின் தேவனுடைய மகிமை கீழ்த்திசையிலிருந்து வந்தது; அவருடைய சத்தம் பெருவெள்ளத்தின் இரைச்சலைப்போல இருந்தது; அவருடைய மகிமையினால் பூமி பிரகாசித்தது.

நான் கண்ட இந்தத் தரிசனம் நகரத்தை அழிக்க வந்தபோது கண்ட தரிசனம் போல் இருந்தது; இந்தத் தரிசனங்கள் கேபார்



கொள்ளப்படுதலில் போவதற்காக அதை ஒரு ஒழுங்குக்குள் கொண்டு வந்துள்ளது. ஆம் அநேகர், இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம் நிச்சயமாகவே.

67. அறியப்படுத்தப்படும் இன்னொரு காரியம் என்ன? இன்றைக்குள்ள இச்சபைகளைப் பாருங்கள். இதோ இப்படியாக இருக்கிறது. நான் புண்படுத்தவில்லையென்று நம்புகிறேன். ஆனால் நான் அதைக் கூறியாக வேண்டும்.அந்நாளிலே ஒரு அந்திக்கிறிஸ்து எழும்புவான்.

இப்பொழுது ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்; நாம் முத்திரைகளைப் பற்றி பார்க்கப் போகிறோம். அப்பொழுது, அந்திக் கிறிஸ்துவானவன் - தானியேல் வரப்போகிற அதிபதி என்று அவனைக் குறித்துக் கூறுகிறான் - அம்முத்திரைகளிலே, அவன் அக்குதிரைகளில் ஏறி சவாரி செய்து போகிறான். ஜனங்களுக்கு பாவ நிவிர்த்தி செய்ய இயேசுவானவர் சங்கரிக்கப்படுவார். ஆனால் பாழாக்கும் அருவருப்பை ஏற்படுத்த அவ்வதிபதியானவன் அதற்காக எழும்புவான். அச்செயலை செய்தது, தீத்துவின் மூலமாக (தீத்து என்னும் ரோம தளபதி - தமிழாக்கியோன்) ரோமாபுரியேயாகும். இந்தத் தடவையும், ரோமாபுரியிலிருந்து புறப்பட்டு வரப்போகும் ஒரு அதிபதி தான் அதைச் செய்யப் போகிறான். அவன் தானே கடைசி நாட்களிலே தன்னைத்தானே தேவனாக உயர்த்திக் கொண்டு வெளிப்படுவான். இப்பொழுது செவி கொடுங்கள். அதைப் பற்றி பரிசுத்த ஆவியானவர் 2 தெசலோனிக்கேயரில் நம்மை எச்சரிக்கிறார். நாம் 2 தெசலோனிக்கேயர் 2-ம் அதிகாரத்தை எடுத்துக் கொள்வோம். அங்கே என்னுடைய வார்த்தை அல்ல, ஆனால் தேவனுடைய வார்த்தையே உங்களுக்கு இருக்கிறது. 2 தெசலோனிக்கேயர் 2-ம் அதிகாரம் 12-ம் வசனத்தை எடுத்துக்கொள்வோமாக. அவ்வசனத்திற்கு மேலிருந்து 7-ம் வனத்திலிருந்து துவக்குவோம்.

அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது... (இது பரிசுத்த ஆவியினாலே பவுல் பேசுவதாகும்)... ஆனாலும் தடைசெய்கிறவன் நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது.

(தடை செய்கிறவன் என்பது யார் என்று யாருக்காவது தெரியுமா? பரிசுத்த ஆவியானவர் தான் அந்த தடை செய்கிறவன் ஆகும்). நீக்கப்படுபோது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்...

எப்பொழுது? பரிசுத்த ஆவியானவர் எடுக்கப்பட்டுவிடும் போது, இப்பொழுதே அவர் புறப்பட்டுப் போவதற்கு ஆயத்தமாக இருந்து

கொண்டிருக்கிறார். எதற்காக அவர் புறப்பட்டுப் போகப் போகிறார்? தம்மோடு சபையை எடுத்துக் கொண்டு போவதற்காகத்தான்.

வெளிப்படுவான் (பவுல் ஆவியின் ஏவுதலினால் அங்கே பேசுகிறான்). அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம் பண்ணுவார். (நிச்சயமாகவே அவன் அக்கிரமக்காரனே).

அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடு

“நாங்கள் தான் மகத்தான மாபெரும் சபை'' எங்களுக்கு இது இருக்கிறது அது இருக்கிறது'' என்பார்கள். இவர்கள் ஏற்கெனவே ஒன்றாக இணைந்துவிட்டார்கள். பார்த்தீர்களா? ''நாங்கள் தான் மகத்தான சபை'' - பொய்யான அற்புதங்கள்.

கெட்டுப் போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும் இரட்சிக்கப்படத் தக்கதாய்ச் சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கீகரியாமற் போனபடியால் அப்படி நடக்கும்.

ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படுபடிக்கு.

அவர்கள் பொய்யை விசுவாசிக்கத் தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்.

தெச. 2:7-12.

அதை நீங்கள் அறிந்து கொண்டீர்களா? ஓ என்னே! பவுல் பேசிக் கொண்டிருக்கிறார். தேவனுடைய முத்திரையானது தெரியப்படுத்தப்படும் பொழுது, அவருடைய ஆவியால் அது நடக்கும் பொழுது, அவரது நாமம், அவரது கிருபை, இப்பொழுது புறப்பட்டு வந்து கொண்டிருக்கிற இன்னுமுள்ள ஏனைய மகத்தான இரகசியங்கள் யாவும், எடுத்துக் கொள்ளப்படுதலில் அவருடைய சபையானது போவதற்காக அவருடைய திட்டங்களும் வெளிப்படுத்தப்படும். பரிசுத்த ஆவியானது ஊற்றப்படுதல் இதைச் செய்திருக்கிறது. இக்கடைசி நாட்களில் இதைதான் அவர் செய்திருக்கிறார்.

68. இப்பொழுது. நாம் காண்போமாக, கடைசியாக உள்ளதை பார்ப்பதற்கு நமக்கு நேரமுள்ளதா? ஆறாவது மகா பரிசுத்த



முள்ளவரை அபிஷேகம் பண்ணுவதற்காக ஓ என்னே! இதுதான் அது, கடைசியாக அவர் செய்ய வேண்டிய காரியமானது என்ன? இப்பொழுது நாம் தானியேலின் புஸ்தகத்தை எடுத்துக் கொண்டு, அங்கே, இதில் அவர் செய்ய வேண்டியது என்ன என்று பார்ப்போமாக.

மீறுதலைத் தவிர்க்கிறதற்கும் (ஜனங்களின் மீறுதல்கள்).... பாவங்களைத் தொலைக்கிறதற்கும்.... (ஜனங்களுக்காக)... அக்கிரமத்தை நிவிர்த்தி பண்ணுகிறதற்கும், நித்திய நீதியை வருவிக்கிறதற்கும்... (யூதர்களுக்காக)... சற்று நேரத்திற்கு இருக்கக் கூடும். ஆனால் நான்... அதை (முடிவு காலம் மட்டும்)... மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம் பண்ணுகிறதற்கும்... (இவைகள் தான் இந்த ஆறு விதமான நோக்கங்களோடு அவன் வந்தது)... என் ஜனத்தின் மேலும் உன் பரிசுத்த நகரத்தின் மேலும் எழுபது வாரங்கள்... (இந்தக் காலத்தில்தான் இவைகள் யாவும் செய்து முடிக்கப்படும்)... செல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிறது.

தானி.9:24

69. இப்பொழுது, மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம் பண்ணுவதற்காக. இந்த விஷயம் இங்குள்ள போதகர்களாகிய பலருக்கு சற்று வினோதமானதாக தரிசனத்தையும், தீர்க்கதரிசனத்தையும் முத்தரிக்கிறதற்கும் சற்று நேரத்திற்கு பொறுத்துக் கொள்ளுங்கள். எவ்வாறு அது வெளிப்படுகிறது என்பதைப் பாருங்கள்.

இது அபிஷேகம் பண்ணப்படுதலாகும்; ஒரு மனிதனையல்ல... இயேசுவானவர் ஏற்கெனவே அபிஷேகம் பண்ணப்பட்டுள்ளார். அப்படித்தானே? அப்போஸ்தலர் நடபடிகளின் புஸ்தகம் தேவன் இயேசுவை பரிசுத்த ஆவியால் அபிஷேகித்தார் என்றும், அவர் நன்மை செய்கிறவராய் சுற்றித்திரிந்து பிணியாளிகளைக் குணமாக்கினார் என்றும் கூறப்பட்டுள்ளது. (அப்.10:38). இயேசு ஏற்கெனவே... அவர் மேசியாவாயிருக்கிறார். மேசியா என்றால் ''அபிஷேகம் பண்ணப்பட்டவர்'' என்று அர்த்தமாம். அது சரிதானே? ஆனால் இங்கே கடைசி காலத்தில் அவர் மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம் பண்ணப்போகிறார்.

மகா பரிசுத்தமுள்ளது யார்? நான் அதைக் காண்கிறதின் படியே, அதை நான் வேத வாக்கியங்களினாலே நிரூபிக்க முடியும் என்று நம்புகிறேன். ஆகவே மகா பரிசுத்தமுள்ளதை அபிஷேகம் பண்ணுவதற்கு என்றால், ஆயிர வருஷ அரசாட்சியில்